சரபேந்திர வைத்திய முறைகள்

# கர்ப்பிணி பாலரோக சிகிச்சை



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்**

தஞ்சாவூர்.

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண்: 3

# சரபேந்திர வைத்திய முறைகள்

## கர்ப்பிணி பாலரோக சிகிச்சை

பதிப்பாசிரியர்கள்:

**ஸ்ரீ K. வாசுதேவ சாஸ்திரி**, B. A.,
முன்னாள் ஆராய்ச்சி ஆசிரியர்
சரஸ்வதி மகால் நூல் நிலையம், தஞ்சாவூர்.

**Dr. S.வெங்கட்டராஜன்**, L.I.M.,
முன்னாள் ஆயுர்வேத பண்டிதர்,
சரஸ்வதி மகால் நூல் நிலையம், தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்,**

**தஞ்சாவூர்.**

கி. பி. 2006

விலை ரூ.110- 00

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூற் பெயர் | ; | சரபேந்திர வைத்திய முறைகள்<br>கர்ப்பிணி பாலரோக சிகிச்சை |
| பதிப்பாசிரியர் | : | திரு. கே. வாசுதேவ சாஸ்திரி<br>டாக்டர் எஸ். வெங்கட்டராஜன் |
| வெளியிடுபவர் | : | இயக்குநர் சரசுவதி மகால் நூலகம் |
| வெளியீட்டு எண் | : | 3 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | ; | ஆறாம் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : | 2006 |
| தாள் | : | 14. 2 கி. கி. சேஷசாயி |
| நூல் அளவு | : | 21 X 14 செ. மீ. |
| பக்கங்கள் | : | 332 |
| படிகள் | : | 500 |
| எழுத்து | : | 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : | சரசுவதி மகால் நூலக அச்சகம் |
| புத்தகக்கட்டு | : | மெலிந்த அட்டை |
| பொருள் | : | மருத்துவம் |
| விலை | : | 110-00 |

# வெளியீட்டாளர் முகவுரை

கி. பி. 1799இல் தொடங்கி 1832 வரை தஞ்சை அரசராகத் திகழ்ந்த இரண்டாம் சரபோஜி மன்னர் மருத்துவக்கலையில் கொண்ட அளப்பரிய ஈடுபாடு காரணமாக, சரஸ்வதி பண்டார் எனும் அரண்மனை நூலகத்தில் பல நூற்றுக்கணக்கான மருத்துவச் சுவடிகள் இடம் பெற்றன. பேழைகளை அலங்கரிக்கும் சுவடிகளாக அவை திகழாமல், மனிதகுலம் உய்ய மருத்துவச் சான்றோர்களால் அவை ஆராயப்பெற்று பயன்மிகு குறிப்புகளைப் பெற்ற நூல்களாகவும் தொகுக்கப்பெற்றன. சரபேந்திர வைத்திய முறைகள் எனும் தலைப்பில் அவ்வாறு தொகுக்கப்பெற்ற சுவடிகளில் ஒன்றுதான் கர்ப்பிணி பாலரோக சிகிச்சை எனும் இந்நூலாகும்.

ஒரு பெண் தாய்மைபெறத் தகுதிபெறுவதில் தொடங்கி, கர்ப்பிணியாகி மகப்பேறு அடைந்து, பெற்ற மகவை நோய்களிலிருந்து காக்கும் நெறிமுறைகளை அவள் அறிதல் வரை மருத்துவ முறைகளோடு இந்நூல் விவரிக்கின்றது. குறிப்பாகத் தாய்ப்பாலின் மகத்துவத்தைச் சிறப்புற விவரிக்கின்றது. தாய்க்கும், மகவுக்கும் மருத்துவம் கூறும் அரிய

இந்நூலினை ஏட்டுச் சுவடியிலிருந்து நூலாகப் பதிப்பித்த திரு. கே. வாசுதேவ சாஸ்த்திரியார், டாக்டர் எஸ். வெங்கட்ராஜன் ஆகிய இருவரின் பணி பாராட்டிற்குரியது.

தற்போது ஆறாம் பதிப்பாக வெளிவரும் இந்நூலினைச் சிறப்பாக அச்சிடுவதற்கு உறுதுணையாகத் திகழ்ந்த நிருவாக அலுவலர் திரு. சாமி. சிவஞானம், வெளியீட்டு மேலாளர் முனைவர் குடவாயில் பாலசுப்ரமணியன் ஆகியோர்க்கும், பதிப்புத்துறை பணியாளர்களுக்கும் என் பாராட்டுக்கள்.

இந்நூலினை அச்சிட நிதி உதவி நல்கிய நடுவண் அரசுக்கு என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மா. வீரசண்முகமணி,** இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

**தஞ்சாவூர்**
**8-3-2006**

# முதற்பதிப்பின் நூன்முகம்

நீர்வளம், நிலவளம் முதலிய இயற்கைவளம் மிகுந்த நமது நாட்டில் மக்களின் சராசரி ஆயுள் மிகவும் குறைவாக இருக்கிறது. அதிலும் ஒரு வயதிற்கு உட்பட்ட குழந்தைகளின் மரண விகிதம் இதர நாடுகளைவிட நம் நாட்டில் அதிகமாக இருக்கிறது என்பது மிகவும் வருந்தத்தக்க விஷயம். இதற்குக் காரணம் குழந்தை கர்ப்பத்திலிருக்கும்போது கர்ப்பத்தை சரியானபடி வளரச்செய்வதற்கான கர்ப்பிணியின் உபசாரங்களின் குறைவேயாகும். இதற்கு அறியாமை ஒரு காரணம். இல்லாமை மற்றொரு காரணம். பிரசவிக்கும்போதும், பிரசவித்த பின்னரும் ஏற்படக்கூடிய பலவித கோளாறுகளுக்கு உடனடியாகப் பரிகாரம் செய்யக்கூடிய வைத்திய நூலறிவு படைத்த மருத்துவ ஸ்திரீகள் அகப்படாமை மூன்றாவது காரணம்.

இக்குறைகளை ஒருவாறு அகற்றுவதற்கென்றே நமது தஞ்சையிலாண்ட சரபோஜி மன்னர் (1798 - 1832) நமது நாட்டில் பல நூற்றாண்டுகளாக அனுபவ சித்தமாகக் கையாளப்பட்ட கர்ப்பிணி பாலரோக சிகிச்சை முறைகளைத் தனது "தன்வந்தரி மகால்" என்ற மேல் நாட்டு, கீழ் நாட்டு வைத்திய ஆராய்ச்சி நிலையத்திலும், அதற்கென்று ஏற்படுத்தப்பட்ட ஆஸ்பத்திரியிலும் பரிசோதித்துக் குணந்தரும் முறைகளை மட்டிலும் திரட்டி, தம் ஆஸ்தான தமிழ்ப் பண்டிதர்களைக் கொண்டு தமிழ்ப் பாடல்களைத் தொகுக்கச் செய்து சரசுவதி மகால் புத்தகாலயத்தில் வைத்துக் காப்பாற்றியிருக்கிறார். அதில் கைகண்ட முறைகள் மிகவும் எளிதாகக் கிடைக்கக்கூடிய, மலிவான நம் நாட்டு மூலிகைகளைக்கொண்டே தயார் செய்யக்கூடியவை. இம்முறைகளைக் கண்ணுற்ற நம்நாட்டு வைத்தியர்கள்

ஒவ்வொருவரும் அவற்றின் பொருத்தத்தையும் மருந்துச் சரக்குகளின் சேர்க்கையையும் வியந்து புகழ்ந்து வருகின்றனர்.

இம்முறைகளைத் திரட்டுவதற்கும், சோதனை செய்வதற்கும் செலவு செய்யப்பட்டிருக்கும் பொருளைக் கணக்கிட்டால் இவற்றின் அருமை ஒருவாறு விளங்கும். தற்காலத்தில் அரசாங்கத்தார் நம் நாட்டு முறைகளைப் பரிசோதிப்பதற்காக ஓர் ஆராய்ச்சிக் கழகமேற்படுத்தத் திட்டம் போட்டிருக்கின்றனர். இவ்வித ஆராய்ச்சிக் கழகமொன்றை சுமார் 150 வருடங்களுக்கு முன்னரே சரபோஜி மகாராஜா மேல்நாட்டு வைத்திய நூல்களையும் மருத்துவர்களையும் கூட வைத்துக்கொண்டு, அதற்கென ஆஸ்பத்திரியையும் நிறுவி, ஆராய்ச்சியைச் செவ்வனே முடித்துச் சுமார் 4000 முறைகளைத் தேர்ந்தெடுத்து ரோகங்களுக்குத் தக்கவாறு அவைகளை 16 பாகங்களாகப் பிரித்து, 18 சுவடிகளில் எழுதி வைத்திருக்கிறார். இவற்றை நாம் புறக்கணிப்போமாயின் நமது செயல், கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய் வாங்கச் செல்வது போலாகும்.

ஆகவே, அம்முறைகளை ஒவ்வொரு தொகுதியாக அச்சிட்டு நம் தேசத்துப் பல பாஷைகளிலும் மொழிபெயர்க்கச் செய்ய வேண்டியது நமது மக்களுக்கு நாம் செய்ய வேண்டிய முதல் கடமையாகும். அவ்விதப் பிரசுரத்தைச் சரசுவதி மகால் நிர்வாகத்தார் ஆரம்பித்து முதல் நூலாக "குன்மரோக சிகிச்சை முறை"களை வெளியிட்டிக்கின்றனர். இப்புத்தகம் அம்மாதிரி வைத்திய வெளியீட்டில் இரண்டாவது ஆகும். இந்நூலில் கண்ட முறைகளைச் செய்யுளாகத் தொகுத்தவர் திருவேங்கடத்தாபிள்ளை என்னும் புலவராவர்.

இம்முறைகளைச் சரிவர அறிந்து உபயோகப்படுத்துவதற்கு உதவியாக, கர்ப்பம் தரிப்பதற்கான காரணங்களும் அது உண்டாகி வளர்ச்சியடையும் விதமும், கர்ப்பிணிகள் செய்யக்கூடாத காரியங்களும் ஏற்படக்கூடிய கோளாறுகளும் பிரசவம் செய்விக்கும் முறையும், சிசுவின் ஸம்ரக்ஷணையும் மிகவும் சுருக்கமாக முகவுரையில் விளக்கப்பட்டிருக்கின்றன.

இந்நூலில் சொல்லப்பட்டிருக்கும் முறைகளைக் கையாளுவதற்குச் சாதனமாக, ஸ்திரீ பாலரோகங்களும், அவற்றின் காரணம் குறி, குணம் முதலியவைகளும் முகவுரைக்குப்பின் தனியாக விவரிக்கப்பட்டிருக்கின்றன. இதைத் தயார் செய்வதற்குச் சரசுவதி மகால் பால வாகடச் சுவடியும் (நெ. 44) மதராஸ் கவர்மெண்ட் பிரசுரமான பாலவாகடமும் ஆதாரமாகக் கையாளப்பட்டிருக்கின்றன.

இதில் கண்ட முறைகளை உபயோகிக்கும் வைத்தியர்களும் வியாதியஸ்தர்களும் தங்கள் அனுபவங்களை எங்களுக்கு அறிவிக்குமாறு வேண்டுகிறோம். இந்நூலின் அபிவிருத்திக்கான யோசனைகள் நன்றியுடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

சரசுவதி மகால்
தஞ்சாவூர்
14-12-51

**எஸ். கோபாலன்,**
கௌரவக்காரியதரிசி

# பொருளடக்கம்


| | |
|---|---|
| | பக்கம் |
| முகவுரை | |
| 1. கர்ப்பம் ஏற்படுவதற்கான ஏதுக்கள் | 1 |
| 2. சுத்த சுக்ரத்தின் லக்ஷணங்கள் | 1 |
| 3. சுத்த ஆர்த்தவ லக்ஷணங்கள் | 2 |
| 4. ருதுவின் லக்ஷணங்கள் | 2 |
| 5. ருதுமதியின் லக்ஷணங்கள் | 2 |
| 6. ருது காலத்தில் முதல் 3 தினங்களுக்கு அனுஷ்டிக்கப்பட வேண்டிய விதிகள் | 2 |
| 7. ருது காலத்தில் முதல் 3 நாட்களும் ஸங்கம்கூடாது | 3 |
| 8. ஸங்கத்திற்குரிய ருது காலம் | 3 |
| 9. சரியான கர்ப்பம் உண்டாவதற்கான ஸ்திரீ புருஷர்களின் குறைந்த பக்ஷ வயது கிரமம் | 4 |
| 10. சரியான கர்ப்பம் தரிப்பதற்காக ஸ்திரீ புருஷர்கள் அனுஷ்டிக்க வேண்டிய விதிகள் | 4 |
| 11. கருத்தரித்ததின் குறிகள் | 5 |
| 12. கர்ப்பச் சின்னங்கள் | 5 |
| 13. கர்ப்பம் வளர்ச்சியடையக் காரணம் | 6 |
| 14. கர்ப்பம் மாதந்தோறும் வளர்ச்சியடையும் விதம் | 7 |
| 15. கர்ப்பம் போஷிக்கப்படும் விதம் | 8 |
| 16. கர்ப்பிணியின் ஆகாரமும் போஷணை விதிகளும் | 9 |
| 17. கர்ப்பிணி செய்யக்கூடாத காரியங்களும் அதனாலேற்படும் தீமைகளும் | 11 |
| 18. அகாலப்பிரசவத்திற்குக் காரணங்கள் | 14 |
| 19 கர்ப்ப ஸ்தாபன மருந்துகள் | 14 |

20. கர்ப்பம் தரித்த பின்னர் ஏற்படும் கோளாறுகளும்
அதற்குச் சிகிச்சை முறையும் 14
21. பிரசவ அறை நிர்மாணிக்கும் விதம் 17
22. பிரசவ அறையில் இருக்கவேண்டிய சாதனங்கள் 17
23. பிரசவத்திற்கான குறிகள் 18
24. பிரசவத்தை எதிர்பார்க்கும் ஸ்திரீ
இருக்க வேண்டிய நிலைமை 18
25. கஷ்டப் பிரஸவத்திற்குக் காரணமும் அப்போது
கர்ப்பப் பையிலுள்ள சிசுவின் நிலைமையும் 19
26. கஷ்டப் பிரஸவத்திலபாயக் குறிகள் 20
27. குழந்தை ஜனித்தபின் நஞ்சை
வெளிப்படுத்தும் முறை 20
28. தொப்புள்கொடியை சோதிக்கும் முறை 21
29. பிறந்த சிசுவைப் பராமரிக்கும் விதம் 21
30. ஸூதிகைக்கு ஹிதமான ஆகாரங்களும்
இதர விதிகளும் 22
31. குழந்தையின் ஆகாரக்கிரமங்கள் 22
32. தாய்ப்பால் வற்றக் காரணங்கள் 23
33. தாய்ப்பாலில்லாவிடில் குழந்தையின்
போஷணை முறை 23
34. தாய்ப்பாலின் சுத்த அசுத்த லக்ஷணங்கள் 24
35. சிசுவின் வேதனைகளைக் கண்டு நோய்களை
அறியுமுபாயம் 25

II. ஸ்திரீ பாலரோகங்களின் காரணங்களும்
குறிகுணங்களும்

*1. ஸ்திரீ ரோகங்கள்*

1. பெரும்பாடு 33
2. மலட்டு ரோகக் குறிகள் 34

3. கர்ப்ப விப்புருதிக்குறி குணம் 41
4. கர்ப்ப ரோகக்குறி குணம் 41
5. கர்ப்ப சூலைக்குறி குணம் 42
6. இரத்த சூலைக்குறி குணம் 42
7. கர்ப்பப் பையில் சிசு மரித்ததின் இலட்சணங்கள் 43
8. மலட்டு ரோகத்திற்கு மருந்து வகைகள் 43

*2. குழந்தைகளின் ரோக வகைகள்:*

1. தோட வகுப்பு 44
2. மாந்த வகுப்பு 49
3. கணச்சூடு வகுப்பு 57
4. கரப்பான் ரோக வரலாறு 66
5. கிரந்தி ரோகம் 69
6. ஆமரோகம் 70
7. கீரிப்பூச்சி உற்பத்தி வரலாறு 71
8. கக்குவான் ரோகக் காரணமும் லக்ஷணமும் 71

iIII. சரபேந்திர வைத்திய முறைகள் (கர்ப்பிணி பால ரோக சிகிச்சை முறைகள்) 73 to 318

1. ருதுவாகாதவர்களுக்கு மருந்துகள் 73
2. தீட்டாகும்போது உண்டாகும் வலிக்கு மருந்துகள் 73
3. கருத்தரிக்கவும் மலட்டுப்புழு விழவும் மருந்துகள் 77
4. கர்ப்பம் தரித்தபின் ஏற்படும் வியாதிகளுக்கு மருந்துகள் 96
5. சீக்கிரப் பிரஸூதிக்கு மருந்து வகைகள் 117
6. இறந்த பிள்ளை வெளிப்பட மருந்துகள் 129
7. நஞ்சுவிழ மருந்துகள் 133
8. பிள்ளை பெற்றபின் ஏற்படும் வியாதிகளுக்கு மருந்துகள் 134
9. பிறந்த குழந்தைகளுக்கு மருந்துகள் 144

10. முலைப்பால் சுரக்க மருந்துகள் 149

11. முலைப்பால் குடியாத பிள்ளைகள் பால் அருந்த மருந்துகள் 154

12. குழந்தைகளுக்கு உண்டாகும் தோஷங்களுக்கு மருந்துகள் 156

13. குழந்தைகள் கக்குவானுக்கு மருந்துகள் 170

14. குழந்தைகள் கணைச்சூட்டுக்கு மருந்துகள் 173

15. பிள்ளைகளின் சில்லறை வியாதிகளுக்கு 208

16. பிள்ளைகளின் ஆமத்திற்கு மருந்துகள் 217

17. பிள்ளைகள் மாந்தத்திற்கும் அதன் உபத்ரவங்களுக்கும் மருந்துகள் 221

18. பிள்ளைகளுக்கு அடிப்புறப்பட்டாலதற்கு மருந்துகள் 268

19. குழந்தைகள் கழிச்சலுக்கு மருந்துகள் 269

20. சிறு பிள்ளைகளின் சுரத்திற்கு மருந்துகள் 287

21. குழந்தைகளுக்கு புஷ்டி தர மருந்துகள் 294

22. குழந்தைகள் வயிற்றுக் கிருமிகளுக்கு மருந்துகள் 300

23. குழந்தைகள் கரப்பானுக்கும் கிரந்திக்கும் மருந்துகள் 304

# AN APPEAL

Manuscripts on Palmleaf or Paper of the ancient works of the wise men of the past, are the great treasures, solely inherited by the Nation and it is the moral obligation of persons who possess them to preserve them safely for the future generations of mankind.

Probably you have some of these in your possession or you know friends or neighbours who possess them. You can make a great contribution to the cause of the preservation not only of our National Culture but also to the Culture of Humanity as a whole by arranging to present such manuscripts to the famous T. M. S. S. M. Library, Thanjavur.

The Manuscripts so presented will be accepted and acknowledged with pleasure and gratitude by the authorities of the Library, preserved with meticulous care and made available to successive generations of readers and scholars for study and research. The hitherto unpublished works found among them, will be printed and published in due course, as facilities occur, with the expression of the Library's gratitude for your gift.

The great Scholar King of Tanjore, **Rajah Serfoji,** has attained immortal fame by dedicating enormous time and wealth to the expansion and firm establishment of this world famous **"Sarasvati Mahal Library".** It is open to you to share the honour of Serfoji, in your own measure by contributing your manuscripts to the great institution built by him.

This great Honour is beckoning to you to accept it. Will you hasten to take it up? The Library waits for your answer.

**DISTRICT COLLECTOR AND DIRECTOR**
**Sarasvati Mahal Library,**
**Thanjavur.**

# சரபேந்திரர் கர்ப்பிணி, பாலரோகங்களின் சிகித்ஸை முறைகள்

## முகவுரை

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு

பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட் பேறல்ல பிற.

என்று தெய்வப்புலவர் திருவள்ளுவர் 'ஒழுக்கமுடைய மனைவியே ஒருவனுக்கு அழகென்றும் நன்மக்களைப் பெறுதல் அவ்வழகின் மேலிட்ட அணிகலம்' என்றும் கூறியபின் 'ஒருவர் பெறும் பல பொருள்களுள் அறிவுடைய குழந்தைகளைப் பெறுவதைக் காட்டிலும் மேலானது வேறொன்றுமில்லை' என்று கூறியிருக்கிறார். ஆகையால் மக்கட் பேற்றைப்பற்றிய பகுதியை நமது ஆயுர்வேதத்தில் ஒரு பெரும் தனிப்பகுதியாக விவரித்திருக்கிறார்கள். அதன் சுருக்கம் பின் வருமாறு;

### 1. கர்ப்பம் ஏற்படுவதற்கான ஏதுக்கள்

சுத்தமான சுக்ரம் (விந்து), சுத்த ஆர்த்தனம் (பெண் தத்வம்) இவ்விரண்டும் கூடும்போது ஜீவன், பூர்வ ஜன்மத்தின் நல்வினை தீவினையாலும், விருப்பு வெறுப்பினாலும் தூண்டப்பட்டு அரணிக்கட்டையிலிருந்து அக்கினி உண்டாவதுபோலக் கர்ப்பம் உண்டாகிறது.

### 2. சுத்த சுக்கிரத்தின் இலக்ஷணங்கள்

ஸ்படிகம் போன்று நிர்மலமாகவும், திரவமாகவும், பிசுபிசுப்போடும், கூடியதாகவும், தித்திப்புடன் கூடியதாகவும், தேன்,

நெய் தைலம் இவைகளின் வாசனையோடு கூடியதாகவும் இருக்கும் சுக்ரம் கர்ப்பத்தை உண்டு பண்ணக்கூடியதாகும்.

### 3. சுத்த ஆர்த்தவ இலக்ஷணங்கள்

முயல் ரத்தம் போலவும் கொம்பரக்குக் கஷாயம் போன்றும், துணியில் கரையொட்டாததாகவும் இருக்கும். ஆர்த்தவமே கர்ப்பம் உண்டாவதற்கு ஏற்றது.

### 4. ருதுவின் இலக்ஷணங்களாவன

ஒவ்வொரு மாதமும் ஸ்திரீகளின் ரஸதாதுவிலிருந்து கருமை கலந்த செம்மை நிறமுள்ளதும் துர்க்கந்தமுள்ளதுமான "ருது' என்னும் ரக்த விசேஷம் சேகரிக்கப்பட்டு வாயுவினால் மர்ம ஸ்தானத்தை நோக்கித் தள்ளப்படுகிறது. இது பொதுவாக 3 நாட்கள் வெளிப்பட்டுக்கொண்டிருந்து பிறகு நிற்கும். சுமார் 12 வயது முதல் ஸ்திரீகளின் சரீரதாதுக்கள் விருத்தியாவதால் அந்த வயதிலிருந்து மாதந்தோறும் ருது வெளிப்பட்டுச் சுமார் 40, 50 வயதில் க்ஷீமமடைகிறது. ருது ஏற்பட்ட காலம் முதல் 12 நாள் வரை "ருது காலம்"என்று வழங்கப்படுகிறது. ருது வெளிப்படுதல் கர்ப்பம் உண்டானதும் நின்றுவிடும்.

### 5. ருதுமதியின் இலக்ஷணங்கள்

முகம் வாட்டமடைதல், ஸ்தனம் புஜம், துடை முதலிய இடங்களில் துடிப்பு, வயிறு, கண் முதலிய இடங்களில் குழி விழுதல், புருஷர்களிடத்தில் இச்சை உண்டாதல் முதலியவை.

### 6. ருது காலத்தில் முதல் 3 தினங்களுக்கு அனுஷ்டிக்க வேண்டிய விதிகள்

ருது ஆன தினத்திலிருந்து எப்போதும் தனக்கும் பிறருக்கும் நன்மையை நினைத்து ஸ்நானம், அலங்காரம் இவைகளை

விலக்கித் தார்பாய், கோரைப்பாய் முதலிய படுக்கையில் படுத்துக்கொள்ள வேண்டும். அப்போது பேதி எடுத்துக்கொள்ளக்கூடாது. தவிரப் பகலில் தூங்குவது கண்களில் மையிட்டுக்கொள்ளுதல், அழுவது, எண்ணெய் தேய்த்துக்கொள்வது, நகத்தைக் கிள்ளுதல், தாவுதல், அதிகமாகச் சிரித்தல், பெருங் கூக்குரலைக் கேட்டல், தலை வாரிக்கொள்ளுதல், கடின வேலைகளைச் செய்தல் முதலியவைகளை விலக்கல் வேண்டும். இல்லாவிடில் அவைகள் பிறக்கும் குழந்தைகளை மிகவும் பாதிக்கும்.

4வது நாள் ருதுஸ்நானம் செய்தபின் முதலில் கணவனைப் பார்த்தல் வேண்டும். ஏனெனில் ருதுஸ்நானம் செய்த ஸ்திரீ எந்த ஆடவனை முதலில் பார்க்கின்றாளோ அவனைப்போன்ற குழந்தையைப் பெறுவாள் எனக் கூறப்பட்டிருக்கிறது.

### 7. ருது காலத்தில் முதல் மூன்று நாளும் ஸங்கம் கூடாது

நதியில் ஒரு மிதக்கும் திரவியத்தைப் போட்டால் அது எவ்வாறு மேல்நோக்கிச் செல்லாமல் ஜலப்ரவாகத்துடனேயே செல்கிறதோ அதைப்போல முதல் 3 நாளும் புருடனுடைய சுக்ரம் கர்ப்பாசயத்தையடையாமல் ருதுவுடன் வெளியே வந்துவிடும். ஆகவே, அம்மூன்று தினங்களும் கர்ப்போற்பத்திக்குக் காரணமாகாது.

### 8. ஸங்கத்திற்குரிய ருதுகாலம்

ருதுவான 4-வது நாள் முதல் 12-வது நாள் வரை கர்ப்போற்பத்திக்கு யோக்கியமான காலம். இதற்குமேல் ஸங்கமேற்பட்டால் அநேகமாகக் கர்ப்பம் தரிக்காது. ஏனெனில் தாமரை பகல்பொழுது கழிந்தவுடன் சுருங்கிக் கொள்வது போல் கர்ப்பாசயம் ருதுகாலம் சென்றவுடன் சுருங்கவாரம்பிக்கிறது. அதனால் அது கர்ப்பத்தை ஏற்காது.

## 9. சரியான கர்ப்பம் உண்டாவதற்கான ஸ்திரீ புருஷர்களின் குறைந்த பக்ஷம் வயதுக் கிரமம்

புருஷன் 20 வயது நிறைந்தவனாகவும், ஸ்திரீ 16 வயது நிறைந்கவளாகவுமிருந்தால் வீரியமுள்ள குழந்தைகள் பிறக்கும். இல்லாவிடில் பிறந்த குழந்தை அல்பாயுளாகவோ பலஹீனமாகவோ இருக்கும்.

## 10. சரியான கர்ப்பம் தரிப்பதற்காக ஸ்திரீ,புருஷர்கள் அனுஷ்டிக்க வேண்டிய விதிகள்

1. ஆயுர்வேத முறையில் குறிப்பிட்டுள்ளபடி, தக்க காலங்களில் ஸ்நேஹம், (எண்ணெய், நெய், முதலியவைகளை உள்ளுக்குச் சாப்பிட்டோ அல்லது வெளிப்ரயோகம் செய்தோ நைப்பு உண்டாக்குதல்) ஸ்வேதம் (வெந்நீர், ஒத்தடம், முதலியவைகளினால் வியர்வை உண்டாக்குதல், வமனம் (வாந்தியெடுக்கச் செய்தல், விரேசனம் (பேதிக்கு எடுத்துக்கொள்ளுதல்) வஸ்தி (கஷாயம், எண்ணெய் முதலியவைகளைக் கொண்டு எனிமா எடுத்துக்கொள்ளுதல்) முதலியவைகளினால் சரீரத்திலுள்ள வாத, பித்த, கபம் என்கிற தோஷங்களைச் சமமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

2. புருடன் ஸங்க தினத்தன்று இனிப்பானச் சரக்குகள் சேர்த்துக் காய்ச்சிய நெய், பால் சேர்ந்த ஆகாரத்தையும், ஸ்திரீ நல்லெண்ணெய் உளுந்து இவைகள் சேர்ந்த ஆகார வகைகளையும் சாப்பிடுதல் வேண்டும்.

3. ருதுவான 3 நாட்களும் முன்கூறியபடி நியமமாக இருத்தல் அவசியம் 4-வது நாள் நன்றாக ஸ்நானம் செய்து தூய ஆடைகளணிந்து ஆபரணங்களையும் அணிதல் வேண்டும். புருடனும் அவ்வாறே செய்ய வேண்டும்.

4. இருவரும் புஷ்பங்களைத்தரித்து அந்நியோந்நியம் பிரியமுள்ளவர்களாகச் சேரவேண்டும்.

5. அதிகமாக ஆகாரமுட்கொண்டோ, மிக்கப் பசியிலோ, அதிகப் பயத்திலோ, தூக்கத்திலோ, கோபத்திலோ விசாரத்திலோ வேறு பூமானை நினைத்துக் கொண்டோ சேர்க்கையில் மிதமிஞ்சி விருப்பத்துடன் ஸ்திரீ இருந்தால் கர்ப்பம் உண்டாவதில்லை. உண்டானாலும் அது அங்கமாகவோ குண ஹீனமாகவோ ஏற்படும்.

6. அதிக இளமை, அல்லது அதிக வயது வந்தவர், நாள்பட்ட வியாதியுள்ளவர்கள், வேறுவித மாறுபாடுடையவர்களும் சேர்க்கைக்கு உகந்தவர்களல்லர்.

7. குப்புறவோ அல்லது பக்கத்திலோ ஸ்திரீ சயனிக்கக்கூடாது. முதல் சொன்ன பிசகினால், பலத்தையடைந்த வாயு மர்மஸ்தானத்தைப் பீடிக்கும். வலது புறமாகப் படுத்துக்கொண்டால் கபம்விருத்தியாகிக் கர்ப்பாசயத்தை மூடிவிடும். இடது புறமானால் பித்தம் அதிகமாகி ரத்தத்தையும் சுகரத்தையும் எரித்து விடுகிறது. ஆகவே ஸ்திரீ மல்லாந்து படுத்தல் வேண்டும். அப்போதுதான் வாதபித்த கப தோஷங்கள் அதனதன் ஸ்தானத்திலிருக்கும்.

8. சேர்க்கை முடிந்ததும் ஸ்திரீயும் புருடனும் குளிர்ந்த ஜலத்தினால் முகம் கை, கால் முதலிய அங்கங்களைக் கழுவிக் கொள்ளுதல் வேண்டும்.

### 11. கருத்தரித்ததின் குறிகள்

ஸ்திரீ பூமான்களுக்குத் திருப்தி, ஸ்திரீயினடிவயிற்றில் துடிப்பு, பாரமுமேற்படுதல் சுக்ரமும், ஆர்த்தவமும் ஒன்று கலந்து வெளிவராதிருத்தல், இருதயத்துடிப்பு, சோம்பல், நாவறட்சி, ஆயாசம், மயிர்க்கூச்சல் முதலியவைகளேற்படும். துடையில் சிறிது வலி, நடுக்கம் முதலியவைகளுண்டாகும்.

### 12. கர்ப்பச் சின்னங்கள்

ருது நின்றுபோதல், ஸ்தானங்களின் நுனி சிறிது கருமை நிறமடைதல், நாபிக்குக் கீழிறங்கும் ரோமராஜி நன்றாக

வெளிப்படுதல் கண் இமைகளைச்சுற்றிக் கருத்த வளையம் கட்டுதல், காரணமின்றி வாந்தியாதல், ஸ்தனம் பருத்துப் பாலுண்டாதல், வாயில் நீரூறல், உயர்ந்ததும் தாழ்ந்ததுமான வஸ்துக்களின் மேலும், புளிப்பிலும் ஆசையுண்டாதல், சோம்பல், இளைப்பு, பலக்குறைவு, காலில் வியர்த்தல், வீக்கம் முதலியவைகளும் உண்டாகும்.

### 13. கர்ப்பம் வளர்ச்சியடையக் காரணம்

கர்ப்பம் தாயிடமிருந்து சில அம்சங்களையும் தகப்பனிடமிருந்து சில அம்சங்களையும், ஆத்மாவிடமிருந்தும், உணவு ரஸத்திலிருந்தும் பூர்வ ஜன்ம வாசனையினால் சிற்சில அம்சங்களையும் பெற்றுக்கொள்கிறது.

**தாயிடமிருந்து**

தோல், ரத்தம், மாம்ஸம், கொழுப்பு, தொப்புள், இருதயம், ச்லோகம், கல்லீரல், மண்ணீரல், மூத்ராசயம், சிறுகுடல், வபை முதலியன்.

**தகப்பனிடமிருந்து**

தலைமயிர், நகம், மீசை, உடம்பு மயிர், பற்கள், எலும்பு, ரத்தக்குழாய், தசைக்கயிறுகள், நரம்பு, சுக்ரம் முதலியன.

**ஆத்மாவிடமிருந்து**

ஜன்ம நிர்ணயம், ஆயுள், ஆத்ம ஞானம், மனது, இந்திரியம், ப்ராணன் முதலிய வாயுக்களையும், மனது முதலிய இந்திரியங்களையும் தூண்டும் சக்தி, ஞாபக சக்தி, உருவம், குரல், நிறம், சுகம், துக்கம், விருப்பு, வெறுப்பு, அறிவு, தைரியம், அகங்காரம், விடாமுயற்சி முதலியன்ய

**தாயின் ஆகாரத்தினால்**

ஆரோக்யம், சோம்பலின்மை, புலன் தெளிவு, குரல் நிறம், ஆனந்தம் முதலியவை உண்டாகின்றன.

பூர்வ ஜன்ம வாசனையினால்

பக்தி, நன்னடத்தை, சுத்தம், ஞாபகசக்தி, மதிமயக்கம், ஈகை, அசூயை, சூரத்தனம், பயந்த ஸ்வபாவம், கோபம், சோம்பல், உதஸாகம், மிருதுத்தன்மை, கெட்டிக்காரத் தனம், கம்பீரம், சஞ்சலசித்தம் முதலிய குணங்கள் ஏற்படுகின்றன.

## 14. கர்ப்பம் மாதந்தோறும் வளர்ச்சியடையும் விதம்

முதல் மாதம்

எல்லாத்தாதுக்களும், ஒன்றுபட்டுக் குழம்பி ச்லேஷ்ம ரூபமாகி அங்க அவயவங்கள் வெளிப்படையாகத் தெரியாமலிருக்கும் நிலைமையையடைகிறது. இதைக் "கலலம்" என்று அழைக்கின்றனர்

2வது மாதம்

மேற்கூறிய கலலம் கெட்டியாகிறது. முடிச்சுப்போலிருந்தால் "ஆண்" என்றும் நீண்ட தசையைப் போன்றிருந்தால் 'பெண்" என்றும் திரண்டு உயர்ந்திருந்தால் 'அலி" என்றும் தெரிந்துகொள்ளவும்.

**3வது மாதம்**

எல்லா அவயவங்களும் ஒன்றாகவே உண்டாகின்றன. புலன்களும் சேர்ந்தாற்போலுண்டாகின்றன.

**4வது மாதம்**

அங்கங்களெல்லாம் வெளிப்படையாகிக் கர்ப்பம் ஸ்திரத்தன்மையை அடைகிறது. கர்ப்பிணியினுடம்பு கனக்கவாரம்பிக்கும்.

**5வது மாதம்**

கர்ப்பகத்தின் தசைகள், ரத்தம், மாம்ஸம் முதலியவைகள் இப்போது விருத்தியாகின்றன. ஆகவே கர்ப்பிணியினுடம்பு இளைக்கும்.

**6வது மாதம்**

கேசம், ரோமம், நகம், எலும்பு, தசைநார், முதலியவைகள் விருத்தியாகின்றன. கர்ப்பத்தின் பலம், வர்ணம், இவைகளதிகமாவதால் கர்ப்பிணியின் பலமும் வரமணமும் குறைவடையும்.

**7வது மாதம்**

எல்லா அவயவங்களும் பூர்ணமாக அமையப்பெற்று புஷ்டியடைகிறது.

**8வது மாதம்**

ஸப்த தாதுக்களில் சாரமான "ஓஜஸ்" என்ற தாது தாயார் சரீரத்திலும் சிசுவின் சரீரத்திலும் மாறி மாறிப் போய்க் கொண்டிருப்பதால்,சிசுவின் சரீரத்தில் ஓஜஸ் இல்லாதிருக்கும்போது பிறந்த குழந்தை பிழைப்பது துர்லபமானது.

**9வது மாதம்**

இம்மாதம் முதல் பிரசவகாலம்

## 15. கர்ப்பம் போஷிக்கப்படும் விதம்

கர்ப்பிணியின் ஆஹார ரஸம் மூன்று விதமாகப் பிரிக்கப்பட்டு ஒரு பாகம் தாயைப் போஷிப்பதற்கும் மற்றொரு பாகம் கர்ப்பம் வளர்ச்சியடைவதற்கும் இன்னொரு பாகம் தாய்ப்பாலை விருத்திசெய்யவும் உபயோகப்படுகிறது. மேலும் கர்ப்பத்தின் ஹ்ருதயம் தாயாரின் தாதுக்களின் அம்சத்தால் உண்டாக்கப்பட்டுத் தாயாரின் ஹ்ருதயத்தோடிணைக்கப் பட்டிருப்பதால் கர்ப்பத்தின் விருப்பங்கள் தாயாரின் மூலமாகப் பிரதிபலிக்கின்றன. கர்ப்பிணிக்குத் தனது ஹ்ருதயமொன்றும், கர்ப்பத்தின் ஹ்ருதயமொன்றும் ஆக இரு ஹ்ருதயங்களிருப்பதா லவளுக்கு "தௌஹருதிநீ" என்று பெயர். கர்ப்பிணிக்கு ஏதேனும் ஒரு பொருளின் மீதுஆசையேற்பட்டால் அது கர்ப்பத்தின்

இச்சையென்று அறிந்து அவளுக்கு ஆ...க் கொடுத்தல் வேண்டும். கர்ப்பிணிக்கேற்படுமிச்சையைத் ...டுப்பதால் பிறக்கும் குழந்தை கூனாகவோ, முடமாகவோ, ...ளமாகவோ அல்லது பொட்டையாகவோ, முட்டாளாக... ஆகிறது. கர்ப்பத்தின் நாபியிலிணைக்கப்பட்டிருக்கும் ...தொப்புள்கொடி மூலமாகவே ஆகார ரசமும் வீர்யமும் வய...களுக்குப் பாய்ச்சப்படும். ஆகார ரசமும் வீர்யமும் வயல்...ளுக்குப் பாய்ச்சப் படும் வாய்க்கால் நீர்போலக் கர்ப்பத்தையடைகின்றன.

## 16. கர்ப்பிணியின் ஆகாரமும் போஷண விதிகளும்

**முதல் மாதம்**

இனிப்பு, குளிர்ச்சி, திரவம் இவை அதிகமாக உள்ள ஆகாரங்களும் வேண்டிய அளவு குளிர்ந்த பாலும் சாப்பிடவும்.

**2வது மாதம்**

பழக்கமுள்ள ஆகாரத்தை அதிமதுரம், திராஷை முதலிய இனிப்பான சரக்குகள் சேர்த்துக் காய்ச்சிய பாலுடன் உபயோகிக்கவும்.

**3வது மாதம்**

சம்பா அரிசியினாலான அன்னத்தைப் பாலுடனோ அல்லது தேன், நெய் முதலியவை கலந்த பாலுடனோ உட்கொள்ளச் செய்யவும்.

**4-வது மாதம்**

பாலுடனும், வெண்ணெயுடனும் சேர்ந்த ஆகாரத்தையோ அல்லது ஆட்டு மாமிசத்துடன் ஹிதமான அன்னத்தைச் சாப்பிடலாம். தினந்தோறும் பசு வெண்ணெய் கொட்டைப்பாக்களவு கொடுக்கவும்.

**5-வதுமாதம்**

பாலும், நெய்யும் கலந்த ஆகாரம் அதிகமாக உபயோகிக்கவும்.

6-வது மாதம்.

நெரிஞ்சில் சேர்த்துக் காய்ச்சிய நெய்யை அளவாகச் சாப்பிட்டு வரவும். கூழ் சாப்பிடுதல் நல்லது.

7வது மாதம்

7வது மாதத்தில் மார்பிலேற்படும் அரிப்பிற்கு இலந்தைக் கஷாயத்துடன் அதிமதுரம் சேர்த்துக் காய்ச்சிய நெய்யை உள்ளங்கையளவு உள்ளுக்குச் சாப்பிட்டு, வெளிப் பிரயோகத்திற்குச் சந்தனம், கோரைக்கிழங்கு, கஸ்தூரிமஞ்சள் இலைகளைப் பூசவும். அரளி இலை போட்டுக்காய்ச்சிய எண்ணெயைத் தடவலாம். அரிப்பு ஏற்பட்டால் சொரியக்கூடாது. தாங்க முடியாவிடில் மெதுவாகத் தடவிக் கொடுக்கலாம். ஓரிலை என்னும் மருந்துச் சரக்கைப் போட்டுக் காய்ச்சிய தித்திப்புடன் கூடிய ஆகார வகைகளைச் சிறிது உப்பு, நைப்புச் சேர்த்து மிதமாகப் புசித்து, அனுபானமாகச் சிறிது ஜலத்தைப் பருகவும்.

8வது மாதம்

நெய்விட்ட பாற் கஞ்சியைப் பருகக் கொடுக்கவும்.

9வது மாதம்

அதிமதுரம் முதலிய இனிப்புத் திரவியங்கள் சேர்த்துக் காய்ச்சிய எண்ணெயால் எனிமாக் கொடுக்கவும். அதையே பஞ்சில் தோய்த்து மர்ம ஸ்தானத்தில் வைக்கவும். இதனால் வயிறு, இடுப்பு, பக்கம், முதுகு முதலான இடங்கள் மிருதுவாகி, வாதம் கீழ்நோக்குவதோடு, மலஜலங்கள் அவற்றின் நிலைமைகளிலிருந்து வருவதால் கர்ப்பமும் சரியானபடி புஷ்டியடைந்து சுகப்பிரசவமுண்டாகிறது.

பிறந்த பிறகு குழந்தைக்குப் பால் எவ்வாறு அவசியமோ அதைக்காட்டிலும் கர்ப்பிணிக்கு பால் நெய் இவை கலந்த ஆகாரம் அத்தியாவசியம் என்பது கவனிக்கத்தக்கது. குழந்தைகளைப் பராமரிப்பதற்காக ஏற்பட்ட சில ஸ்தாபனங்களில் குழந்தைகளுக்குப் பால் கொடுக்கின்றனர். ஆனால் அதைக்காட்டிலும் கர்ப்பிணிக்கும் பால் கொடுத்தல் முக்கியமானதாகும்.

17. கர்ப்பிணி செய்யக்கூடாத காரியங்களும் அதனாலேற்படும் தீமைகளும்.

1. மிகவும் உயர்ந்ததும், சிரமத்தைக் கொடுக்கக் கூடியதுமானதும், மேடு பள்ளங்களுள்ளதும், கடினமாக உள்ளதுமான இடங்களிலும் ஆசனங்களிலும் உட்காரக்கூடாது.

2. மலம், மூத்ராதி வேகங்களை அடக்கக்கூடாது. கடுமையான, அல்லது உசிதமல்லாதத் தேகப்பயிற்சிச் செய்யக்கூடாது.

3. அதிக உறைப்பு, உஷ்ணம் இவைகளுள்ள பதார்த்தங்களை அதிகமாகச் சாப்பிட உபயோகிக்கக்கூடாது.

4. வயிற்றுக்குப் போதாமல் சாப்பிடகூடாது. இக்குற்றங்களினால் கர்ப்பமானது ஒருவேளை வயிற்றிலேயே மரிக்கலாம். அல்லது அக்காலத்தில் நழுவலாம். அல்லது சோக்ஷித்துப் போகலாம்.

5. கர்ப்பிணிக்குத் தேகத்தில் யாதொரு அடியும் படக்கூடாது. உடம்பிற்கு வருத்தமேற்படக்கூடாது.

6. ஆழ்ந்த பள்ளத்தையோ, கிணற்றையோ கீழே பார்த்தால் பயம் உண்டாக்கக்கூடிய இடத்தையோ பார்க்கக்கூடாது. அதனால் கர்ப்ப விச்சதி ஏற்படும்.

7. மிகவும், களைப்பைக் கொடுக்கக்கூடிய வாகனங்களில் செல்வதும், மிகக்கடுஞ் சொற்களைக் கேட்பதும் இதே கஷ்டத்தைத் தரும்.

8. கர்ப்பிணி மல்லாந்து படுத்துக்கொள்ளக்கூடாது. அதனால் தொப்புள்கொடி குழந்தையின் கழுத்தில் சுற்றிக்கொள்ளும்.

9. உடம்பை மூடிக்கொள்ளாமல் படுத்துக்கொண்டாலும் இரவில் சஞ்சாரம் செய்தாலும் சிசுவிற்குச் சித்தப்பிரமை உண்டாகும்.

10. சண்டை, கலகங்களிலீடுபட்டால் சிசுவிற்குக் காக்கை வலிப்பு உண்டாகும்.

11. கர்ப்பிணியா யிருக்கும்போது சேர்க்கையிலீடுபட்டால் குழந்தையினுடம்பு அழகு குன்றியோ அல்லது லஜ்ஜையற்ற சுபாவமுடனோ அல்லது ஸ்திரீ லோலனாகவோ ஆவான்.

12. சதா வருத்தப் பட்டுக்கொண்டிருந்தால் பயப்படும் சுபாவமுள்ள குழந்தை பிறக்கும். அல்லது மாம்ஸ வளர்ச்சியில்லாததாகவோ, அல்பாயுசாகவோ பிறக்கும்.

13.கர்ப்பம் தரித்திருக்கும்போது அவள் பிறருக்குக் கெடுதியை நினைத்துக் கொண்டேயிருந்தால் பிறரை இம்சிக்கும் சுபாவமுள்ளவனும், பொறாமையுள்ளவனும், காமுகனுமான குழந்தை பிறக்கும்.

14. திருடினால் தனக்கும் பிறருக்கும் தொந்தரவைக் கொடுக்கும் பிரஜையைப் பெறுவான்.

15. பொறுமையற்றவளாக இருந்தால் கோபிஷ்டனாகவும். அசூயையோடு கூடியவனாகவுமுள்ள குழந்தை பிறக்கும்.

16. எப்பொழுதும் தூங்கிக்கொண்டிருந்தால் சோம்பல், புத்திஹீனம், அகினி பலக்குறைவு முதலியவைகள் குழந்தைக்கு ஏற்படும்.

17. மதுபானத்தில் கர்ப்பிணி அதிகமாக ஈடுபட்டால் குடிகாரனாகவும், சஞ்சல சித்தமுடையவனாகவும் குழந்தை பிறக்கும்.

18. உடும்பு மாமிசத்தையே விரும்பி அதிகமாகப் புசித்தால் குழந்தைக்கு மூத்ர ரோகங்களுண்டாகும்.

19. பன்றி மாமிசத்தை விரும்பிச் சாப்பிடுவதால் கண் சிவப்பு, மூச்சுத்திணறல், பருத்துத் தடித்த மயிர் இவைகளுண்டாகும்.

20. மீனை அதிகமாகச்சாப்பிட்டால் கண் இமைப்புக் குறைந்தவனும் நிலையான பார்வையுடையவனுமான குழந்தையைப் பெறுவாள்.

21. இனிப்புப் பதார்த்தத்தையே சாப்பிட்டால் குழந்தைக்கு நீரிழிவு, ஊமைத்தனம், அதிகபருமன் முதலியவைகளுண்டாகும்.

22. அதிகமாகப் புளிப்பையே உபயோகித்து வந்தால் குழந்தைக்கு இரத்த பித்தம், தோல், கண் இவைகளைப் பற்றிய வியாதி முதலியவைகளுண்டாகும்.

23. உப்பை அதிகமாக உபயோகித்து வந்தால் பிறக்கும் பிரஜைக்கு நரை, திரை, வழுக்கை முதலியவைகள் அகாலத்திலேயே ஏற்படும்.

24. உறைப்பை அதிகம் சாப்பிட்டால் துர்ப்பலம் அல்பவீரியம் இவற்றோடு கூடிய குழந்தை ஜனிக்கும்.

25. கசப்புப் பண்டங்களை அதிகமாகச் சாப்பிட்டு வந்தால், உடம்பு உலர்ந்தும், பலம் குன்றியும், இளைத்தும் குழந்தை ஜனிக்கும்.

26. துவர்ப்பையே அதிகமாக உபயோகித்தால் கருத்த மேனியும், பொருமல் வியாதியும், வாத ரோகங்களும் குழந்தைக்கு உண்டாகும்.

பொதுவாக எந்தெந்த வியாதிகளுக்குக் கூறப்பட்டிருக்கும் காரணங்களைக் கர்ப்பிணி அனுஷ்டிக்கிறாளோ அவ்வியாதிகள்

பிறந்த குழந்தைக்கு உண்டாகும். இவ்விதமாகவே தகப்பனுடைய தோஷங்களும் சுக்ரத்தின் மூலமாகக் குழந்தையை வந்தடைகின்றன என்பதும் கவனிக்கத்தக்கது.

### 18. அகாலப் பிரசவத்திற்குக் காரணங்கள்

வாதாதி தோஷங்களைப் பிரகோபிக்கச் செய்யும் காரியங்களைக் கர்ப்பிணி அடிக்கடிச் செய்வதாலும், கர்ப்பத்தின் பூர்வஜன்ம வினையாலும் மாதா பிதாவின் நாஸ்திகத் தன்மையாலும் கர்ப்பம் அகாலத்தில் வெளிவரக்கூடும். மேலும் க்ருமி, வாயு, அடிபடுதல் முதலியவற்றாலும் கர்ப்பம் சிதைவுறும்.

### 19. கர்ப்ப ஸ்தாபன மருந்துகள்

வல்லாரை, பச்சை நிறமுள்ள அறுகம்புல்லின் வேர் (வெள்ளறுகு என்ற தனிமருந்து அல்ல) பாதிரிவேர், சீந்தில் கொடி, கடுக்காய், கடுகுரோகிணி, மஞ்சள், சிற்றாமுட்டி ஞாழல் இவைகளை ஸ்திரீ வலது கையிலும், தலையிலும் தரித்துக் கொள்ளலாம். அல்லது இம்மருந்துச் சரக்கு வகைகளைச் சேர்த்துக் காய்ச்சிய பாலையோ அல்லது நெய்யையோ சாப்பிடலாம். பூச நக்ஷத்திரத்தில் இம்மூலிகைகளைச் சேர்த்துக் கொதிக்க வைத்த ஜலத்தில் தவறாமல் ஸ்நானம் செய்யலாம். இம்மூலிகைகளின் சூரணங்களினாலும் உடம்பு தேய்த்து ஸ்நானம் செய்வது நலம்.

### 20. கர்ப்பம் தரித்தபினனர் ஏற்படும் கோளாறுகளும் அதற்குச் சிகிச்சை முறையும்.

1. எந்தக் காரணத்தினாலாவது 2 வது அல்லது 3வது மாதத்திற்குள் கர்ப்பிணி ருதுவானால், அந்தக் கர்ப்பம் தங்காது என்று தெரிந்துகொள்ளல் வேண்டும். ஏனெனில் அக்காலத்தில் கர்ப்பத்திற்கு யாதொரு பலமுமுண்டாகியிராது.

2. நான்காவது மாதம் முதல் சில சமயங்களில் அடியில் கண்ட காரணங்களினால் ருது வெளிப்படலாம்.

1. கோபம் 2. துக்கம் 3. அழுக்காறு 4. பயம் 5. திடிக்கிடல் 6. அதிக சங்கம் 7. அதிகத் தேகப்பயிற்சி 8. மனது கலக்குதல் 9. மலமூத்ராதி வேகங்களையடக்குதல் 10. பொருத்தமல்லாததும் அகாலத்திலும் ஏற்றுக்கொள்ளப்படும் ஆதாரம் 11. சமமில்லாத படுக்கை 12. அதிகமாக நிற்றல் 13. பசி தாகத்தையடக்குதல் முதலியவைகளாகும்.

அப்போது கர்ப்பம் சிதையாமலிருப்பதற்காகப் பின் கண்ட முறைகளை கையாளவேண்டும்.

1. கர்ப்பிணியைக் குளிர்ந்ததும், மிருதுவானதுமான படுக்கையில் தலைப்பக்கம் சிறிது கீழிருக்கும்படியாகப் படுக்க வைக்கவும். பின்பு, அதிமதுரம் சேர்த்துக்காய்ச்சப் பட்ட நெய்யை மிகவும் குளிர்ந்த ஜலத்தில் வைத்துக் குளிரச்செய்து அதில் ஒரு பஞ்சைத் தோய்த்து மர்ம ஸ்தானத்தில் வைக்கவும். கர்ப்பிணியின் அடிவயிறு முதலிய இடங்களில் 100 தடவையோ 1000 தடவையோ தண்ணீரால் கழுவப்பட்ட நெய்யைக்கொண்டு துவளையிடவும். குளிர்ந்த பால் குளிர்ந்த அதிமதுரக் கஷாயம், குளிர்ந்த ஆல் முதலிய பால்மரப்பட்டைக் கஷாயம் இவைகளை அடிவயிறு முதலிய் இடங்களிலூற்றி நனைக்கவும். தாமரை, அல்லி, ஆம்பல் முதலிய புஷ்பங்களின் கேசரங்களைத் தேனுடனோ சர்க்கரையுடனோ கலந்து சாப்பிடக் கொடுக்கவும். உடம்பின் ஸ்திதிக்குத் தக்கவாறு நன்றாகக் குளிர்ந்த ஜலத்தில் அமிழச் செய்யலாம். பால் மரப்பட்டைகள் (அத்தி, இத்தி, ஆல், அரசு) துவர்ப்புள்ள மரப்பட்டைகள் இவைகளின் கஷாயத்தில் நன்றாக ஊறிய துணிகளைத் தரிக்கச் செய்யலாம். பால் மரப்பட்டைகளைச் சேர்த்துக் காய்ச்சிய பால் அல்லது நெய்யை 2 தோலா அளவு உள்ளுக்குக் கொடுக்கலாம். அதிலேயே பஞ்சைத் தோய்த்து மர்ம

ஸ்தானத்திலும் வைக்கலாம். அத்தி மொட்டுகளை ஆட்டுப் பாலிலரைத்துச் சாப்பிடவும். சிற்றாமுட்டி முதலியவை சேர்த்துப் பக்குவம் செய்யப்பட்ட செந்நெல்லரிசியன்னத்தைச் சர்க்கரை சேர்த்துக் குளிர வைத்துக் கொடுக்கலாம். மனக்கவலையை ஒழித்துச் சந்தோஷமாக இருந்துவர வேண்டும். அப்போது கர்ப்பம் சிதைவுறாமல் தங்கும்.

2. அஜீரணம் முதலிய காரணங்களினால் கர்ப்பிணிக்கு ருது வெளிப்பட்டால் அப்போது கர்ப்பத்தை தங்கச்செய்வது கடினம். ஏனெனில் மேல் சொல்லிய குளிர்ச்சி, மிருது முதலிய உபசாரங்கள் அஜீரணத்தையதிகமாக்குவதனால் இவைகள் கர்ப்பத்தை நிலைநிறுத்தப் பிரயோஜனப்படாது.

3. சில சமயங்களில் கர்ப்பம் பலமடைந்த பின்னர், அதிக உஷ்ணம், உறைப்பு முதலியவைகளின் அதிக உபயோகத்தால் ருது வெளிப்படவாரம்பித்தோ அல்லது கர்ப்ப ஸ்தானத்திலிருந்து வேறுவகை திரவம் வெளிப்பட ஆரம்பித்தோ அக்கர்ப்பம் விருத்தியடையாமல் பல மாதங்கள் வயிற்றிலேயே தங்கிவிடுவதுண்டு. இதற்கு "உபவிஷ்டகம்" உட்கார்ந்து போன கர்ப்பம் என்று பெயர்.

4. பட்டினி கிடந்தாலும், எண்ணெய் முதலிய நைப்பு வஸ்துக்களைச் சேர்க்காமலிருந்தாலும். வாதத்தை பிரகோபிக்கச்செய்யும் வஸ்துக்களை அதிகமாக உபயோகிப்பதனாலும், கர்ப்பம் விருத்தியடையாமல் மெலிந்து கர்ப்பத்தின் துடிப்பும் இல்லாமல் வயிற்றிலேயே தங்கிவிடுதல் உண்டு. இது "நாகோதரம்" என்று சொல்லப்படுகிறது.

## இவைகளுக்கான மருந்து வகைகள்

வசம்பு, குக்கில் போன்ற பௌதிகச் சரக்குகளையும், இனிப்பானதும், வாதத்தைச் சமனப்படுத்துவதுமான சரக்குகளையும் சேர்த்துத் தயார் செய்யப்பட்ட நெய் மிகவும் நன்மை பயக்கும். இவைகளை வேண்டிய அளவு ஆகாரத்துடனும்

உபயோகிக்கலாம். ஓடம், படகு முதலியவைகளிலோ அல்லது அசங்கக்கூடிய வாகனாதிகளில் செல்லுவதையும், எண்ணெய் தேய்த்தல் முதலியவைகளையும் பரிஹரிக்க வேண்டும்.

கர்ப்பச் சிதைவுற்றால், அப்போது வலி தெரியாமல் செய்வதற்கும், கர்ப்பாசய சுத்திக்கும் மத்யங்களை (மயக்க வஸ்து) அருந்தக் கொடுக்கவும். மனதிற்கு ஹிதமானதும் எண்ணெய்ப் பசையற்றதுமான ஆகார வகைகளைச் சாப்பிடலாம்.

**21. ப்ரசவ அறை நிர்மாணிக்கும் விதம்**

அது விசாலமாகவும் புழுதி, மண் முதலியவைகளில்லாமலும், காற்றோட்டமுள்ளதாகவும், பிரஸவத்திற்கு வேண்டிய உபகரணங்களோடு கூடியதாகவும், உள்ள ஒரு சிறப்பான இடத்தில் இருக்கவேண்டும்.

**22. பிரசவ அறையில் இருக்கவேண்டியவைகளாவன**

கூர்மையான ஊசி வகைகள், ஸ்வர்ணத்தினாலும் வெள்ளியினாலும், செய்யப்பட்ட சஸ்திரங்கள், வில்வக்கட்டையினால் செய்யப்பட்ட சாய்ந்து படுக்கும் மஞ்சம் தும்பை, இங்குணமரம் இவைகளின் குச்சியினாலுண்டான அக்னி, அநேக குழந்தைகளுக்குத் தயாராகவும், நன்மை கௌரவிக்கத் தகுந்தவர்களாகவும், அசூயை இல்லாதவர்களும், பிரியமானவர்களும், பிரசவம், செய்விப்பதில் தேர்ச்சி பெற்றவர்களும், வயோதிகர்களுமான ஸ்திரீகளும் பிரசவ அறையிலிருக்கவேண்டும்.

**23. பிரசஸவத்திற்கான குறிகள்**

இன்றைக்கோ,நாளைக்கோ பிரசவம் ஏற்படுமெனில் அக்கர்ப்பிணிக்கு உடம்பில் வாட்டமும்அசக்தியுமுண்டாகும். முகம் வாட்டமடையும். கண்களும் வயிறும் தளரும். மார்பில் சுட்டுவிட்டது போன்ற உணர்ச்சியேற்படும். அடிவயிற்றில் பாரமதிகரிக்கும். வாயில் உமிழ்நீர் உண்டாகும். வயிறு,இடுப்பு, ப்ருஷ்டபாகம், இருதயம,மூத்திரப்பை,துடையுடுக்குஇவ்விடங்களில் வலியும் துடிப்புமேற்படும்.மர்மஸ்தானத்திலிருந்து நீர்க்கசியும். ஆகாரத்தில் விருப்பம்மின்மையும் ஏற்படும். பின்பு பிரஸவத்திற்கியல்பான வலி அதிகமேற்பட்டுக் கர்ப்பம் கிரமமாக கீழிறங்கும்.

**24. பிரஸவத்தை எதிர்பார்க்கும் ஸ்திரீ இருக்க வேண்டிய நிலைமை**

ஸ்திரீ பூமியில் விரிக்கப்பட்ட ஒரு மிருதுவான படுக்கையிலிருந்து துடைகளை உயர்த்தி மடக்கிக்கொண்டு மல்லாந்து படுத்துக்கொள்ளவேண்டும். பின்பு, நாபிக்குக்கீழே தைலம் முதலானவைகளைத் தடவி மர்ம ஸ்தானத்தை நோக்கி உருவி விடவும். கர்ப்பிணியை மூச்சையடக்கிப் பொருமலுடன் வயிற்றில் அமுக்கத்தையுண்டுபண்ணி, படுக்கையில் இப்படியும் அப்படியுமாகப் புரளச் சொல்லவும். இப்போது கர்ப்பமானது தலை கீழாக மேலிருந்து கீழ்நோக்கி வரும். அதனால் மாதாவிற்கும் சிசுவிற்குமிருக்கும் ஹிருதயப் பற்றுதல் விடுபட்டு அடிவயிற்றிலிறங்கித் தாயாரின் மூத்திரப்பைக்கு மேல் நிற்கும். இந்த ஸ்திதியில் பிரஸவத்திற்கு இயல்பான வலியைத் தூண்டிவிட்டுப் பிரஸவிக்கும் ஸ்திரீயைக் கட்டிலிலேற்றி விடவும். வலி உண்டாகும்போது மர்ம ஸ்தானத்தில் சிறிது உஷ்ணமான தைல வகைகளைத் தடவி நைப்பையுண்டாக்க வேண்டும். சிசுவின் தலை முன்னோக்கி வரும்போது மிருதுவாகவும் பின்பு குழந்தை வெளிவரும்வரை பலமாகவும் முக்கச் சொல்லவேண்டும். "வலி

இல்லாத சமயங்களில் முக்குவது பிசகு. ஏனெனில் அதனால் வீண் களைப்பு ஏற்படும்" என்று பிரசவிப்பவளுக்குச் சொல்லவேண்டும். அதேவிதமாக வலி உண்டாகும்போது அவசியம் முக்குதல் வேண்டும். பிரசவ ஸ்திரீயை அடிக்கடி உற்சாகப்படுத்தியும், "குழந்தை இதோ பிறந்து விட்டது" என்று ஜனனமாகிற சமாச்சாரத்தை அவளுக்குச் சொல்லியும், ஜலத்தினால் முகத்தைக் கழுவியும் விசிறிகளினால் வீசியும் அவளைக் களை தெளிவித்துத் தைரியப்படுத்த வேண்டும். இவைகளால் பிரசவிக்கையில் உண்டாகும் சிரமமும், அதைரியமும் நீங்கும்.

## 25. கஷ்டப் பிரசவத்திற்குக் காரணமும் அப்போது கர்ப்பாசயத்திலுள்ள சிசுவின் நிலைமையும்.

கடுமையான வேலை, தகாத உணவுகளைச் சாப்பிடுதல், முதலிய காரணங்களால், பூரண கர்ப்பமானது அதன் நிலையிலிருந்து நகர்றப்பட்டு வாயுவின் கிரமமான மார்க்கத்தைத் தடைசெய்து மர்மஸ்தானத்திலும், அடிவயிறு முதலிய இடங்களிலும் வலியையுண்டாக்கி, மல மூத்ராதிகளைத் தடுத்து விடுகிறது. இவ்வாறு முறை தவறான போக்குடைய வாதத்தினால் கர்ப்பம் வளைக்கப்பட்டு அநேக வளைகளாக யோனி மார்க்கத்தை நோக்கி அது வெளியாக முயலும். இதற்கு " மூடகர்ப்பம்" என்று பெயர். முக்கியமான அதன் நான்கு நிலைமைகளை இங்குக் கூறுவோம்.

1. இருகைகளும், இரு கால்களும், சிரசும் மேல் நோக்கியிருந்து குழந்தையின் பிருஷ்டபாகம் (ஆசனம்) யோனி மார்க்கத்தையடைந்து வெளியாக முயலும். இதற்குக் "கீலகம்"

(Breech Presentation) எனப்பெயர்.

2. மர்ம ஸ்தானத்தில் இரண்டு கைகளும் கால்களும் வெளிவந்து நிற்க, சிரசும் அவ்வாறே கீழ்நோக்கி வெளியாதல் 'ப்ரதிகுரம்" என்று வழங்கப்படும். (Hands and Feet Presentation)

3. இரண்டு கைகளும் சிரசும் கர்ப்பத் துவாரத்தை நோக்கித் திரும்பி அதையடைத்துக்கொண்டு வெளிப்படவாரம்பித்தால் அது"பீஜகம்' என்ப்படும். (Vertex Presentation with Prolapse of the hands)

4. கர்ப்பமான கருப்பையில் யோனிக்குக் குறுக்காக நீண்டு அடைப்பட்டு நின்றால் அந்த நிலையைப் "பரிகம்' என்று வழங்குவர். (Transverse Presentation)

ஆனால் சாதாரணமாகக் குழந்தையின் தலைதான் முதலில் வெளிப்பட வாரம்பிக்கும். அப்போதுதான் சிரமமின்றி ஆகும்.

**26. கஷ்டப்பிரசவத்தில் அபாயக்குறிகள்**

தாயாரின் தலை தொங்கிப்போகுதல், உடம்பு குளிர்தல், லஜ்ஜை நீங்குதல், வயிற்றிலுள்ள சிரைகள் நீல நிறமாகவும், மேலெழுந்தும் தோன்றுதல் முதலிய குறிகள் காணப்பட்டால் ஸ்திரீ தனது கர்ப்பப்பையிலுள்ள சிசுவையோ, அல்லது சிசு தாயாரையோ மரிக்கச் செய்யும் என்று தெரிந்துகொள்ளவும்.

**27. குழந்தை ஜனித்தபின் நஞ்சை வெளிப்படுத்தும் முறை**

பிள்ளைப் பிறந்து சிறிது நேரத்திற்குள் "அபரா" என்னும் நஞ்சுக்கொடி தானாகவே வெளிவந்துவிடும். அப்படி வராவிடில் பக்கத்திலுள்ள ஸ்திரீ தனது வலது கையினால் கர்ப்பிணியின் தொப்புளுக்குமேல் பலமாக அமுக்கிக்கொண்டு இடது கையினால்

பின்புறத்தைப் பிடித்துக்கொண்டு நன்றாக அசைக்கவும். அபரா (நஞ்சு) வெளிவந்துவிடும்.

## 28. தொப்புள் கொடியைச் சோதிக்கும் முறை

குழந்தையின் தொப்புளிலிருந்து 8 அங்குல நீளம்வரை தொப்புள்கொடியைவிட்டு, அதற்குமேல் ஒரு நீளமான நூலைக் கட்டிவிடவும், வெள்ளி, தங்கம், இரும்பு முதலான உலோகங்களினால் செய்யப்பட்ட, ஒரு கருக்குள்ள கத்தியினால் முன் சொல்லியபடி கட்டிய பாகத்திற்கு மேலே நறுக்கிவிடவும். பின்பு, அந்நூலைக் குழந்தையின் கழுத்தில் மாலைபோல் போட்டுவிடவும். இப்படிச் செய்வதால் குடல் தொப்புளில் இறங்காது. சிறிது நேரங் கழித்து அறுத்த இடத்தில் கோஷ்டம் சேர்த்துக் காய்ச்சிய தைலத்தினால் துவளையிடவும்.

## 29. பிறந்த சிசுவைப் பரிபாலிக்கும் விதம்

குழந்தை பிறந்தவுடன் இந்துப்பையும், நெய்யையும் கலந்து, அதன்மேல் போர்த்தியிருக்கும் வெள்ளைச்சவ்வை நீக்குவதற்காகத் தேய்க்கவும். பின்பு குழந்தையின் காதினருகில் இரு கற்களைக்கொண்டு தட்டிச் சப்தத்தை உண்டாக்கலாம். குளிர்ந்த ஜலத்தினாலும், உஷ்ண ஜலத்தினாலும் மாறி மாறிக் குழந்தையின் முகத்தைக் கழுவலாம். இம்மாதிரியான உபாயங்களினால் சிசுவிற்கு மூச்சு வரும்படிச் செய்தல் வேண்டும் பின்பு குழந்தையின் துர்மலங்களை நீக்கி ஸ்நானம் செய்விக்கவேண்டும். நன்றாக உடம்பிலுள்ள ஈரத்தைத் துவட்டியபின் வைத்யன் தனது வலது ஆள்காட்டி விரலால் சிசுவின் வாயினுள் மேற்புறத்தை உயர்த்தவும் தலையின் உச்சிக் குழி.யில் தைலத்தில நனைக்கப்பட்ட பஞ்சை வைத்திருக்கவும். இந்துப்புச் சேர்த்த நெய்யைக் குழந்தையின் வாயிலிட்டு தொண்டையிலடைக்கப்பட்டுள்ள கர்ப்ப நீரை வாந்தியெடுக்கச் செய்யவும்.

## 30. ஸூதிகைக்கு இதமான ஆகாரங்களும் இதர விதிகளும்.

பிரஸவித்தது முதல் 10 மாதம்வரை ஸூதிகை எனப்படுவாள். அவள் பிரஸவித்த தினத்தன்று, வாதத்தைச் சமனம் செய்யக்கூடிய (சிற்றாமுட்டி, தேவதாரு, கோஷ்டம் முதலிய) சரக்குகள் சேர்த்துத் தயார் செய்யப்பட்ட கூழ்வகைகளைச் சாப்பிட வேண்டும். மூன்று நாள் சென்றதும் நிலப்பூசனிக்கிழங்கு, ஆமணக்குவேர், தேட்கொடுக்குவேர் முதலிய மருந்துச் சரக்குகளின் கஷாயத்தில் தயார் செய்யப்பட்ட கஞ்சி வகைகளை வேண்டிய அளவு நெய்யைச் சேர்த்து அருந்துவது நல்லது. இதனால் அசுத்த ரத்தம் நன்றாக வெளிவந்து கர்ப்பப்பைச் சுத்தமாகும். ஸூதிகையின் தேக ஸ்திதியையறிந்து, பாலில் பக்குவப்படுத்திய கஞ்சியையும் உபயோகிக்கலாம். 7-வது நாள் முதல் கிரமமாக எண்ணெய் தேய்த்துக்கொள்ளுதல், பிடித்துவிட்டுக்கொள்ளுதல் முதலியவைகளையும் ஹ்ருதயத்திற்கு நன்மை பயக்கக்கூடிய அன்ன பானங்களையும் உபயோகிக்க ஆரம்பிக்க வேண்டும்.

12 நாட்கள் கழிவதற்குள் மாமிச ஆகாரத்தைச் சேர்த்துக்கொள்ளக்கூடாது. ஸூதிகையை அதி ஜாக்கிரதையாகப் பராமரித்தல்அவசியம். ஏனெனில் கர்ப்பம் விருத்தியாகும் போதும்.. அது பிரசவத்தின்போது வெளிவருவதினாலும் பிரசவ வேதனையாலும், பலவித நீர்க்கசிவுகளாலும், இரத்தக்கசிவும் அதிகமாக உண்டாவதாலும், வலியினால் உண்டான ஆயாசத்தினாலும், அவளுக்கு ஏற்படும் வியாதிகள் எளிதில் விருத்தியாகிப் பரிஹரிக்கக் கூடாதவைகளாக ஆகக்கூடும்.

## 31. குழந்தையின் ஆகாரக்கிரமங்கள்

பிறந்த தினத்தன்று, அறுகம்புற்சாற்றை நெய்யுடனும், தேனுடனும் கலந்து 3 வேளை பருகக் கொடுக்கவும்.

இரண்டாம் தினத்திலும், மூன்றாம் தினத்திலும் வெள்ளைக் கண்டங்கத்திரி வேர் சேர்த்துக் காய்ச்சிய நெய்யைப் பருகச் செய்யவும்.

நான்காவது நாள் முதல் சிசுவிற்குத் தாய்ப்பாலைக் கொடுத்து அதற்கு அனுபானமாக இரண்டு வேளைகளிலும் சிறிது வெண்ணெயை நாக்கில் தடவவும். முதல் தடவை தாய்ப்பால் கொடுக்கும் போது வலது ஸ்தனத்தை முதலில் கொடுக்கவும். அதற்குப்பின், குழந்தையின் தேகம் வளர்ச்சியடையத் தாய்ப்பாலே சிறந்த ஆகாரமாகும்.

## 32. தாய்ப்பால் வற்றக் காரணங்கள்

மனக்கவலை, கோபம், உபவாசம், கண் விழித்தல் முதலியவைகளாலும், ஆயாஸத்தினாலும் பால் வற்றி விடும்.

## 33. தாய்ப்பாலில்லாவிடில் குழந்தையின் போஷனை முறை

தாயிடம் பாலில்லாவிடில் குழந்தையிடம் பிரியமுள்ள தாதிகளை (செவிலித்தாய்) அமர்த்தவேண்டும். அவர்கள் சுகதேகமுள்ளவர்களாகவும், சேர்க்கையில் ஈடுபடாமல் இருப்பவர்களாகவும், குழந்தைக்குத் தகுந்த சுபாவம், வயது, நிறம் முதலிவைகளுள்ளவர்களாகவும், உயிருள்ள குழந்தையுடன் கூடியவராகவும், சபலசித்தமில்லாதவர்களாகவும் இருத்தல் அவசியம். அவர்கள் கிடைக்காவிடில், சிறுமல்லிவேர் போட்டுக் காய்ச்சிச் சர்க்கரை சேர்த்த பசும்பாலையோ தாய்ப்பாலிற்குச் சமான குணமுள்ளதாகச் செய்து குழந்தைக்குப் புகட்டவும்.

**34. தாய்ப்பாலின் சுத்த அசுத்த லட்சணங்கள்**

ஒரு சொட்டுத் தாய்ப்பாலைத் தண்ணீரில் விட்டால் அது தண்ணீருடனே ஒன்று கலந்துவிடும். மேலும் வெண்மையாகவும், இனிப்பாகவும், நிறமாறுபாடில்லாததாகவும் இருக்கும் இப்படிப்பட்ட தோஷங்களற்ற பால் என்று தெரிந்துகொள்ளவும்.

வாதத்தினால் தாய்ப்பால் தூஷிக்கப்பட்டால் அது ஜலத்தில் மிதக்கும். தவிர அது குறைவாகவும் - நுரையுடனும், துவர்ப்பு ருசியுள்ளதாகவுமிருப்பதால் குழந்தையின் மலத்தையும் மூத்திரத்தையும் கட்டிவிடும்.

பித்தத்தினால் தூஷிக்கப்பட்டால் அது கார்ப்பு, புளிப்பு இச்சுவைகளுடன் கூடியதும், ரத்தவஸனையுடையதும், உஷ்ணமாகவும் தண்ணீரில் விட்டான் மஞ்சள் நிறக்கோடுகள் படர்ந்துமிருக்கும். இதை உள்ளுக்குக் கொடுத்தால் அயளையை உண்டுபண்ணும்.

கபத்தினால் தூஷிக்கப்பட்டால் மிகவும் இனிப்பாகவும் பின்பு உப்புச்சுவையுள்ளதாகவும் மிக வெளுப்பாகவும் எண்ணெய்ப் பசையுடன் கூடியதாகவும் இருக்கும்.

இவ்வாறு தோஷங்கினால் தூஷிக்கப்பட்ட தாய்ப்பாலைப் பருகுவதனால் குழந்தைக்கு அந்தந்தத் தோஷங்களுக்குத் தக்க ரோகங்கள் சம்பவிக்கின்றன. தாயார் ஒன்றுக்கொன்று விரோத குணமுள்ள ஆகார வகைகளைச் சாப்பிடுவதால் தாய்ப்பால் மேல் சொல்லிய விகாரங்களையடைகின்றது.

## 35. சிசுவின் வேதனைகளைக்கண்டு நோய்களையறிவும் உபாயம்

(காச்யபஸம் ஹிதை - சூத்ரஸ்தானம் 25வது அத்தியாயத்திலிருந்து எடுத்து எழுதப்பட்டது)

### 1. தலையில் நோய்

தலையையதிகமாக ஆட்டுதல், கண்களை மூடிக்கொள்ளல், எதைக்கண்டாலும் பிடிக்காமல் கத்துதல் தூக்கமின்மை முதலிய குறிகள் ஏற்படும்.

### 2. காது நோய்

கைகளால் காதுகளைத் தொடுதல், தலையைக் கடுமையாகச் சுழற்றுதல் பால் குடியாமை, தூக்கமின்மை, இவைகளினால் காதில் நோய் எனத் தெரிந்துகொள்ளவும்.

### 3. வாயில் நோய்

அதில் உமிழ் நீர் சுரத்தல், தாய்ப்பாலில் வெறுப்பு, குடித்த பாலை மஞ்சள் நிறமாகக் கக்குதல், மூக்கினாலேயே சிரமப்பட்டு மூச்சுவிடுதல் இவைகள் "வாயிலுண்டாகும் நோயைக்" குறிக்கும்.

### 4. கழுத்தில் நோய்

பால் செரியாமல் வாந்தி, தொண்டையில் கபம் கட்டுதல், அல்பஜ்வரம், ருசியின்மை உடம்பில் அயர்வு இவைகளுண்டாகும்.

**5. நாக்கில் நோய்**

உமிழ்நீர் அதிகமாகச் சுரத்தல், அருசி, அயர்வு, கன்னத்தில் வீக்கம், வாய் திறந்தபடியே இருத்தல் முதலியவைகளேற்படும்.

**6. தொண்டைப்ப பிடிப்பு**

சிறிது ஜ்வரம், அருசி, வாயில் எச்சில் ஊறுதல், அதை விழுங்க முடியாமை இவைகளேற்படும்.

**7. ஜ்வரத்திற்கான ஆரம்பக்குறிகள்**

அடிக்கடி அங்கங்களை முறித்துக்கொள்ளுதல், கொட்டாவி, இருமல், திடீரெனத் தாயைக் கட்டிக்கொள்ளுதல், தாய்ப்பாலில் விருப்பமின்மை, உமிழ்நீர் உஷ்ணமாகவும் வேறு வர்ணத்தோடுமிருத்தல், நெற்றியிலும், பொட்டிலும் உஷ்ணம், ருசியின்மை, கால்களில் குளிர்ச்சி முதலியவைகளிருந்தால் ஜ்வரம் வரப்போகின்றது என்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

**8. அதிசாரத்திற்கான ஆரம்பக்குறிகள்**

உடம்பின் மேனி மாறுதல், எதைக்கண்டாலும் வெறுப்பு, முகவாட்டம், தூக்கமின்மை, வாதம் கீழ்நோக்கிச் செல்லாமல் தடையுறுதல் முதலியவைகளுண்டாகும்.

**9. வயிற்று வலி**

தாய்ப்பாலை மறுத்தல், விடாமலழுகை, நிற்கவைத்தால் வயிற்றை மடித்துக்கொண்டு முன்னோக்கி விழுதல், வயிறு திமிர்த்துப்போதல், உடம்பில் குளிர்ச்சி, முகம் வியர்த்தல் இவைகள் ஏற்படும்.

**10. கழுத்துப்பிடிப்பு**

கழுத்தில் வீக்கம் ஜ்வரம், அருசி, தலைவலி, இவைகளிலிருந்து கண்டுகொள்ளலாம்.

**11. வாந்திக்கான முற்குறிகள்**

காரணமின்றி அடிக்கடி ஏப்பமும் கொட்டாவியும் விடுதல்,அடிக்கடித் தூங்கி விழுதல், இவைகளைக்கொண்டு வாந்தியேற்படுமென்று அறியவும்.

**12. விக்கல்**

அடிக்கடி முனகுதல், உஷ்ணச்சுவாசம், திடீரென்று ஏப்பமுண்டாதல், உடம்பு இளைப்பு இவைகளேற்படும்.

**13. நாவறட்சி**

பாலையதிகமாகக் குடித்தும் திருப்தியில்லாமை, விடாத அழுகை, உதடுகளை மேலே அசைத்தல், ஜலத்தில் அதிக விருப்பம், பலஹீனம் முதலியவைகளுண்டாகும்.

**14. வயிற்றுப்பொறுமல்**

கண்களையகல விழித்து நிலையாக ஒருஇடத்தைப் பார்த்தல், மூட்டுகளில் வலி, சரீர நிலையில்லாமை, சரீர வாட்டம், மல மூத்திராதிகள் தடையுறுதல் முதலான குறிகளிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

**15. சித்தப்பிரமை**

காரணமின்றித் தீடீரென உரக்கச் சிரித்தல், பிதற்றல், நிலையில்லாமை முதலியவைகளேற்படும்.

**16. மூத்திரக்குரிச்சிரம் (மூத்திரம் சொட்டுச் சொட்டாகவலியுடன் இறங்குதல்)**

மயிர்க்கூச்சல், உடம்பு திமிர்த்தல், மூத்திரம் விடும்போது எரிச்சல், அதனால் உதட்டைக் கடித்தல், அடிக்கடி அடிவயிற்றைத் தொட்டுக்கொள்ளுதல் முதலிய குறிகளிலிருந்து “மூத்திரக்ருசிரம்' என்ற நோயை தெரிந்து கொள்ளவும்.

**17. ப்ரமேகம் (நீரிழிவு)**

உடம்பு கனத்தல், மலச்சிக்கல், ஓய்ச்சல், திடீரென்று மூத்திரம் வெளியாதல், மூத்திரம் விட்ட இடத்தில் ஈ, எறும்பு முதலியவை மொய்த்தல், மூத்திரம் வெண்மையாகவும், தடிப்புள்ளதாகவும் இருத்தல் முதலிய குறிகளிலிருந்து 'ப்ரமேகம்" என்று தெரிந்துகொள்ளலாம்.

**18. மூலம்**

நன்றாக ஆகாரம் ஜீரணமான போதிலும் மலச்சிக்கலுண்டாதல், மலத்துடன் இரத்தம் வெளிவருதல், உடம்பு இளைத்தல், மூலமுளை ஆசனத்திலிருந்து வெளியே நீண்டிருத்தல், அரிப்பு, குத்துவலி முதலியவைகளேற்படும்.

**19. கல்லடைப்பு**

திப்பியிடன் கூடின அதிக அளவில் மூத்திரம் இறங்குதல், சிறுநீர் விடும்போது எரிச்சல், விடாத அழுகை, பலஹீனம் இவைகளுண்டாகும்.

**20. அக்கி**

சிவப்பு நிறமுள்ள தழும்புகளேற்படுதல், நாவறட்சி, அயளை, ஜ்வரம், நிலையில்லாமை, மதுரமான பதார்த்தங்களினாலும் சீதோபசாரத்தினாலும் சமனமாகுதல் முதலிய குறிகளேற்படும்.

### 21. விஷூசிகா (வாந்திபேதி)

உடம்பில் எரிச்சல், ஊசிகளினால் குத்தப்படுவது போன்ற வலி, வயிற்றுப்போக்கு, இருதயத்தில் வலி, தலை நிற்க மாட்டாமை, அடிக்கடிக் கொட்டாவி, அதிகமாகத் தாய்ப்பாலைச் சாப்பிடாமல் இருத்தல், உடம்பை முறித்துக்கொள்ளுதல், சாப்பிட்டதை வாந்தியெடுத்தல், முதலியவைகளினால், "வாந்திபேதி" எனத் தெரிந்துகொள்ளவும்.

### 22. அலஸகம் (அஜீர்ணத்தினால் ஆகாரம் மேல்நோக்காமல் வயிற்றிலேயே தங்கிவிடுதல்)

திக்பிரமை வயிற்றுப் பொருமல், அரிசி முதலியவைகள் உண்டாகும்.

### 23. கண்களிலுண்டாகும் நோய்

வஸ்துக்களைப் பார்க்க முடியாமை, வலி, வீக்கம், குத்துவலி, முதலியவைகளுடன் சிவப்பு நிறமாகக் கண்ணீர் சுரத்தல், தூங்கினால் இமைகள் ஒன்றோடொன்று ஒட்டிக்கொள்ளுதல் முதலிய லக்ஷணங்களினால் அறிந்துகொள்ளவும்.

### 24. அர்த்திகம் (முகம் பக்கம் கோணலாக இழுத்துக்கொள்ளுதல்)

முகத்தின் ஒரு பாகம் இழுத்துக்கொள்ளுதல், தூங்கும்போது உடம்பை முறித்துக்கொள்ளுதல், விடாமல் அழுகை உடம்பைப்

பிடித்துக் கொள்ளுவதிலாசை, சுறுசுறுப்பு, அரிப்பு இவைகளிலிருந்து தெரிந்துகொள்ளவும்.

**25. ஆமத்தின் முற்கறிகள் (ஜீரணமாகாத ரஸ தாது)**

உடம்பு திமிர்த்துப் போதல், அருசி, தூக்கம், உடம்பு வெளுப்பாதல், நிலையில்லாமை, விளையாட்டு, சாப்பாடு, படுக்கை, செவிலித்தாய், இவைகளிடத்தில் எப்போதும் வெறுப்பு, ஸ்நானம் செய்யாதபோது ஸ்நானம் செய்த மாதிரியும், ஸ்நானம் செய்தபொழுது ஸ்நானம் செய்யாதது போன்றுமிருத்தல் முதலிய குறிகள் காணப்படில் அது ஆமரோகத்தை உண்டாக்க வல்லது என்று அறியவும்.

**26. பாண்டுரோகம் (சோகை)**

வயிற்றில் ஓர் சமனான வீக்கம், கண்கள், நகம், முகம் முதலியவைகள் வெளுத்துப்போதல்,பசியின்மை, கண்களில் வீக்கம் முதலியவைகளேற்படும்.

**27. காமாலை**

கண்கள், நகம், மலம், மூத்திரம் முதலியவைகள் மஞ்சள் நிறமானால் "காமாலை" என்று அறியவும்.

**28. லாகிரி வஸ்துக்களைக் கொடுத்ததினாலுண்டாகும் மயக்கத்தைக்காட்டும் குறிகள்**

தாயிடத்திலும், செவிலித்தாயிடத்திலும் உத்ஸாகமின்மை, அக்னி மந்தம், ஒன்றிலும் ஆசையின்மை, மயக்கம் தூக்கமின்மை, வாந்தி, மனக்கலக்கம், பயம், கடுஞ்செய்கை தாகம் முதலியவைகளாகும்.

**29. பீனஸத்தின் குறிகள் (மூக்கிலிருந்து ரத்தம், நீர், சளி முதலியன சுரத்தல்)**

பால் குடித்தபின் அடிக்கடி வாயினால் மூச்சுவிடுதல், மூக்கிலிருந்து நீரொழுகுதல், நெற்றிப்பொட்டு, சுடுதல், கண், மூக்கு, காது, வாய் முதலிய துவாரங்களை அடிக்கடித் தொடுதல்,தும்மல் இருமல் முதலியவைகளுண்டாகும்.

**30. மார்பிலடிபட்டதைக் காட்டும் குறிகள்**

முற்சொன்ன குறிகளுடன், மார்பிலிருந்து முனகுதலும் உண்டாகும்.

**31. அரக்குப்பூச்சி கடித்ததினாலுண்டாகும் குறிகள்**

யாதொரு வியாதியும் இல்லாமலிருந்து இரவில் குழந்தை படுத்துக்கொள்ளாதிருத்தல், உடம்பில் சிவப்பான பொட்டுகளிருத்தல் முதலியவைகளுண்டாகும்.

# AN APPEAL

Manuscripts on Palmleaf or Paper of the ancient works of the wise men of the past, are the great treasures, solely inherited by the Nation and it is the moral obligation of persons who possess them to preserve them safely for the future generations of mankind.

Probably you have some of these in your possession or you know friends or neighbours who possess them. You can make a great contribution to the cause of the preservation not only of our National Culture but also to the Culture of Humanity as a whole by arranging to present such manuscripts to the famous T. M. S. S. M. Library, Thanjavur.

The Manuscripts so presented will be accepted and acknowledged with pleasure and gratitude by the authorities of the Library, preserved with meticulous care and made available to successive generations of readers and scholars for study and research. The hitherto unpublished works found among them, will be printed and published in due course, as facilities occur, with the expression of the Library's gratitude for your gift.

The great Scholar King of Tanjore, **Rajah Serfoji,** has attained immortal fame by dedicating enormous time and wealth to the expansion and firm establishment of this world famous **"Sarasvati Mahal Library".** It is open to you to share the honour of Serfoji, in your own measure by contributing your manuscripts to the great institution built by him.

This great Honour is beckoning to you to accept it. Will you hasten to take it up? The Library waits for your answer.

**DISTRICT COLLECTOR AND DIRECTOR**
**Sarasvati Mahal Library,**

# ஸ்திரீ, பால, ரோகங்களின் காரணங்களும், குறிகுணங்களும்

## 1. ஸ்திரீகளின் ரோகங்கள்

### 1. பெரும்பாடு

சையோகஞ் செய்யத் தனித்தனி சுழியோடும்
மெய்யாக விந்து விழவிழப் புண்ணாகும்
மையூறுங் கண்ணாட்கு மகத்தாம் பெரும்பாடாம்
கொய்யூறுந் தாண்டிற் கொப்பளிக்கு மதத்தம்
(அகஸ்தியர்)

(இதன் பொருள்) சம்போகத்தினால் அக்கினி அதிகரித்துக் கருக்குழியில் விந்து விழுந்தோறும் புண்ணாகித் செவ்விள நீர்போல் உதிரம் வடிந்து கொண்டிருக்கும். வயிற்றுவலி, வீக்கம் முதலியவைகளும் உண்டாகும்.

இந்நோயை ஆயுர்வேத முறையில் "அஸ்ருக்தரம்" அல்லது "ரக்தப்பிரதரம்"என்று கூறுகிறார்கள். இதற்கு "இரத்தப் பெருக்கு"என்று பொருள்

இந்நோய் கெட்டுப்போன மது வகைகளினாலும், ஆகாரம் ஜீரணிக்கும் முன் மேலும் சாப்பிடுவதினாலும், அஜீர்ணத்தினாலும், கருவழிவதனாலும், அதிக சம்போகத்தினாலும் வாகனங்களில் சவாரி செய்வதினாலும், அதிகப் பாரத்தைச் சுமப்பதாலும், அடிபடுவதனாலும், பகல் நித்திரையினாலும் ஸ்திரீகளுக்கு உண்டாகின்றது.

ஸாமான்ய லக்ஷணம்:- இரத்தப் பெருக்கும், உடம்பெல்லாம் நசுக்கப்பட்டது போன்ற குத்தலும் வேதனையும் உண்டாகும். இரத்தம் அதிகமாக வெளியானால் பலக்குறைவு, தலைச்சுற்றல்,

மூர்ச்சை, நாவரட்சி, காங்கை, பிதற்றல், உடம்பு வெளிறுதல், சோர்வு முதலியவைகளும் வாத வியாதிகளும் தோன்றும்.

**2. மலட்டுரோகக் குறிகுணங்கள்**

சரசுவதி மகாலிலுள்ள 44 நெ. சுவடியிலுள்ளபடி மலட்டு ரோகத்தின் காரணங்களும், வகைகளும் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

**(a) கர்ப்பாசயப் புரளல்**

ஓதிய மாமக வில்லது நீதி யுரைத்திடுவேன் றிருவே
தாதுகுமல்குலிலே மலருண்டது தானிடையே புரளில்
நீதியதாய் விழுமாவமுதந் புகநின்றிட மேயொதுங்கி
வேதமுமிப்படியே யுரையாடிடு மென்கொடி நீயறியே.

(இ-ள்) கருப்பப்பை புரளுவதினால் அது புருடனுடைய சுக்கிரத்தைக் கிரகிக்க முடியாத நிலைமையையடைகிறது.

**இதன் லட்சணம்**

மேலினி மங்கையர் மாத விடாயென விலகிய நாலாநாள்
வாலிப வாடவர் கூடி போதினின் மங்கை விலாவதுதான்
வேலிடு புண்ணெனவே வலியுண்டெனின்
மென்பகமாமலருங்
கோலமிலாது புரண்டது வென்றறி கூறுவனவுடதமே.

(இ-ள்) தீட்டான பின் நான்காவது நாளன்று புணரும்போது அந்த ஸ்திரீ விலாவினில் குத்துவலியை யுணர்ந்தால், அவளுக்குக் கர்ப்பாசயம் புரண்டிருக்கிறது என்று அறிக.

**(b) வாயு சேருதல்**

நீயறிமாமவர் தானதில் வாய்வுரியேனயம தாமமுதந்
தாயகமாகிய மாபலனற்றதின் சாரமெலா மொழிகிச்
சீயென நீரெனவேயது போல் வளர் தேகமெலாம்
வலியா
யோயும் விதங்களிதாகு மறிந்து கொளொண்டோடி
.யின்புறவே

(இ-ள்) கருப்பப்பையில் வாயு அதிகமாகத்தாக்குவதால் சுக்ரம் பலனற்றதாகச்செய்யப்பட்டு, அது சீழ் போலும், தண்ணீர்போலும் ஆவதுடன் தேக முழுமையையும் வலியை உண்டாக்க வல்லதாக ஆகும்.

**இதன் லட்சணம்**

உண்டாமே திரண்டீரிரு நாளிலொண் கணவன்புணரத்
தண்டார் தேகமெலாம் வலியென்றிடிற் றங்கிய
பகமலரிற்
பண்டார் வாயு வுறைந்தது வென்றறி

(இ-ள்) நான்காவது நாள் புணரும்போது ஸ்திரீ தன் தேகமெல்லாம் வலிக்கிறது என்று கூறினால் கர்ப்பாசயத்தில் வாயு நிறைந்திருக்கிறது எனக்கொள்க.

**(c) தசை வளர்ச்சி**

இன்புறு மாமலர் தன்னிலுமே சதை யேகமதாய் வளர
அன்புறுகும் பொழுதே விழுமாவமுதஞ் சளிபோலுருகி
வன்படியா யுறையாது கலங்கி வனிந்தோடுமே
வெளியில்
மென்பத நூலிடை கஞ்சமதா முலைமென்குழன்
மெல்லியலே

(இ-ள்) கருப்பையில் தசை அதிகமாக வளருவதால் புருஷனுடைய சுக்ரம் சளிபோல் உருகி, உறையாமல், கலங்கி யோனிக்கு வெளியில் வந்துவிடும்.

**இதன் லட்சணம்**

.......... ... .. .. . . ....மாதிடை தான் வலிகாணுமெனிற்
காத்திர வல்குலிலே தசை யென்றறி

(இ-ள்) புணரும்போது ஸ்திரீயின் இடைகளில் வலி உண்டானால் சதைக் கர்ப்பாசயத்தில் வளர்ந்திருக்கிறது எனத் தெரிந்துகொள்ளவும்.

**(d) உஷ்ணா திக்யம்**

மெல்லிதழ் பூவினில் வல்வலியுட்டிண மென்மேலுண்
டாகில்
நல்லிதமாய் விழுமென்னமுதந்தணனாடிய வெண்
ணெயதாம்
கொல்லதி னின்று மிகுந்து வெதும்பிக் கோமுகமாய்
வழியே
செல்ல முரித்துறை போய்விடு மாமறைச் சூத்திரமிப்
படியே.

(இ-ள்) மர்மஸ்தானத்தில் வலியும் உஷ்ணமும் அதிகரிப்பதால் சுக்ரம் நெருப்பிலிட்ட வெண்ணெயைப் போல ஆகி அங்கிருந்து வெதும்பி வெளியே வந்துவிடும்.

**இதன் லட்சணம்**

தேன்மொழியைப் புணர் போதினிலே துடை சேர்த்து
வலிக்குமெனின்
மான் மலர்தானதிலுட்டிண மென்றறி மாட்டு விலா
வென்புங்

(இ-ள்) புணரும்போது ஸ்திரீ "தன் துடைகள் வலிக்கின்றன" என்று சொன்னால் கர்ப்பாசயத்தில் உஷ்ணம் சேர்ந்திருக்கின்றது என அறியவும்.

**(e) சீதளச் சேர்க்கை**

இப்படிப் பூவினிற் சீதளமே யுறினின் பமதாம் வேளைச்
செப்பிய மாவமுதம்விழநின்று தெளிந்து முறிந்துடனே
அப்புவெனப் பழுதாகி நனைந்தயலோடி யழிந்துவிடும்
மைப்படியுங் குழற் செப்பிள மென்முலை வல்லிநன்
வானுதலே

(இ-ள்) கர்ப்பாசயத்தில் சீதளம் ஏற்பட்டால், புணரும்போது சுக்ரம் தெளிவாகி, முறிந்து, தண்ணீர் போலாகி வீணாகிவிடும்.

**இதன் லட்சணம்**

... ...... ..... ... .. .. .. . ... ... ....... ..... ....நீங்கிடு மார்பதிலே
கண்கள் வலிக்குமெனின் மலர்தானதிற் கண்டது
சீதனமென்
றெண்ணி மருந்துகள் செய்திடு செப்புவனோர்
குழலேந்திழையே.

(இ-ள்) புணரும்போது "மார்பு வலிக்கின்றது" என்று ஸ்திரீ சொன்னால் அவளது கர்ப்பாசயத்தில் சீதளம் சேர்ந்திருக்கிறது எனத்தெரிந்து கொள்.

**(f) புழு உண்டாதல்**

வாணனி யோனியிலே மலர்மீதினின் மாபுழுவங்
குறிலோ
ஊணிய மாவமுதந்தனையே யெடுத்துண்டு களித்துமிக
ஆணவமாக நிலைத்து வளர்ந்திடு மாகையினான்
மகவைக்
காணிலை யென்று கரைந்திடு வாரிது கண்டறி
காரிகையே.

(இ-ள்) கருப்பையில் புழு உண்டாகில் அது புருடனுடைய விந்துவைச் சாப்பிட்டுப் புஷ்டியாகி நிரந்தரமாக அங்கேயே தங்கி விடுவதால் ஜனங்கள் "குழந்தை உண்டாகவில்லையே" எனக் கலங்குவர்.

**இதன் லட்சணம்**

... .. .. ..மாதரை மருவிய போதினிலே
சித்த மகிழ்ச்சி கொளாமலுமே மையல் தீர்க்கிலை
யென்றுசொலில்
வித்தக வல்குலிலே புழுவென்றறி.

(இ-ள்) ஸ்திரீயைப் புணரும்போது "அவள் சந்தோஷங் கொள்ளாமலும், இன்னும் மையல் தீரவில்லையே" என்று சொன்னாலும் அவளது கர்ப்பாசயத்தில் புழு இருப்பதாக அறியவும்.

**(g) சங்காதோஷம**

காரிகையின் குறிமாமலர் மேன்மிகு காற்றெனுஞ்
சங்கையுறில்
வீரியமே விழும் போதினிலேய [illegible]ழ்வதின் முன்பாகச்
சாரமெலாங் கொடுபோய் விடு[illegible]து சத்தியமே
யுரைத்[illegible]
வாரணி கொங்கை நல்லாயிதை நீயறிமா[illegible]ன்
மு[illegible]றயே.

(இ-ள்) கர்ப்பாசயத்தில் காற்று என்று சொல்லப்படும். (பூத, பேய்பிசாசுகளின்) உபத்திரவங்கள் ஏற்பட்டால் புருடனுடைய வீரியம் கர்ப்பாசயத்தையடையுமுன் விந்துவின் சத்தையெல்லாம் அவைகள் கொண்டுபோய்விடும்.

**லக்ஷணங்களாவன**

நாயகியோ டுறவாடுகையிற் குதிகா னரம்பிழுத் திடு
மென்றாற்
றீயதுர்ச் சங்கைக ளாமதுவென்றறி கேயரி விழிமாதே

(இ-ள்) ஸ்திரீயுடன் புணரும்போது அவள் "தனது குதிகால் நரம்பு இழுக்கிறது" என்று கூறினால் சங்காதோஷம் என்று அறியவும்.

**(h) அவயவ ஏற்றத்தாழ்வுகள்**

(i) நூலிடையாள் குறியாழமதாகவுநுன் கொழுநன்குறிதான்
சீலமுடன் சரி நீளமிலாவிடிற் றேய்வதி னாலமுதம்
பாலெனவேயுறை யாமலுடம்பிற்ப றந்துக லந்துவிடும்
வேலெனுமைவிழி யாயிதுகண்டறி வேதன்விதிப் படியே

(இ-ள்) ஸ்திரீயின் மர்மத்வாரம் அதிகம் நீண்டிருப்பதால் புருடனின் விந்து பால்போல் உறையாமல் தேகத்தில் வியாபித்துவிடும்.

(ii) வேதன் விதித்த விலிங்கமு நீளமி குந்திடில் வேதனையா
லோதிய மாவமுதம் விழவெய்து மூனியிருந்திடுதாக்
கேதுவிலாம லுடைத்து மென்மேலிலெழும்பி நலிந்துவிடும்
மாதனமென் குழலின் பவளஞ்செ றிவாயுடை மங்கையரே.

(இ-ள்.) புருஷனின் அங்கம் அதிகம் நீண்டிருந்தால் கர்ப்பாசயத்தில் விழுந்த சுக்ரம் அங்கேயே நிலைத்து நிற்காமல் மேலும் மேலும் எழும்பி வீணாகி விடும்.

**(i) பூர்வ வினை**

மங்கையராயினு மாடவராயினுமா வினையாலவிழ்தஞ்
சங்கையிலாமலருந்தியதாலுடல் தங்கிய வெப்பமதாற்
பொங்கிய மாவமுதஞ் சலமாக மிகுந்து பொழிந்து விடும்.
இங்கிது நீதியறிந்துடு வேதமிசைத்த திளங்கொடியே.

(இ-ள்) ஸ்திரீயோ புருடனோ பூர்வ ஜன்ம வினையாலும், மருந்துகளை அதிகமாக உபயோகித்தாலும் ஏற்பட்ட உஷ்ணத்தினால் அவர்களது இந்திரீயம் நீற்றுச் சொரிந்து விடும். இதனால் யாதொரு பலனுமில்லாமற் போம்

இம்மாதிரியான பற்பல காரணங்களினால் ஸ்திரீகளுக்கு மலட்டுரோகம் உண்டாகிறது. இதைத் தவிர இன்னும் சில நூல்களில், மலட்டு ரோகத்தைப்பற்றிக் கூறியிருப்பது வருமாறு.

ஆயுர்வேதத்தில் மலட்டு ரோகங்களைச் சொல்லுமிடத்தில் பூர்வ வினையின் காரணமாக ஏற்படும் தேக அமைப்பு முதலியவைகளால் உண்டாகும் மலட்டுத்தனத்தை அடியில் கண்ட நான்கு வகைகளாகப் பிரித்திருக்கிறார்கள். இவைகளுக்குத் தீர்த்தயாத்திரை, தெய்வப் பிரார்த்தனை, வேறு சாந்திகள் இவைகளே பரிகாரம் அளிக்கக்கூடியவை

a **ஆதிவந்த்யா**

வயிற்றில் மூன்று மடிப்பு விழுந்து இடுப்புப் பெருத்துச் சரீரம் ஸ்தூலித்திருந்தால் இவர்கள் தேவஸ்திரீகளானாலும் கருத்தரிக்காத "ஜன்ம மலடு" எனக் கூறப்பட்டிருக்கிறது.

b **காகவந்த்யா**

முதலில் இரண்டு பிள்ளைகளைப் பெற்றுப் பின் பிள்ளைகள் இல்லாது போய்விடும்.

c **கதலிவந்த்யா**

வாழைமரம் எவ்வாறு ஒரு தார்போட்ட பின்பு ஒன்றும் இல்லாமல் போய்விடுகிறதோ அவ்வாறு ஒரு பிள்ளையை மாத்திரம் பெற்றுப் பின்பு கர்ப்பம் தரிக்காதிருக்கும் இதைக்கொண்டே ஒரு பிள்ளையும் பிள்ளையல்ல. ஒரு மரமும் தோப்பல்ல எனக் கூறப்பட்டிருக்கிறது போலும்

d **கர்ப்ப வந்த்யா**

வயிற்றிலேயே செத்துவிழும் பிள்ளைகளைச் சாதாரணமாக வருடந்தோறும் பெறுதல் என 4 பிரிவாகப் பிரித்திருக்கிறார்கள்.

## 3. கெர்ப்ப விப்புருதிக் குறி குணம்

கூறிடவே விப்புருதிதா னுங்கருப்போல்
வயிற்றிலே சூதங்கட்டும்
மாறவே தலைவலிக்கும் வீட்டுப்பக்கம்
வயிற்றுவலி யிருதுடையு முளைக்குமேதான்
சீறவே புழுத்திரண்டு மலமிருக்கும்
சிசுகெர்ப்பந் தரியாது உடலிளைக்கும்
ஆறவே யிக்குணங்கள் தானறிந்து
அப்பனே மருந்துண்ணச் சித்தியாமே.

(இ-ள்) வயிற்றில் சூதக்கட்டுடன் வலியுண்டாகும். தலைவலிக்கும். மாதவிடாய் உண்டானால் வயிற்றுவலி நீங்கும். இருதுடைகளிலும் குடைச்சல் வலி காணும். மலம் இறுகித் திரண்டு புழுக்கைப் போலாகும். கருத்தரியாது. உடல் இளைக்கும். இக்குணங்களைக் கொண்டு "கெர்ப்பவிப்ருதி"என்று தெரிந்துகொள்ளவும்.

## 4. கெர்ப்பரோகக் குறி குணம்

திரண்டு புழுக்கை யுருண்டு வரும்
தீராச் செயலும் பரிந்து விழும்
வரண்டு உடலம் வற்றி வரு
மலமுங் கேடருத்தாதுக்கும்
திரண்ட தனத்து மடந்தையரே
தீராக் கெற்ப விப்புருதி
யுருண்டை புழுக்கை யுழமூலி
யுலையுங் கெர்ப்ப ரோகமிதே. 1

பொருமித் துரண்டு கீழ்வயிற்றில்
புண் போலாக மிக நொந்து
முருவக்குத்திக் குடைந் தெங்கு
மொக்கச் சுரமுந் தலைவலியு
வெருவக் குத்திச் செயல் கட்டி
வெடித்துப் புண்பட் டோடுபட்டுத்
திருவைப் பொருத மேனியரே
செய்யுங் கெற்ப ரோகமிதே. 2

(இ-ள்) மலம் இறுகிக்கட்டும். செயலற்றுப்போம். உடம்பு இளைக்கும். மயக்கமும் தாது க்ஷீணமும் உண்டாகும். வயிற்றுப் பொருமல் உண்டாகும். அடிவயிறு புண்போல வலிக்கும். உடம்பெங்கும் குடைச்சல் வலியுண்டாகும், சுரம் ஏற்படும். தலைவலியெடுக்கும். இக்குணங்களினால் "கர்ப்பரோகம்" என அறியவும்,

**5. கெர்ப்பசூலைக் குறி குணங்களாவன**
**(கெர்ப்பிணி வாதம்)**

நிரண்டகீழ் வயிற்றைப் பற்றிச்
சீதகநின் றிரத்தம் வீழ்ந்துப்
புரண்டு தான் வலிக்கு மாகில்
பொல்லாது கெற்ப சூலை
மருண்டு மேல் சத்தியாகி
மயங்கிட வருமேயாகில்
புரண்டதின் வலியைப் போக்கு
மருப்திணைப் புகலுவோமே.

(இ-ள்) அடிவயிற்றில் வலியுண்டாகிச் சீதத்துடன் இரத்தம் விழும். கர்ப்பாசயம் புரண்டு வலியையுண்டாக்கும். மேலும் வாந்தியெடுக்கும். மயக்கம் வரும். இவைகளைக்கொண்டு கெர்ப்பசூலை என்று தெரிந்து கொள்க.

**6. இரத்தசூலைக் குறி குணம்.**

திரண்டு புரண்டு கீழ் வயத்தில் திறமாய் மாதவிடாய்
பெற்று
உருண்டு குருதி மிகுதிவிழு முறையுந்துடையு
முளைந்து வரும்
திரண்டு சிலநாள் சிக்கி நிற்கும் திறமாய் கருவையழிப்
பிக்கும்
உருண்டயிரத்த சூலையென்று உறுதியிவை
கொண்டுரையீரே.

(இ-ள்) அடிவயிற்றில் வலியுடன் சூதகம் திரண்டு வெளிப்படும். இரத்தம் அதிகமாக விழும். துடைகளில் வலி

உண்டாகும். மாதவிடாய் சிற்சில நாட்கள் தடைப்படும். இது, ஏற்பட்டக் கருப்பத்தை அழித்துவிடும். இக்குணங்கள் கண்டால் இது " இரத்தசூலை"என்று அறியவும்.

### 7. கர்ப்பப்பையில் சிசு மரித்ததின் லக்ஷணங்கள்

கர்ப்பம் அசைவற்றிருத்தல், யோநிக்கசிவு நின்று போதல், பிரசவ வலி முற்றிலும் தணிவடைதல், வயிற்றில் குத்துவலியுண்டாதல், உடம்பு குளிர்ந்து கறுப்பு நிறமாகவோ அல்லது வெண்மை நிறமாகவோ மாறுதல், கண் குழிவிழுதல், மூச்சுக்காற்று துர்நாற்றமுள்ளதாக ஆதல், தேகத்தில் வீக்கம் முதலிய குறிகள் உண்டாகும்.

# மலட்டு ரோகத்திற்கு மருந்து வகைகள்

இதில் 2-ம் பக்கத்தில் விவரிக்கப்பட்ட பலவித மலட்டு ரோகங்களுக்குச் சரபேந்திர வைத்ய முறைகளில் சிகித்சை அநேகமாகக் காணப்படாததால் 44 நெ. சுவடியிலிருந்து மருந்துகளை யெடுத்து எழுதப்பட்டிருக்கிறது

### 1. கர்ப்பாசயப் புரளலுக்கு மருந்து

பருத்திவிதை, பெண்கோழியின் வயிற்றிலுள்ள பித்து (பித்தப்பை) இவ்விரண்டையும் நன்றாக அரைத்துப் பஞ்சிலூட்டி ஸ்திரீயின் மர்மஸ்தானத்தில் ஒருநாள் முழுவதும் வைத்துப் பின்பு புணர்ச்சி செய்தால் குழந்தைகள் உண்டாகும்.

### 2. கர்ப்பப்பையில் வாயுசேருதலுக்கு மருந்து

திராக்ஷைப்பழம் 2 வராகனெடை எடுத்து நல்லெண்ணெயிலரைத்துப் பஞ்சிலூட்டி மர்மஸ்தானத்திற்குள் தினம் 3 வேளை வைத்திருக்கவும்.

### 3. சீதளத்திற்கு மருந்து

காக்கரட்டான் புஷ்பம், கோஷ்டம், கருஞ்சீரகம், சிற்றரத்தை, இவைகளைச் சரியெடையெடுத்து நல்லெண்ணெயிலரைத்துப் பஞ்சிலூட்டி யோனிக்குள் வைத்தால் சீதளம் தீரும்.

### 4. உஷ்ணம் சேருதலுக்கு மருந்து

காக்கரட்டான் புஷ்பம், மாட்டின் விலா எலும்பு, இவ்விரண்டையும் நல்லெண்ணெயிலரைத்துப் பஞ்சில் தோய்த்து மர்ம ஸ்தானத்தில் வைத்திருக்கவும்.

### 5. கர்ப்பப்பையில் சதை வளர்ச்சியிருந்தால் மருந்து

சீரகம், யானை மதம், இவற்றைப்பசுவின் நெய்யிலரைத்துப் பஞ்சி ஏட்டி மர்மஸ்தானத்திற்குள்ளே தினந்தோறும் வைத்து வர சதை வளர்ச்சித் தீரும்.

### 6. மல டுப்புழு தீர மருந்து

இதற்குச் சவுட்டுப்பு, சாலாமிசிரி, பருத்தி விதை, கடுக்காய், இவைகளைத் தண்ணீர் விட்டரைத்துப் பஞ்சுடன் சிறு பொட்டணமாகக் கட்டி மர்மஸ்தானத்தில் வைத்துவரப் புழு நீங்கிக் கர்ப்பம் தரிக்கும்.

### 7. சங்காதோஷ மலட்டுக்கு மருந்து

கை தேர்ந்த மாந்திரீகர்களைக் கொண்டு மந்திரம், ஜபம், தபம் முதலியவைகளைச் செய்வித்தால் கர்ப்பம் உண்டாகும்.

மேற்சொன்ன மருந்து வகைகளைப் பஞ்சிலூட்டிப் பகல் பொழுது முழுவதும் யோனிக்குள் வைத்து, இரவில் கணவருடன் சேர்ந்துவரவேண்டும். இவ்வாறு 3 நாட்கள் செய்யத் திண்ணமாகப் புத்திரப்பேறு உண்டாகும்.

## குழந்தைகளின் ரோக வகைகள்

### 1. தோட வகுப்பு

தோடம் என்பது குழந்தைகளுக்கு உண்டாகும் குற்றங்கள் என்று பொருள்படும். இந்நோய் 1. பட்சிதோடம் 2. பறவைத்தோடம் 3. புள்தோடம், 4. எட்சித்தோடம், 5. குளித்தோடம் 6. ஆண்தோடம் 7. எச்சில்தோடம் 8. தேரைத்தோடம் என்று எட்டு வகைப்படும்.

**பட்சி தோஷமாவது**

பெருகிவயிறு தான்போகும் பேதமுடம்பு கண்குளிரும்
பெருகமுகத்தி முகஞ்சோரும் பேயின்குரல்போல் சீறியழும்
அருவிமுலையு முன்னாது அலறித்தண்ணீர் தரச்சொல்லும்
பரிகவியோனத் தானறியப் பகர்வீர்பட்சித் தோஷமிதே.

(இ-ள்.) அடிக்கடித் தண்ணீர்போலப் பேதியாகும். உடம்பு மெலிந்து கண் குளிர்ந்துவிடும். முகம் சோர்வடையும். கையிலடங்காது. பயங்கரமாக வீறிட்டு அழும். தாய்ப்பால் அருந்தாது. ஆனால் அதிகமாகத் தண்ணீர் குடிக்கும். இவைகளினால் பட்சித் தோடத்தைக் கண்டறியவும்.

**பறவைத்தோடக் குறிகுணம்**

குஞ்சியின் உடலுணர்ந்து குடல்தனில் பாலுந்தங்கா
நெஞ்சையும் சுழியாய்வாங்கும் நெறியவே வலியுமுண்டாம்
துஞ்சிடும் போதெழுந்து துணிக்கிட நீர்குடிக்கும்
பஞ்சின்மென் முலையினாளே பறவையின் தோடந்தானே.

(இ-ள்.) குழந்தையின் உடம்பு மெலிதல், குடித்த பால் செறியாமல் வாந்தியாதல் மேல்மூச்சு வாங்குதல், தொண்டையில் வலி, தூக்கத்திலிருந்து எழுந்து தண்ணீர் கேட்டல், முதலியவைகள் பறவைத்தோடக் குறிகளாகும்.

**புள்தோடக் குறிகுணம்**

உச்சிகண்ணுந் தான்குழியும்
உண்ணும்பாலுந் தங்காது
பச்சைநிறம்போல் வயிறுவிடும்
பறவைகுரல்போல் சீறியழும்
எச்சமிளைகுந் தண்ணீரை
எடுத்துக் குடிக்குமெய்மறக்கும்
கச்சையணிந்த முலைமாதே
காணும் புள்ளின் தோடமிதே.

(இ-ள்) தலையுச்சி, கண் முதலிய இடங்களில் குழி விழும், சாப்பிடும் பால் வயிற்றில் தங்காது. வாந்தியெடுக்கும். பச்சை நிறமாகப் பேதியாகும். பட்சிகளின் குரல்போலச் சீறியழும். தேகம் மெலியும். ஜலத்தை அடிக்கடிக் குடிக்கும். அடிக்கடித் தேகத்தை மறந்து சோர்ந்து விழும்.

**எட்சி தோடக்குறி குணம்**

தேயுடம்பு மிகநாறு
செல்வன் முலையை அருவருக்கும்
தாயைக் கண்டாலொவ்வாது
சற்றே சற்றே வயிறொழுகும்
காயுடம்பு கண் பிசையுங்
கண்டாலிவைதா னறியீரோ
பாயும் விடையோன் தானறியப்
பகரிலெட் சித்தோஷமிதே.

(இ-ள்) குழந்தையின் உடம்பு மெலிந்து துர்நாற்றம் வீசும். தாய்ப்பால் குடிக்காது. தாயையும் சிறிதுகூடப் பார்க்காது. கொஞ்சம் கொஞ்சமாகப் பேதியாகும். சுரம் வரும். கண்களை அடிக்கடி பிசையும். இக்குணங்களைக் கொண்டு “எட்சித் தோடம்”என்று அறியவும்.

**குளி தோடம்**

தாயார் முலையில் வாய்வைக்கும்
சற்றேயுண்ணு மழுதிறங்கும்
தேய்வாய்த்தேயும் வயிறொழுகும்
சிறிதே கண்டாலறியீரோ
காயாவண்ணன் முனு பிறந்த
கமலம் போன்ற கண்ணாளே
பேயார் கண்ட தலைக்குளித்த
பெண்ணார் கண்ட குறியிதுவே.

(இ-ள்) தாய்ப்பாலைச் சிறிது குடிக்கும். உடனே அழும் பின்பு குடிக்காது. பேதியாகும். உடம்பு மெலியும். இக்குறிகள் கண்டால்

"குளித்தோடம்" அதாவது தூரமான ஸ்திரீ குளித்தவுடன் குழந்தையைப் பார்த்ததாலுண்டான தோஷம் என்று அறியவும்.

**எச்சில் தோடம் அல்லது (திருஷ்டி) தோஷம்**

எச்சிற்றோ டக்குறியை யியம்புங்காலை
எதிரிட்ட வொருவர்கண் ணேறதாகும்
வைச்சபாலுண்ணாமை தலைதூக்காத
மயக்கமுடல் வாட லதினிறமுமாறல்
அச்சமுறு பூதசுரம் ஒருக்கால் தாயை
அண்டினாற் சீறியழ லற்பபேதி
விச்சலிமை யொட்டுகண்ணி மிண்டிமண்ணில்
மேல்விழுந்து புரண்டழுத லிவைகளாமால்.

(இ-ள்) குழந்தையைப் பார்க்கும் ஒருவரின் கண் படுதல் "எச்சில் தோஷம்" எனப்படும்.

தாய்ப்பாலுண்ணாமை, தலைதூக்கமுடியாத மயக்கம் உடம்பு வாடுதல், உடம்பில் பற்பல நிறங்களும் காணுதல், பூத சுரம் போல் காணுதல், தாயைப் பார்த்தால் சீறி அழுதல். சிறிது சிறிதாக மலம் வெளியாதல், கண் இமைகள் ஒட்டிக் கொள்வதினால் அதைக்கிள்ளிக்கொண்டு பூமியில் விழுந்து புரண்டு அழுதல் இவைகள் காணப்படும்.

**ஆண் தோடக்குறி குணம்**

போமே உச்சி கண்குழியும்
பொருந்துண்பாலுந் தங்காது
போமே வயிறு பச்செசன்று
பொருமியழுமே பறவைக்குரல்
தாமே குறுகும் ஒருவேளை
தனியே தனியே சீறியழும்
காமே கறுத்த குயிலாளே
கலந்த புருடத்தோடமிதே.

(இ-ள்) குழந்தையின் தலை உச்சியும், கண்ணும், குழி விழும். சாப்பிட்ட பாலை வாந்தியெடுக்கும். வயிறு பொருமலுண்டாகும். பறவையின் குரல்போல் அழும். கழுத்து குறுகிவிடும். சிற்சில சமயங்களில் பலமாக அழும். இவைகள் படுக்கையிலிருந்து வந்த ஆடவன் பார்த்த தோடக்குறிகளாம்.

**தேரைத் தோடக் குறிகுணம்**

தேனேர் மொழியாய் நீ கேளாய்
தேரைக் குணந்தானி யம்புகிறேன்
ஊனே வற்றியுடம்புலரும்
உயர்ந்தே நெஞ்சு தான் கூடும்
கானே கண்ணும் பொடித்திருக்கும்
கையுங்காலும் சுரிமுடக்கும்
மானே வயிறு புடைத்திருக்கும்
மலமுந்தீயும் வாயுலரும். 1

காலுங்கையு மிகவற்றிக்
கட்டிப் போட்டாற் போல் பிள்ளை
மேலும் வற்றி வெளுப்பிட்டு
வேறே குணமாய்க்குரல் நெறித்துச்
சால முலைப்பால்குடித்தாலுஞ்
சற்றுந்தேறா திருப்பதெனில்
நீளவட்ட மலர்க்கண்ணாய்!
நிசமாம் தேரைத் தோடமிதே. 2

(இ-ள்) தேகம் மெலியும்.மார்புக்கூடு மின்னும் கண்கள் சிறிதாகும். கைகால் முடங்கியிருக்கும். வயிறு புடைத்திருக்கும். மலச்சிக்கல் உண்டாகும். வாய் உலர்ந்து கை கால்கள் சீம்பி, கட்டிப்போட்டது போல் உடல் இருக்கும். உடம்பு வெளுக்கும். குரல் கம்மிப்போய்க் குழந்தை எவ்வளவு தாய்ப்பால் குடித்தபோதிலும் உடம்பு தேறாதிருத்தல் முதலியவைகள் "தேரைத் தோடத்தின்" குறிகள் ஆகும்.

மேல் சொல்லியவைகள் பொதுவான தோட வகைகளின் குணங்களாகும். இவைகள் ஒவ்வொன்றிலும் பல வகைப் பேதங்கள் இருக்கின்றன. அவற்றில் ஒன்றை இங்கு உரைப்பது பொருத்தமாகும்.

## எடுப்புத்தோடம்

மதலையின் மேனிவாடி வயிற்றினில் பாலுந்தங்கா
சதலையிற் குழியுண்டாகிச் சத்தியும் எடுக்கு நீராய்
நுதலினிற் சலமு நண்ணி நோக்கிய விழியுந் தாழ்ந்து
குதலைவாய் கருகித்தோன்றுங் குளித்தவளெடுத்தக்
காலே 1

பாலகன் பவளவாயிற் பனியென வேர்க்கும் மூக்கு
ஆல கண் வளைய மாகும் அடிக்கடி வயிறு போகும்
காலது பின்னிக் கொள்ளுங் கதறியே யலறிச்சீறும்
சீலமாய் விழித்துத் தாவுத் தீதவளெடுத்த தாலே. 2

(இ-ள்) குழந்தையின் உடல் மெலியும். குடித்த பால் வயிற்றில் தங்காமல் தண்ணீர் போல வாந்தியாகும். தலையுச்சியில் பள்ளம் தோன்றும். கண் கீழ்ப்பார்வையாகும். வாய் கறுப்பு நிறமாக ஆகும். வாய், நெற்றி, மூக்கு முதலிய இடங்களில் வியர்வை உண்டாகும். கண்களைச்சுற்றி வளையமிடும். அடிக்கடிப் பேதியாகும். இரு கால்களையும் அடிக்கடிப் பின்னிக்கொண்டு வீரிட்டுக் கதறும். கண்ட பேரிடம் போக ஆரம்பித்தல் முதலிய குறிகள் குளித்தவள் எடுத்ததினால் ஏற்பட்டக் குறிகளாகும்.

# 2. மாந்த வகுப்பு

## மாந்த வகைகளும் குறிகளும்

இந்நோய் குழந்தையின் ஜாடராக்னி மந்தத்தால் ஏற்படும் ரோகம். இது குழந்தையின் முதல் வயதிலாரம்பித்து மூன்று வயது வரை வருத்தும் வியாதி.

### இவ்வியாதி வரும் காரணங்களாவன

முளைத்த பின்னன்னை கொள்ள முதிர்ந்த நோய்
வளர்த்த பிள்ளையைச் சூழ்ந்து மலிந்திடுங்
கிளைத்த சர்க்கரை வள்ளிக் கிழங்குடன்
தெளித்த மாங்கனி தெங்கு பலாவிற்கே.

பலமதாங் கட்டுப்பால் சுரை பீர்க்கங்காய்
அலரும் வாழை யவரை துவரையுங்
கிலமதாக்கிடுங் கீரைத்தண்டின் கறி
குலவு மாங்கடலை தனைக் கொள்ளவே. 2

கொள்ளவே செம்புலித்தகர் கோழிமீ
னெள்ளற் பன்றிக்கறி பல்லிறைச்சியு
முள்ளுக்கன்னை நிதமுண்டக்காற்
பிள்ளைக்குப்பல மாந்தம் பெருகுமே. 3

(இ-ள்) குழந்தை பிறந்தபின் தாயார் கீழ்க்கண்ட உணவுப்பதார்த்தங்களை யதிகமாகச் சாப்பிடுவதினாலேற்பட்டத் தாய்ப்பாலை சிசுப் பருகுவதினாலே பற்பல நோய் வகைகள் குழந்தைக்கு உண்டாகும். அவையாவன சர்க்கரை வள்ளிக்கிழங்கு, மாம்பழம், தேங்காய், பலாப்பழம் அதிகமாகப் பாலின் உபயோகம் சுரைக்காய், பீர்க்கங்காய், வாழைப்பூ, அவரைக்காய், துவரம்பருப்பு, கீரைத்தண்டு, கடலை, செம்மறியாட்டு மாமிசம், கோழி மாமிசம், மீன், பன்றிக்கறி' , உடும்புக்கறி முதலியவைகளைத் தினந்தோறும் தாயார் சாப்பிடுவதால் குழந்தைக்குப் பலவித மாந்த நோய்கள் உண்டாகின்றன.

**மாந்த வகைகள்**

சில நூலாசிரியர்கள் 21 வகைகள் என்றும் மற்றும் சிலர் 31 எனவும் கூறுகின்றனர். இது எவ்வாறாயிருப்பினும் முக்கியமான சில மாந்த வகைகள் 44 நெ. சுவடியிலுள்ளபடி எடுத்துக் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

**மாந்தங்களின் பொதுக்குணம்**

மாந்தமானது கண்டிடில் வயிறு வுப்பிசமாய்ச்
சேர்ந்த பேதியும் பற்பல விதங்களாய்ச் செறிந்து
வாந்தியோடு மெய்மயக்கமுங் குளிருடன் வெப்புங்
காந்துதாகவும் பிரமையுங்கண் மயங்கிடுமே.

(இ-ள்) குழந்தைகட்கு வயிற்றுப் பொருமல் உண்டாகும். அடிக்கடிபேதியாகும் இதையன்றிப்பற்பல விதங்களாய்

வாந்தியுமெடுக்கும். அடிக்கடி மயங்கிக் கிடக்கும். குளிர்சுரம் காணும்.

### தலைமாந்த ரோக இலட்சணம்

கூட்டுச் சந்துகள் தலைவலி வேர்வை கொட்டாவி
சாட்டியதோடு தலைக்கனங்குலை வலி சவம்போல்
ஆட்டமில்லாது குளிர்சுர மதிக மெய்யூதக்
காட்டினால் தலைமாந்த மென்றதையறி கரும்பே.

(இ-ள்) துடையிடுக்குகளில் வலி, தலைவலி, வியர்வை கொட்டாவி, பலக்குறைவு, தலைக்கனம், ஈரல்குலைவலி, கை கால்களை யசைக்காமல் பிணம்போலக் கிடத்தல், குளிர் சுரம் உடம்பு வீக்கம் முதலான இக்குணங்களினால் "தலைமாந்தம்" என்று கண்டு கொள்ளவும்.

### விஷமாந்த இலட்சணம்

ஏகவாந்தியும் பிதற்றலும் வயிற்று நோயிடைக்கீழ்
ஆகச்சீதளக் குளிர்ச்சியு மாந்துத லரிக்கண்
தாகம் போலுள்ளிற் சொருகுதல் மலஞ்சிக்கிக்கழிதல்
வேகமாய்ச்சுர மடிக்குதலிது விடமாந்தம்

(இ-ள்) அதிகமான வாந்தியும், வாய் பிதற்றலும் வயிற்றுவலி, இடுப்புக்குக்கீழே குளிர்ச்சி, குளிர்ச்சியில் விருப்பம், காக்கை போலக் கண்கள் சொருகுதல், மலம் சிக்கலுடன் பேதியாதல், நல்லசுரம் இவைகள் "விடமாந்தத்தின்" இலட்சணங்களாகும்.

### 3. நீர்மாந்த இலட்சணம்

அறுதியாக மெய்யாதியந்தம் வியர்வையே மிகுந்து
இறுதியாய்த் தலைவலி முகமினுமினுப் பிரைச்சல்
உறுதியாய்க் கழிந்திடு தனீரிறங்கு தலுதாங்
குறைவிலாக் குலைவலிகள் நீர்மாந்தத்தின் குணமே.

(இ-ள்) குழந்தையின் உடம்பெங்கும் வியர்வை விட்டபிறகு தலைவலி, முகம் மினுமினுப்பு, வயிற்று இரைச்சல், கழிச்சல்

அதிகமாகச் சிறுநீர் விடுதல், ஈரல்குலைவலி முதலியவைகள் ஏற்படில் அவை "நீர்மாந்த ரோக"த்தின் குறிகளாகும்.

**4. செரியாமாந்த ரோக இலட்சணம்**

போகுமே வயிறு பாலெனக்கழிந்திடும் பொருமுந்
தேக முஞ்சுரமாய்க்குளிர் கண்டிடுந் தெவுட்டிச்
சோகமுந்தலை வயின்வலி வாந்தியுந் தோன்றி
யேகமாயமுஞ் செரித்திடா மாந்த மென்றெண்ணே.

(இ-ள்) பால்போலப் பேதியாகுதல், வயிற்றுப் பொருமல், வீக்கம், குளிர்சுரம், ஏக்கம், தலைவலி, வயிற்றுவலி, வாந்தி இவைகள் ஏற்பட்டால் அதைச் "செரியாமாந்தம்" என்று கண்டுகொள்க.

**5. வறள் மாந்த இலட்சணம்**

தொடுமெய்த் தோல்தளர்ந் ருவழிந்துடல்குளிர்ந்திருக்கு
முடல் வெளுத்துக்கண் மயக்கமுஞ் சுழலலுண்டாகிக்
கடுகடுப்புடன் கால் கைகளூதிப் பால்குடிக்கும்
வடிவு பல குணமாம் வறள் மாந்தமுமானே!

(இ-ள்) தேகத்திலுள்ள தோல் வளர்ச்சியுற்று உருக் குலையும். தேகம் சீதளமாகும். கண்கள் வெளுத்து மயங்கி தலைச்சுழலும். கைகால்களில் வீக்கமுண்டாகி, வலி உண்டாகும். தாய்ப்பாலை மிக அருந்தும். இவைகள் "வறள் மாந்த" இலக்ஷணங்களாகும்.

**6.கட்டு மாந்த இலட்சணம்**

பறந்த மெய்யினில் வெப்புடனுறைக்க மும்பகொல்
உறைந்த வேர்வை கொட்டாவியுமுதரத்தில் வலியும்
நிறைந்த நாள் மலஞ்சிக்கியுங் கழியும் நேரிரைச்சல்
அறைந்த சீர்கட்டு மாந்த மென்றே யறியனமே.

(இ-ள்) குழந்தைக்குச் சுரமடிக்கும். வீக்கமும் வியர்வையும் அடிக்கடி உண்டாகும். அதிகமாகக் கொட்டாவி வரும். வயிற்று

வலி உண்டாகும். மலச்சிக்கலுடன் பேதியாகும். வயிறு இரைச்சலுண்டாகும். இக்குறிகளால் இந்நோயைக் "கட்டுமாந்தம்" என்று உணர்ந்து கொள்க.

**7. பால் மாந்தக் குறிகுணம்**

மொய் கொள் பாலுபாலாய்க்கழிந்திடு முகம் வேறாய்
கைகள் கால்களும் வெதும்பிடும் வாந்தி பால்காணுஞ்
செய்ய கண்களும் வளையமாஞ்சிர மெடுத்திராது
உய்ய மாந்தம் பால் மாந்தமென்றே யறியுடனே.

(இ-ள்) குழந்தை பால பாலாகவே கழியும். முகம் பற்பல நிறமாகும். கால் கைகள் வாட்டமுறும். பாலாகவே வாந்தியெடுக்கும். கண்களும் குழிவிழுந்து வளையமிடுதல் தலை தூக்காமை முதலிய பற்பல குறிகளும் உண்டாகும்.

**8. ஊதுமாந்தக் குறிகுணம்**

அகண்ட வாந்தியுங் கழிச்சலுஞ் சுரங்களுமாகிச்
சுகந்த மேனியில் வீக்கமுந் துண்டித்துப் படிந்
திகந்த தாமுதரத்தினி நிரைச்சலுண்டாகில்
உகந்த சேய்க்கிது ஊதுமாந்ததங்களென்றிசைப்பாய்.

(இ-ள்) அதிகமான வாந்தியும், பேதியும் உண்டாகும். குழந்தைக்குச் சுரம், உடம்பில் வீக்கம், வயிறு இரைச்சல், முதலியவைகளுமேற்படும். இதை "ஊது மாந்தம்"என்று கண்டு கொள்க.

**9. கல்மாந்த ரோக இலட்சணம்**

நாடியே சுரமடித்து மெய் வெளுத்து நாவுலர்ந்து
நீடுகால் குளிர்ந்துங் கையான் முகத்தினை நெருடி
வாடும் பற்பல குணங்களாய்க் கழிந்துடல் வடிந்து
கூடு மாஞ்சிர வியர்வை கல் மாந்தத்தின் குறியே.

(இ-ள்) சுரம் காணும். உடம்பு வெளுத்துவிடும். நாக்கு உலர்ந்துபோம். கால் குளிர்ச்சியாகும். குழந்தை தன் கைகளினால்

முகத்தை அடிக்கடி நெருடிக்கொள்ளும். உடம்பு வாட்டமடையும். பற்பல விதமாக வயிறு கழியும். தலையில் வியர்வையுண்டாகும். இவைகள் "கல்மாந்தத்தின்" குறிகளாகும்.

### 10. வலிப்பு மாந்தக் குறிகுணம்

அயருங் கால்கையுமடிக்கடி யிசுப்பு களாகும்
வயிறு பலவிதங் கழிந்து மார்பினில் வலி மிகுத்துத்
தியக்கும் பல் கிட்டிக் கடித்திடும் வாந்தியுஞ் சேர்ந்து
மயக்குமே வலிப்பாகிய மாந்தமாம்மாதே.

(இ-ள்) கைகால்கள் அயர்ந்திருக்கும். அடிக்கடி இசிவு காணும். பலவிதமாகப் பேதியாகும். மார்வலியுண்டாகும். பற்கள் கிட்டுவதுடன், அவைகளை நறநறவென்று கடிக்கும். வாந்தியுண்டாகும். மயங்கியிருக்கும். இக்குணங்களினால் இந்நோயை "வலிப்பு மாந்தம்" என்று அறியவும்.

### 11. போர் மாந்தக் குறிகுணம்

பூசலாய்ச் சுரமடித்துடல் கரைந்து போங்கூடாய்
வாசமாய்க் கழிந்துததடுகளுலர்ந்து வாய்நுரையாய்
நீச வாந்தியுங் கண்குழியுட னெஞ்சு புண்ணா
யூசலாகும் போர்மாந்த மென்றே யறிமுனமே.

(இ-ள்) குழந்தைக்குச் சுரம் உண்டாகும். உடல் இளைக்கும். மிக நாற்றத்துடன் வயிறு கழிச்சலுண்டாகும். உதடுகள் உலரும். வாயில் நுரை தட்டும். வாந்தியெடுக்கும். கண்களில் குழிவிழும். நெஞ்சில் புண்களுண்டாகும். இவைகள் "போர் மாந்தத்தின்"குறிகளாகும்.

### 12. சந்நிமாந்த இலட்சணம்

தொலைவில் தாகமுமயக்கமு மறிவு தொந்தித்தல்
தலைபுரட்டல் கால் குளிர்ந்திட னாவில் மூள் தடித்தல்
மலைவுசெய் வெறும் வாந்தியுமேப்பமும் வலிப்புஞ்
சிலைநுதற் கண்ணேசந்நி மாந்தமிதெனச் செப்பே.

(இ-ள்) அதிகமான தாகம், மயக்கம், அறிவு நிலை தவறுதல், தலையை இப்படியும் அப்படியும் புரட்டுதல், கை கால்களில் குளிர்ச்சி, நாக்கில் முட்கள் உண்டாதல், வாந்தியெடுத்தல், ஏப்பம், வலி முதலிய குறிகளினால் "சந்நி மாந்தம்" என்று அறியவும்.

### 13. பேய்மாந்தக் குறி குணம்

அணங்கிடுப்புகை கால்துடையானன மூக்கு
வணங்குபின் பிடர் நரம்பிவை யெட்டிலும் வலிக்கும்
இணங்கும் வாய்நுரை மயக்கமும் பிதற்றல் கீழிழுத்தல்
கணங்கொள் பூதப்பேய் மாந்தமென் றுகந்து கண்டறியே.

(இ-ள்) இடுப்பு, கை, கால்,துடை, முகம், மூக்கு, பிடரி, நரம்பு இவ்வெட்டு இடங்களிலும் தாளமுடியாத வலி உண்டாகும். வாயில் நுரை தள்ளும். மயக்கமுண்டாகும். நரம்புகள் கீழ்நோக்கி இழுத்தல், முதலியவைகளேற்பட்டால் இது "பேய்மாந்தக் குறிகள்" என்று அறியவும்.

### 14. துலைமாந்த இலட்சணங்கள்

உதிர் கொட்டாவியுந் தாகமுடம்பெங்கும் வலியு
மதிர் சுரத்தொடு முகத்தினைப் பார்த்தழும் வியர்க்கு
முதிர் விலாப் பருத்ததிகமாய் மயங்கி முன் விழுந்தாற்
கதிர்கொள்வெந் தொலை மாந்த மென்றறிந்துகொள்
கண்ணே.

(இ-ள்) அடிக்கடிக் கொட்டாவி விடுதல், தாகம் உடம்பு முழுவதிலும் வலி, சுரம் பிறர் முகத்தைப் பார்த்தாலழுவதற்கு ஆரம்பித்தல், வியர்வை காணுதல், குழந்தை விலாப்புறம் பருமனாகி முன் வந்தது போலாதல் முதலிய குறிகள் காணப்படில் இது துலை மாந்தமாகும்.

### 15. சுரமாந்த ரோக இலட்சணம்

உகந்த மெய் முக மினுமினுப்பா முயர் சுரமும்
பகர்ந்த பாலருந்தாது நீர் சிவந்திடும் பார்க்கும்
வகிர்ந்த மலஞ்சிக்கியு மயக்கமும் வலியுஞ்
சுகந்தமாயடி குளிர்ந்திடில் சொல் சுரமாந்தம்

(இ-ள்) குழந்தையின் தேகம், முகம் முதலிய இடங்களில் ஒருவித மினுமினுப்பு, நல்ல சுரம், இவைகளேற்படும். தாய்ப்பாலருந்தாது. கண்ணில் நீர் வடிதலும், சிவப்பும் ஏற்படும், மலச்சிக்கல் மயக்கம், தேகமுழுவதும் வலி இவைகளுண்டாகும். கால் சில்லிட்டிருக்கும், இக்குணங்களினால் "சுரமாந்தம்" எனத் தெரிந்து கொள்க.

### 16. உப்பு மாந்த இலட்சணம்

தெளிந்த தாகமுஞ் சுரமுடன் பிதற்றலுஞ் செருமிக்
களங்க மாயிரைந்துப்பிக் கழிந்துடன்
வளர்ந்த வாந்திமுலையை நத்தாமலுமயக்கந்
தளர்ந்ததா லுப்புமாந்த மென்றறிவாய் நீதானே.

(இ-ள்) நாவறட்சி, சுரம், பிதற்றல், வயிறு உப்பி இரைச்சலுடன் பேதியாதல், பின்பு வாந்தியெடுத்தல், தாய்ப்பாலுண்ணாமை, மயக்கம் முதலியவைகள் ஏற்படுவது உப்பு மாந்தத்தின் குணங்களாகும்.

### 17. கணமாந்தக் குறிகள்

அருந்து மெய்யிளைத் திருமலு மடிக்கடிச் சுரமுந்
திருந்து மூக்கில் நீர் வடிதலும் வயிறுப்பும் சிரநோய்
புரிந்திரைச்சலும் பலவிதம் வயிறு போக்குடனே
வருந்து கண்ணினில் மயக்கமுமாங் கணமாந்தம்.

(இ-ள்) உடம்பு இளைக்கும், அடிக்கடி இருமலுண்டாகும். சுரமுமேற்படும். மூக்கிலிருந்து நீர் வடியும், வயிறு பொருமும். தலைவலி ஏற்படும். வயிற்றில் வலியேற்பட்டு இரைச்சலுடன் பலவிதமாகப் பேதி உண்டாகும். கண் மயக்கமுமேற்படும். இக்குறிகளினால் "கணமாந்தம்" என்று அறிந்துகொள்ளவும்.

மேல்சொன்ன மாந்த வகைகளைத் தவிர இன்னும் சில மாந்த வகைகளும் இருக்கின்றன. அவைகள் முக்காலும் முக்கிய குறி குணங்களைக்கொண்டே அழைக்கப்படுகின்றன. உதாரணமாக விலாவைத் தூக்கினால் "அள்ளு மாந்தம்" விக்கல் இருந்தால் "விக்கல் மாந்தம்" வாத பித்த ச்லேஷ்மங்களின் அதிகரித்தலால் அந்தந்த தோஷங்களின் பெயர் கொண்ட மாந்தம், என்று பலவாறாகப் பிரிக்கின்றார்கள்.

## 3. கணச்சூடு வகுப்பு

இது கர்ப்பச் சூட்டினாலேற்படும் நோய் இவ்வியாதி தாய்ப்பாலுங் குடித்துச் சோறுமுண்ணும் சிறு குழந்தைகளுக்கு அநேகமாக வருகின்றது. இது குழந்தைகளுக்கு மூன்றாம் ஆண்டு முதல் ஏழாமாண்டுவரை ஏற்படும்

**கணம் வரலாறு**

தோன்றுமய்ய பதார்த்தந் தோயப்பகை
யூன்று தாகம் பசிமிகுந் துற்றிடில்
ஏன்ற துன்பமெல்லாம் வந்து சூழ்தலால்
ஆன்ற சேய்க்குக் கணங்களுமாகுமே.

(இ-ள்.) மிகுதியாகக் கபத்தை விருத்தி செய்யக்கூடிய பதார்த்தங்களைச் சாப்பிடுவதினாலும், தாகமும், பசியும் அதிகமாக

இருக்கையில் தண்ணீர் அருந்துவதினாலும் பற்பல கணரோகங்கள் குழந்தைகளை வருத்தும்.

இந்நோய் 24 வகைப்பட்டது என்று சில புத்தகங்களில் கூறப்படினும் இங்கு 44 நெ. சுவடியிலிருந்து முக்கியமான சில வகைகளைக் கூறுவது பொருத்தமாகும்.

### கணரோகத்தின் பொது இலட்சணங்கள்

ஓதியதோர் பிள்ளைகட்குக் கணந்தான் கண்டா
லுற்றமெய்யில் கதகதப்பாய் சுரமுங்காணும்
பேதியது கெட்டபால் கருநீர்ப் போலாம்
பெருக்கும்வ யிறுங்கால்கை குச்சிபோலாஞ்
சீதமோடி ரத்தங்கள் தாகங் காணுஞ்
சிறந்தகால்கை குளிர்ந் திருமலுண்டாம்
நீதியுடன் கண்குழிந்து மூக்கு நாக்கு
நேராக வெந்துடலம் வெளுத்துப்போமே.

(இ-ள்) உடம்பு எப்போதும் கதகதப்பாக இருக்கும். சுரமுமுண்டாகும். கெட்டுப்போன பால் எப்படித் தண்ணீர் வேறு திப்பி வேறு ஆகின்றதோ அதேபோலக் குழந்தைகரு நிறத்துடன் தண்ணீர் வேறாகவும், மலம் வேறாகவும். கழியும். வயிறு பொருமும். கை, கால்கள் குச்சிப்போலாகும். சில சமயம் சீதமும் இரத்தமுமாய் மலம் போகும். தாகமுண்டாகும். கை கால்களில் குளிர்ச்சி இருமல், கண் குழி விழுதல், மூக்கு, நாக்கு முதலிய உறுப்புக்களில் வேக்காளம் முதலியவைகளுண்டாகும்.

இதையன்றி

பாரேகணத்தைப் பகரக்கேள் பகருமுடம்பிற்சுரம் வீக்கம்
பாரே யுட்சுர மிதுதானே பகரும் கணமல முட்சேரும்
பாரே மார்புக் கூண்டெழுப்பிப் பதமாய்த்தேகமிகவற்றிப்
பாரே வாய்மிக நாறும் பதமாய்மலமும் வெட்டையன்றே

(இ-ள்.) உடம்பில் சுரமடிப்பது போன்று கதகதப்பு வீக்கம், மலம் உள்ளேயே தங்கிவிடுதல், மார்புக்கூடு மேல் எழும்புதல், தேகம் மிக இளைத்தல், வாயில் நாற்றமடித்தல் மலம் தீய்ந்துபோதல் முதலிய பற்பல குணங்கள் "கணச்சூட்டின்" குறிகளாகும்.

## 1. நீர்க்கண ரோக இலட்சணம்

இனிதான நீர்க்கணந்தான் கண்டுதானா லிருகை
கால்முகமி னுப்பாய்ம யக்கமுண்டாம்
பனிநீர்போ லடிக்கடி கழிச்சலாகிப் பகர்
நாக்கு புண்ணாய்வாய் வறண்டுபோகும்
நனிவேர்க்குஞ் சந்துகளில் வெப்பங்காணும்
நன்மூக்கில் நீர்வடியுந் தாகங்காணும்
தனியான தலைவலியு மிகுந்து நிற்குஞ்
சார்வான வவுழதங்கள் சாற்றக்கேளே.

(இ-ள்) குழந்தையின் கை, கால், முகம் இவ்விடங்களில் மினு மினுப்புக்காணும். மயக்கம் ஏற்படும். பனிநீர் போன்று கழிச்சல் அடிக்கடி ஏற்படும். நாக்கில் புண் உண்டாகும். வாய் வரண்டுபோகும். வியர்வையும்,துடையிடுக்குகளில் உஷ்ணமும் உண்டாகும். மூக்கிலிருந்து நீர்வடியும் . தாகத்துடன் கடுமையான தலைவலியுமேற்படும். இக்குறிகளினால் இந்நோயை "நீர்க்கணம்" என்று அறியவும்.

## 2. வறட்கண இலட்சணம்

ஓடுகின்ற வறட்கணந்தான் வந்ததானா
லுடலிளைத்துத் தாகமஸ்தி சுரமுங்காணும்
நீடுகண்டம் புகைந்துயுகைந் திருமலாகி
நீர்வெள்ளை யாயிறங்கு மூர்ச்சையுண்டாம்
வாடுகின்ற நாக்குமஞ்சள் வெள்ளைமுள்ளாய்
மயக்கமுடன் முகமஞ்சட் பூத்துநிற்கும்
நாடுகின்ற வயிற்றுவலி சற்றேகாணும்
நலமான வவுடதத்தை நாட்டக்கேளே.

(இ-ள்) உடம்பு இளைக்கும். நாவறட்சியும் அஸ்தி சுரமுமுண்டாகும். தொண்டையில் புகைந்து புகைந்து இருமலுண்டாகும். மூத்திரம் வெளுப்பாக இறங்கும். மூர்ச்சை போடும். நாக்கு மஞ்சள் நிறமாகி அதில் முட்கள் தோன்றும். முகமும் மஞ்சள் நிறமாகும். மயக்கம் வயிற்றுவலி இவைகளுண்டாகும். இவை வறட்கண இலட்சணங்களாகும்.

### 3. எரிகண ரோக இலட்சணம்

குலையான வெரிகணத்தில் குணத்தைச் சொல்வோங்
குலையெரிச்சல் மேலெரிச்சல் தாகம்வாந்தி
யலைமோதிப் புரண்டு புரண் டவதிப்பட்டங்
கழுதுமிக வசமழிந்து முகம் கீழாகித்
தலையசைந்து வாயாலே மூச்சுண்டாகித்
தாங்காத வாராட்டங் கண்டதானால்
மலைபோலுந் திரண்டமுலை வனிதைமாதே
மருந்தினுட விவரத்தின் வாறுகேளே.

(இ-ள்) ஈரல் குலையில் எரிச்சல், தாகம், வாந்தி முதலியவைகளுண்டாகும். குழந்தைப் புரண்டு புரண்டு வீறிட்டழும். கையில் நிற்காமல் முகத்தைக் கீழே போட்டுத் தலையையசைக்கும். வாயினால் மூச்சு விடும். குழந்தை அல்லலப்படும். இவைகள் ' எரிகணத்தின்" இலட்சணங்களாம்.

### 4. சுழிகணத்தின் இலட்சணம்

மெலிந்துவருஞ் சுழிகணத்தின் பெருமைகேளாய்
வெப்பசுவா சஞ்சுழித்துச் சுழித்துவாங்கும்
நலிந்துபற் பலவிதமாய்க் கழிந்து சோர்ந்து
நரம்புகளைப் புடைத்துமிகு சுரங்களாகிப்
பொலிந்தசிறு வாயாலே வாந்திகோழை
புகழ்நாக்கு நெஞ்சீரல் வெந்துபோகும்
கலந்தமுலை குடியாம லிளைத்துப்போகும்
கண்செருகி நாசியுப்பல் காணுந்தானே.

(இ-ள்) மேல்மூச்சு சுழித்து வாங்கும். பலவிதமாகக் கழிச்சலுண்டாகி, உடம்பு பலஹீனமாகி நரம்புகள் புடைத்து, சுரம் காணும். கோழை கோழையாக வாந்தியெடுக்கும். நாக்கு, ஈரல், நெஞ்சு முதலியவிடங்களில் வேக்காளம் உண்டாகித் தாய்ப்பாலைச் சாப்பிடாது. தேகம் இளைத்துப்போகும். கண்கள் சொருகி, மூக்கு உப்பி இருக்கும்.

**5. மூலகணத்தின் இலட்சணங்கள்**

கொள்ளவே மூலத்தின் கணத்தைச் சொல்வேன்
கொடியமலம் பல நிறமாய் விழுந்துமென்மேல்
துள்ளவே யிரத்தமது மிகுந்து வாய்வு
தொந்தமா யாசனத்திற் கடுப்புண்டாகி
வெள்ளையாய்ச் சடலமது வெளுத்துத் தாகம்
வெப்பமொடு தலைவலியு முகமுஞ்சூம்பி
யுள்ளுகின்ற துடையதுவும் வற்றிநன்றா
யுணவுண்ணா திளைத்துப்போ முடலந்தானே

(இ-ள்) குழந்தை பற்பல நிறமாக மலம் கழிக்கும். அதனுடன் இரத்தமும் போகும். வாயு அதிகமாகி ஆஸனத்தில் கடுப்புவலி காணும். உடம்பு வெண்மை நிறம்பெறும். (பாண்டு) தாகமும், தலைவலியும் உண்டாகும். முகம் சூம்பிவிடும். துடையும் வற்றிவிடும். உணவு சாப்பிடாது. உடல் இளைக்கவாரம்பிக்கும். இது ""மூலகணத்தின்" குணங்களாகும்.

**6, முக்கு கண இலட்சணங்கள்**

இருந்ததொரு முக்குகணத் தியல்பைக்கேளா
யினியமல முக்கிமுக்கி யடியுந்தள்ளி
வருந்திமலத் தோடிரத்தங் கூடச்சேரும்
வாந்திசுரந் தாகமுக மினுப்பாய்நிற்குந்
திருந்துமுலை யுண்ணாது நாக்கு வேகுஞ்
சிறந்ததுடை யுடைவலிக்குந் தலைகீழாகும்
விரிந்துகைகால் குளிர்ந்திருக்கும் பவளவாய்தான்
வெங்கடுப்பா முடலிளைக்கும் வித்தைதானே.

(இ-ள்) குழந்தை அடிக்கடி முக்கி முக்கி மலம் கழிக்கையில் குடல் வெளிப் புறப்படும். மலத்துடன் ரத்தமும் கலந்து வெளியாகும். வாந்தி, சுரம், தாகம், முக மினு மினுப்பு இவைகளுண்டாகும். நாக்கில் வேக்காளமேற்படும். துடை, இடுப்பு இவ்விடங்களில் வலி அதிகமாவதால் தலையைக் கீழே தொங்கப்போடும். கை, கால் முதலிய இடங்கள் குளிர்ச்சியாக இருக்கும். வாயில் சிறு சிறு கொப்பளங்கள் தோன்றும். உடம்பு இளைக்கும்.

**7. விஷகண இலட்சணங்கள்**

கணமென்ற விஷகணத்தின் குணத்தைக்கேளாய்
கைகாலு மதைத்துநெற்றி வலியுண்டாகுங்
குணமில்லாச் சாணியைப்போற் பேதியாகுங்
குரல்கம்மி முலையுண்ணா திருமாலுண்டா
மிணையிலா முகம்வெளுத்துச் சுரமுங்காணு
மெந்நேர நெஞ்சுவிலா கொதிப்புண்டாகுந்
துணையான கண்சிவக்கு மிளைத்துப்போகுஞ்
சொல்லுகின்ற தேகம்பல விதமாந்தானே.

(இ-ள்) கை கால் வீங்குவதுடன், நெற்றியிலும் வலியுண்டாகும். சாணியைப்போல் (நிறம், குணம்) மலம்கழியும். குரல் கம்மிப்போம். தாய்ப்பாலையருந்தாது. இருமல், முகம் வெளுத்தல், சுரம், எப்போதும் நெஞ்சில் வலி, விலாப்பக்கங்களில் கதகதப்பு இவைகளுண்டாகும். கண்கள் சிவப்பு நிறமாகும். குழந்தையின் உடம்பு இளைக்கும்.

**8. ஆமகணக்குறிகள்**

போமென்ற ஆமகண குணத்தைக் கேளாய்
பொருமியே சீதரத்தம் பரந்து காணும்
ஆமென்ற சுவாசம் விழி கழித்தல் காய்ச்சல்
அடிவயிற்றில் வலிவேர்வை கழுத்து நாணல்
ஓமென்ற மூக்குவெந்து திடுக்கென் றேதான்
உலைந்தெழுந்து கைகாலுங் குளிர்ந்து காணும்
நாமென்ற கண்மூடி விழித்திடாது
நலிந்துபோ மருந்ததற்கு நயமாய்க்கேளே.

(இ-ள்) வயிறு உப்பிசமாகிச் சீதமும் ரத்தமுமாக வயிறு கழியும். சுவாசம், கண் சொருகல்,சுரம் அடிவயிற்றில் வலி, வியர்வை, கழுத்துச் சிறிது இழுத்துக்கொள்ளல், மூக்கு நுனியில் வேக்காளம், திடீரென்று பயந்து படுக்கையிலிருந்து எழுதல், கால்,கைகள் குளிர்ச்சி, கண்களை எப்போதும் திறக்காமல் மூடியிருத்தல் முதலிய குறிகள் காணப்படில் அது "ஆமகணம்" எனப்படும்.

### 9. மந்தாரக் கணத்தின் குறிகுணங்கள்

தாழ்ந்து வரும் மந்தாரமக் கணத்தைக் கேளாய்!
தாக்கி வயிறுப்பிசமாய் மலத்தைக் கட்டிச்
சூழ்ந்து நளிர் சுரமயக்கம் இருமலுண்டாய்ச்
சுவாசமொடு தலைவேர்வை முலையுண்ணாது
வாந்திதிடுக் கிட்டலற லிளைத்துப் போதல்
வடிந்துவரி மூக்கினாற் சலங்கள் மிஞ்சி
யேந்து மிளங்கொங்கை நல்லாய்! மருந்திதற்கே
இயம்புகிறேன் பலமாக வெடுத்துத்தானே.

(இ-ள்) வயிறு உப்பிசமாகி, மலம் சிக்கலாகும். குளிர்சுரம், மயக்கம், இருமல், சுவாசம், தலையில் வியர்வை, வாந்தி எடுத்தல், திடீரென்று அலறுதல், உடம்பு இளைத்துப்போதல், மூக்கிலிருந்து நீர்வடிதல் முதலியவைகளுண்டாகும். தாய்ப்பால் குடிக்காது. இவைகள் "மந்தாரக் கணத்தின்" லட்சணங்களாகும்.

### 10. அந்தக கணரோக இலட்சணங்கள்

கொடிதான வந்தகமாங் கணத்தைச் சொல்வேன்
கூறுகின்ற வந்தியிலே கண் தோன்றாது
கடிதான சுரத்தோன்று மிரத்தம் போகும்
கால்சந்து பலபலவாய்ச் சத்தம் பேசும்
வடிவான முகந்தானு மஞ்சள் போலா
மார்புமே டாயெழும்பு மயக்க முண்டா
மிடியான யருசிகண்டு தேகம் வற்றி
மேலான மூளையைத்தான் பற்றும் பாரே.

(இ-ள்) சாயங்காலத்தில் கண்கள் தெரியாது. மிகுதியாகச் சுரம் தோன்றும். மலத்திலிரத்தமும் போகும். கால்களில் அசதியேற்படும். மூச்சுப் பற்பல விதமான சப்தத்துடன் வெளிவரும். முகம் மஞ்சள் நிறத்தையடையும். மார்புக்கூடு மேலெழும்பி நிற்கும். மயக்கம், அருசி, தேக இளைப்பு இவைகளுண்டாகி மூளையையும் பாதிக்கின்றமையால் இதற்கு "அந்தகக்கணம்" எனப்பெயர்.

### 11. சுர கணரோக இலட்சணங்கள்

வாரான சுரகணத்தான் பெருமை மெத்த
மகத்தான தாகசுரம் பிதற்றல் தாகஞ்
சீரான சரீரமிச விளைத்துப் போகுஞ்
சிக்கிவிடு மலந்தன்னை யிருமலுண்டாம்
வேரான கண்மஞ்சள் சிறுநீர் மஞ்சள்
மிக்கவயி றிரைந்துகந்து முலைகண்கூடுந்
தாரான திவையெல்லாங் கணத்தின் பேதஞ்
சாற்றுகிறே னவுட தத்தால் சாந்திதானே.

(இ-ள்) தேகத்தில் சுரம் காணும், பிதற்றல், தாகம், முதலியவையுண்டாகும். சரீரமிளைத்துப்போகும். மலச்சிக்கலுண்டாகும். இருமல், கண்கள், சிறுநீர் முதலியவைகள் மஞ்சள் நிறமாகும். வயிற்று இரைச்சல், பொருமல் இவைகள் உண்டாகும்.

### 12. அக்கரக் கணரோக இலட்சணங்கள்

இருந்ததொரு வக்கரமாங் கணத்தின் செய்கை
யியம்புவோந் தாதுமெத்தத் துடித்து நிற்கும்
வருந்துகின்ற நாசிவா யாவி தோன்று
மதிமுகந்தான்வெளுத்துவிடுஞ் சுரங்களுண்டாந்
திருந்துதலை நாக்கிவைகள் வெந்துபோகுஞ்
சீரியதோர் மூக்கினாற் சலமுங் காணும்
பொருந்துசிரம் வலித்திடுமெய் குளிர்ந்தி ருக்கும்
பொல்லாதிதற் கவுடதம் புகலக் கேளே.

(இ-ள்) நாடி மிக்க வேகமாக அடிக்கும். நாசி, வாய் இவ்விடங்களிலிருந்து ஆவியெழும்புதல் போன்ற உணர்ச்சி, முகம் வெளுத்தல் முதலியவைகளுண்டாகும். சுரம் அடிக்கும். நாக்கு வெந்துபோகும். மூக்கிலிருந்து நீர்வடியும். தலைவலி, உடலில் குளிர்ச்சி முதலியவைகளுமுண்டாகும்.

### 13. குன்றியக்கரகண இலட்சணங்கள்

மாதேகேள் குன்றியக்க ரக்கணத்தின்
வாறுகேள் சிறுநீர்தான் மஞ்சளாமப்
போதேதா னிடைக்குமேல் சுரமுங்காணும்
பொல்லா விருமலுடன் சுவாசங்காணும்
ஓதாமற் குரல்கம்மி வெளுக்குநதேக
முலர்ந்துவிடுந் தாகமன்ன துவேஷமுண்டாஞ்
சூதாகி யீரல்வெந்து புண்ணாய்ப்போகுஞ்
சுளுவாக மருந்திதற்குச் சொல்லுவேனே.

(இ-ள்) மூத்திரம் மஞ்சள் நிறமாகும். இடுப்பிற்கு மேல்பாகத்தில் சுரம் காயும். இருமல், சுவாசம், குரல் கம்மல், தேகம் வெளுப்பாதல், இளைப்பு, சாப்பாட்டில் விருப்பமின்மை முதலியவைகளுண்டாகும். ஈரல்குலையில் வேக்காளத்துடன் புண்களும் ஏற்படும்.

### 14. ஊதகணக் குறிகுணம்

காதுடன் கண்ணுடம்பு கனக்கவே வீங்கும் வற்றும்
போதவே நாவும் புண்ணாய்ப் பொருந்திய சுரமுமுண்டாம்
வேதுகை காலுஞ்சோர்ந்து வெளுத்திடும் அன்னந்தன்னை
ஊதுநற் கணமாமென்றே உரைத்தனர் முனிவர் தாமே.

(இ-ள்) காது, கண்கள், உடம்பு இவ்விடங்களில் வீக்கமுண்டாகும். பின்பு அது தானாகவே குறையும். நாக்கில் புண்கள் உண்டாகும். சுரம் ஏற்படும். கை, கால் முதலான உறுப்புக்கள் பலஹீனமாகும். உடல் வெளுத்து விடும். அன்னத்தைத் தள்ளிவிடும். இக்குறிகளால் " ஊதுகணம்" என்று தெரிந்து கொள்ளவும்.

### 15. இரத்தக்கணத்தின் குறிகுணங்கள்

நாடியயர்ந்தே யுளம்வாடி மெத்தவு நாச பசி
கூடியசனம் புசிக்க வொட்டாது குழந்தைகட்கே
ஓடிய ரத்தமலந்தனிற் சேர்ந்துறு மூலம்தான்
சாடிக்கும் ரத்தகணமெனவே முனிசாற்றினாரே.

(இ-ள்) நாடியில் நடைபலஹீனமாகும். மனம் வாட்டம் ஏற்படும். பசியெடுக்காது. ஆகாரத்திலும் இச்சையின்மை, மலத்தில் இரத்தம் கலந்து விழுதல் இவைகளினால் "இரத்தகணம்" என்று அறியவும்.

## 4. கரப்பான் ரோக வரலாறு

பெருகுஞ் சோள மிறுங்கும் பெருங்கம்பு
வரகு காருடன் வாழையின் காயொடு
உரைகொள் பாகல் கெளிற்று மீனுண்டிடில்
விரிவதாய்க் கரப்பானுமிகுந்ததே.

(இ-ள்.) சோளம், கம்பு, வரகு, காரரிசி, வாழைக்காய், பாகற்காய், கெளுற்றிமீன் இவைகளைத் தாயார் அதிகமாய்ச் சாப்பிடுவதினாலும் அல்லது குழந்தைகள் சாப்பிட்டாலும் கரப்பான் ரோகம் உண்டாகுமெனக் கூறப்பட்டிருக்கிறது.

44 நெ. சுவடியிலுள்ள செய்யுட்கள் கவர்மெண்ட் பிரஸ் பதிப்பு 'பாலவாகடத்திலிருக்கும்" செய்யுட்களாகவே இருப்பதினால் இவ்விடத்தில் அச்செய்யுட்களின் பொருள் மாத்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

### 1. வாதகரப்பான் இலட்சணம்

உடம்பிலுள்ள சிற்சில நரம்புகளில் வேதனை உடம்பு வீக்கம், கடுப்பு, வலி தாங்காமலழுதல், உடம்பின்மேல் நெற்பொரியிட்டாற்போல் புண்கள் தோன்றுதல், சிறிது நாள் சென்றபின் அவை பழுத்து உடைதல், திமிருடன் சுரமடித்தல், நாவறட்சி, முதலியவைகளேற்பட்டாளது "வாதகரப்பான்"என்று அறிந்துகொள்க.

### 2. பித்த கரப்பான் இலட்சணம்

கடுமையான தலைவலியுடன் உடம்பில் சொறி உண்டாகும், சுரம், வாந்தி இவைகளுடன் உடம்பு சிவப்பு நிறமாக ஆகும். கண்கள் பச்சை நிறமாக ஆகும். குரல் கம்மல் மலச்சிக்கல் இவைகள் உண்டாகும்.

### 3. சிலேத்தும கரப்பான் இலட்சணம்

குரல் கம்மிப்போதல், நெஞ்சு புண்ணாதல், தலைவலி, வாய்வேக்காளம், புண்கள் நீர்கொண்டு திரளுதல், கடுப்பு, வலி இவைகளேற்படும்.

### 4. அரிகரப்பான் இலட்சணம்

துடை இடுக்குகளில் இரணம் உண்டாகி அதிலிருந்து அதிகமான சலம் வடியும். புண்ணில் தசை மிகக்கரைந்து வலியுண்டாகும். நாட்கள் செல்லச் செல்ல உடம்பு இளைக்கும்.

### 5. பொரிகரப்பான் குறிகுணம்

அடிக்கடிக் கன்னத்தில் அடித்துக்கொள்வதாலேற்படும். வீக்கத்தைப்போல் உடம்பு முழுவதும். சிவப்பு நிறமுள்ள தடிப்புகள்

உண்டாகும். சிறிதுநாள் சென்று அவை பழுத்து உடைந்து தாங்கமுடியாத வலியுண்டாகிப் பின்பு குளிர்ச்சி ஆகும். நாவறட்சி, நிலை தவறுதல் முதலியவைகள் ஏற்படும்.

### 6. வாலகரப்பான் இலட்சணம்

கால், கை, துடையிடுக்கு இவ்விடங்களில் வலியுண்டாகிப் பின்பு அது விஷக்கடியில் உண்டாவது போல் உடம்பு முழுவதும் பரவித் தடிக்கும். பின்பு, அவை, சுரந்து, உடம்பு இளைத்து இரணங்களாகும். நாக்கு, தொண்டை முதலிய இடங்களிலும் இரணங்கள் உண்டாகும். சுரம் காணும்.

### 7. செங்கரப்பான் இலட்சணம்

சுரம், உடம்புக்கடுப்பு, வீக்கம், ,உடம்புக் கன்றிப்போதல். கதகதப்பு, உடம்பில் அரிப்பு ஏற்படுதல். உடம்பு முழுவதும் வியர்வைக் குறிபோலக் காணுதல். முகம் கருப்பாகி உடம்புச் சிவப்பாதல் முதலிய குறிகள் கண்டாலதைச் "செங்கரப்பான்" என்று அறிந்துகொள்ளவும்.

### 8. மண்டைக் கரப்பான் இலட்சணம்

மண்டையில் நமைச்சலேற்பட்டு அதைச் சொறிந்தால் அங்குப் புண்களேற்படுவதுடன் காதில் சீழ் வடிந்து வடிந்து ஆறிப்போகும். தலைவலியுடன் மூக்கினின்று நீர் வடியும். உடம்பு இளைத்துப் போகும். சுரம் காணுதல், குரல்வளையில் தினவு இவைகளும் உண்டாகும்.

### 9. ஓடுகரப்பான் இலட்சணம்

கீல்களில் வலி ஏற்பட்டு நீட்டவும், முடக்கவும், கூடாமற் செய்வதுடன் நரம்புகளில் இசுவைப் போன்ற வலியும் குத்தலும் ஏற்படும். மலச்சிக்கல், உடம்பெங்கும் அரிப்பு, தடிப்புக் காணுதல், வீக்கம் இக்குணங்களைக் கண்டால் "ஓடு கரப்பான்" என அறியவும்,

### 10. சட்டைக்கரப்பான் இலட்சணம்

கீல்களில் வலியுண்டாகி, உடம்பெங்கும் கள்ளிப்பூவைப்போல் சிரங்குகள் உண்டாகும். அவற்றிலிருந்து நீர் வடியும். மலச்சிக்கல், சிறிதளவு சுரம், தலைவலி அன்னத்துவேஷம் முதலியவைகளும் உண்டாகும்.

### 11. வெடிகரப்பான் இலட்சணம்

உடலெங்கும் வீக்கமுண்டாகும். அசைவுள்ள கீல்களும், வீங்கி, அது பழுத்து உடையும். சிறிதளவு சுரம், தலைவலி உடம்பெங்கும் அரிப்பு முதலிய குணங்களைக் கொண்டு "வெடிகரப்பான்" என்றறியவும்.

### 12. கிரந்திக் கரப்பான் இலட்சணம்

**நெஞ்சையடைத்து, உடம்பு வீங்கி,** மேல்மூச்சு வாங்கும் உடம்பு பற்பல நிறங்களையடையும். தொண்டைக்கட்டு உண்டாகி உடலெங்கும் வலி உண்டாகும். இருமல், சிறு தொனியாய் அழுதல் அதனால் குரல் கம்மல் இவைகளுண்டானால் "கிரந்தி கரப்பான் " என்று அறியவும்,

## 5. கிரந்தி ரோகம்

### செங்கிரந்தி இலட்சணம்

குழந்தை செனித்தபின் அது அழாது. நன்றாகப் பார்க்காது. மலஜலம் விடாது. உடம்பை அசைக்காமல் அப்படியே கிடக்கும்.

### கருங்கிரந்தி இலட்சணம்

குழந்தை நன்றாக அழும். தாய்ப்பால் குடிக்காது. வயிறு ஊதி உடம்பு கன்றிப்போய் முறுக்கிக்கொள்ளும். கண் விழிக்காது. உடம்பு கருப்பு நிறமாக இருக்கும். இந்த இலட்சணங்களைக் கொண்டுக் "கருங்கிரந்தி" என்று தெரிந்து கொள்ளவும்.

# 6. ஆமரோக இலட்சணம்

உண்ட பாலுமெதி ரெடுக்கும் உடம்பும் பற்பல விதந் தோன்றும்
அண்ட வயிற்றில் கனமுண்டாய திகச்சுரமு முழிசிறுக்கும்
விண்ட மலத்தைக் கட்டிவிடும் விழியும் வளைந்து கால் குளிரும்
துண்ட மான வாமமென்றே தோன்றி மருந்து செய்வாயே.

(இ-ள்) அருந்தியத் தாய்ப்பால் வாந்தியாகும். உடம்பு பற்பல நிறமுள்ளதாகத் தோன்றும். குழந்தை வயிறு கனத்துக்காணும். அதிகமான சுரம், கண் குழிவிழுதல், மலச்சிக்கல், கால் குளிர்ச்சி முதலியவைகள் ஏற்பட்டாலதை " ஆமதோஷம்" என்று அறியவும்,

# 7. கீரிப்பூச்சி உற்பத்தி வரலாறு

உற்றதோர் மலங்கட்டுதலுண்மையாய்க்
குற்றஇலைக்கறி நித்தமுங் கூட்டுதற்
பெற்ற தாயொடும் பிள்ளையோடாயினுஞ்
சிற்றுயிர்க் கீர்ப்பூச்சியுஞ் சேருமே.

(இ-ள்.) மலச்சிக்கல் உண்டாகி, இலைக்கறி வகைகளையும் தினந்தோறும் சேர்த்துக்கொள்வதால் தாயாராகிலும் சரி குழந்தையாயினும் சரி அவர்களுக்குக் கீரிப்பூச்சி உடலில் சேரும்.

### கிரிப்பூச்சி ரோக இலட்சணம்

கண்ணொடு பீளைசாறிக் கையொடு தலையுங்கோதித்
திண்ணெனச் சிலத்தில்காது செவியொடு தேய்த்துச்சால
பண்ணுள குரலுந்தாழ்ந்து பாலகன் தேயுமாகில்
உண்மைகாண்கீரி நோயென்றுரைத்தன ருலகத்தோரே.

(இ-ள்.) அடிக்கடிக் கண்களில் பீளை கட்டும். கையினால் தலையைத் தடவும். காதுகளைப் பிடித்து இழுத்துக்கொள்ளும். குரல் கம்மிப்போய்க் குழந்தையும் இளைத்து வந்தால் "கீரிநோய்" என்று அறியவும். இதைத்தவிர, அடிக்கடி வயிறு வலித்துப் பேதியாதல், அன்னத்துவேஷம், சுரம், வாந்தி, நெஞ்சு, மார்பு இவைகள் மேடாதல், சூணா வயிறு தட்டுதல் இக்குறி குணங்களினாலும் "கீரிநோய்" எனக்கொள்க.

## 8. கக்குவான் ரோகக் காரணங்கள்

சேருங்காய் கனி செய்பழஞ் சோறுபால்
மோருடன் றயிர் மொய் புளிப்புண்டியாற்
சாகுமே பற்பல நீரினிற்றானத்தாற்
காருங் கோழையின் சுக்குவானென்பதே.

(இ-ள்) காய், பழம், பழைய அமுது, மோர், தயிர், புளிப்புள்ள ஆகாரம் இவைகளை அதிகம் சாப்பிடுவதாலும் பலவிதத் தண்ணீர் வகைகளையும் உபயோகிப்பதால் கோழையோடு கூடியக் கக்குவான் ஏற்படுகிறது.

**கக்குவ ரோக இலட்சணம்**

வார் செறிவிலாவில் மார்பில் வந்திடுங்கோழை நெஞ்சிற்
சாரவே செனிப்புண்டாகிச் சளியோடு புகைச்சலுண்டாம்
மூரவே யிருமலாகி யுண்டிடுஞ் சோறு கக்குங்
காரமாயிளைக்கு மேனி கக்குவான் குணமிதாமே.

(இ-ள்) விலா, மார்பு, இவ்விடங்களில் கோழை கட்டும். நெஞ்சில் சளிக்கட்டு ஏற்பட்டுப் புகைச்சல் உண்டாகும். அடிக்கடி இருமல் உண்டாகிச் சாப்பிட்ட ஆகாரத்தை வெளியே கக்கிவிடும். உடல் இளைத்துப்போகும். இதையன்றிக் "கொக்குக் கொக்கெனக் கோழையிருமலாங் கக்குவாய்" என்றபடி இரவு நேரங்களில் இருமல் அடுக்கடுக்காகப் பல தடவை வந்து கடைசியில் பெருமூச்சில் முடியும். இது 45 நாட்கள் குழந்தையைக் கஷ்டப்படுத்தும்.

உ

ஹரி ஓம் நன்றாக

**காப்பு**

வேகமாக நெறி சேரும் விளைகளுந்
தாக போக விடாத தளர்ச்சியுஞ்
சோக வாரியினால் வருந்துன்பமும்
போக வானை முகத்தானைப் போற்றுவாம்.

### சரபேந்திரர் வைத்திய முறைகள்

# கர்ப்பிணி, பால ரோக சிகிச்சை

## 1. ருதுவாகாமல் இருப்பவர்களுக்கு மருந்துகள்

1. ருதுவாகாதவர்களுக்கு மருந்துகள்

சிற்றிலையு மம்மான் பச்சரிசிவேரு
மிரு காசிடை தீ வெந்நீர்
பற்றியரைத்தேழுநாள் பருகிடவும்.
தெருளுவள் காண் பாவை யென்றே
கொற்றவனாகிய சரப குணபதி செய்
முறையிதனைக் குறிக்கொள்வோர்கள்
நற்றவஞ் செய்தவரெனவே மற்றவரெல்
லா முகந்து நண்ணுவரே.

(இ-ள்.) நெய்சட்டி (வேர்) 2 காசிடை
அம்மான் பச்சரிசி வேர் 2 காசிடை

இவற்றை வென்னீர் விட்டு நன்றாக அரைத்து 7 நாள் சாப்பிடவும். ருதுவாகாதவர்கள் ருதுவாவார்கள்.

**2. மாதவிடாய் வியாதியினால் வராதிருந்தால்**

மாம்பட்டை மேற்புராணி சீவியுள்
பட்டை நறுவளிப்பழுப்புக்
காம்பு நல்ல பாம்புச்சட்டை வகையொன்றுக்
கே பல நால்கடுகத்தூளி செய்

தாம்பரிசு பொட்டணங்கட்டிப் புகையிட்
டவள் யோனியதனிற் காட்டத்
தேம்பலின்றித் தூரமாங் கைகண்ட
திம் முறையைச் செப்பினோமே. 2

(இ-ள்.) மாம்பட்டையின் மேல் புராணி நீக்கி

| | |
|---|---|
| உள்ளிருக்கும் மெல்லிய பட்டை | 4 பலம் |
| நறுவளி இலைப் பழுப்பின் காம்பு | 4 பலம் |
| நல்ல பாம்பு உரித்தச் சட்டை | 4 பலம் |

இவற்றை நன்றாக நுண்ணிய தூளாகச் செய்யவும். இத்தூளைச் சிறிய பொட்டணமாகக் கட்டி நெருப்பில் போட்டு வியாதியுள்ள ஸ்திரீயின் யோனிவாயில் கட்டிவர ஸ்திரீ மாதவிடாய் ஆவாள்.

## 3. தீட்டாகாமலிருந்தால் தீட்டாக மருந்து

ஆண்பனையின் குருத்தோலை சுட்டுப்பா
லிட்டருந்தினாற் றீட்டாவாள்
காண்பீரவ்விரவுண்ணா திருந்து மறு
நாளுழக்கு கவிழ்தும்பைப்பூ
வூண் பிசைந்து பசுவின் பாலுடன் வடக்குத்
திசை நோக்கி யுண்டாற் பிள்ளை
யாண்பெனு முண்டாமிது கைகண்டதெனச்
சரபேந்திர ரருள் செய்தாரே. 3

(இ-ள்) ஆண் பனையின் குருத்தோலையைச் சுட்டுக் கரியாக்கிப் பாலுடன் சேர்த்து அருந்தினால் அன்றே தீட்டாவாள். 2. அன்றையத் தினம் இரவு சாப்பிடாமலிருந்து மறுநாள் ஒரு உழக்குக் கவிழ்தும்பைப் பூவைக் கசக்கிப் பாலில் போட்டு வடக்குத் திசையை நோக்கி உட்கார்ந்து சாப்பிட்டால் ஆண் குழந்தைகளும் பெண் குழந்தைகளும் பிறக்கும். கைகண்டது.

# 2. தீட்டாகும்போது உண்டாகும் வலிக்கு மருந்துகள்

## 4. தீட்டானவள் வயிற்றுவலிக்கு மருந்து

உள்ளியொரு பல்லு மிளகோர் பத்து
நுணாக் கொழுந்து மோர் கம்பீரத்
துள்ள சிறு காயளவு முதகமத
னாலரைத்து மோர் மூன்றாநாள்
மெள்ள முழுகினவுடனே விரைந்தீரந்
துவட்டா முன் விழுங்கச் செய்து
கொள்ள வுமுக்கந்தாயங்குக்கி வலி
குலையுமுப்புப் புளிகொள்ளாதே.

(இ-ள்) தோல் நீக்கிய உள்ளிப்பூண்டு 1 பல்லு
மிளகு 10 (எண்ணிக்கையில்)
நுணாக்கொழுந்து ஒரு சிற்ய எலுமிச்சங்காய்ப் பிரமாணம்

இவற்றைத் தண்ணீர் விட்டு நன்றாக அரைத்துத் தீட்டான மூன்றாவது நாள் ஸ்நானம் செய்துத் தலைதுவட்டுவதற்கு முன் சாப்பிடச் செய்யவும். வயிற்றுவலி தீரும்.

பத்தியம்: அன்று உப்பு, புளி தள்ளவும்.

## 5. பெரும்பாட்டுக்கும் தீட்டின்போது உண்டாகும் வயிற்றுவலிக்கும் மருந்து

பெரும்பாட்டு வயிற்று வலிப் பிணி தீரப்
பெண்பாலார் பிரியமாக
வருந்து கலத்தலம் பியநீர தனையோர்
சட்டியில் வார்த்தனேக நாளாய்

யிருந்த வொதியின் சிவந்த பட்டையினை
நருக்கியந்த வெச்சி நீரிற்
றிருந்த வேயூற வைத்த நீரினாற்
கால் கழிவிற் செல்லு நோயே. 5

(இ-ள்.) பெரும்பாடு, வயிற்றுவலி, இவை தீர வேண்டுமானால் அந்த நோயுள்ள ஸ்திரீயின் சாப்பிடும் சலத்தைப் (தட்டுக் கழுவி. தண்ணீரைப்) பத்திரமாக ஒரு சட்டியில் வார்த்துக்கொண்டே வரவும், பின்பு, முற்றிய சிவப்பு நிறமுள்ள ஒதியன் பட்டையைச் சிறுசிறுத் துண்டுகளாக நறுக்கி அந்த எச்சில் நீருடன் ஊறவைக்கவும், நோயுள்ள ஸ்திரீ இந்த நீரினால் தினந்தோறும் "கால் கழுவிவரக் குணமாகும்

பெரும்பாடு - Menorrhagia

### 6. சூதகம் வந்தபோதெல்லாம் வலித்து இரத்தம் விழுவதற்கு மருந்து

சூதகமாம் போதெல்லாம் வலித்திரத்தம்
வீழ்வதற்குஞ் சொலு நாளுக்குட்
பேகமாய்க் கெடுத் தப்பி வலிக்கினுஞ்
சூதகக்கிராணி யென்று பேராம்
ஆதலினாலிதற்கு மருந்தறிந்து சொன்னார்
சரபேந்திர ரருளினாலே
மாதவிடாய் வலி இந்த மருந்தினாற்
போம் வண்ணம் வகுத்துத்தானே. 6

அதிவிடையஞ் சாதிக்காய் கிராம்பு வகைக்
கோர் வராகனெடை யாரந்த
புதிய கழாயத்தினிற் சீரகமுடிந்து
போடு நாகரப் புராணி

சதிரதாய்ச் சீவியுப்புத்தடவு புடம்
போடு சுக்குத் தட்டிப் போட்டு
அதை யொன்றாய்க் காய்ச்சியதில்
வசம்பு சுட்டபொடி தூவுண்ணகலு நோயே. 7

(இ-ள்.) சூதகமாகும் போதெல்லாம் வலித்து இரத்தம் விழுந்தாலும் வழக்கமாக ஏற்படும் நாட்களுக்குள் கெடுத்தப்பி வலித்தாலும் இதற்குச் 'சூதகக் கிராணி" என்று பெயர்.

இவ்வியாதிக்கு மருந்தை நன்கு அறிந்து செய்தல் வேண்டும்.

| | |
|---|---|
| அதிவிடையம் | 1 வராகனெடை |
| கிராம்பு | 1 வராகனெடை |
| சாதிக்காய் | 1 வராகனெடை |

இவைகளைக் கல்லுரலிலிட்டு ஒன்றிரண்டாக இடித்துக் கஷாயமாகச் செய்து அதனுடன் ஒரு வராகனெடைச் சீரகத்தை ஒருமுடிச்சாகக்கட்டி அதில் போட்டு எரிக்கவும். பின்பு நன்றாக உலர்ந்த சுக்கை மேல்புராணி நீக்கி, அதன் மேல் உப்பைக் கரைத்துத் தடவிச் சிறுதீயில் புடம் போட்டெடுத்து இதைச் சூரணித்து வசம்பு சுட்டக்கரியுடன், வெந்த சீரகத்தையும் சேர்த்து மேற்படி கஷாயத்தில் குழப்பி நோயுள்ள ஸ்திரீ பருகவும்.

## 5. கருத்தரிக்கவும் மலட்டுப்புழு விழவும் மருந்துகள்

(Sterility)

### 7. கர்ப்பந்தரிக்க, மலட்டுப்புழு விழ மருந்து

வெல்லமோ ருண்டை குப்பைமேனிச் சா
றுழக்குடனே மிகுந்த காயஞ்
சொல்லும்வரா கனெடையொன்றுங் கலந்துகல
சத்திலிட்டுத் துணியான்மூடி

மெல்லவெயி லிடைவைத்து விலகுநாள்
மூன்றுமுண வேமலட்டுப்
பொல்லாத புழுவீழு மூன்றுமுறை
செயிற்பூவை பொருதுஞ்சூலே. 8

(இ-ள்) வெல்லம் 1 கட்டி
குப்பைமேனிச்சாறு ஒரு உழக்கு
சுத்தமான பொரித்த பெருங்காயம் 1 வராகனெடை

இவைகளை ஒன்று கலந்து ஒரு புதுச்சட்டியிலிட்டு ஒரு வெள்ளைத் துணியினால் மூடி, இளம் வெயிலில் வைத்து, மாதவிடாய் காலத்தில் மூன்றுநாளும் சாப்பிட்டுவரக் கருப்பையிலுள்ள மலட்டுப்புழு விழும். மூன்று முறை செய்தால் ஸ்திரீ கர்ப்பமடைவாள்.

### 8. மலட்டுவலி நீங்க, பிள்ளையில்லாதார்க்கு பிள்ளையுண்டாக மருந்து

கழற்கொடிமேற் படர்ந்த சிறு குறிஞ்சியோ
டமுதவல்லி கைத்தபாகல்
செழித்தபிர மியமாடா தோடையிவை
யைந்திலையின் சேர்த்திடித்தே
பிழிந்தசா றதையெடுத்துக் கழற்கொடித்தோ
லரைத்ததனிற் பின்புகூட்டி
முழுகுநா லாநாளிற் றண்ணீரில்
நின்றுணரச்செய் முறையிதாமே. 9

(இ-ள்.) கழற்சிக்கொடியின்மேல் படர்ந்த சிறு குறிஞ்சான் இலை
சீந்தில் இலை
கசப்புப் பாகல் இலை
பிரமி இலை
ஆடாதோடை இலை

இவைகள் வகைக்கு ஒரு பிடி, எடுத்து எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்திடித்துச் சாறு பிழிந்து வைத்துக்கொள்ளவும். பின்பு கழற்சிக்கொடித் தோலைத் தண்ணீர் விட்டு (ஒரு கழஞ்சு அளவு) நன்றாக அரைத்து மேற்சொன்ன சாருடன் குழப்பி மாதவிடாயின் நான்காம் தினத்தன்று தண்ணீரிலிருந்துகொண்டு சாப்பிடச் சொல்லவும். மலட்டு வலி தீர்ந்து குழந்தையுண்டாகும்.

### 9. பிள்ளை உண்டாக மருந்து

இலைக்கள்ளி வேர்சிறுபாக் களவரைத்துப்
பசுவினெயி லிட்ட பின்பு
நலமாக முழுகுநா லாநாளே
முதலேழு நாளருந்திற்
பலனாகும் வனி தையருக் கேகர்ப்ப
மதுதானும் பலிதமாகும்
சொலுமிதனுக் காகியபத் தியம்பசுவின்
பாலன்னம் துய்க்கலாமே.

(இ-ள்) இலைக்கள்ளி வேரை நன்றாக அம்மியிலிட்டு அரைத்து அதில் ஒரு சிறு பாக்களவு எடுத்துப் பசுநெய் கூட்டி மாதவிடாயின் நாலாவது நாள் முதல் ஏழு நாள் தினந்தோறும் காலையில் சாப்பிடவும். ஸ்திரீகளுக்குக் கர்ப்பம் உண்டாகும்.

**பத்தியம்:** பசுவின் பால் சாதம் சாப்பிட்டு வரவும்.

### 10. மலட்டுப்புழு விழ மருந்து

வெள்ளுளியோ மஞ்சிற்ற ரத்தைசுக்கு
பெருங்காய மிளகிதெல்லாந்
தள்ளாதே கொம்மட்டிச் சாறதனை
விட்டரைத்துத் தான்கலந்து

மெல்லத்தாளிதஞ்செய்து விழுங்கினுங்கொம்
மட்டியிலை விரைந்தரைத்து
மொள்ளிழையார் வயிற்றினிடை கட்டமலட்
டுப்புழுவீழ்ந் தொழியுந்தானே. 11

| | |
|---|---|
| (இ-ள்.) வெள்ளைப்பூண்டு | ஓமம் |
| சிற்றரத்தை | சுக்கு |
| பெருங்காயம் | மிளகு |

இவைகளைச் சமமெடுத்துக் கொம்மட்டிச்சாறு விட்டுக் கலந்து நன்றாக அரைத்துச் சிறிது தாளித்து அப்படியே விழுங்கிவிட்டுக் கொம்மட்டி இலையை அரைத்து வயிற்றில் கட்ட மலட்டுப்புழு விழும்.

**குறிப்பு** : கும்மட்டி - பேய்க்கொம்மட்டி

### 11. பிள்ளை உண்டாக மருந்து

பருத்தியினற் கொட்டை கொட்டைப் பாக்களவா
யரைத்ததனைப் பாங்காய்வாங்கி
யொருகோழி முட்டையினிற் கரைத்துணவிப்
பிருதித்தோ லுடனேவீழுந்
திறமாக மறுமாதஞ் செப்புநெருஞ்
சியின்வேர்பால் சேர்த்தரைத்தே
யருப்திடப்புத் திரருண்டா மாயிழைக்கு
மனமகிழ்ச்சி யாகுந்தானே 12

(இ-ள்.) பருத்திக்கொட்டையை ஒரு கொட்டைப் பாக்களவெடுத்து அரைத்து, அதை ஒரு கோழிமுட்டை வெள்ளைக்கருவில் குழப்பிச் சாப்பிட, கர்ப்ப விப்புருதித்* தோலுடன் விழும். அடுத்த மாதம் செப்பு நெருஞ்சியின் வேரைப் பால் விட்டரைத்துச் சாப்பிடக் குழந்தை உண்டாகும். தாயாருக்கும் சௌக்கியமுண்டாகும்.

---

* கர்ப்ப விப்புருதி - கர்ப்பம் உண்டாகாமல் தடுக்கும் ஒருவிதக் கட்டி

## 12.மலட்டுப்புழு விழ மருந்து

எருக்கம் பழுப்புக் கொடிக்கழலோ
டாடாதோடை யிலைபிரண்டை
வருக்கஞ்சிறுபா கற்குறிஞ்சி
யிலையின்சாறும் வடித்திறுத்து
பருத்துச்சிவந்த பசுவின்பா
லுழக்குங்கூட்டிப் பருகிடவே
யிருக்கும்புழுவீழ்ந் திடும்வனிதைக்
கிசைந்துகருப்ப முண்டாமே 23

(இ-ள்.) எருக்கம்பழுப்பு, கழற்சிக்கொடி, ஆடாதோடை இலை, பிரண்டை, சிறுபாகல், குறிஞ்சியிலை இவற்றைச் 1 சமனெடையெடுத்துக் கல்லுரலிலிட்டு நன்றாக இடித்துச் சாறுபிழிந்து அதனுடன் நல்ல புஷ்டியுள்ள சிவப்பு நிறப்பசுவின் பால் ஒரு உழக்கும் சேர்த்துச் சாப்பிட மலட்டுப்புழு வீழ்ந்துவிடும். ஸதிரீக்கும் கர்ப்பம் தரிக்கும்.

குறிப்பு: இலைகளின் ஸ்வரஸம் எல்லாம் சேர்த்து 1 உழக்கு எடுத்துக்கொள்ளவும்.

## 13. மலட்டுப்புழு விழ மருந்து

ஆடாதோடை யினிலயுஞ் சிறுகுறிஞ்
சியிலைமுருக்கி னலர்ந்தபூவுங்
கூடவரைத்துச் சிவந்தவான் பாலின்
மூன்றுநாள் குழப்பியுண்ண
வாடி மலட்டுப் புழுவும் வழுவி
விழுமாதினுக்கு மகவுண்டாகும்
ஆடவர்திலக னாஞ்சர பேந்திர
வண்ணலார ருளிதாமே. 14

(இ-ள்.) ஆடாதோடை இலை, சிறுகுறிஞ்சா இலை மலர்ந்த முருங்கைப்பூ, இம்மூன்றையும் சிவந்த நிறமுள்ள பசுவின்

பாலிலரைத்துக் குழப்பி 3 நாள் சாப்பிட மலட்டுப்புழு விழும். ஸ்திரீக்குக் கர்ப்பமும் உண்டாகும்.

### 14. பிள்ளையில்லாத பேருக்கு மருந்து

தேங்காயி நெய்யுரிதல் லெண்ணெயுரி
யுமாடா தொடைச் சேர்கா
லோங்குவேப் பிலைச்சாறு முழக்கிதெலாம்
பாத்திரத் தொன்றாய்க் காய்ச்சி
தீங்கிலப்பத மாயெரித்துத் திறமாக
வடித்துப்பன் னிருநா ளுண்ண
மாங்குயிலார் தமக்குமக வுண்டாகும்
புளிகைப்பு மாற்றச்சொல்லே. 15

| | | |
|---|---|---|
| (இ-ள்) | தேங்காயெண்ணெய் | 1/8 படி |
| | நல்லெண்ணெய் | 1/2 படி |
| | ஆடாதொடைச்சாறு | 1/4 படி |
| | வேப்பிலைச்சாறு | 1 ஆழாக்கு |

இவற்றையெல்லாம் ஒரு பாத்திரத்திலிட்டு அடுப்பின் மீதேற்றிப் பக்குவமாக எரித்து வடித்த இந்த எண்ணெயை 12 நாள் சாப்பிட்டுவர அந்த ஸ்திரீக்குப் பிள்ளையுண்டாகும்.

பத்தியம் : புளிப்பு, கைப்புப் பதார்த்தங்களை நீக்கிவிடவும்

### 15. கர்ப்பமுண்டாக மருந்து

தருணிக்குச் சவுக்கியமுண் டாம்பிள்ளை
யுண்டாகுஞ் சந்திரசூரியர்
கிரணத்தி லேபிரமி யிலைச்சாற
துரிகொள்ளக் கெற்பமுண்டாம்

வருணத்து லுயர்ந்தோர்க்கு மாதானஞ்
செய்தவரா மகங்கள் செய்வித்
திரணத்தி ரையந்தவிர்ந்த வெங்கள்சர
பேந்திரனா ரிசைத்தவாறே. 16

(இ-ள்.) பிரமியிலைச்சாறு ½ படியெடுத்துச் சூரியக் கிரணத்திலும், சந்திரக்கிரணத்திலும் வைத்து, அதைப் பருகிவர ஸ்திரீக்குக் கர்ப்பமுண்டாகும். அதனோடு சௌக்கியமும் உண்டாகும்.

### 16. கர்ப்பமாக மருந்து

நானாழி பிரமியிலைச் சாறாநெய்
நானாழி நன்றா யொன்று
தானாகக் கலந்துகடுக் காய்தான்றிக்
கொட்டைவிரை தன்னைப்போக்கி
யீனமிலா விவையொன்றுக் கிரன்டுபல
மிந்துப்புப் பலமிரண்டு
மானசுக்கு பலமிரண்டு திப்பிலியும்
பலமிரண்ட தாகுந்தானே. 17

நெல்லிமுள்ளி பலமிரண்டு சிறுநாகப்
பூப்பலமு மிரண்டு நேராய்
நல்லமிள கிரண்டுபலம் பொடித்துநெய்யி
னிற்கிளறி நாளீர் போது
நெல்லிக்கா யளவுகொள்ளப் பத்தியம்பா
லுஞ்சோறு நேராயுண்ணில்
வல்லபையாம் பதினெட்டுக் குட்டமும்போம்
வாலையாய் மகவுண்டாமே. 18

| | | |
|---|---|---|
| (இ-ள்) | பிரமியிலைச்சாறு | 4 நாழி |
| | பசுவின் நெய் | 4 நாழி |

இவற்றை நன்றாகக் கலந்துகடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல் இவைகள் வகைக்கு 2 பலம்

| | |
|---|---|
| இந்துப்பு | 2 பலம் |
| சுக்கு | 2 பலம் |
| திப்பிலி | 2 பலம் |
| நெல்லிக்காய் வற்றல் | 2 பலம் |
| சிறுநாகப்பூ | 2 பலம் |
| மிளகு | 2 பலம் |

இவற்றை நன்றாகப் பொடித்து நெய்யினிற் சேர்த்துக் கிளறிப் பதத்தில் இறக்கி வைத்துக்கொண்டு தினந்தோறும் இருவேளை நெல்லிக்காயளவு இந்நெய்யை உட்கொள்ளப் பதினெட்டு விதக்குஷ்டமும் தீரும். ஸ்திரீகளுக்குக் குழந்தையும் உண்டாகும்.

**பத்தியம்:**

பால் சாதம் சாப்பிடவும்.

### 17. பிள்ளையுண்டாகப் புழு விழ மருந்து

துத்தியிலை வாய்பேசாமற்
றொழுது பறித்து நெல்லரிசி
குத்தியிடித்து நல்லெண்ணெய்
வார்த்துப் பிசறிக் கொண்டிடவே
புத்திரோதயமா மிதைநெய்யிற்
புசிக்கப் பெண்பே றுண்டாகுஞ்
சத்திரபதியாஞ் சரபேந்திரன்
சாற்று முறைமை தானிதுவே. 19

(இ-ள்) துத்தி இலையை வாய் பேசாமல்கடவுளைத் தொழுது பறித்து, நெல்லைக் குத்தி அரிசி செய்து, அதனுடன் நன்றாக இடித்து வைத்துக்கொள்ளவும். இதை நல்லெண்ணெயில் குழைத்துச் சாப்பிட ஆண் குழந்தையுண்டாகும். நெய்யில் குழைத்துச் சாப்பிடப் பெண் குழந்தையுண்டாகும்.

## 18. பிள்ளையுண்டாக மருந்து

விழுப்பதாந் தினத்திரவு பட்டினியாய்
விடிந்துதய மேவும் போதிற்
டழிப்பிறும்பைப் பூபசுவின் பாலிலரைத்
துத்தரப்பால் பரிந்து நோக்கி
செழிப்புடனே மூன்று தினந் தின்பவருக்
கன்புளசேய் செனிக்குமென்று
வழிப்படுதல் வயித்தியற்கு மன்னர்சர
பேந்திரனார் வகுத்தவாறே. 20

(இ-ள்) தீட்டான தினங்கள் மூன்று நாட்களிலும் இரவு பட்டினியாயிருந்து மறுநாள் விடியற்காலங்களில் தாமரைப் பூவைப் பசும்பாலில் அரைத்து அம்மூன்றுநாளும் பருகிவரக் குழந்தை உண்டாகும்.

இறும்பை - தாமரை

## 19. மஞ்சிட்டி நெய்

### (சூடு தணியவும் கர்ப்பமுண்டாகவும்)

மஞ்சிட்டிக் கிழங்குதிரி பலைகீழ்க்காய்
நெல்லியுடன் வள்ளிமூலம்
மஞ்சள்மர மஞ்சள்ளச மதாகமுட
னேதிருநா மப்பாலைவேர்
நஞ்சி றேட்கடையமுக்கி ராகரிப்
பாலைவேர் நன்னாரிவேரும்
வஞ்சிக் கடுகுரோ கிணியொன் றுக்கிரண்
டேகால்வ ராகனிடைவைத்தே 21

பாலிலரைத் தொருபடி நெய் பனாலு
படியும்மந்தாக் கினியிற் பாங்காய்
சாலவே மூன்று நாளெரித்து நாலா
நாளினிற்றான் வடித்து

மேலுரி வங்காளச்சீனியைக் கழஞ்சின்
அளவாய் விரலாற் கொள்ள
வாலை கர்ப்பமாம் புளிகைப் பதுவாகா
மதுராகார மதாம் வாகாய் 22

பாலுளுந்து பயறு நெய்யாம் பத்தியமஞ்
சிட்டிநெய்தான் பற்றாதாகின்
மேலுமிந்தப் படிவைத்து மூன்று மண்ட
லம்புருடன் விரும்பியுண்டால்
வாலமடந் தையர்க்கிடப மாயிருப்பன்
மண்டலமூன் றுளவா மட்டும்
மாலுடனோர் மங்கையரை மருவலா
காதுமனை யவட்கு நெய்யை 23

இன்பமுடன் பகிர்ந்தளித்து யிருவரும்
பத்தியமாக விருக்கவேணும்
அன்புடனே சிகித்ஸைமுகிந் தாநாளிற்
கூடியனு பவித்திருந்தால்
மன்பதையோர் தாமகிழ மைந்தருண்டா
மென்றுசர பேந்திரமன்னர்
தன்பரிவி னாலுரைத்துத் தருமுறைகள்
கற்பவர்நற் றமிழாய்ந்தாரே. 24

| | | |
|---|---|---|
| (இ-ள்) | மஞ்சிட்டி | கடுக்காய் |
| | நெல்லிக்காய்த்தோல் | தான்றிக்காய்த்தோல் |
| | கீழாநெல்லி | மஞ்சள் |
| | நீர்வள்ளிக்கிழங்கு | (தண்ணீர்விட்டான் கிழங்கு) |
| | மரமஞ்சள் | ஓமம் |
| | தேட்கடைப்பூண்டு | திருநாமப் பாலை வேர் |
| | அமுக்கிறாக்கிழங்கு | கரிப்பாலைவேர் |
| | நன்னாரி வேர் | கடுகுரோகிணி |

குறிப்பு: 91 நெ. சுவடியில் "பெருங்காயமும்" சேர்க்கப்பட்டிருக்கிறது. வள்ளிக்கிழங்குக்குப் பின்பு "வள்ளி" என்பது "நீர்வெள்ளி" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இவைகளை வகைக்கு 2¼ வராகனெடை யெடுத்துப் பசுவின் பால் விட்டு நன்றாக அரைத்து

| | |
|---|---|
| நெய் | 1 படி |
| பசுவின் பால் | 4 படியும் |

கூட்டி எல்லாவற்றையும் ஒன்று கலந்து அடுப்பின் மீதேற்றி மந்தாக்கினியினால் 3 நாள் எரித்து நான்காவது நாளன்று பதத்தில் வடித்தெடுத்து, அதனுடன் ½ படி சீனியைப் பொடித்துக் குழப்பித் தினந்தோறும் 1 கழஞ்சளவு இந்நெய்யை உட்கொள்ளவும். ஸ்திரீ கர்ப்பமாவாள்.

பத்தியம்:

புளி, கசப்பு முதலான சுவையுள்ள பண்டங்களை நீக்கித் தித்திப்புப் பதார்த்தங்களைச் சாப்பிடவும். பால் உளுந்து பயறு, நெய் முதலியவைகளைத் தாராளமாக உபயோகிக்கவும். இதனால் கர்ப்பமுண்டாகாமற் போனால், இந்த நெய்யைப் புருடனும் 3 மண்டலம் சாப்பிட்டால் தாது புஷ்டி உண்டாகும். ஆனால் அம்மூன்று மண்டலங்கள் வரைச் சேர்க்கை கூடாது.

இதை ஸ்திரீயும், புருடனும் சாப்பிட்டு இருவரும் பத்தியமாக இருந்து சிகித்சை முடிந்தபின் சேரப் புத்திரப்பேறு உண்டாகும்.

தேட்கடை - இது ஒரு பூண்டு இனம்

## 20. பிள்ளை உண்டாக மருந்து

**( மஞ்சிட்டி நெய் - வேறு)**

கூறியமண் டலமூன்று கொண்டுமது
ராகாரங் கொளக்கருப்ப
மேறிடும்வி ருத்தியதா மின்னமொரு
விதமஞ்சிட் டிக்கிழங்குந்

தேறிங்கு மரமஞ்சள் தேள்கடை
யமுக்கிரா திருமப்பாலை
மாறில்வேர் கடுகுரோகிணிகீழ்காய்
நெல்லி நீர் வள்ளிமேதை. 25

வெள்ளிதாந் திரிபலை வங்காளசர்க்
கரையோடதி மதுரமோம
மொள்ளியமஞ் சளுமிதெல்லா மோரிரண்டே
காலாங்கா சிடைபாலுய்த்து
மெள்ளவே தானரைத்து நெய்நானாழி
பானாழி விட்டுமூன்று
நள்ளிர வும்பகலும் கொதியிட்டுச்
செப்புப்பாத் திரத்தினாலாம். 26

நல்லதனில் வடித்துநெய் யிருந்தகல
சத்திலதை நன்றாயூற்றி
யானதுட னடியவளு மண்டலமுன்
றருந்துமட்டும் அணைந்திடாமல்
வெளிரதியும் போற்குண மேவியிடின்
மெல்லியர்க்குக் கருப்பமெய்துங்
காளைபோ லேபுருடன் சரீரபுட்
டியாமதுரா காரங்கொள்ளே. 27

நாலாநாள் முழுகிநெய்யு நல்லெண்ணெய்
நற்கருப்புக் கட்டி நன்றாய்ச்
சாலவேசா ரித்துதன் கையிலதை
னையெடுத்துத் தகுநாண்(ன்) மூன்றுங்
காலமே பகவானை தண்டனிட்டம்
மருந்தருந்திக் கங்குற் போதில்
வாலிபமாம் புருடனுடன் வந்தணைசெய்
யப்பத்தியம் வண்பாற்சோறே. 28

(இ-ள்) மேற்படி மருந்தை 3 மண்டலம் (135 நாட்கள்) உட்கொண்டு மதுர ஆகாராதிகள் உட்கொள்ளக் கர்ப்பமும் விருத்தியாகும்.

இன்னொரு நெய்

| | |
|---|---|
| மஞ்சிட்டிக்கிழங்கு | பெருங்காயம் |
| மரமஞ்சள் | தேட்கடை |
| அமுக்கிராக்கிழங்கு | திருநாமப் பாலை |
| கடுகுரோகிணி | கீழாநெல்லி |
| நீர் வெள்ளி (தண்ணீர் விட்டான் கிழங்கு) | |
| மேதை (பொற்றலை கையாந்தகரை) | |
| கடுக்காய் | நெல்லிக்காய் |
| தான்றிக்காய் | வங்காளச் சர்க்கரை |
| ஓமம் | அதிமதுரம் |
| மஞ்சள் | |

மேல்சொன்ன மருந்துகளை வகைக்கு 2¼ காசிடை எடுத்துப் பால் விட்டு நன்றாக அரைத்து

| | |
|---|---|
| பசு நெய் | 4 நாழி |
| பசும்பால் | ஒரு நாழியும் சேர்த்து |

செப்புப் பாத்திரத்தில் எல்லாவற்றையும் ஒன்று கலந்து அடுப்பின் மேலேற்றி 3 நாள் இரவும் பகலும் கொதிக்கவைத்துப் பக்குவமாக வடித்துக்கொண்டு பின்பு நெய் பூசிய கலசத்தில் பத்திரப்படுத்தி 3 மண்டலம் காலையும், மாலையும் தேக்கரண்டியளவு பசும்பாலில் சாப்பிடவும்.

பத்தியம்:

ஸ்திரீ போகம் கூடாது. இனிப்பு வகை ஆகாராதிகளைச் சாப்பிடவும். இந்த மருந்தினால் ஸ்திரீகளுக்குக் கர்ப்பமும், புருஷனுக்கு வீரிய விருத்தி.யும், புஷ்டியும் உண்டாகும்.

பிள்ளையுண்டாக வேறு மருந்து

தீட்டாகி ஸ்நானம் செய்த தினத்திலிருந்து காலையில் நெய்யும், நல்லெண்ணெயும் சேர்த்துக் கருப்புக்கட்டி (பனை

வெல்லம்)யும் சிறிது கூட்டிக் கையில் குழைத்துப் பகவானை ஸ்மரித்துச் சாப்பிட்டுவந்து இரவில் புருடனைக் கூடினால் குழந்தை உண்டாகும். இவ்வாறு மூன்று நாள் சாப்பிடவும்.

**பத்தியம்**:

பால் சாதம் சாப்பிடவும்.

### 21. பிள்ளை உண்டாக மருந்து

மங்களவா ரத்தினன்று மகிழ்ந்தெடுத்த
வைவிரலி மகிமைவித்தை
யங்கிதமாம் பசுவின் வெண்ணெ யால்விரையைந்
தரைத்துத்தீட் டாநாடொட்டே
யிங்கிதமாய் மூன்றுநா ளினிதருந்த
வேந்திழையார்க் கெச்சமுண்டாஞ்
சங்கரனா ரருளாலென் றெங்கள்சர
பேந்திரனார் சாற்றினாரே. 29

(இ-ள்) செவ்வாய்க்கிழமையன்று ஐந்து ஐவிரலி விதையைப் (சிவலிங்க விதையை) பறித்து வைத்துக் கொண்டு அவைகளை வெண்ணெயோடு கூட்டி இழைத்துத் தீட்டு நாள் முதல் மூன்று நாளும் அந்த வெண்ணெயைச் சாப்பிட ஸ்திரீ கர்ப்பமாவாள்

### 22. பிள்ளையுண்டாக மருந்து

கொட்டைப்பா சியையுலர்த்திப் பொடிசெய்து
நாலாநாட் குணவானினிபால்
விட்டுணவுங் கருப்பமுண்டாம் மெல்லியர்க்கென்
றேபொன்னி வியன் சோனாடத்
திட்டமுட னேயாளு மெங்கள்சர
பேந்திரனா ரியல்பதாகக்
கட்டளைசெ யிம்முறைகள் கைகண்டோர்
மெய்கண்ட கருணையோரே. 30

(இ-ள்) கொட்டைப்பாசியைத் தூசி நீக்கி வெய்யிலில் உணர்த்திப் பொடி செய்து, தீட்டாகிய நாளன்று பசுவின் பாலில் போட்டுச் சாப்பிடக் கர்ப்பம் தரிக்கும்.

### 23. பிள்ளையுண்டாக மருந்து

இந்துப்புங் காசுக்கட் டிடயினுடனே
பூவரசம் பட்டையும்மூன்
றுந்தப்பா தேதன்னி லொக்கக்கொண்
டேமுழுகுமோர் நாலாம் நாள்
வந்தவுடனே முழுகி யந்திசந்தி
நாலுநாள் மருந்தையுண்ணச்
சந்ததியுண் டாமென்று சரபமகி
பதியுரைத் ததந்திதாமே. 31

(இ-ள்) இந்துப்பு, காசுக்கட்டி, பூவரசம்பட்டை இம்மூன்றையும் எடுத்துத் தண்ணீர் விட்டு நன்றாக அரைத்து முழுகிய நாலாந் தினம்முதல், காலையும், மாலையும் நான்கு நாள் இம்மருந்தைச் சாப்பிட்டுவரக் கர்ப்பம் உண்டாகும்.

### 24. மலடிகளுக்குப் பிள்ளையுண்டாக மருந்து

முத்தெருக்கஞ் செவிப்பூண்டு பசுவின்பா
லினிற்றுவைத்து முறுக்குஞ்சாற
துய்த்துவரைப் படியுடனே பசுவின்நெய்
யரைப்படியு மொன்றாய்ச்சேர்த்து
வைத்துமதி மதுரஞ்சந் சனமேலஞ்
சீரகமும் வகையொன்றுக்கே
யொத்தபடிக் கல்லிட்ட பலமொன்ற
தூட்டியரைத் துடனிறுத்தே 32

நாலாநாள் முதற்கொண்டு கொடுத்துவர
மலட்டுப்பூச் சியுமேதைந்து
சூலாகாமற் றடுத்ததோட் தாற்றுடித்
துநலிவிழுந் தோகைக்கென்றே
மாலாகு மலடகலும் மைந்தருண்டா
மென்றுசர பேந்திரமன்னர்
நாலாயுண் முறையுணர்ந்தின் னுணுக்கமுரைத்
தாரிதனை நுவலுவீரே. 33

(இ-ள்) முத்தெருக்கஞ் செவிப் பூண்டைப் பசுவின் பால் விட்டு அரைத்து அதன் சாறு ½ படி

பசு நெய் ½ படி

இவற்றை ஒன்று சேர்த்து

| | |
|---|---|
| அதிமதுரம் | சந்தனம் |
| ஏலக்காய் | சீரகம் |

இவைகள் வகைக்கு 1 பலம்

நிறுத்து எடுத்துப் பசுவின் பால் விட்டு மறுபடியும் அரைத்துச் சாறு கூட்டிய நெய்யில் குழப்பி அடுப்பிலேற்றிப் பக்குவமாய் எரித்தெடுக்கவும்.

இந்நெய்யைக் குளித்த நாலாவது நாள் முதல் கொடுத்துவர மலட்டுப் பூச்சிக் கொல்லப்பட்டு மலடு நிவர்த்தியாகும். (குழந்தைகளும் உண்டாகும்.)

## 25. பிள்ளையுண்டாகப் புழு விழ மருந்து

விசுவசித்து நிலத்தாழ வேரரைத்துப்
பால்கரைத்ததனை விரும்பியுண்டு
வசமிகுந்த நாயகனை மருவியனு
பவிக்கவுண்டா மைந்தரென்றே

யிசைமிகுந்த சரபேந்திர ரெடுத்திசைத்த
விம்முறையை யியல்பாய்த் தெற்குத்
திசையினுத்த மமான சோணாட்டு
நாவலர்கள் செப்புவாரே. 34

(இ-ள்) வேங்கை வேர் (1 கழஞ்சு
நிலப்பனைக்கிழங்கு (1 கழஞ்சு)

இவ்விரண்டையும் பால் (1/4 சேர்) விட்டு நன்றாக அரைத்துச் சாப்பிட்டுக் கணவனோடு சேரக் குழந்தைகள் உண்டாகும்.

## 26. மஞ்சிட்டி நெய்
## (சூடு தணியக் கர்ப்பமுண்டாக மருந்து)

மஞ்சிட்டி கடுகரோகிணியுளுந்து
தகரமதி மதுரங் கோட்டம்
நைஞ்சகொடி முந்திரிகைப் பழம்பேரீச்
சம்பழநன் னாரிவேரும்
மஞ்சள்மர மஞ்சள்பூச் சர்க்கரைப்
முக்கிராவ சமபோடிங்கும்
விஞ்கசருக் கரையோமந் திரிபலைநீர்
முக்கிராவ கம்போடிங்கும்
விஞ்சுசருக் கரையோமந் திரிபலைநீர்
வள்ளிவெண்சீ ரகம்வெட்பாலை 35

விதமொன்றுக் கோர்கழஞ்சு விதித்துப்பால்
விட்டரைத்து விடுபானாற்கே
ரிதினுடனெய் யிரண்டுசே ரெடுத்துவிட்டுக்
கலந்துபதத் தினிலிறுத்து
மதிகால மேகொள்ள யோனிசுக்கில
தோடம்தீட் டாகாததோடத்
யிதமாயித் தோடமெல்லாம் விட்டகலுங்
கருப்பமுண்டாம் விழுப்பாமே. 36

உண்மைக்கான் வாந்திவிக் கலுக்கிராச
னரிசிதன்னை யுரலிற்றீட்டிக் கொண்டு
வெண்மையா கக்கிளைந்து கஞ்சிகாய்ச்சி
மிகக்குளிர வாறவிட்டு விரும்பிவாங்கி
பெண்மையார் கண்ணியுண்ணப் பெலமுண்டாகு
பிராந்திவிக்கல் வாந்திசெய்யிற் பின்னுமிந்தத்
திண்மையா மரிசிதனைப் பொரிமாச்செய்து
சர்க்கரைமா துளம்பழத்திற் றினம் போம்நோயே.

| | | |
|---|---|---|
| (இ-ள்) | மஞ்சிட்டி | வெண்சீரகம் |
| | கடுகுரோகிணி | வெட்பாலை அரிசி |
| | உளுந்து | நன்னாரி வேர் |
| | கிரந்தி தகரம் | மஞ்சள் |
| | அதிமதுரம் | மரமஞ்சள் |
| | கோஷ்டம் | பூமிச்சர்க்கரைக்கிழங்கு |
| | முந்திரிகைப்பழம் | அமுக்கிராக்கிழங்கு |
| | பேரீச்சம்பழம் | வசம்பு |
| | கடுக்காய் | பெருங்காயம் |
| | நெல்லிக்காய் | ஓமம் |
| | தான்றிக்காய் | சர்க்கரை |
| | நீர்வள்ளிக்கிழங்கு | |

இவைகளை வகைக்கு ஒரு கழஞ்சு வீதம் எடுத்துப் பால் விட்டு நன்றாக அரைத்து

| | |
|---|---|
| பசும்பால் | 4 சேர் |
| நெய் | 2 சேரிலும் |

போட்டுக் குழப்பி, அடுப்பின்மேலேற்றிப் பக்குவமாக எரித்துப் பதத்தில் வடித்து வைத்துக்கொண்டு, தினந்தோறும் அதிகாலையில் உட்கொள்ள,

யோனி அல்லது சுக்ரதோஷம், தீட்டாகாத தோடம் இவைகள்அகன்று கர்ப்பமுண்டாகும்.

**வாந்தி விக்கலுக்கு**

ராசான் அரிசியை உரலிலிட்டு, நன்றாகத்தீட்டி வெண்மையாக்கிக் கஞ்சிசெய்து, குளிரும்படி நன்றாக ஆற வைத்து, வியாதியுள்ள ஸ்திரீயைச் சாப்பிடச் செய்யவும். பலம் உண்டாகும். மேலும் வாந்தி, பிராந்தி விக்கல் முதலியவை தீராவிடில்

ராசான் அரிசியைப் பொரித்து மாவாகச் செய்து சர்க்கரை கலந்து மாதுளம்பழச் சாற்றில் சாப்பிட அவை தீரும்.

### 27. மலட்டுப்புழு விழ மருந்து

பொன்னாவா ரையின்விரையைப் பொருந்தவரைத்
துண்மலட்டும் பூச்சிதானுந்
தன்னாற்போம் நுரும்புதல்வர் தையல்விழுப்
பாமூன்ற தாந்தினத்தின்
மின்னார்மஞ் சளையரைத்துப் புதுக்குடத்திற்
கரைத்ததனை விரைந்தெடுத்தே
நன்னீராட் டினவுடனே முடக்கத்தான்
றுவைத்திறுத்த நற்சாரத்தே. 38

சாரமுழக் கதிலெண்ணெய் தானுழக்குச்
சாரித்துத் தாராவியுண்ண
வீரமுட னேபிள்ளை மேவிவரு
மென்னர்கள் மேற்செவ்வாயின்
வாரமதி லைவரலிக் காய்விரையைத்
தான்வெண்ணெய் மடுத்தரைத்தே
நீரதனின் முழுகுமுன்ன மூன்றுநா
ளுண்கருப்ப நிலைக்குந்தானே. 39

(இ-ள்) (a) பொன்னாவாரை விரையைத் தண்ணீரில் அரைத்துச் சாப்பிட மலட்டுப் பூச்சி விழும்.

(b) ஒரு புதுக்குடத்திற்குள் மஞ்சளை அரைத்துத் தடவி அதில் தண்ணீர் விட்டுவைத்து, மாதவிடாயின் மூன்றாந் தினத்தன்று இம்மஞ்சட் தண்ணீரினால் ஸ்நானம் செய்விக்கவும். பின்பு தலை துவட்டுவதற்குமுன்

| | |
|---|---|
| முடக்கொத்தான் சாறு | 1 உழக்கு |
| நல்லெண்ணெய் | 1 உழக்கு |

இவ்விரண்டையும் குலுக்கிச் சாப்பிட அந்த ஸ்திரீக்குக் குழந்தை உண்டாகும்.

(c) 1 செவ்வாய்க்கிழமையன்று ஐவிரலிக்காயின் விதையை வெண்ணெயுடனே அரைத்துத் தீட்டுவந்த நாள் முதல் 3 நாள் சாப்பிட்டுவரக் கர்ப்பம் நிலைக்கும்.

## 4. கர்ப்பம் தரித்தபின் ஏற்படும் வியாதிகளுக்கு மருந்துகள்

### 28. இடுப்பு நோவுக்கு மருந்து

அரைப்படி கருங்குருவை யரிசிமா
வதிலேமுத் தருக்கும்வேரை
நறுக்கியரைத் துக்கலந்து களிக்கிளறிப்
பனைவெல்ல நறுநெய்யிட்டு
தருக்கியுண்ண விடுப்புவலி தவிருமெனச்
சரபேந்திர சதுரர்சொன்ன
வருக்கமுறை யுணர்ந்தவரே வயித்தியரின்
முக்கியரென மதிப்பர்தாமே. 40

(இ-ள்) கருங்குருவை அரிசி மாவு 1/2 படியுடன் முத்தெருக்கம் வேர்தனை (ஒரு விளாங்காயளவு) யெடுத்து

குறிப்பு: இம்மருந்து ஏற்கனவே 21 நெ. முறையில் கூறப்பட்டிருப்பினும் இதனால் ஏற்பட்ட கர்ப்பம் சிதைவின்றி நிலைப்பதற்காக இங்கு கூறப்பட்டிருக்கிறது போலும்.

நன்றாகத் துண்டு துண்டாக நறுக்கிச் சேர்த்து அடுப்பின் மேலேற்றித் தண்ணீர் விட்டுக் களியாகக் கிளறிப் பனை வெல்லமும் (1 விளாங்காய் பிரமாணம்) சுத்தமான புத்துருக்கு நெய்யும் விட்டுச் சாப்பிட இடுப்பு வலி சாந்தப்படும்.

## 29. கெர்ப்பிணி வாதத்திற்கு மருந்து

சீரகந்திப் பிலிபொடித்து வெல்லத்தி
னாதல்செழுந் தேனினாதல்
லோருள்ளங் கைகொண்ட துண்டிடக்
கெற்பிணி வாதமுடனேதீரு
மாரணங்குக் காரோக்கிய மப்பொழுதே
யாமென்ன வளகைவாழு
மோரருஞ் சரபேந்திர னிவ்வுலகோ
ருக்கிதமா யியம்பினாரே. 41

(இ-ள்) நற்சீரகம், அரிசித்திப்பிலி இரண்டையும் சம எடை பொடித்து வெல்லத்திலோ அல்லது நல்ல தேனிலோ கலந்து ஒரு உள்ளங்கை கொண்ட அளவு சாப்பிடக் கர்ப்பிணி வாதம் உடனே தீரும். ஸ்திரீக்கும் ஆரோக்கியமுண்டாகும்.

## 30. கெற்ப விப்புருதிக்கு மருந்து

வெள்ளைவெங் காயத்தோ லைவிடுத்த
பருப்பதுநாழி மிளகுநாழி
யுள்ளபடி சதுரக்கள் ளிப்பாலை
யூற்றியரைத் தொருநாள்மட்டு

மெள்ளிலவே யிலிடைவைத் தெடுத்திருசே
ரிளங்கொதிகொ ளெழிலாநெய்யி
லள்ளியிடச் சிறுதேக்குஞ் சுத்திசெய்வா
ளப்பருப்போ டரத்தையாமே. 42

ஆமேகெந் தகமுடனால் வகைவகைக்
கோர்பலம தாகச் செய்து
தாமதமில் லாமலுள்ளித் தைலத்தி
லிட்ட தனைத் தகும்பதத்தில்
நேமமுடன் வடித்தெடுத்து நிதமுமிரு
காசிடையந் நெய்யிற் கொடுக்க
மாமயிற்கு வருங்கருப் பவிப்புருதி
யுதரநோய் வாங்கிப்போமே. 43

| | | |
|---|---|---|
| (இ-ள்) | தோல் நீக்கிய வெள்ளை வெங்காயப் பருப்பு | 1 நாழி |
| | மிளகு | 1 நாழி |

இவ்விரண்டையும் சதுரக்கள்ளிப்பால் (கிடைத்த அளவு) விட்டு நன்றாக 1 நாள் முழுவதும் கையோயாமலரைத்து இளவெயிலில் காயவைக்கவும். பின்பு இதை 2 சேர் சுத்தமான பசுவின் நெய்யில் குழப்பி அடுப்பிலேற்றிச் சிறிது சூடு கொடுத்து இளங் கொதிவரச் செய்யவும். இதனுடன்,

| | |
|---|---|
| சிறுதேக்கு | 1 பலம் |
| சிற்றரத்தை | 1 பலம் |
| சுத்திசெய்த நேர்வாளம் | 1 பலம் |
| சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம் | 1 பலம் |

இவற்றை நன்றாகச் சூரணித்து மேற்சொல்லிய 1 உள்ளித் தைலத்திலிட்டுக் குழப்பித் தக்க பக்குவத்தில் நெய்யை வடிக்கவும். இந்த நெய்யில் தினமும் இரு காசிடை கொடுத்துவர ஸ்திரீகளுக்கு வரும் கர்ப்ப விப்புருதி, வயிற்று நோய் இவைகள் தீரும்.

1. உள்ளித்தைலம் - உள்ளிகூட்டிய நெய்.

குறிப்பு:

## கெர்ப்ப விப்புருதிக் குறிகுணம்

கூறிடவே விப்புருதிதானுங் கருதுபோல் வயிற்றிலே
சூதங்காட்டும்
மாறவே தலைவலிக்கும். வீட்டுப்பக்கம் வயிற்றுவலி
யிருதுடையுமுளைக்குமேதான்
சீறவே புழுத்திரண்டு மலமிருக்கும் சிசுகெர்ப்பந்
தரியாது உடலுளைக்கும்
ஆறவே யிக்குணங்கள் தானறிந்து அப்பனே மருந்
துண்ணச் சித்தியாமே.

(இ-ள்.) வயிற்றில் சூதகக்கட்டுடன் வலி உண்டாகும். தலை வலிக்கும். மாதவிடாய் உண்டானால் வயிற்று வலி நீங்கும். இரு துடைகளிலும் குடைச்சல் வலி காணும். மலம் இறுகித் திரண்டு புழுக்கை போலாகும். கருத்தரியாது. உடல் இளைக்கும். இக்குணங்களைக் கொண்டு "கெர்ப்ப விப்புருதி" என்று அறியவும்,

## 31. கெர்ப்ப விப்புருதிக்கு மருந்து

பசுவின்பா லிரண்டுபொங்க லானவுடன்
வெள்ளுள்ளிப் பருந்தோனீக்கி
யிசையவொரு சிரங்கையிட்டுத் துழாவியே
காய்ச்சியபி னிறக்கிவைத்து
நசையான பனைவெல்லந் தொட்டந்தப்
பாலுண்ண நற்பரற் கஞ்சி
பொசித்திடவே கருப்பத்தின் விப்புருதி
போங்கைப்புப் புளிப்புநீக்கே. 44

(இ-ள்) நல்ல பசுவின் பாலை ஜலம் விடாமல் அடுப்பிலேற்றி எரித்து, அது 2 தடவை பொங்கி அடங்கியவுடன், உள்ளிப்பூண்டுப் பருப்பை நன்றாகத் தோல் நீக்கி 1 சிரங்கை அந்த கொதிக்கும் பாலிலே போட்டுத் துழாவி, காய்ந்த பின்பு இறக்கிவிடவும். பின்பு

பனை வெல்லத்தோடு உள்ளிப் பருப்பையும், பாலையும் பருகவும். அப்பால், பால் கஞ்சி சாப்பிடவும். கர்ப்ப விப்புருதி தீரும்.

**பத்தியம்:**

புளிப்பு, கைப்புச் சுவையுள்ள பதார்த்தங்களைத் தள்ளவும்.

## 32. திங்களொன்றுமுதல் ஐந்து திங்கள் வரையிலும் உபயோகிப்பதற்கான மருந்து முறைகள்

திங்களொன்றி னின்வயிறு நொந்துவே
தனைசெயிற் செயுமருந்து
தங்குதாசுப் பூவுஞ்சந் தனமுமலை
யெலுமிச்சம் வேரதானு
மங்குநீரீ வார்த்தரைத் துப்பசுவின்
பாலிற்கலந் தருந்தச் செய்து
மிங்கிதவெந் திரத்தைந்து ஈகார
மெழுதிக்கட் டியல்பதாமே. 45

இரண்டுதிங் களில்வயிறு நொந்துவே
தனையானா லிடுமருந்து
தெருண்டதா மரைப்பூவு மாம்பலுங்கொட்
டிக்கிழங்குஞ் சிவந்தமேனி
பொருந்திந்திர கோபமெனும் பூச்சியும்நீர்
வார்த்தரைத்துப் புகரான்பாலி
வருந்திடச்செய் தெந்திரத்[1]தி றியைந்தெழுதிக்
கட்டநல்லார்க் கரும்பேறாமே. 46

மூன்றாந்திங் கள்வயிறு நொந்துவே
தனையானான் மொழிமருந்து
தோன்றியசந் தனமிலாமிச் சவேருந்
தோய்த்து டனரைத்தே

---

1. திறி - ஸ்ரீ

இயன்றுபசு வின்பாலி லிட்டருந்தி
யெந்திரத்திறி யெழுதித்ஷெவு
மூன்றெழுதிக் கட்டிடவு மெய்குழற்குக்
கருப்புநல் மொழியலாமே. 47

நாலாந்திங் களில்வயிறு நன்முதுகு
நலிந்துசலங் கருத்துநண்ணின்
னாலதற்கு மருந்துநெய் தற்கிழங்கு
நெருஞ்சியின்வே ருநன்கரைத்தான்
பாலதனிற் கொடுத்தெந்திர பத்திரியிற்
ஸபஸப 8 பவஷவென்ன
நூலதனிற் கோர்த்திடவு நுடங்கிடையார்க்
குக்கருப்ப நுவலலாமே. 48

ஐந்தாகுந் திங்களிலுள் ளபடிபற்றி
வயிறுநொந்தா லாம்பற்பூவுஞ்
சந்தனமுந் தண்ணீரிற் றானரைத்துப்
பசுவின்பா றனிற்கொடுத்து
மெத்திரத்தோ மென்றெழுதி யேந்திழையர்க்
கியற்பாக விட்டபோதே
மைந்தர்விருத் தியாமெனவு மன்னர்சர
பேந்திரனார் வகுத்தவாறே. 49

(இ-ள்) **முதல் மாதம் வயிறு வலித்து வேதனை செய்தால்!** மருதோன்றிப் புஷ்பம், சந்தனத்தூள், மலை எலுமிச்சை வேர் இம்மூன்றையும் தண்ணீர் விட்டு நன்றாக அரைத்துப் பசுவின் பாலில் கலந்து உள்ளுக்குக் கொடுக்கவும். ஒரு யந்திரத்தில் (செப்புத்தகட்டில் 5 ஈ காரம் எழுதிக் கட்டவும். "ஈ ஈ ஈ ஈ ஈ")

**ஸ்ரீ இரண்டாவது மாதத்தில் வயிறு வலித்து வேதனை செய்தால்**: தாமரைப்பூ, ஆம்பல் புஷ்பம்,

கொட்டிக்கிழங்கு சிவப்பு நிறமுள்ளவையான இந்திரகோபப் பூச்சி இவற்றைத் தண்ணீர் விட்டு அரைத்துப் பசுவின் பாலில் கலந்து சாப்பிடவும். இதற்கு யந்திரம் "ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ " என எழுதிக் கட்டவும். (இந்திர கோபம் - தம்பலப்பூச்சி, நமனார் தம்பலம்)

**மூன்றாவது மாதத்தில் வயிறு நொந்து வலித்தால்:** அதற்குச் சந்தனத்தூள், விளாமிச்சம் வேர் இவ்விரண்டையும் தண்ணீர் விட்டரைத்துப் பசுவின் பாலில் குழப்பி அருந்தவும். இதற்கு யந்திரம்: ஸ்ரீ, ஸ்ரீ, ஷெ, ஷெ, ஷெ"என எழுதிக்கட்டவும்.

**நான்காவது மாதத்தில் வயிறு நொந்து வலித்தாலதற்கும் முதுகுவலி, சிறுநீர் கருமையாதல் முதலியவற்றிற்கும் மருந்து:**

நெய்தல் கிழங்கு, நெருஞ்சிவேர் இவ்விரண்டையும் தண்ணீரிலரைத்துப் பசுவின் பாலில் கொடுக்கவும்.

**இதற்குயந்திரம்** : "ஸ ப ஸ ப ப வ ஷ' என எழுதிக் கட்டவும்.

**ஐந்தாவது மாதத்தில் வயிறு வலித்தால் அதற்கு மருந்து:** ஆம்பல் பூவையும், சந்தனத்தையும் தண்ணீரில் அரைத்துப் பசுவின் பாலில் குழப்பிக் கொடுக்கவும்.

**இதற்கு யந்திரம்**: "ஓ0, ஓ0, ஓ0, ஓ0. ஓ0" என்று எழுதிக் கட்டவும்.

**யந்திரம் செய்முறை:**

செப்புத் தகட்டில் (2"X1") எழுத்தாணியால் வேண்டிய எழுத்துக்களை எழுதிக்கொண்டு அதை ஒரே சீராகச் சுருட்டி வெள்ளித் தாழ்த்துக்குள் போடவும். சிறிது குங்குமத்தைச் சேர்த்துத் தாழ்த்தை மூடிவிட்டு, அதற்குத்தீப தூபங்கள் காட்டிப் பின்பு தரித்துக் கொள்ளச் செய்யவும்.

## 33. நாலுமாத மாறுமாத வரைக்கும் மருந்து

நாலுமாதம் மாறுமாத மும்பற்றி
போருக்கு நன்மருந்து
சாலபுங்கும் வேர்கொழுந்து சங்கத்தாரி
யின்வேருந் தளிர்க்கொழுந்து
மேலு[1] மாடா தொடைவேர் குழைகான
மல்லிகைவேர் மென்கொழுந்தோ
டேலும்பா வட்டைவேர் கொழுத்துவரப்
பூலாவே ரிதின்கொழுந்தே. 50

இத்தனையுந் தன்னிலொக்கக் கூட்டியரைத்
துரியெண்ணெ யினிற்கலந்து
வைத்துச்சூ ரியபுடமா கக்கோலாற்
கலக்குமாற் றிரைதெளிந்தாற்
சத்தையில்லை பிள்ளை பெற்றார் சாங்கடிகை
தனிற்றெளிந்தாற் றனையை யுண்டாம்
முத்தவிடத் தேரிலைப்பட் டைவேப்பம்
பட்டையுள்ளி முதிர்வசம்பும் 51

உள்ளதிவை நான்கும்நீ ரூறவைத்தன்
னீர்புகட்ட வுறுநோய் தீரும்
பிள்ளை பெண்ணுந் தரிக்குமெனப் பிரதாப
சிம்மேந்திரன் பேரரான
வள்ளல்சர பேந்திரனார் வான்முறையை
வாஞ்சிப்போர் மான்மியமேவிந்
தெள்ளியராம் வைத்தியரிற் றிலகரெனத்
தமிழ்ப்புலவர் செப்புவாரே. 52

(இ-ள்) புங்கம்வேர், புங்கங்கொழுந்து, செங்கதாரி வேர், செங்கதாரிக்கொழுந்து, ஆடாதொடைவேர் ஆடாதொடைக் கொழுந்து, காட்டுமல்லிகை வேர், காட்டுமல்லிகைக் கொழுந்து,

---

1. 91 நெ. சுவடியில் ஆடாதொடைக்குப் பதில் ஆதண்டு காணப்படுகிது

பாவட்டை வேர், பாவட்டைக்கொழுந்து, வரப்பூலா வேர், வரப்பூலாக்கொழுந்து இவைகளை வகைக்கு ஒரு கொட்டைப்பாக்களவெடுத்து இச்சரக்குகள் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து நன்றாக அரைத்து 1/2 படி நல்லெண்ணெயில் குழப்பி வெய்யிலில் வைத்து கோலால் நன்றாகக் கிளரிவிடவும். அத்தைலம் உடனே தெளிந்தால் ஆண் பிள்ளை பிறக்கும். சாமநேரங் கழித்துத் தெளிந்தால் பெண் பிறக்கு ... ரியவும்.

விடத்தேரி இலை, அதன் பட்டை, வேப்பம்ப உள்ளிப்பூண்டு, வசம்பு இந்நான்கு சரக்குகளையும் ஒன்றிரண்டா இடித்துத் தண்ணீரில் ஊறவைத்து அந்தச் சீத கஷாயத்தைச் சாப்பிடப் பலவித நோய்கள் நீங்கிக் குழந்தையும் தரிக்கும்.

**குறிப்பு:**

மேலே கண்ட முறைக்குப் பொருள் சரியாக விளங்க வில்லை. கோலினால் கிளருவது கர்ப்பிணியா என்பது தெரியவில்லை. தெளிந்தால் பிள்ளை பிழைக்காது என்று செய்யுள் பொருள்படுகிறது. இதில் கொடுத்திருக்கும் உரை 91ம் நம்பர் சுவடியில் உள்ளது.

## 34. பிள்ளை பெறமாட்டாமல் மலசலமடைத்த பேருக்கு

வித்தாரக் குன்றியின்வே ரினையெடுத்து
நல்லதண்ணீர் விட்டரைத்தே
யொத்தவுள்ளங் கால்கைதனி லுரித்தாகத்
தடவிடவே யுடனேயந்த
முத்தநகை மாதாபிள்ளை பெறமாட்டா
தேவருத்து முதிரமலக்கட்
டத்துடனே சலக்கட்டு மகன்றுவிடு
மாரோக்கிய மாமவர்க்கே. 53

(இ-ள்) குன்றிமணி வேரையெடுத்துக் குளிர்ந்த ஜலம் விட்டு நன்கு சந்தனம் போல அரைத்து உள்ளங்கால், உள்ளங்கை முதலிய இடங்களில் தடவினால் கர்ப்பிணியைப் பிரசவிக்க முடியாமல் செய்யும் உதிரக்கட்டு மலக்கட்டு, சலக்கட்டு இவைகள் நீங்கிச் சுகமுண்டாகும்.

### 35. கெற்பத்தின் மேற்பெரும்பாட்டிற்கு மருந்து

அரசுபுளி யத்திநா வற்பட்டை
யாவார மடிவேர்ப்பட்டை
மருதொதியம் பட்டைநா வற்கொட்டை
நன்னாரி மயிர்மாணிக்கம்
கருவாழைக் கிழங்குடனே களீயீச்சம்
பட்டைகீழ் காயாநெல்லி
குரைமுடக்கொத் தானாட்டாங் கொடிநெய்தற்
கிழங்குட்கொங் குறுவேர்தண்டு 54

தண்டுடன்சீந் திற்றண்டு தானோரி தழ்த்
தாமரைமுத் தக்காசோங்கி
கொண்டதென னம்பாளைதா மரைச்சுருள்பொன்
னாங்கண்ணிக் குளிர்ந்தவேரு
மண்டருகம் பட்டைசிறுக் கீரையுட
னேயமுத வள்ளிவாகா
மொண்டருவி னிற்படருற் றொளிருமுசு
முசுக்கையிவை யுகந்தன்னாளே. 55

நாழிநெய்க்கு நானாழி நாவல்விரை
நிரைமருந்து நாவற்பட்டை
நாழிநெல்லி டைகூட்டி நன்கிடித்து
முக்குறுணி நந்நீர்காய்ச்சிச்
சேகரஞ்செய் திட்டருந்த வேயிருந்த
சீயுரத்தச் சிராவமென்னு
மாகுலந்தீர்ந் தாரோக்கிய மாமெனவே
சரபேந்திர ரருள்செய்தாரே. 56

(இ-ள்)

| | |
|---|---|
| அரசம்பட்டை | சீந்தில்தண்டு |
| புளியம்பட்டை | ஓரிலைத்தாமரை |
| அத்திப்பட்டை | கோரைக்கிழங்கு |
| நாவற்பட்டை | தென்னம்பாளை |
| ஆவாரம்வேர்ப்பட்டை | தாமரைச்சுருள் |
| மருதம்பட்டை | பொன்னாங்காணீவேர் |
| ஒதியம்பட்டை | அருகம்பட்டை |
| நாகக்கொட்டை | சிறுகீரை |
| நன்னாரிவேர் | அமுதவள்ளி |
| மயிர்மாணிக்கம் | முசுமுசுக்கை |
| கருவாழைக்கிழங்கு | களியீச்சம்பட்டை |
| கீழாநெல்லி | முடக்கொத்தான் |
| ஆட்டாங்கொடி | நெய்தல்கிழங்கு |
| குறுவேர் தண்டு | |

இச்சரக்குகளில் நாவல்கொட்டை - 4 நாழி நெல் எடை (24 பலம்) அரசம்பட்டை முதல் பாக்கி 26 சரக்குகளும் வகைக்கு - 1 நாழி நெல் எடை (6 பலம்) எடுத்து எல்லாவற்றையும் கல்லுரலிலிட்டு இடித்து இதனுடன் 8 மடங்கு ஜலம் விட்டு 3 குறுணியாகக் காய்ச்சி, பசு நெய் 1 நாழி கூடச்சேர்த்து அடுப்பின் மேல் ஏற்றிப் பக்குவமாக எரித்து இறக்கவும்.

(அடியிற்கண்ட கல்க சரக்குகளையும் கஷாயத்தில் 4-ல் ஒரு பங்கு இருக்கும்படிச் சேர்த்து கிருதம் செய்யும் படி 91 நெ. சுவடி 97-ம் பக்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

| | |
|---|---|
| அதிமதுரம் | மாதுளங்காய் |
| ஏலக்காய் | வட்டத்திருப்பி |
| முந்திரிகைப்பழம் | அசமதாகம் (ஓமம்) |
| பேரீச்சம்பழம் | மாவிதை |
| குடசப்பாலை | விளாப்பிஞ்சு |
| அருகம்பூ | கோஷ்டம் |
| நிலப்பனை | நாகப்பூ |

இதன் குணம்:

இந்நெய்யை (1 காசிடை வீதம்) தினம் இருவேளை அருந்திவர இரத்தச்சிராவம் நீங்கிக் கெர்ப்பிணிக்குச் சௌக்கியமுண்டாகும்.

## 36. கெற்பிணிக்குச் சுரம், வீக்கம் கண்டு, மலசல மடைந்தால் அதற்குக் கஷாயம்

கர்ப்பிணிமேற் சுரவீக்கங் கண்டுமல
சலமடைத்தாற் கடுக்காய்ப்பத்து
பருத்திடுநற் சிவதைவேர் கடுகுரோகி
ணியிதெல்லாம் பலமிரண்டு
மெரித்துவறுத் துப்பொடிசெய் திட்டிவையே
ராமுட்டி நொச்சில் வேருந்
திருத்துழா யொருபிடியுஞ் சிறுபூளைச்
சமூலமுமோர் சிரங்கைசேர்த்தே 57

சேர்த்துநறுக் கித்துவைத்து மிருபடிநீர்
விட்டுழக்காய் சிறுகக்காய்ச்சி
வார்த்திறுத்துக் கொண்டிதின்முன் வைத்தபொடி
வெருகடியின் மட்டேயிட்டுப்
போர்த்துமொரு மஞ்சாடி பொரித்திட்டியும்
மருந்திதனைப் பெண்கள்கூட்ட
வார்த்துவிரோ சனமாகும் வீக்கமும்வா
டும்மறுநா ளாநல்லெண்ணெய் 58

எள்ளினிலாம் நறுநெய்யி னிற்கரிப்பா
னுழக்குச்சா றிட்டதின்மேல்
மெள்ளமிள கொருபிடியு நுணுக்கியிட்டுக்
காய்ச்சிமேற் றடவிவெந்நீ

ருள்ளபடி யொருசாலும் வைத்துநீ
ராட்டிடவு முள்நோயெல்லாங்
கள்ளமற வெள்கிவிடும் வள்ளல்சர
பேந்திரன்கை கண்டவாறே. 59

| | | |
|---|---|---|
| (இ-ள்) | கொட்டை நீக்கிய கடுக்காய் | 10 பலம் |
| | சுத்திசெய்த சிவதை வேர் | 2 பலம் |
| | கடுகுரோகிணி | 2 பலம் |

இவைகளை நன்றாக வறுத்து இடித்து வஸ்திரகாயம் செய்துகொள்ளவும்.

| | |
|---|---|
| பேராமுட்டிவேர் | ஒரு பிடி |
| நொச்சி வேர் | ஒரு பிடி |
| துளசி வேர் | ஒரு பிடி |
| சிறுபூளைச் சமூலம் | ஒரு சிரங்கை |

இவைகளை நன்றாக அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காக வற்றக்காய்ச்சி, இந்தக் கஷாயத்துடன் மேற்படி சூரணத்தில் ஒரு வெருகடி சூரணம் எடுத்துப் போட்டு பொரித்த வெங்காரப்பொடி ஒரு மஞ்சாடி (2 குன்றுமணி) கூடப்போட்டு வியாதியுள்ள ஸ்திரீக்குப் பருகக்கொடுக்க நன்றாக விரேசனமாகி வீக்கமும் மாறும். மறுதினம்,

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | 1 உழக்கு |
| கரிசலாங்கண்ணிச்சாறு | 1 உழக்கு |
| நுணுக்கிய மிளகு | 1 பிடி |

இவைகளைப் போட்டு அடுப்பின் மேலேற்றிப் பதமாகக் காய்ச்சி யிறக்கிக்கொண்டு இதை உடம்பில் தேய்த்துக் கொண்டு நோயுள்ள ஸ்திரீ வெந்நீரில் நன்றாக ஸ்நானம் செய்யப்பல வகைப்பட்ட நோய்களும் தீரும். கைகண்டது.

## 37. கெர்ப்பத்தின் மேற் பெரும்பாட்டுக்கு மருந்து

சந்தனப்பூ சினிக்காய்நீர் தண்ணீர்விட்
டானுடன்கற் றாழஞ்சாறு
முந்திரிகைப் பழங்கோட்டங் கருப்பஞ்சா
றதிமதுர முதிர்நெல்லிக்காய்
நைந்தபேரீச் சம்பழநற் சீந்திற்கொ
டிச்சாறும் நன்றாய்க்கூட்டி
யிந்தமுறை தனினாழி நெய்க்காவின்
பானாழி யிடுமின்னெய்யில் 60

இட்டமாஞ் சீனிசர்க் கரைகலந்து
கருப்பிணியின் னெய்யையுண்ணக்
கட்டமாம் பெரும்பாட்டுக் கடுப்பிணிதீர்ந்
தாயிழைக்குக் களைப்புநீங்கும்
வட்டவா ரிதிசூழ்ந்த மானிலத்திற்
சொணாட்டு மாந்தர்க்கெல்லாங்
கட்டளையா மிம்முறையைக் கற்றவர்நற்
றவமிகுந்த காட்சியோரே. 61

| | | |
|---|---|---|
| (இ-ள்) | சந்தனத்தூள் | திராக்ஷைப்பழம் |
| | கோஷ்டம் | அதிமதுரம் |
| | முற்றிய நெல்லிக்காய் | நல்ல பேரீச்சம்பழம் |

இவைகளை வகைக்கு 3/4 தோலா வீதம் எடுத்துப்

பூசணிக்காய்ச்சாறு
தண்ணீர்விட்டான் கிழங்கின் சாறு
கற்றாழைச்சாறு
கருப்பஞ்சாறு
சீந்திற்கொடிச்சாறு

இவைகளை வகைக்கு 1 நாழி எடுத்துக்கொண்டு கல்கத்ரவ்யங்களை மேற்படி சாற்றினால் நன்றாக அரைத்துக் கொண்டு, சாறுகளுடன் குழப்பிப்

பசுவின் நெய் 1 நாழியும்
பசுவின் பால் 1 நாழியும் விட்டு

அடுப்பின் மீதேற்றிப் பதத்தில் நெய்யை வடித்து வைத்துக்கொள்ளவும். பின்பு, இதனுடன் சர்க்கரை சேர்த்துத் தினந்தோறும் கெர்ப்பிணி சாப்பிட்டு வரப் பெரும்பாட்டினாலுண்டாகும் வலி நீங்கி, களைப்பும் நீங்கும்.

சாப்பிடும் அளவு: வேளைக்கு ஒரு தோலா வீதம் இருவேளை சாப்பிடவும்.

### 38. பெண்கள் கெற்பசுரத்திற்கு மருந்து

பத்துக்கா சிடைபாலிற் சீந்திலிட்டுக்
காய்ச்சியதைப் பாகமாகச் சம
சுத்ததே னிற்கொடுக்கக் கெர்ப்பசன்னி
சுரந்தோடந் துலைந்துபோமென்
றுத்தமனார் சரபேந்திரர் வைத்தமுறை
யிவைதன்னை யுண்மையாகப்
புத்தியுள வைத்தியர்க ளித்திரஞ்செய்
தாலின்னோய் போகுந்தானே. 62

(இ-ள்) பசுவின் பாலில் 10 காசெடை சீந்தில் கொடியைச் சிதைத்துப் போட்டுப் பாகமாகக் காய்ச்சிச் சம அளவு தேனில் கொடுக்கக் கெர்ப்ப சன்னி, சுரம், தோஷம் முதலியவைகள் குணமாகும்.

### 39. கெற்பிணிக்கு ஜ்வர வீக்கங் கண்டால் கஷாயம்

வெள்ளைச்சா றணைமூலஞ் சுக்கோடி
ரண்டினையு மேகஷாயங்
கொள்ளத்தா னெய்யுடனே வெல்லமுங்கூ
டக்கலந்து கொடுக்கவேதான்

வள்ளைக்கா தரிவையர்கள் கர்ப்பகா
லத்தில்வந்து வலிசெய்விக்க
மெள்ளத்தா னழுவுமெனச் சரபேந்திர
வித்தகனார் விளம்பினாரே. 63

(இ-ள்) வெள்ளைச் சாறணைச் சமூலம் 1 பலம்
சுக்கு 1 பலம்

இவ்விரண்டையும் கஷாயம் செய்து நெய்யும் வெல்லமும் கூடச் சேர்த்துத் தினமும் பருகிவர ஸ்திரீகளுக்குக் கர்ப்ப காலத்தில் வந்து உபத்ரவிக்கும் வீக்கம் நீங்கும்.

## 40. கெற்ப காலத்தில் மலஜலமடைத்தால் மருந்து

கோவைக்கிழங்கு துவைத்ததனைக்
கொண்டு பிழிந்து குணமாக
வாவின்பாலிற் கொடுத்திடநீ
ரடைப்பு மலக்கட்டகன்றுவிடும்
பாவைமார்கள் மூன்றுதினம்
பருகினென்று சரபேந்திர
பூவுக்கதிபன் புகன்றமுறை
புதுமை காணும் புலவீரே. 64

(இ-ள்) கோவைக் கிழங்கைக் கொண்டுவந்து கல்லுரலிலிட்டு இடித்துப் பிழிந்து அதன் ரசத்தைப் பசுவின் பாலில் கலந்து கொடுக்க, நீரடைப்பும், மலக்கட்டும் நீங்கும். இம்மாதிரி 3 தினங்கள் பருகவும்.

**குறிப்பு:**

91 ரெ. சுவடியில் "பிட்டவித்துப் பிழிந்து" எனக் காணப்படுகிறது.

### 41. கெற்பிணிகள் வாந்தியெடுத்தால் ஸ்வரஸம்

கொத்தமல்லி வித்தினைத்தான் கழுநீரி
லேயரைத்துக் கொடுபிழிந்து
வைத்ததனிற் சர்க்கரையிட் டுக்கொடுக்க
வாந்தியது வராதெனத் தீருஞ்
சிந்தமிது வென்றுசர பேந்திரனார்
செய்முறையைச் சிந்தை செய்து
பத்தியுட னேபுரியும் வித்தகமா
வயித்தியர்க்குப் பரிசுண்டாமே. 65

(இ-ள்) ஒரு சிரங்கை அளவு கொத்தமல்லி விதையை 1/2 சேர் கழுநீரில் ஊறப்போட்டு அதிலேயே அரைத்துத் துணியில் பிழிந்து சிறிது சர்க்கரை சேர்த்துக் கொடுக்கவும்.

கர்பபிணிகளுக்கு உண்டாகும் வாந்தி உடனே நிற்கும்.

### 42. கெற்பமுண்டான பிறகு இரத்தமாய் சாய்க்கிற பேர்க்கும் வயிற்றில் செத்தபிள்ளை விழவும் மருந்து

அதிமதுர மஞ்சிட்டி செங்கழுநீர்க்
கிழங்குகாட் டாத்திப்பூவு
மிதமான வகைக்கொருகா சிடைபாலி
லரைத்திரத மேய்ந்தவெல்லம்
பதமாகயிட் டேகாய்ச்சிப் பாலிலுண்ணான்
மூன்றுமிரு பகலுமுண்ண
விதிவசமாய் செத்தபிள்ளை விழுமிரத்தஞ்
சாய்கிறதும் விடும்பண்பாமே, 66

(இ-ள்) அதிமதுரம் மஞ்சிட்டிக்கிழங்கு
செங்கழுநீர்க்கிழங்கு காட்டாத்திப்பூ

இவைகளை வகைக்கு ஒரு காசிடைஎடுத்துப் பசுவின் பாலிலரைத்து வெல்லமிட்டுப் பாலிலேயே காய்ச்சிக் கொடுக்கவும். இந்தப்படி 3 நாள் இரண்டு நேரமும் உட்கொள்ள,

இரத்தம் சாய்கிறது நிற்கும். இறந்த பிள்ளையும் விழும்.

## 43. வேறு

பற்பாட கமுநெல்லி விரகுசுட்ட
சாம்பலுமான் பாலரைத்தான்
நற்பாலிற் கொடுத்திடவு மிரத்தநிற்கு
நாள்மூன்று நன்காயுண்ணி
லுற்பவியா தொருநோயு முழலைதாப
மூர்ச்சை யுள தேன் மாவால்
நற்பன்ன மரசத்தி நற்றுளிரோர்
பிடிக்கருக்குண் ணலமுண்டாமே. 67

(இ-ள்) பற்பாடகம் நெல்லிமுள்ளி
வரகு சுட்ட சாம்பல்

இம்மூன்றையும் பசுவின் பாலினாலரைத்து அப்பாலிலேயே குழப்பிச் சாப்பிட இரத்தம் நிற்கும். 3 நாள் சாப்பிட மறுபடியும் அந்நோயுண்டாகாது. (தினமும் இரு வேளை சாப்பிடவும்.)

உழலை, தாபம்,மூர்ச்சை இவைகளுக்கு

தேன் மா இலை (துளிர்) ஆல் இலை (துளிர்)

அரசந்துளிர் அத்தித்துளிர்

இவைகள் வகைக்கு ஒரு பிடி எடுத்துக் சுருக்குக் கஷாயம் செய்து கொடுக்க குணமுண்டாகும்.

**சுருக்குக் கஷாயம்**

மேற்படி சரக்குகளை ஒரு புதுச் சட்டியிலிட்டு அடுப்பின் மீதேற்றிக் கருக வறுத்து 2 சேர் ஜலம் விட்டு 1/4 சேராகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டிக் கொடுக்கவும்.

## 44. கெற்பிணிகளுக்கு உண்டாகும் அதிசாரத்திற்கு

நெற்பொரிபா சிப்பயறு கப்புளவில்
வப்பருவேர் நேராய்க்கூட்டித்
தற்படியே பொட்டணங்கட் டித்தண்ணீர்
விட்டதனைத் தராவிக்காய்ச்சி
நற்படியே பருகிடவும் விட்டகலுந்
தாகமது நண்ணிடாது
கற்புளகர்ப் பிணிவயிற்றில் காணதிசா
ரக்கழிச்சல் சுண்டிடாதே. 68

(இ-ள்) நெற்பொரி, பாசிப்பயறு, வில்வமரத்தின் பருமனான வேர் (வகைக்கு 1 பலம்) இவைகளைக்கல் உரலிலிட்டு நன்றாக இடித்து ஒரு துணியில் கட்டிப் பாத்திரத்தில் போட்டு அத்துடன் தண்ணீர் விட்டு நன்றாகக் காய்ச்சி அதைச் சாப்பிடத் தாகமும் கர்ப்பிணிகளுக்கு உண்டாகும் அதிசாரக் கழிச்சலும் தீரும்.

## இதுவுமது

ஆகியமா விரைகுடசப் பாலையதி
மதுரநிலப் பனைவிளாம்பிஞ்
சேகலந்தே லங்கோட்ட மாதுளங்கா
யிவையணைத்து மியல்பதாகச்
சேகரஞ்செய் திட்டருந்தச் சேயிழைக்குச்
சீயிரத்தச் சிராவமென்னு
மாகுலந்தீர்ந் தழகாமென் றண்ணல் சர
பேந்திரனா ரருள் செய்தாரே. 69

(இ-ள்) மாவிரை, குடசப்பாலை, அதிமதுரம், நிலப்பனைக் கிழங்கு, விளாம்பிஞ்சு, ஏலம், கோட்டம், மாதுளங்காய் இவை யாவற்றையும் உலர்த்திக் கல்லுரலிலிட்டு இடித்துச் சூரணமாகச் செய்து சாப்பிடச் சீசிராவம், இரத்தச் சிராவம் இவைகள் அனைத்துந் தீரும்.

## 45. கெற்பிணிக்கு விரேசனம்

ஒருகொம்பா ரையுடன் பொன் னாங்கண்ணி
வேரதுவுமெள்ளி செய்பொற்பூப்
பெருந்துத்தி வேர் நாரிம் மூன்றினையு
மெண்ணெயிலே பிசைந்திறுத்து
விரைவுட னேகொடுக்கக் கர்ப்பிணியா
மெல்லியர்க்கு விரேசனத்தால்
பொருமலிலா தேயகலும் பூவையர்க்குக்
கர்ப்பநலம் பொருந்துந்தானே. 70

(இ-ள்) ஒரு கொம்பாரை, பொன்னாங்காணி வேர், பெருந்துத்தி வேரிலுள்ள நார் இவைகளை (ஆமணக்கு) எண்ணெயிலே அரைத்துப் பிசைந்து வடித்துக் கொடுக்கக் கெர்ப்பிணிகளுக்குச் சுக விரேசனமுண்டாகும்.

**குறிப்பு:**

கொம்பாரை என்பது என்னவென்று புலப்படவில்லை. இதில் கொடுத்திருக்கும் உரை 91 நெ. சுவடியில் உள்ளது.

## 46. கெற்பிணி அதிசாரத்திற்குச் சூரணம்

திப்பிலியோ மங்கருஞ்சீ கரம்வில்வப்
பிசின் காட்டாத் திப்பூசுக்கு
மெய்ப்படியைங் கழஞ்சுமிள கதிவிடயஞ்
சாதிக்காய் விதமும்வெண்ணிந்

துப்பிலவங் கப்பூவிங் குரைப்பதுமுக்
கழஞ்சுமாது ளம்பழத்தோல்
இப்படியைந் திரண்டுமா வித்துத்தூள்
களினிருகா சிடைதேனிட்டே. 71

கொள்ளவுந்தா கவுங்காணி லாலத்தி
நாவலிந்தக் குளிர்ந்தபட்டை
வள்ளிதாயிடித் ததனைக்க ஷாயம்வைத்துக்
கொடுத்திடவும் வாந்தி பண்ணில்
உள்ளகட லைத்துவரை யுண்டிடவு
மென்றுசர பேந்திரரென்னும்
வள்ளல்மொழி கொண்டுலகி லுள்ளவர்க
ளதிசார மறிக்கலாமே. 72

| | | |
|---|---|---|
| (இ-ள்) | திப்பிலி | ஓமம் |
| | கருஞ்சீரகம் | [1]வில்வப்பிசின் |
| | காட்டாத்திப்பூ | சுக்கு |

இவைகள் வகைக்கு 5 கழஞ்சு

| | |
|---|---|
| மிளகு | அதிவிடையம் |
| சாதிக்காய் | பொரித்த இந்துப்பு |
| கிராம்பு | பொரித்த பெருங்காயம் |

இவைகள் வகைக்கு 3 கழஞ்சு

| | |
|---|---|
| மாதுளம்பழ ஓடு | 5 கழஞ்சு |
| மாவிதை | 2 கழஞ்சு |

இவைகளையெல்லாம் கல்லுரலிலிட்டு இடித்து வஸ்திரகாயம் செய்து 2 காசிடை வீதம் எடுத்துத் தேனில் சாப்பிடவும்.

**தாகம் உண்டானால்**

அத்திப்பட்டை ஆலம்பட்டை
நாவல்பட்டை

---

1. வில்வப் பிசினுக்கு பதில் 91 நெ சுவடியில் இலவம்பிசின் காணப்படுகிறது.

இவற்றைச் சமனாக எடுத்து இடித்துக் கஷாயமிட்டுக் கொடுக்கவும்.

**வாந்தியுண்டானால்**

கடலை, துவரை கொள்ளவும்.

### 47. பிரஸூதிக் கழிச்சலுக்கு மருந்து

மாங்கொட்டை யாத்திப்பூ வெள்ளிலோத்தி
ரங்கமுநீர் வார்த்தரைத்துத்
தாங்கொடுக்க வுங்கலங்கொம் புங்கருஞ்சீ
ரகமுருங்கைத் தன் பூவோடு
மாங்கிவைகள் சமமாகவரைத்தா ன்வெண்ணெய்
யிற்கொடுத்திட் டாலுமாதர்
வீங்குகர்ப் பந்தனிலே வருகின்ற
கழிச்சலுந்தான் விட்டுப்போமே. 73

(இ-ள்) மாங்கொட்டை (பருப்பை உபயோகிக்கவும் ) ஆத்திப்பூ (காட்டாத்திப்பூ) வெள்ளிலோத்திரப்பட்டை இவைகளை அரிசிகழுவிய கழுநீரினால் நன்றாக அரைத்துக் கொடுத்தாலும், அல்லது மான்கொம்பு, கருஞ்சீரகம், முருங்கைப்பூ இவைகளைச் சமமாக எடுத்து நன்கு அரைத்துப் பசுவின் வெண்ணெயில் குழைத்துக் கொடுத்தாலும், ஸ்திரீகளுக்குக் கர்ப்ப காலத்தில் வருகின்ற கழிச்சல் தீரும்.

**குறிப்பு:**

ஆன் வெண்ணெய் - பசுவின் வெண்ணெய்

## 5. சீக்கிரப் பிரஸூதிக்கு மருந்து வகைகள்

### 48. சீக்கிரப் பிரஸூதிக்கு

பாலைவே ரும்வேலிப் பருத்திவேரும்
மிரண் டும்ப சுவினிற்பாலிற்
சாலவரைத் துண்டிடினுஞ் சண்பையது
மூலமுந்தான் றண்ணீராலே

சீலமுட னேயரைத்துத் தேன்கலந்து
சேயிழைக்குத் தினஞ்செய்தக்காற்
பாலகன்றா னேபிறக்கும் பைந்தொடிக்கா
ரோக்கியமாம் பகருவீரே. 74

(இ-ள்) பாலைவேரையும், வேலிப்பருத்தி வேரையும் சமனெடுத்துப் பசுவின் பால் விட்டு நன்றாக அரைத்துச் (கொட்டைப்பாக்களவு) சாப்பிட்டாலும் அல்லது சண்பக வேரைத் தண்ணீரில்இழைத்துத் தேன் கலந்து சாப்பிட்டாலும், குழந்தை தானாகவேபிறக்கும். தாயாருக்கும், தேக ஆரோக்கியமுண்டாகும்.

## 49. பிரஸூதி மருந்து

முலைப்பாலி லேவேலிப் பருத்தியிலை
வேருமிங்கு மூன்றுமிட்டே
தலப்பாக மாயரைத்துத் தடவிலிந்த
மருந்ததுதா னாபிதன்னிற்
கலக்காம லிடவெள்ளைக் காக்கணஞ்செவ்
வாய்க்கிழமை காப்புக்கட்டி
வலப்பாக மாயரைத்து மறுசெவ்வா
யிற்கொணர்ந்து வளையமாக்கே. 75

வளையமோ திரக்குளிச மாடித்தூ
பங்கெடுத்து மயிர்நீளுச்சி
யுளம்மகிழ வைத்திறக்கிப் பெருவிரலில்
இடவுதய முண்டாம்பாலன்
களைகணாய்ச் சோணாடு காத்தருளுஞ்
சரபேந்திரன் கண்டுசொன்ன
வளவறிந்திம் முறையிச்சித் தன்புறுவோர்க்
கேகுளிச மழகதாமே. 76

(இ-ள்) வேலிப்பருத்தி இலை: வேலிப்பருத்திவேர் இவ்விரண்டோடு மூன்றாவதாகிய பெருங்காயத்தையும்

முலைப்பால் விட்டு நன்றாக அரைத்துக் கர்ப்பிணியின் தொப்புளைச் சுற்றித் தடவிவிடவும். பின்பு வெள்ளைக் காக்கணச் செடிக்கு ஒரு செவ்வாய்க்கிழமை காப்புக் கட்டி மறு செவ்வாய்க்கிழமை அதன் வேரைக்கொண்டு வந்து ஒரு சிறு மோதிரம் போல் குளிசம் செய்யவும். பின்பு இதற்குத் தூப தீபங்கள் காட்டிக் கர்ப்பிணியின் தலையுச்சி முதல் கால் வரை இறக்கி அவளது கால்பெரு விரலில் அக்குளிசத்தை இடவும். குழந்தை பிறந்துவிடும். (குளிசம் என்பது தாயத்து)

## 50. பிரஸூதிக்கு மருந்து

நங்கைபெற நோக்குங்கா ணாயிற்றுக்
கிழமையினி னாநிலத்தே
தங்கமுக்கி ராக்கிழங்குக் கேகாப்புக்
கட்டிநல் தன்மையாய்த்தூ
பங்கொடுத்துத் திங்கள்வா ரந்தவறா
மல்வேரைப் பக்குவத்தோ
டங்கையாற் குளிசஞ்செய் தவளெதிரே
தரைமெழுகி யன்பாய்த்தானே. 77

அன்பாக வைங்கரனைத் தொழுதுதூ
பந்தீப மளித்தபின்
னின்புறுநற் சட்டியின்வைத் திடுகுளிச
மேல்மூடி யிதமதாக
வன்புவுயிற் சுகத்துடனே பிரசூத
மாமெனவே வகுத்தென்னாளுஞ்
தன்புவியாளுஞ் சோணாடு தனிபுரக்குஞ்
சரபேந்திரன் சாற்றினாரே. 78

(இ-ள்) கர்ப்பிணி பிரஸவிக்க வேண்டுமானால் ஞாயிற்றுக்கிழமையன்று அமுக்கிராக்கிழங்குச் செடிக்குக் காப்புக்கட்டித் தூபம் காண்பித்து, மறுநாள் திங்கட்கிழமையன்று அவ்வேர் அறுந்துவிடாமல் ஜாக்கிரதையாக அதைப்பிடுங்கிக்

குளிசம் செய்து எந்த கர்ப்பிணிக்குக் குளிசமிட வேண்டுமோ, அவளுக்கெதிரே மெழுகிக் கோலமிடவும். பின்பு பிள்ளையார் பிடித்து வைத்துத் தியானித்துக்கொண்டு அக்கிழங்கினாலாகிய குளிசத்திற்குத் தீபதூபங்கள் காட்டி ஒரு புதுச்சட்டியில்வைத்துமூடி, பிரஸவ அறையிலே வைக்கவும். சுகப்பிரஸவமுண்டாகும்.

### 51. பிரஸூதிக்கு மருந்து

தைவேளை வேர்பேசா மற்பிடுங்கி
மோதிர மாகச்செய்து
கைவிரலிட் டிதையமுதற் கடிதடமட்
டதனையுற கலந்தவ்வேரைச்
செவ்வியதண்ணீருக்குஞ் சிறந்தபானை
யிற்போடச் செய்துமே செம்பை
யைவிரையை யரைத்துநா பியிற்றடவ
பாலைனவ தரிக்குந்தானே 79

(இ-ள்) (a) தைவேளைச் செடியினுடைய வேரை வாய் பேசாமல் பிடுங்கிவந்து, மோதிரமாகச் செய்து, கர்ப்பிணியின் இருதயத்திலிருந்து பிரசவமார்க்கம்வரை இறக்கி அப்பால் இதை ஒரு தண்ணீருள்ள பானையில் போட்டு விடவும்.

(b) செம்பை விதையைத் தண்ணீரில் இழைத்துக் கர்ப்பிணியின் வயிற்றில் தடவ குழந்தை ஜனிப்பான்.

### 52. பிரஸூதிக்கு மருந்து

மங்கலவா ரத்தினமா லாசையினில்
நெருஞ்சிவேர் வாங்கிக்கொண்டே
யங்கதனைத் தலைகீழாய்க் குளிசமா
டியந்தைய ழகாய்மார்பிட்

டிங்கிதமா யிறக்கிவரப் பேற்நோக்கு
மெனத்தஞ்சை யிருந்துவாழு
மெங்கள்சர பேந்திரன்செய் யும்முறையே
மெய்முறையா யெண்ணுவீரே. 80

(இ-ள்) செவ்வாய்க்கிழமையோடு கூடிய அமாவாசையன்று நெருஞ்சியிலை (மஞ்சள் நிறப்பூவுள்ளது) சமூலமாக வேர் அறாமல் பிடுங்கி அதைத் தலைகீழாகக் குளிசம் கட்டிக் கர்ப்பிணியின் மார்பு முதல் அடிவயிறு வரை இறக்கவும். சுகப்பிரசவமுண்டாகும்.

## 53. பிரஸூதிக்கு மருந்து

சணல் விதையைப் பொடித்துத்தேங் காய்த்திருகிப்
பிசறியதைத் தான்கலந்தே
நண்வெயிலிட் டிடத்தைல நல்குமதை
யேயெடுத்து நலமதாக
வணியிழையுச் சந்தலைதொட் டல்குலா
வுந்தடவி யதின்பின்பக்கம்
பிணிதவிரப் பிடரிமுத லபானவரைக்
குந்தடவப் பெறுவள்சேயே. 81

(இ-ள்) சணல் விதையைப் பொடித்துத் (முந்தின) தேங்காய்த் திருவலுடன் சேர்த்து நன்கு பிசறி வைத்துக்கொள்ளவும். இதை ஒரு கல்வத்தில் அப்பி, ஒரு மூலையாகச் சாய்த்து வைத்துக் கடும் வெயிலில் வைக்கவும். இதிலிருந்து எண்ணெய் வடியும். இதையெடுத்துக் கர்ப்பிணியின் உச்சந்தலை, தோல், மர்மஸ்தானம் முதலிய இடங்களில் தடவியபின், பின்பக்கம் பிடரி முதலிய இடங்களிலிருந்து அபானம் வரை தடவிவரச் சுகப்பிரசவமுண்டாகும்.

குறிப்பு:

இதை உள்ளுக்கும் கொடுக்கலாம் என்று 91 நெ. சுவடியில் காணப்படுகிறது.

## 54. பிள்ளை பெறாமல் வருந்தின் மருந்து

குதிரையினல் லிலத்திதனை யுடனெடுத்துப்
பிழிந்துவைத்துக் கொண்டசார
மதினுடனூ மத்தையிலைச் சாறோடென்
ளெண்ணெய்சம மாகக்கூட்டி
பதறாமல் மத்திச்சீர் காசிடையி
னளவாகப் பருகப் பின்னு
முதிரமுது கினுமிட்டுத் தடவிவரச்
சேய்தானே யுதையுமாமே. 82

(இ-ள்) அப்பொழுதிட்ட குதிரையினுடைய இலத்தியைப் பிழிந்த சாறு, ஊமத்தை இலைச்சாறு, சுத்தமான எள்ளெண்ணெய் இம்மூன்றையும் சமமாகக்கூட்டவும். பின்பு இதை நன்றாகக் கையினால் குழைத்து 2 காசிடை அளவாகச் சாப்பிடவும். இதையே வயிறு, முதுகுப் பக்கங்களிலும் தேய்த்துவரக் குழந்தை தானாகவே பிறக்கும்.

"ஓம் கம் கணபதியே நம:" என்று 22 உருச்செபித்துக் கொடுக்கவும் என்று 91 நெ சுவடியில் காணப்படுகிறது.

## 55. பிள்ளை பெறமாட்டாதவர்க்கு மருந்து

வெள்ளைச்சா றடை வேரை மேலுமந்த
விலைச்சாற்றால் விரைந்தரைத்தே
யொள்ளிழையார் நிதம்பமதி லுறப்பூசிற்
சேய்தானு முதையமாகும்
வெள்ளைக்குன் றியின்வேரை மெல்லியலி
னிடையதனின் மேலேகட்டப்
பிள்ளையழ காய்த்தோன்றும் பிரசூதிக்
கேசுகமும் பிறக்குந்தானே. 83

(இ-ள்) (1) வெள்ளைச் சாறடைவேரை அதேயிலைச் சாற்றினால் நன்றாக அரைத்துக் கர்ப்பிணியின் அடிவயிறு பின்புறம் முதலான இடங்களில் பூசக் குழந்தை பிறக்கும்.

(2) வெள்ளைக் குன்றிமணியின் வேரைக் கர்ப்பிணியின் அரையில் கட்டினாலும் சுகப்பிரசவமாகும். தாயாருக்கும் நல்லது.

### 56. பிள்ளை பெறாமல் வருந்தின் மருந்து

கொந்தலரா வில்வமரத் தினின்வேரைக்
கொண்டுவந்து குளிர்நீர்விட்டுச்
சந்தனம்போ லேயரைத்து தானெலுமிச்
சங்காய்நேர் தனையேரண்டந்
தந்தயிலங் கலந்து சாரித்துக்
காய்ச்சியதைத் தானருந்திற்
பைந்தொடிக்கு வருத்தமின்றிப் பாலகனு
பிறக்குமெனப் பருகுவீரே. 84

(இ-ள்) புஷ்பிக்காத ஒரு வில்வ மரத்தின் வேரைக் கொண்டுவந்து சுத்தக் குளிர்ந்த ஜலத்தினால் சந்தனம் போல் நன்றாக அரைத்து, அதில் ஒரு எலுமிச்சங்காய்ப் பிரமாணம் எடுத்து 1 சேர் விளக்கெண்ணெய் (சிற்றாமணக்கெண்ணெயில்) குழப்பி அடுப்பின் மேல் வைத்துப் பாகமாக எரித்துப் பதத்தில் இறக்கி வைத்துக்கொண்டு சாப்பிடக் கர்ப்பிணிக்குச் சிரமமின்றிக் குழந்தை பிறக்கும்.

**குறிப்பு**: கொந்து - பூங்கொத்து
அலரா - மலராத

91 நெ. சுவடி.யில் "இம்மருந்தைக் காய்ச்சாமல் அப்படியே சாப்பிட்டாலும் "சுகப்பிரசவமாகும்." என்றிருக்கிறது.

### 57. பிள்ளை பெறமாட்டாதார்க்கு மருந்து

வடக்கேநோக் கிடுநந்தி யாவட்டை
வேர்பிடுங்கி வந்துநங்கை
யிடக்கானற் பெருவிரல்மோ திரம்போல
வளையஞ்செய் திடினும் பின்பு
கடுத்தகற்றா ழையின்வேரை தலைகீழா
யவளிடத்திற் கட்டிவைக்கி
லடைவுடனே சேயுதிக்கு மதுகண்டு
கற்றாழையின் வேரையவிழ்த்துப்போடே. 85

(இ-ள்) வடக்குத் திசையை நோக்கிப் போகிற நந்தியாவட்டத்தின் வேரைப்பிடுங்கிவந்து ஒரு மோதிரம் போல் செய்து, பிரசவிக்கும் கர்ப்பிணியின் இடது காலில் பெருவிரலில் இடவும். இதனுடன் சோற்றுக் கற்றாழையின் வேரைத் தலைகீழாகக் கர்ப்பிணி இருக்குமிடத்தில் கட்டிவிடவும். குழந்தை பிறந்து விடும். அப்பால் கற்றாழை வேரை அவிழ்த்து விடவும்.

### 58. பிரஸூதிக்கு மருந்து

வெள்ளெருக்குத் தரநோக்கும் வேர் கொணர்ந்து
மெய்யினில் வைத் திறக்கினாலு
மெள்ளெண்ணெயி லேமுசுட்டை யிலைவேக
வைத்துடம்பி னிட்டிட்டாலும்
கள்ளமில்கை யாந்தகரைச் சாறுநசி
யஞ்செயினுஞ் கருவிலுற்ற
பிள்ளையுடனே புவியிற் பிறக்குமெனச்
சரபேந்திரன் பேசுவாரே. 86

(இ-ள்) (a) வடக்கே நோக்கிச் செல்லும் வெள்ளெறுக்கின் வேரைக் கொண்டுவந்து கர்ப்பிணியின் உடலில் வைத்திறக்கினாலும் (b) முசுட்டை இலையைச் சுத்தமான எள்ளெண்ணெயிலிட்டுக் கொதிக்கவைத்து அந்த எண்ணெயைக்

கர்ப்பிணியின் உடம்பிலிட்டுக் கீழ் நோக்கித் தேய்த்தாலும் (c) கையாந்தகரைச் சாற்றை நஸ்யம் செய்தாலும் வயிற்றிலுள்ள குழந்தை உடனே பிறக்கும்.

நஸ்யம் - இலைச் சாற்றை மூக்கிலிட்டு ஊதவும்.

### 59. சீக்கிரப் பிரஸூதி மருந்து

சிவந்தவா மணக்கின்வேர் வளையமா
கச்சுற்றித் தெரிவை* தானே
யுவந்துதன திடதுகாற் பெருவிரலி
லிட்டிடச்சே யுதையமாகுந்
தவஞ்செபநற் கல்விமாதற் றார்தாங்கண்
டந்தணர்க்குத் தானஞ்செய்யுஞ்
சிவபூசா துரந்தரனாஞ் சீரசர
பேந்திரவேள் செப்பும்வாறே. 37

(இ-ள்) செவ்வாமணக்கு வேரை மோதிரம் போல் செய்து அப்பிரஸவிக்கும் கர்ப்பிணி தானாகவே தன் இடது கால் பெருவிரலில் அணிந்து கொள்ள குழந்தை பிறக்கும்.

### 60. பிள்ளை பெறமாட்டாதார்க்கு மருந்து

சீதேவிச்செங் கழுநீர்ச மூலமும்செந்
தழலிடவே சிவந்த தூமப்
மாதரல்குற் காட்டிடினு மரையிலவ்வே
ரினைக்கட்டி வைத்திட்டாலும்

---

* தெரிவை - 25 முதல் 31 வயதுள்ள ஸ்திரீக்குப் பெயர். இங்குப் பொதுவாக "ஸ்திரீ" என்று பொருள்.

மாதாவா மவ்வேரை யவ்விலைச்சாற்
றாற்றண்ணீ ராதல் கொண்டப்
போதுறவா யரைத்தவட்கஞ் சனமிடச்சேய்
பிறக்குமிது பொருந்திப்பாரே. 88

(இ-ள்) சீதேவிச் செங்கழுநீர்ச் செடியைச் சமூலமாகப் பிடுங்கி, இடித்து அதைத் தணலில் இட்டு அதினின்று எழும்பும் சிவந்த புகையைக் கர்ப்பிணியின் மர்மஸ்தானம் முதலிய இடங்களில் காட்டினாலும், அந்த வேரை அந்த ஸ்திரீயின் அரையில் கட்டி வைத்தாலும் சுகப்பிரஸவமுண்டாகும்.

சீதேவிச் செங்கழுநீர் வேரை, அதன் இலைச் சாற்றினாலோ அல்லது தண்ணீரினாலோ நன்றாக அரைத்து அக்கர்ப்பிணிக்கு அஞ்சனமாகக் கடுகளவுக் கோலிலெடுத்துக் கண்ணிலிடக் குழந்தை பிறக்கும்.

### 61. பிள்ளை பிறக்க மருந்து

முள்ளிவேர் நாயுருவி விடத்தேரைவேர்
மூன்றினையு முறுக்கிச்சுற்றி
மெள்ளவே பெருவிரலி னிட்டிறக்கப்
பேற்நோக்கு மிகுமிவ்வேரை
யெள்ளெண்ணெ யிற்றோய்த்துச் சிரசிலிருந்
திறக்கியிட வீனுஞ்சேயை
வள்ளல்சரபோ சேந்திரவேள் சொன்னமுறை
யீதென்ன மகிழுவீரே. 89

(இ-ள்) முள்ளிவேர், நாயுருவிவேர், விடத்தேரை வேர், இம்மூன்றையும் மெல்லியதாக எடுத்து நன்றாக முறுக்கி மோதிரம்

போலச்செய்து, கர்ப்பிணியின் பெருவிரலில்இட்டு இறக்கினாலும், இந்தக் குளிசத்தைச் சுத்தமான எள்ளெண்ணெயில் தோய்த்துத் தலைமுதல் கால்வரை இறக்கித் தடவினாலும் குழந்தை சிரமமின்றிப் பிறக்கும்.

### 62. பிள்ளை பெறமாட்டாதார்க்கு மருந்து

ஊமத்தை வேர்தலைகீ ழாய்க்கட்டித்
தூக்கிடவு முந்திமீதிற்
சேமச்செம் பையின்விரையை யரைத்துந்தி
தனிற்றடவுச் சேய்தான்றோன்று
நேமமதா மிம்முறையைச் சோழவள
நாடாளு நிறைந்ததஞ்சைப்
பூமனெனுஞ் சரபேந்திரன் புகன்றமுறை
யிதுதன்னைப் புகழுவீரே. 90

(இ-ள்) ஊமத்தை வேரைத் தலைகீழாகக் கட்டிக் கர்ப்பிணியின் வயிற்றிற்குமேல் தொங்கவிட்டாலும் அல்லது செம்பைவிரையைத் தண்ணீர் விட்டரைத்துக் கர்ப்பிணியின் வயிறுதனில் நன்றாகப் பூசிவிட்டாலும் குழந்தை பிறக்கும்.

குறிப்பு: 51வது முறையையும் பார்த்துக்கொள்க.

### 63. பிள்ளை பெறமாட்டாதார்க்கு மருந்து

சங்கங்கொ ழுந்தோர்பாக் களவு
தரைத் தாமணக் கின்றயிலத்திற்
செங்கையாலே குழப்பி மங்கை
தின்னக் கொடுக்கிற் சேயுதிக்கும்

பங்கமாக வயிறதனிற்
பாலன் மறித்தே யிருந்தாலுந்
தாங்கா தந்தக் கணந்தனிலே
தரையி னழுவி விழுந்திடுமே. 91

(இ-ள்) சங்கங்கொழுந்து (முட்சங்கன்) ஒரு பாக்களவெடுத்து அரைத்துக் கர்ப்பிணியின் கையினாலே (சிற்றாமணக் கெண்ணெயில்) குழப்பிச் சாப்பிடக் குழந்தை பிறக்கும். குழந்தை இறந்த போதிலுங் கூட வயிற்றிலே தங்காமல் நழுவி விழுந்துவிடும்.

### 64. பிள்ளை வாதியாமற் பிரஸூதி மருந்து

கவிழ்தும்பை வேர்பிடுங்கித் தோலுரித்து
நெற்றியினிற் கயிற்றாற்கட்டி
யவிழாமல் வைத்திடினு மக்கணம்பைந்
தொடிவருத்த மணுகுறாமற்
றவமிகுஞ்சந் ததிதேற்றுந் தாயார்க்கு
மிகுந்தசவுக் கியமாமென்றே
புவனமுழு தையுமாளுஞ் சாபமகீ
பதிமுறைநூல் புகலுந்தானே. 92

(இ-ள்) கவிழ்தும்பை (கழுதைத் தும்பை)ச் செடியின் வேரைப் பிடுங்கி அதன் மேல் தோலை உரித்து, அதைக் கர்ப்பிணியின் நெற்றியில் கயிற்றினால் கட்டி அவிழ்ந்து விடாமல் வைத்திருக்கவும். அந்த க்ஷணமே கஷ்டமில்லாமல் குழந்தை பிறந்து சௌக்கியமும் உண்டாகும்.

# 65. இறந்தபிள்ளை வெளிப்பட மருந்துகள்

## 65. கருத்தரியா மருந்து

அவுரிவேர் பூஷணிவேர் சமனாக
வரைத்துநீ ராடுநாளிற்
கவுரவமாம் அரைத்துண்ணக் கருத்தரியா
துசிலையிலே கல்லுப்புள்ளே
யுவகையுடன் முடிந்துவைத்தான் பாலிலரைத்
துண்டிடினு முயர்பேரீச்சி
னவிர்பாளை யருந்திடினுங் கருத்தரியா
தெனவுரைத்தா ரறிஞர்தாமே. 93

(இ-ள்) அவுரிவேர், பூசணி வேர் இவ்விரண்டையும் தண்ணீர் விட்டு நன்றாக அரைத்து ஸ்நானம் செய்யும் தினத்தன்று சாப்பிடவும். அந்த ஸ்திரீ கருத்தரிக்கமாட்டாள்.

உசிலை இலையை ஒருமுடிச்சாக்கட்டிக் கல்லுப்பிற்குள் வைத்துப் பசுவின் பாலில் அரைத்துச் சாப்பிட்டாலும் அல்லது பேரீச்ச மரத்தின் மலரும் பாளையைப் பால்விட்டு அரைத்துச் சாப்பிட்டாலும் கர்ப்பம் தரிக்காது.

## 66. செத்தபிள்ளை விழ மருந்து

பெரும்பயரி னளவதுகாந் தஞ்சணற்பூ
வதுவுமொரு பிடியுஞ் சேர்த்துக்
குரும்பையிள நீரினரைத் துக்கொடுக்க
வங்குதிக்குங் குழவிதானும்
வருந்துதலங் ககன்றுமந்த மாதிருப்ப
ளெனப்பொன்னி வளநாடாளுஞ்
சரபமகி பதியுரைசெய் முறையிதனை
மனமகிழ்ந்து தான்செய்வீரே. 94

(இ-ள்) சுத்திசெய்த காந்தம் 1 பெரும் பயறளவு
சணல்பூ ஒரு பிடி

இவ்விரண்டையும் குரும்பையின் நீரினாலரைத்துச் சாப்பிட இறந்த குழந்தை விழும். சுகமுமுண்டாகும்.

### 67. மறித்தபிள்ளை விழ மருந்து

இலந்தையின்பட் டையையரைத்துப் பசுவினெய்யிற்
கலந்துணச்செத் திடும்சேய்வீழும்
மலர்ந்தபூ ஷணிப்பூவை யரைத்துள்ளங்
காலிடவு மரித்தசேயும்
நிலந்தனில்வந் தடையுமென நீதியுள
சரபேந்திர நிருபதுங்கன்
நலந் தருமிவ் வாயுணூல் நங் கையர்துன்பு
றும்வண்ண நல்கினாரே. 95

(இ-ள்) 1. இலந்தைப் பட்டையையரைத்துப் பசு நெய்யில் கலந்து சாப்பிட வயிற்றிலேயே இறந்த குழந்தை விழும்.

2. புதிய பூசணிப் பூவையரைத்துக் கர்ப்பிணியின் உள்ளங்காலில் தேய்க்கவும். இறந்த பிள்ளை உடனே பிறக்கும்.

குழந்தை பிறந்தவுடன் கழுவிவிடவும்.

### 68. செத்தபிள்ளை விழ மருந்து

பருத்தியதின் வடக்கேகும் பருத்தவே
ரொருமுழமாம் படியதாக
நருக்கித்தாய் பருந்தலையிற் கட்டிடச்செத்
திடுபிள்ளை நழுவிவிழு

முரித்தாயி ளந்தலையி லேவேரைக்
கட்டிடவு மொண்ணாதென்று
முரைத்தநல் முறையிதனை யுண்மையா
யறிந்துகொள்ளு முலகத்தீரே. 96

(இ-ள்) வடக்கு நோக்கிச் செல்லும் பருத்தி வேரைக் கொஞ்சம் பருமனாகப் பார்த்து ஒரு முழ அளவு எடுத்து முழுமைப் பருவமுள்ள கர்ப்பிணியின் தலையைச் சுற்றிக் கட்டிவிட வயிற்றிலுள்ள இறந்த குழந்தை விழும். இதை இளமைப்பருவமுள்ள கர்ப்பிணிக்குக் கட்டுதல் நன்றன்று.

**குறிப்பு**: 91 நெ. சுவடியில் "பருத்தி வேரின் பருத்த தலையைக் கட்டப் பிள்ளை விழும். இளந்தலைக்கட்ட விழாது." எனக் காணப்படுகிறது. இம்முறையின் பொருள் சரியாக விளங்கவில்லை.

## 69. மறித்தபிள்ளை விழ மருந்து

வேலிப்பருத்தி யிலைவசம்போ
டுள்ளிமுலைப்பால் விட்டரைத்துக்
கோலிமாது கீழ்வயிறு
கொப்பூழ்மட்டுங் கொண்டிடவே
சாலமறித்த பாலகனுஞ்
சதிராயுதைய மாமென்னும்
ஞாலந்தனிலே யுயர்சோழ
நாடன்சரபேந் திரன்முறையே. 97

(இ-ள்) வேலிப்பருத்தி இலை, வசம்பு, உள்ளிப்பூண்டு இம்மூன்றையும் ஒன்றுகூட்டி வேண்டிய அளவு முலைப்பால்விட்டு நன்றாக அரைத்து அக்கர்ப்ப ஸ்திரீயினுடைய கீழ்வயிறு, தொப்புள், அடிவயிறு முதலிய இடங்களில் நன்றாகப் பத்துப்போட வயிற்றிலேயே இறந்த குழந்தை வெளிவரும்.

## 70. மறித்தபிள்ளை விழ மருந்து

வெள்ளாட்டெருவைக் கருக்கிநெய்யை
விட்டுக்குழைத்து விரும்பியுண்ணப்
பிள்ளைவயிற்றி லிருந்துவிழும்
பெரியமூங்கி லிலைகழைஞ்சின்
முள்ளினிலையு மருவாதி
முழுதுமரைத்து முகந்துள்ளே
கொள்ளும்போர்தின மறித்திருந்த
குக்கிக்குழவி குதித்திடுமே. 98

குதிக்கும்பரியப் போதிட்ட
கொள்ளாரிலத்தி கொடுவந்த
மதித்தோருழக்கு மருவாதி
வயிதிற்பிழிந்து வண்சுக்கின்
கதித்தபொடிதூ விக்கொடுக்கக்
கழன்றுவிழுங்காண் கான்முளையும்
விதித்தார்சரபேந் திரரிதனை
விரும்பிக்கொள்வார் வித்தகரே. 99

(இ-ள்) (a) வெள்ளாட்டுப் புழுக்கையைச் சட்டியிலிட்டு அனலில் வைத்துக் கருக்கி நெய்யில் ஒரு குத்தளவெடுத்துக் குழைத்துச் சாப்பிட மறித்த குழந்தை பிறக்கும்.

(b) மூங்கிலிலை 1 கழஞ்சும், முள்ளி இலையையும் சேர்த்து அரைத்து உள்ளுக்குக் கொடுக்க இறந்த குழந்தை விழும்.

(c) புதிதாகப்போட்ட குதிரை இலத்தியைக்கொண்டு வந்து சிறிது இடித்துப் பிழிந்து, சுக்கின் சூரணத்தையும் கூடச்சேர்த்துக் கர்ப்பிணியைப் பருகச்செய்ய இறந்த குழந்தை பிறக்கும்.

**குறிப்பு;** 54ஆம் முறையையும் கவனிக்க

## 7. நஞ்சுவிழ மருந்துகள்

### 71. நஞ்சொளித்தால் மருந்து

காடியினிற் பருத்தியிலை யரைத்துமந்தக்
காடிதனிற் கரைத்துண்டக்கா
னீடியநஞ் சவிழ்ந்துவிழும் நேரிழைக்கா
ரோக்கியமும் நிகழ்த்தலாகும்
தேடரியவிம் முறையதனைத் தேடியுல
கீருகந்து தோமினென்றே
யாடவர்க மலகனெனும் சரபமகி
பன்பால ருள்செய்தானே. 100

(இ-ள்) பருத்தியிலையைக் காடிவிட்டு நன்றாக அரைத்து, அந்தக் காடியிலேயே குழப்பிச் சாப்பிட இறுகி இருக்கும் நஞ்சு அவிழ்ந்து விழும். பிரஸவித்த ஸ்திரீக்கும் சௌக்கியமுண்டாகும்.

### 72. நஞ்சு விழாதிருந்தால் மருந்து

பெண்டுகட்கு நஞ்சுவிழா தெனிற்கருணைச்
சமூலமதைப் பிடுங்கிவந்து
துண்டுதுண்டாய் நறுக்கியம்மி தனிலேவைத்
தரைத்ததனைத் தொகுத்திடித்தே
யொண்டொடியாள் பிடரியினிட் டுயர்முதுகூ
டிறங்கிவர வுரமாய்ப்பூசில்
பண்டியினின் றிடுநஞ்சு விழும்பின்பு
துடைத்திடுமுன் பற்றைத்தானே. 101

(இ-ள்) கருணைக்கிழங்குச் செடியைச் சமூலமாகப் பிடுங்கிவந்து துண்டம் துண்டமாக வெட்டி அம்மியின் மேல் வைத்து நன்றாக அரைத்து, அப்பிரஸவித்த ஸ்திரீயின் பிடரியிலிருந்து

முதுகு முழுதும் நன்றாகப் பத்துப் போட்டால், ஸ்திரீயின் வயிற்றிலுள்ள நஞ்சு வெளிப்படும். அஃது வெளியானபின் பற்றை நீக்கிவிடவும்.

## 8. பிள்ளை பெற்றபின் ஏற்படும் வியாதிகளுக்கு மருந்துகள்

### 73. பிள்ளை பெற்றவர்களுக்கு வயிறு

#### ஊதிக்கழிந்தால் மருந்து

அரிந்தகுறிஞ் சாவிலையோர் சிறங்கைபழம்
புளியெலுமிச் சங்காய்நேரா
யொருங்குறநா ழியினுழக்குத் தண்ணீரிட்
டதையுரிநீ ருறவேகாய்ச்சிம்
மருந்துபிசைந் ததைவடித்து வாங்கியுண்ணும்
வனிதைவயிறு வடிந்துநன்காம்
பரிந்துசா றணைசமூல மும்பிடிங்கித்
துவைத்திறுத்தோர் பாத்திரத்தே. 102

பாத்திரத்தில் வெங்காயம் புளிசுக்கிட்
டிளம்பதமாய் பரிந்துகாய்ச்சி
வார்த்துநீ ரிறுத்தோ ரெலுமிச்சங்காய்
மட்டளவாய் வாங்கிவெல்லஞ்
சேர்த்திதனிற் கரைத்துணவுஞ் சேயிழைக்கூ
தும்வயிறு செவ்விதாகும்
மாத்திரைப்போ தேவெந்நீர் வார்த்தரைவவ்
வாற்புழுக்கை வயிற்றிற்பூசே. 103

(இ-ள்) (அ) நறுக்கிய குறிஞ்சா இலை 1 சிரங்கை(கைப்பிடி)
பழம்புளி - எலுமிச்சங்காயளவு

**இவற்றை ஒரு பட்டணம்படி அளவு தண்ணீரில் ஊறவைத்து மேலும் 1 கால்படி தண்ணீர் விட்டு இதை அடுப்பின் மீதேற்றி 1/2 படியாக வற்றக்காய்ச்சி மருந்துகளை நன்றாகப் பிசைந்து**

சக்கையை எறிந்து விடவும். இக்காஷாயத்தைச் சாப்பிட ஊதிய வயிறு வடியும்.

(b) சாறணையைச் சமூலமாகக் கொண்டுவந்து இடித்து அதன் சாற்றை ஒரு பாத்திரத்தில் வைத்துக் கொண்டு, அதனுடன் வெள்ளை வெங்காயம், புளி, சுக்கு இவைகளைச் சிறிதுபோட்டு இளம்பதமாக அடுப்பின் மீதேற்றிக் காய்ச்சவும். அதில் 1/2 படி இறுத்து ஒரு எலுமிச்சங்காயளவு (பனை) வெல்லம் சேர்த்து நோயுள்ள ஸ்திரீயைப் பருகச் சொல்லவும். ஊதிய வயிறு வாடும்.

(c) வெளவாற் புழுக்கையை வெந்நீரில் நன்றாக அரைத்து அடிவயிற்றில் பூசவும்.

ஊதிய வயிறு வடியும்.

### 74. பிள்ளை பெற்றபோது வந்த கர்ப்ப, விஷபாக பாண்டு, விக்கல் விடவும், [1]கன்மிழம் விழவும் மருந்து

சித்திரமூலதி ராய்தேவ
தாரமுவாய்சி றுமுட்கண்டங்
கத்திரிவேர் சாரணைமுட் காவேளை
நொச்சிமுருங் கைவில்வத்தின்
பத்திரிவா யுவிளங்கநீர் முள்ளிசமூ
லஞ்சுரையின் பழுப்புத்தண்டு
மொத்தசணல் வித்தோமஞ் சிற்றாமல்லி
பேராமல் லியுஞ்சமூலம் 104

மூங்கிலின்மேற் புரணியிலை பொன்முசுட்டை
தும்பராட்ட முன்னைமஞ்சள்
தீங்கிறிப் பிலிமூல மரமஞ்ச
றிறிகடுஞ் சிறுகுறிஞ்சா

1. கல்மிஷம் (லெக்சிகன் வால்யூம் 11, பக்கம் 70ல்)

தாங்கண்டு பாரங்கி மாவிலங்கை
யாயில்புன்கைந் தருவின்பட்டை
வாங்குவாய்க் கோர்கழஞ்சிட் டிடிதூளிற்
கோசலம்வெள் ளாட்டுநீரும். 105

நீர்மையுள்ள சிறுநீருமிவைகள் கிடைத்
ததிருசேர் நீரும்விட்டுப்
பாருமுழக் காய்க்காய்ச்சிப் பருகிடவே
பிரஸூதமாம் பார்த்துவந்த
வேரறும்சோ பம்வீக்கம் பாண்டுவிட
பாகம்வயிற் றுளைவிரத்தந்
தீருங்கன் மிடஞ்சிறிதுஞ் சிக்காது
குராசானி சேர்த்துக்கொண்டே. 106

சேர்சாதிக் காய்சாதி பத்திரியோ
மந்தகரத் திற்கழாய
மோரொன்றுக் கோர்மூன்று காசிடைதூள்
கண்டங்கத் திரியினுள்ள
சாரமதிட் டேவெல்லத் தாற்காய்ச்சி
லேகியத்தை தான்றினந்தான்
சூரியபுடத் திடெலும்பிச் சம்பழநேருண
சந்நிசுர முசீராமே. 107

சீந்தில்பற் பாடகன்கோ ரைக்கிழங்கு
சிறுகாஞ்சோறி வேர்சிறுதேக்கெல்லா
மாய்ந்திரண்டு காசிடை கொண்டாவின்
பாலிருசே ரிட்டனலில் வைத்துப்
பூந்தேன்முன் போலிட்டுச் சர்க்கரையும்
போட்டதனிள் பொங்கு முன்னே
சாந்தமுடனே யிறக்கித் தையலார் கூட்
டிடகபங் காய்ச்சலுந்தான் போமே 108

(இ-ள்)

| | |
|---|---|
| கொடிவேலிவேர் | தேவதாரம் (சரளம்) |
| திராய் சமூலம் | உவாய் மரப்பட்டை |

| | |
|---|---|
| சிறுகண்டங்கத்திரிவேர் | தும்புராட்டம் (பேரரத்தை) |
| சாறணை இலை | முன்னை இலை |
| முக்காவேளை இலை | மஞ்சள் |
| நொச்சி இலை | திப்பிலிமூலம் (கண்டந்திப்பிலி) |
| முருங்கை இலை | மரமஞ்சள் |
| வில்வ இலை | சுக்கு |
| வாயுவிடங்கம் | திப்பிலி |
| நீர்முள்ளிச் சமூலம் | மிளகு |
| கரையின் பழுப்புத்தண்டு | சிறுகுறிஞ்சான் வேர் |
| சணல் விதை | கண்டு பாரங்கி |
| ஓமம் | மாவலிங்கப்பட்டை |
| சிற்றாமல்லிச்சமூலம் | ஆயில்பட்டை |
| மூங்கிலின் மேற்புரணி | புங்கம்பட்டை |
| பொன்முசுட்டை | மூங்கிலிலை |

இச்சரக்கு வகைகளை வகைக்கு ஒரு கழஞ்சாக எடுத்துக் கல்லுரலிலிட்டு ஒன்றிரண்டாக இடித்து அதனுடன்

| | |
|---|---|
| பசு மூத்திரம் | வெள்ளாட்டு மூத்திரம் |
| சிறுநீர் | |

இவைகள் கிடைத்தால் வகைக்கு 2 சேர் விட்டு, ஊறியபின் அடுப்பின் மீதேற்றி ஒரு உழக்காகச் சுண்டக் காய்ச்சவும்.

அப்பால் இதை வடிகட்டிப் பிரஸவித்த ஸ்திரீ தினந்தோறும் பருகிவரச், சோபம், வீக்கம், பாண்டு, விடபாகம் வயிற்றுளைவு, இரத்தம் விழுதல் முதலிய வியாதிகள் தீரும். ரத்த கல்மஷம் தீரும்.

**குறிப்பு**: உலகவாஸனை அறியாத சிறு குழந்தைகளின் சிறுநீரைச் சேர்த்துக்கொள்ளவும். நெ. 91ல் மணலில் சமூலமும் சேர்க்கப்பட்டிருப்பதுடன், சரக்குகளை வகைக்கு 1 வராகனெடையும் மூத்திரம் 2 படியும் சேர்த்து உழக்காகக் காய்ச்சிக் கொள்ளவும் என்று காணப்படுகிறது.

(b) குராசாணி ஓமம் சாதிக்காய்
சாதிப்பத்திரி ஓமம்
தகரம்

இவைகளை மேற்கூறிய கஷாயம் சேர் ஒன்றுக்கு 3 காசிடை வீதம் எடுத்து இடித்து வஸ்திரகாயம் செய்து கொள்ளவும். கண்டங்கத்திரிச்சாறு கஷாயத்தின் அளவு கூட்டித் தக்க வெல்லம் போட்டுப் பாகு காய்ச்சிச் சூரணத்தையும் போட்டு (நெய் விட்டு) லேகிய பதமாகக் கிண்டி வைத்துக்கொள்ளவும். இந்த லேகியத்தைத் தினசரி சூரியப் புடத்தில் வைத்து எலுமிச்சங்காயளவு உட்கொள்ளவும்.

இதனால் சன்னியும், சுரமும் நீங்கும்.

(c) சீந்தில்கொடி பற்பாடகம்
கோரைக்கிழங்கு சிறுகாஞ்சோறி வேர்
சிறுதேக்கு

இவைகளை வகைக்கு இரண்டு காசெடை வீதம் எடுத்துக்கொண்டு பசுவின் பால் 2 சேரில் சூரணித்துப் போட்டு அடுப்பின் மேலேற்றி உழக்காகச் சுண்டக் காய்ச்சித் தேனும் சர்க்கரையும் கூட்டி, பொங்குவதற்கு முன் இறக்கி, அதைப் பருகக் கப சுரம் தீரும்.

### 75. பிள்ளை பெற்ற பிறகு இரத்தம் சாய்ந்தால் மருந்து

பொற்கம்பி தனிலெண்ணெய் பொருந்தவிட்டு
கம்பியச்சிற் போட்டுவாங்க
நிற்கின்ற தைலத்திலே நிம்பப்ப
ருப்புரைத்து நேராமுண்டை
வற்கந்தான் றிரிகடுகம் வளமாய்க்காய்ச்
சியநீரில் வாணிபத்தோ
ரிற்கண்ட மிளகளவிட் டுணத்தீரும்
பிரசூத விரத்தநோயே. 109

(இ-ள்) பொற்கம்பியில் நல்லெண்ணெயைத் தடவிக் கம்பியச்சில் இழுத்து அச்சிலே ஒட்டியிருக்கும் துளியை ஒரு சந்தனக்கல்லில் வைத்து, அதனுடன் வேப்பம் பருப்பை நன்றாக உறைத்து (மிளகளவு) மாத்திரை செய்து, இதைத் திரிகடுகு (சுக்கு, திப்பிலி, மிளகு) கஷாயத்தில் இட்டு அருந்த, பிரஸவித்த ஸ்திரீயின் இரத்த நோய் தீரும்.

## 76. பிள்ளை பெற்ற பேருக்கு வயிற்றில் சீழ்க் கட்டினால் மருந்து

உரியெண்ணெய் திராய்கொத்தான் விழுவிச்சா
றுரியிதெல்லா முடன்கலந்தே
யெரிசெய்து பதத்தில்வடித் திரண்டுபல
மிளகுசுக்கு மிருபலந்தான்
பருமுள்ளி பலநாலு பலமரைக்கால்
கடுகோமம் பலமரைக்கால்
பொரியவெள்ளூ வெச்செனவைத் திவையெல்லாம்
பொடித்தொருநற் புதுப்பாண்டத்தே. 110

வைத்திதனை முன்றயிலத் தால்பிசைந்து
வெலுமிச்ச வண்காய்மட டாய்த்
துய்த்திடினுங் கழுவினவெள்ளூழக்களவு
பொடித்தெண்ணெய் தோய்த்துண்டாலும்
புத்தெண்ணெ யுழக்கெலும்பிச் சம்பழச்சா
றுழக்கிரண்டும் பொன்னாவாரைப்
பத்திரமு மெருமைமோ ரினிலரைத்துப்
பருகிடினுஞ் சீழ்ப்பற்றாதே. 111

| | | |
|---|---|---|
| (இ-ள்) | நல்லெண்ணெய் | 1/2 படி |
| | திராய்ச்சாறு | 1/2 படி |
| | கொத்தான்சாறு | 1/2 படி |
| | விழுதிச்சாறு | 1/2 படி |

இவைகளை அடுப்பின் மீதேற்றிப் பதத்தில் எரித்து வடித்துக் கொள்ளவும். இதனுடன்

| | | | |
|---|---|---|---|
| மிளகு | 2 பலம் | சுக்கு | 2பலம் |
| வெள்ளைப்பூண்டு | 4 பலம் | கடுகு | 1/8 பலம் |
| ஓமம் | 1/8 பலம் | எள்ளு | 1/8 பலம் |

இவைகளைப் பொன் வறுவலாக வறுத்துக் கல்லுரலிலிட்டு இடித்து வஸ்திரகாயஞ் செய்து ஒரு புதுப்பாண்டத்தில் வைத்து முன் தயார் செய்த தைலத்தை விட்டுப் பிசைந்து வைத்துக்கொண்டு ஒரு வேளைக்கு எலுமிச்சங்காயளவு சாப்பிடவும். அல்லது

இதனுடன் கழுவின எள் 1 உழக்கு எடுத்துப் பொடி செய்து நல்லெண்ணெயில் தோய்த்து விழுங்கவும்.

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | 1 உழக்கு |
| எலுமிச்சம்பழச்சாறு | 1 உழக்கு |

இவ்விரண்டையும் கூட்டி இதனுடன் பொன்னாவாரை இலையை எருமைத்தயிரில் அரைத்துக் கொட்டைப்பாக்களவு எடுத்து எல்லாவற்றையும் ஒன்று சேர்த்துக் கொடுக்கவும்.

சீழ்க்கட்டு, உதிரக்கட்டு இவைகள் தீரும்.

## 77. கெற்ப சுர மருந்து

ஒருநாட்பட் டினியிலிருந்து வருநாள்மத்
தியானத்தி னுடனேகாய்ச்சி
வருகஞ்சி யாறவிட்டுக் கொடுத்திடவும்
மடந்தைவைக் கும்கஷாயம்
விரைசெய்சந் தணச்சிராய் சுக்குபற்பாட
கமிலா மிச்சுவேரும்
பருமுத்தக் காசுமிரு காசிடையிட்
டிருபடிநீர் பாய்ச்சிக்காய்ச்சி 112

காய்ச்சியுழக் காய்க்கொடுக்கச் சகலசுர
மும்போங்கைக் கண்டதின்னும்
வாச்சபற்பா டகமுத்தக் காசுகொத்த
மல்லிநாக ரவண்சீந்தில்
தேச்சசிறு காஞ்சோறிவே ரிவைதனைமுந்
தினபடி.யே கஷாயம்செய்கை
தோய்ச்சுச்சூ டறிந்துணவுஞ் சகலசூர
முந்தீருஞ் சுகமுண்டாமே.

(இ-ள்) கர்ப்ப சுரத்தன்று ஒரு நாள் பட்டினி இருந்து மறுதினம் மத்தியானம் கஞ்சி காய்ச்சிக் குளிர ஆறவிட்டுச் சாப்பிடவும்.

இதற்குக் கஷாயம்

(a) சந்தனச்சிராய் சுக்கு
பற்பாடகம் விலாமிச்சம்வேர்
கோரைக்கிழங்கு

இவைகளை வகைக்கு 2 காசெடை எடுத்துக் கல்லுரலிலிட்டு இடித்து, 2 படி தண்ணீர் விட்டு 1 உழக்காகக் காய்ச்சிக் கொடுக்கச் சகல சுரமும் தீரும். கைகண்டது.

(b) பற்பாடகம் கோரைக்கிழங்கு
கொத்தமல்லி சுக்கு
சீந்தில்கொடி சிறுகாஞ்சோறிவேர்

இவற்றை முன்போல இடித்து (வகைக்கு இரு காசிடை) 2 படி நீர் விட்டு 1 உழக்காகச் சுண்ட.க்காய்ச்சிக் கஷாயம் செய்து கை பொறுக்கும் சூட்டில் சாப்பிடச் சுரம் தீரும்.

## 78. பிள்ளை பிறந்து சீழ்கட்டின பேருக்கு மருந்து

எள்ளுநாழி யூறவைத்துப்
பிசைந்துமதனை யிறுத்தெடுத்து
மெள்ளவழக்குச் சாறதனில்
வெங்காரத் திப்பிலிபொருத்திட்

டள்ளிப்பொடித்தண் ணீர்கலந்து
மரிவையருந்த வளித்திடவே
பிள்ளைபிறந்து சீழ்கட்டும்
பிணிபோமென்று பேசினரே. 114

(இ-ள்) எள்ளு 1 நாழி எடுத்துச் சுத்தத் தண்ணீரில் நன்றாக ஊற வைத்துப் பிசைந்து (பிழிந்து வடித்துக்கொண்டு) மேல் நிற்கும் தெளிவு நீரை இறுத்துக்கொள்ளவும். அந்த நீர் உழக்கில் வெங்காரமும் (பொரித்தது) பொரித்த திப்பிலியும் பொடித்துக் கலந்து பிரஸவித்த ஸ்திரீ அருந்திவரப் பிள்ளை பிறந்தபின் ஏற்பட்ட சீழ்க்கட்டுத் தீரும்.

**குறிப்பு:**

சூரணம் வகைக்கு 1 வராகனெடை எடுத்துகொள்ளலாம்.

## 79. பிள்ளை பெற்ற பேருக்குக் கழிச்சலிரைச்சல் சீழ்க்கட்டுக்கு மருந்து

குடிநீர் படிமூன் றோர்நாழி
குளிர்நீரிதனிற் கொள்ளவித்தோர்
படியாய்க் காய்ச்சி யிறுத்துள்ளி
பலமொன்றிங்கு பலமொன்று
கடுகு வெந்தயம் மும்வகைக்கோர்
பலமுங்கண்டங் கத்திரிவேர்
தொடுகத் திரிவேர் தூதுவளைத்
தூளோர் வகைக்குத் தொடிகாலும். 115

உழக்கு நீரிட் டோர்மூன்று
நாளுமிருபோ துகந்துண்டாற்
கழிச்ச லிரைச்ச லுப்பிசஞ்சீய்க்
கட்டுமுதலிக் கட்டகலும்

வழக்கமிவை காண்வையித்திய
ரென்றுசரப மகிபதிதான்
பழக்க மாமிவ் வாகடநூல்
பகர்ந்தால் பார்மின் பாவலரே. 116

(இ-ள்) குடிநீர் 3 படியில் ஒரு நாழிக்கொள்ளை வேக வைத்து 1 நாழியாகும்வரை வற்றக் காய்ச்சி வடிகட்டி, அதனுடன்

| | |
|---|---|
| உள்ளிப்பூண்டு | 1 பலம் |
| பொரித்த பெருங்காயம் | 1 பலம் |
| கடுகு | 1 பலம் |
| வெந்தயம் | 1 பலம் |
| கண்டங்கத்திரி வேர் | 1/4 பலம் |
| கத்திரி வேர் | 1/4 பலம் |
| தூதுவேளை வேர் | 1/4 பலம |

இவைகளெல்லாவற்றையும் ஒன்றிரண்டாக இடித்து அரைத்து ஒன்றுசேர்த்து அடுப்பின் மீதேற்றி திரும்பவும் ஒரு உழக்காகக் காய்ச்சிக் கொள்ளவும்.

இக்கஷாயத்தைத் தினமொன்றுக்கு இருவேளை வீதம் மூன்றுநாள் சாப்பிடக் கழிச்சல், இரைச்சல், உப்பிசம், சீழ்க்கட்டு முதலியவைகள் அகலும்.

### 80. பிள்ளையினால் வந்த விக்கல், வாந்தி தீர மருந்து

சிறுதேக்கு திப்பிலி கற்கடகச்சிரிங்கி
சிறுவழு தலையிலைகாய்சேரக்கூட்டி
புறம்வேடுகட்டிப் புட்டவியலாதல்
பொருந்துகடாய மாதல்பொரி யிந்துப்புச்

சிறுதூள் செய்திட்டா நெய் தேன்கலந்து
தினச்சுவாச காசமுநெஞ்சிற் கட்டாதி
யுறுநோயு மேன்மூச்சுமுபாதியாது
உண்மைச்சரபேந்திர னாருரைத்தவாறே. 117

(இ-ள்) சிறுதேக்கு — திப்பிலி
கற்கடகச்சிரிங்கி — சிறுவழுதலை இலை
சிறுவழுதலை காய்

இவைகளை (சமமாக) எடுத்து இடித்து வேட்டில் வைத்துப் புட்டவியலாகிலும் அல்லது கஷாயமாகிலும் செய்து இந்துப்பைப் பொரித்துக் கூட்டித் தேனும், பசு நெய்யும் கூடக்கலந்து, சாப்பிடச் சுவாசம், மேல்மூச்சு, நெஞ்சுக்கட்டு முதலியவைகள் தீரும்.

## 9. பிறந்த குழந்தைகளுக்கு மருந்துகள்

### 81. பிள்ளை பிறந்ததற்கு மருந்து

பிள்ளைபிறந் திடுமுதனாள் பெருத்தசேங்
கொட்டையொன்று பிழிந்தெடுத்தே
கிள்ளைமென்மு லைப்பால்கி டைத்ததுகொண்
டதிற்போட்டுக் கிளறிக்காய்ச்சி
யுள்ளபாலி னையிறுத்து யொருமூன்று
முறைகொடுத்திட் டூட்டுமென்றே
வள்ளல்சர பேந்திரனார் வசனித்தார்
நிசமுற்ற மருந்தைத்தாமே. 118

(இ-ள்) இது முற்றிய சேராங்கொட்டையைக் கொண்டுவந்து நன்றாகச் சுத்திசெய்து தாயின் பாலிட்டுக் காய்ச்சியபின், அப்பால்தனை இறுத்து 3 வேளை குழந்தை பிறந்த அன்று கொடுக்கவும்.

## 82. குழந்தைக்கு மருந்து

மருந்தாகும் பரங்கிப்பட் டையைநறுக்கி
சிறுநீரை வார்த்தூறச்செய்
திரண்டானாட் புகட்டிடவு மிதின்மேன்
மூன்றுநாளுக் கிசைமருந்து
பரிந்துகொள் சங்கதாரிப் பட்டை சங்கன்
பட்டையுடன் பார்த்துவாங்கு
கருஞ்சீர கத்தினையும் நறுக்கியதைச்
சிறுநீரிற் கலந்துவைத்தே. 119

வைத்தூற விட்டிறுத்து வைத்துக்கோ
ரோசனையும் வைத்துரைத்தே
பத்திரமா கப்புக்கட்டிப் பார்நாலா
நாளிலுள்ள பருவசம்புங்
குத்திடுகூர்ச் சங்கிலையுங் கூட்டிநறுக்
கிச்சிறுநீர் கொண்டூறச்செய்
தத்தினமே துவைத்துச்சாற் றைப்பிழிந்து
முறிச்சூட்ட லாம்நாற்போதே. 120

(இ-ள்) 2வது தினத்தன்று பறங்கிப்பட்டையைச் சிறு நீரில் ஊறவைத்து நாலுதடவை புகட்டவும்.

3வது நாளன்று சங்கம்பட்டை, செங்கதாரிப்பட்டை கருஞ்சீரகம் இவற்றைச் சிறுநீரில் நன்றாக ஊறவைத்து இடித்து வைத்துக்கொண்டு கோரோசனையும் கூடச் சேர்த்து உரைத்துப் புகட்டவும்.

*4வது நாளன்று சங்கன் இலை, வசம்பு இவைகளை நறுக்கிச் சிறுநீர் விட்டு ஊறவைத்து அதை நசுக்கி அந்தச் சாற்றைப் பிழிந்து முறித்து ஒரு நாளைக்கு 4 முறை புகட்டவும்.

---

**குறிப்பு:** *உலக வாசனையறியாப் பிள்ளையின் சிறுநீரை எடுத்துக்கொள்ளவும். 91. நெ சுவடியில் உள்ளியும் சேர்க்கப் பட்டிருக்கிறது.

## 83. குழந்தைக்கு மருந்து

ஆமஞ்சா நாளூசி மல்லிகையி
னிலைவசம்போ டாகுமுள்ளி
சேமஞ்செய் சிறுநீர்விட்டூறவைத்துச்
சாறுபிழிந் தேமுறிச்சுத்
தாமஞ்சா தூட்டிடவப் பாலாறா
நாளுள்ளி தான்வசம்போ
டேமஞ்சா ராதொண்டை யுள்ளிவசம்
பினைச்சிறுநீ ரினிற்றுவைத்தே. 121

துவைத்ததனை பிழிந்துமுறிச் சுங்கெடுத்தேழ்
தினத்தில்கருந் துழாய்வசம்புற்
பவித்திடுள்ளி வேளையிலை பறித்துமுறித்
துக்கொடுக்கப் பகலெட்டாகிற்
சிவத்திடுசெங் கத்தாரி யுள்ளிவசம்
பினைக்கூட்டிச் சிறுநீர்விட்டுத்
துவைத்துமுறிச் சுக்கொடுக்கச் சொல்லொன்ப
தாந்தினைந்தூ துவளையுள்ளி 122

உள்ளவசம் புடனேசெம் முள்ளிதேட்
கொடுக்கியிலை யுடன்றுவைத்து
மொள்ளுசிறு நீர்விட்டு முறித்தெடுத்துக்
கொடுத்திடவு மொழிபத்தாநா
ளுள்ளிவசம் போமமிள குள்ளதை யெண்
ணெயினறுக்கி யூறப்போட்டு
மெள்ளவுங்காய்ச் சியுமிறுத்துக் கொடுத்திடெனச்
சரபேந்திரர் விளம்பினாரே. 123

(இ-ள்) 5வது நாளன்று ஊசி மல்லிகை இலை, வசம்பு, உள்ளி இவைகளைச் சிறுநீர்விட்டு நன்றாக ஊறவைத்து, நசுக்கிச் சாறுபிழிந்து முறித்து, (அனலில் வைத்து) உள்ளுக்குப் புகட்டவும்.

6வது நாள் உள்ளி, ஆதண்டையிலை, வசம்பு இவற்றைச் சிறுநீரில் ஊறவைத்து, நசுக்கிப்பிழிந்து முறித்துக்கொடுக்கவும்.

7வது நாள் கருந்துளசி, வசம்பு, உள்ளி இவற்றோடு *வேளை இலையும் சேர்த்து முறித்துக் கொடுக்கவும்.

8வது நாள் செங்கதாரி இலை, உள்ளி, வசம்புஇவைகளைக் கூட்டிச் சிறுநீர் விட்டு நசுக்கிப் பிழிந்து முறித்துக் கொடுக்கவும்.

9வது நாள் தேள் கொடுக்கி இலை, தூதுவேளை இலை, செம்முள்ளி இலை, வெள்ளைப்பூண்டு, வசம்பு இவைகளைச் சிறுநீர் விட்டு நசுக்கிப் பிழிந்து முறித்துக் கொடுக்கவும்.

10வது நாளன்று மிளகு, உள்ளி, ஓமம், வசம்பு, இவற்றை எண்ணெயிலிட்டுச் சிவக்கக்காய்ச்சி இறுத்துக் கொடுக்கவும்.

### 84. ஷை குழந்தைகளுக்கு மருந்து

விளம்புபதி னோராநா ளீரவெங்கா
யந்துளசி விதமிரண்டும்
உள்ளங்கையினிலே கசக் கியெண்ணெயிலூ
றப்போட்டு முடனேகாய்ச்சி
யிளம்பதமா யிறுத்துக்கொ டுக்கவும்பன்
னிரண்டாநா ளினில்வெங்காயந்
தளந்தளமாய் முசுமுசுக்கை யிலைநறுக்கிப்
போட்டெண்ணெய் தன்னிற்காய்ச்சே. 124

எண்ணெய்தன்னைப் பதிமூன்றா நாட்புகட்டிக்
கோவையினல் லிலையினோடே
தண்ணீர வெங்காயந் தனைநறுக்கி
முன்னெண்ணெய் தன்னிற்காய்ச்சி

*வேளைக்கு பதில் :வட்ட கிலுகிலுப்பை இலை எண் 91 நெ சுவடி.யில் காணப்படுகிறது.

யெண்ணமுட னேகொடுநா ளீரேழிற்
றூதுவளை யிலையினோடே
யுண்ணீர வெங்காய மெண்ணெயி
லூறக்காய்ச்சி யூட்டலாமே. 125

ஊட்டுபதி னைந்தாநாள் வெங்காயம்
பழம்பாசி யுளவே ரெண்ணெய்
கூட்டுகொடு பதினாறா நாள்கீழ்க்காய்
நெல்லிவேர் தளிர்வெங்காயம்
போட்டுநறுக்கெண்ணெயிற் போட்டுக்காய்ச்
சியுமிதனைப் புகட்டென்றேசோ
ணாட்டரசர் சரபேந்திரர் நவிற்றுமுறை
புவித்தலத்தென் னாளும் வாழவே. 126

(இ-ள்) 11வது நாள் துளசியிலையும் ஈர வெங்காயமும் நறுக்கி இரண்டையும் உள்ளங்கையினால் நன்றாகக் கசக்கி எண்ணெயிலூறப் போட்டு அடுப்பின் மீதேற்றிக் காய்ச்சி இளம்பதமாக வடித்துக் கொடுக்கவும்.

12வது நாள் வெங்காயமும், முசுமுசுக்கை இலையும் நசுக்கிப் போட்டு எண்ணெயிலிட்டு இளம்பதமாக வடித்துக் கொடுக்கவும்.

13வது நாளன்று, கோவையிலை, ஈர வெங்காயம் நறுக்கி எண்ணெயிலிட்டு இளம்பதமாக வடித்துக் கொடுக்கவும்.

14வது நாள் தூதுவேளை இலையும், ஈர வெங்காயத்தையும் நறுக்கி எண்ணெயிலூறவைத்துக் காய்ச்சிக் கொடுக்கவும்.

15வது நாளன்று, பழம்பாசி வேரும், வெங்காயமும் எண்ணெயில் ஊறவைத்து வடித்துக் கொடுக்கவும்.

16வது தினத்தன்று, கீழாநெல்லி வேரையும் ஈர வெங்காயத்தையும் நறுக்கி எண்ணெயில் ஊறவைத்துக் காய்ச்சிக் கொடுக்கவும்.

குறிப்பு:

இம்முறைகளிலெண்ணெய் வருமிடங்களில் "ஆமணக் கெண்ணெயை" எடுத்துக்கொள்க.

## 10. முலைப்பால் சுரக்க மருந்துகள்

### 85. முலை சுரக்க மருந்து

கஞ்சாஇலை யையேழு தரம்வருத்துக்க
ருகாதெடுத்துப் பொடித்ததின்மேல்
விஞ்சுபனை வெல்லமும் வறுத்தவிரை
யெட்பொடிக ளிவைசமமாய்த்
தஞ்சமா யோர்பிடிய ளவுதா
னுண்டதன்பின் றயிரசனம்
வஞ்சியுண் டான்முலைசுரக்கு மக
வுண்டாடி மகிழ்ந்திடுமே. 127

(இ-ள்) கஞ்சாயிலையை வாணாயிலிட்டு ஏழுதடவை கருகாமல் திரும்பத்திரும்ப வறுத்து, அதேபோல் எள்ளையும் வறுத்து இவற்றிற்குச் சமமாகப் பனைவெல்லம் சேர்த்து நன்றாக இடித்து வைத்துக்கொண்டு, 1 பிடியளவு சாப்பிட்டு இதற்குத் தயிர்சாதம் சாப்பிடவும். இப்படிச் செய்தால் பால் நன்றாகச் சுரக்கும்.

### 86. முலைப்பால் சுரக்க மருந்து

நான்குதரத்தோ டாறுதர
நன்மீனதனைக் கழுவியதைத்
தானேயூற்றிப் பின்கழுவுந்
தண்ணீரதிற்பற் பாடகத்தை

பான்மையாக வேயரைத்துப்
பருகின்முலைப்பால் சுரந்துவரும்
மான் பானாஞ் சரபேந்திரம
சகிபனுரைத்த வாறிதுவே. 128

(இ-ள்) மீனை 4 முதல் 6 தடவை நீரதனைக் கொட்டிவிட்டு அதன்பின் கழுவிய தண்ணீரானால் பற்பாடகத்தை நன்றாகவரைத்துப் பருகினால், பிரஸவித்த ஸ்திரீக்கு முலைப்பால் சுரக்கும்.

## 87. பால் சுரக்க மருந்து

பாதிரிவே ரைப்பசுவின் பாலிலரைத்
தேயந்தப் பசுவின்பாலி
னத்துறவே சேர்த்தினிது விருப்பமுள
சர்க்கரையும் விரைவாய்க் கூட்டிக்
காதலுட னேபருகி வரக்கனத்த
முலைப்பால் மிகவுண்டாகும்
நீதியுயர்ந் தசரபேந்திரநிருப
னுரைத்த முறையிதுவே. 129

(இ-ள்) பாதிரி வேரைப் பசுவின் பாலிலரைத்து, நன்றாக அந்தப் பாலிலேயே குழப்பிச் சர்க்கரை சிறிது சேர்த்துத்தினந்தோறும் பருகிவர, முலைப்பால் அதிகமாக உண்டாகும்.

## 88. மாதா முலை சுரக்க மருந்து

குன்றியிலை முத்திருக்கஞ் செவியினிலை
யிவையிரண்டுங் குளிர்மோரிட்டு
நன்றாகவேயரைத்து அம்மோர்தனிற்
கலந்துண்ணி னயந்தாலம்பால்

கன்றாவின் பால்தனிற் பிரைக்குத்தி
வைத்ததயிர் கலந்தசனத்தோ
டன்றேதான் அருந்திடினும் பாலனருந்
திடமுலைப்பா லதிகமாமே. 130

(இ-ள்) (a) குன்றியிலையையும், முத்தெருக்கஞ் செவியின் இலையையும் குளிர்ந்த மோர் விட்டு நன்றாக அரைத்து அந்த மோரிலேயே குழப்பிச் சாப்பிட முலைப்பால் விருத்தியாகும்.

(b) கன்றுள்ள பசுவின் பாலில் ஆலம்பால் விட்டு உரைக்குத்தி வைத்துத் தயிரானபின் அதைச் சாப்பிட்டுவர முலைப்பால் அதிகமாகும்.

### 89. முலை சுரக்க மருந்து

பாதிரிவேர் மருதாணி வேரிவைக
ளிரண்டினையும் பரிந்தரைத்துச்
சேதாவின் பாலுடனே குடிக்கமுலை
சுரக்குமிது தினந்தானா மூன்றுங்
காதலுணர் விற்பருகக் காவிரிகங்
கையுமிதெனக் காணும்பாலக
னாதலினா லிம்மருந்தைப் பருகுமெனச்
சரபேந்திர ரருளினாரே. 131

(இ-ள்) பாதிரிவேர் மருதாணிவேர்

இவ்விரண்டு வேர்களையும் அம்மியின்மேல் வைத்துத் தண்ணீர் விட்டு நன்றாக அரைத்துச் சிவப்பு நிறப்பசுவின் பாலில் குழப்பிக் குடிக்கத் தாய்ப்பால் காவேரி, கங்கை இவைகளின் பிரவாகம் போன்று அதிகமாகும்.

## 90. முலை சுரக்கு மருந்து

பாதிரிவேர் கூவிளைவேர் தான்றியின்வேர்
மூன்றினையும் பசுவின் பாலின்
மாதரைத்துப் பருகவளப் புமுலைசு
ரக்குமா வாரைவேரின்
மேதியினல் வெண்டயிரை விட்டரைத்து
கொள்ளவுமே விம்மிவிம்மி
யாதரவால் பாலகருக் கமுதம்போல்
முலைசுரக்கு மரிவைமார்க்கே. 132

(இ-ள்) 1. பாதிரிவேர், வில்வவேர், தான்றியின் வேர் இம்மூன்றையும் பசுவின் பாலிலரைத்துத் தினந்தோறும் பருக முலைப்பால் சுரக்கும்.

2. ஆவாரை வேரை எருமைத் தயிர் விட்டு நன்றாக அரைத்துச் சாப்பிட்டாலும் முலைப்பால் விருத்தியாகும்.

## 91. முலை சுரக்க மருந்து

நெல்லிபருப் போர்பிடி யேலநிறுத்
தோர்பிடியு நெடிதரைத்துச்
சொல்லிச்செய் யிஞ்சிறுக டத்திற்தொகுத்
திட்டந்தத் தோண்டியினன்
னெல்லுக்கஞ் சிவடித்தி ரவினிறுத்தி
யன்னெற கஞ்சி.யினீர்
வெல்லத்த ரம்பைக்க னிபிசைந்துண்
விம்முலைப்பான் மிகச்சுரந்தே 133

(இ-ள்) ஒரு பிடி ஏலக்காய், ஒரு பிடி நெல்லிப்பருப்பு இவ்விரண்டையும் சேர்த்துத் தண்ணீர் விட்டு நன்றாக அரைத்து ஒரு புதிய மட்பாண்டத்தினுள் தடவி அதில் நெற்கஞ்சி வடித்து இரவு முழுதும் வைத்து, விடியற் காலத்தில் அக்கஞ்சியுடன் நல்ல

வெல்லம், வாழைப்பழம் இவை இரண்டையும் கூட்டிப்பிசைந்து கொடுக்க முலைப்பால் சுரக்கும்.

## 92. முலை சுரக்க மருந்து

குருந்தின்மேற் புல்லுருவி கொய்துபுன்னைக்
காயளவு கொண்டரைத்து
விரைந்தாவின் பாலாதல் வெள்ளாட்டுப்
பாலாதல் விட்டொன்றாகக்
கரைந்துவரச் செய்தெடுத் துக்கொடுக்க
முலைசுரக்குமெனக் கண்ணிரண்டாம்
புரந்தரனா கியசரப புண்ணியனார்
புகன்றமுறை யைப்புகழுவோமே. 134

(இ-ள்) குருந்தின் (காட்டு நார்த்தை அல்லது எலுமிச்சை) மேல் வளரும் புல்லுருவியைக் கொண்டுவந்து தண்ணீர் விட்டு அரைத்துப் புன்னைக் காயளவெடுத்துப் பசுவின் பாலிலோ அல்லது வெள்ளாட்டுப் பாலிலோ குழப்பிச் சாப்பிடத் தாய்ப்பால் விருத்தியாகும்.

## 93. முலை சுரக்க மருந்து

பாதிரியின் வடக்கேகும் பருவேரை
யெலுமிச்சம் பழச்சாறிட்டே
யாதாவி னாலரைத்துப் பசுவின்பா
லிற்கலந்து மளிக்கவேதான்
சூதளவா கியமுலைகள் சுரக்குமெனச்
சரபேந்திரர் தோணச்சொன்ன
மூதுரையா கியவிந்த வாகடநூ
லினையுகந்து மொழிதனன்றே. 135

(இ-ள்) பாதிரி மரத்தின் வடக்கே போகும் பருமனான வேரைக் கொண்டுவந்து எலுமிச்சம் பழச்சாறு விட்டு நன்றாக அரைத்துப் பசுவின் பாலில் கலந்து சாப்பிடத் தாய்ப்பால் சுரக்கும்.

## 11. முலைப்பால் குடியாத பிள்ளைகள் பால் அருந்த மருந்துகள்

### 94. முலையுண்ணாத பிள்ளைகட்கு

சதுரக்கள் ளியினடியின் முளைத்தபூண்
டினைக்காப்புச் சதுராய்க்கட்டி
யதின்வேரைக் கழுத்தினிற்கட் டவுமுலைப்பா
லுண்பதற்கே யாவலுண்டாம்
இதமுடனே தாரணியி லிருப்பவர்கள்
யாவர்கட்கு மியல்பதாக்
வதரபவ ளமலர்ந்து சரபேந்திர
மகராச ரருள்செய்தாரே. 136

(இ-ள்) சதுரக்கள்ளியினடியில் முளைத்த பூண்டு ஏதேனும் ஒன்றுக்கு காப்புக்கட்டி அதன்வேரை எடுத்துக் குழந்தையின் கழுத்தில் கட்டவும். குழந்தை முலைப் பாலுண்ணத் தொடங்கும்.

### 95. முலைப்பாலுண்ணாத குழந்தைகட்கு

அதிமதுரம் பசுவின்பா லதிலரைத்தா
கத்தினிலே யடைவாய்பூசி
யிதனைநெய் யிற்குழைத்துச் சேயின்றலையி
லேதடவி லினிதாயுண்ணு
மதிமதுர முலைப்பாலி லரைத்ததுள்ளுக்
குங்கொடுத்திட் டாலுமுண்ணும்
பதறாதிப் படிவுடம்பிற் பூச முலைப்
பாலுண்ணும் பரிசிதாமே. 137

(இ-ள்) (a) அதிமதுரத்தைப் பசுவின் பாலிலரைத்துத் தாயின மார்பிலெங்கும் பூசி, அதையே நெய்யில் குழைத்துக் குழந்தையின் தலையிலும் தடவினால் குழந்தை பால் குடிக்க ஆரம்பிக்கும்.

(b) அதிமதுரத்தை முலைப்பாலிலரைத்து உள்ளுக்குக் கொடுத்தாலும் பால் குடிக்கும். இதையே குழந்தையின் உடம்பிலும் பூசப் பால் குடிக்கவாரம்பிக்கும்.

## 96. முலைப்பால் குடிக்காத பிள்ளைகட்கு

முலைகுடியாப் பாலகர்க்கிந் துப்புப்பசு
மஞ்சள் முலைப் பாலைவார்த்து
நில்லாமலே யரைத்துநெய்யிற் குழைத்துமுலைக்
கண்ணிலிட நிதமுந்தானே
கலகலெனச் சலங்கையொலி காண்மடி
மீதிருந்து கைக்கொண்டுண்ணும்
நலஞ்செயுமிம் மருந்தினைச்செய் நாவிலிட
வுமுலைப்பா னாடுந்தானே. 138

(இ-ள்) இந்துப்பு, பசுமஞ்சள், இவ்விரண்டையும் முலைப்பால் விட்டுச் சிறிது அரைத்து நெய்யில் குழைத்துத் தாயாரின் ஸ்தனக்கண்களில் தினந்தோறுமிட்டுக் குழந்தையைக் குடிக்கச் செய்ய, அது பால் குடிக்க ஆரம்பிக்கும். இதையே குழந்தையின் நாக்கிலும் தடவலாம்

## 97. முலையுண்ணாப் பிள்ளைகட்கு

**முலையுண்ணாப் பிள்ளைகட்குத் தலைமயிரும்**
**மயிலிறகு முழுக்கச்சுட்டே**
**நிலைமையுட னேபொடித்து முலைப்பாலி**
**லேபுகட்ட நினைத்துக்கொண்டே**

குலவிமுலை தாவெனவே குடித்திடும்புத்
திரரெனவிக் குணங்கண்டேதான்
றலைமையுள்ள சரபேந்திரர் சாற்றுமுறை
நாற்றிசையுந் தழைக்குந்தானே. 139

(இ-ள்) தலைமயிரையும், மயிலிறகையும்,வாணாயிலிட்டுக் கருக வறுத்துப் பொடியாகும். இதைப் பாலில் கலந்து குழந்தைக்குக் கொடுக்கப் "பால்கொடு" எனக் கேட்கும்படியாகக் குழந்தை பால் குடிக்கும்.

## 12. குழந்தைகளுக்கு உண்டாகும் தோஷங்களுக்கு மருந்துகள்

### 98. குளிதோஷ மருந்து

வெள்வேல்வ டக்குப்போம் வேர்க்குமுத
னாள்காப்பு விழைந்துகட்டிக்
கொள்வாய்ப்ப லியுங்கொடுத்த தனைக்கொணர்ந்
துகாடி சேர்த்தரைத்து
உள்ளுங்கொ ளச்செய்பொட் டணங்கட்டு
டனேகாடியு றத்தோய்த்தும்
மெள்ளவா யிற்பிழிந்து டவுங்குளி
தோடந்தான் விட்டறுமே. 140

(இ-ள்) வெள்வேலம் வேர் வடக்கு நோக்கிப்போகும் வேருக்குக் காப்புக் கட்டிவிட்டு மறுநாள் பலிகொடுத்து அதைக் கொண்டுவரவும். இதை நசுக்கி ஒரு பொட்டணமாகக் கட்டிக் காடியில் தோய்த்துக் குழந்தை வாயில் பிழியவும். குளி தோஷம் தீரும்.

## 99. குழந்தைகள் தோஷங்களுக்கு மாத்திரை

சங்குசிறு செருப்படிவேர் தண்ணீர்மீட்
டான்கிழங்கு தானன்னாரி
யங்குசிறுகாஞ்சோறிவே ரைந்துள்ளி
நாலென்னு மளவதான
கொங்குமிள கிவையரைத்துக் கொண்டிதனை
மிளகளவாய்க் கொள்ளகொள்ள
மங்குமைந்தர் தோழம்பொ ருதேகவா
கறிந்துமாற் ரிரையையநல்கே. 141

(இ-ள்) சங்கம்வேர் சிறுசெருப்படிவேர்
தண்ணீர்விட்டான்கிழங்கு நன்னாரி
சிறுகாஞ்சோறிவேர்

இவைகள் வகைக்கு ஒரு கழஞ்சு

உள்ளி 5 கழஞ்சு மிளகு 4 கழஞ்சு

இச்சரக்குகளைத் தண்ணீர் விட்டு நன்றாக அரைத்து, மிளகு அளவாக உருட்டி நிழலில் உலர்த்திக்கொண்டு குழந்தையின் தேக வாகறிந்து ஜாக்கிரதையாக, மாத்திரையை உபயோகப்படுத்தப் பலவித தோஷங்களும் தீரும்.

## 100. தோஷத்தில் மலசலங்கட்டினால் மருந்து

உந்தாமணிச்சா றதனிற்றிப்
பிலியையுரைத்தே யுச்சிபிடரி
வேத்திட்டுசெம் முள்ளிகரு
முள்ளியுடனே வளர்கண்டங்
கத்தாரிவே ரரைத்துணவக்
கணமேதோடங் கன்மிடங்கள்
சித்தமிவைதான் சுத்தியதா
மென்றார்சரபேந் திரனாரே. 142

(இ-ள்) உத்தாமணிச் சாற்றினில் திப்பிலியை உரைத்து, தோஷமுள்ள குழந்தையின் தலையுச்சி, பிடரி முதலிய இடங்களில் தடவவும். உள்ளுக்குச் செம்முள்ளி, கருமுள்ளி, கண்டங்கத்திரி வேர் இவைகளைச் சமமெடுத்துத் தண்ணீரில் அரைத்து சாப்பிட, அந்த க்ஷணமே சகல தோஷங்களும், கன்மிடங்களும் தீரும். மலஜலம் விடும்.

## 101. எடுப்புத்தோட மருந்து

விடத்தேரை சீத்தையென வினவுமிரு
வகையான வேர்க்களினின்று
வடக்கெரிபாந் தூதுவளை வளவேரைத்
திங்களெனும் வாரங்காப்பு
திடத்துடனே கட்டியுஞ்செவ் வாய்க்கிழமை
பலியுடனே சிறப்புசெய் தூல
எடுப்புத்தோடந்தவிரு மென்றுசர
பேந்திரனா ரிசைந்தவாறே. 143

(இ-ள்) விடத்தேரைவேர், சீத்தைவேர் இதனருகிலிருந்து வடக்கே போன தூதுவளை வேர் இவைகளுக்குத் திங்கள்கிழமையன்று காப்புக் கட்டிச் செவ்வாய்க்கிழமை பலிகொடுத்து, அவைகளை வெட்டி வந்து குளிசம் செய்து தரித்துக்கொண்டால் எடுப்புத் தோடம் தீரும்.

## 102. எடுப்புத் தோடத்திற்கு மருந்து

முத்தெருக் கஞ்சிறுபூளைசீதவுரி
வேர்வெள்ளி முளைத்தபோதே
புத்திநிறை சந்திரற்குப் பொங்கலிட்டுத்
தேங்காயைப் புடைத்துடைத்து

தைத்ததுவேர் வெட்டிவந்து கன்னிகனி
யாப்பெண்டான் வருந்திநூற்ற
குத்திரமில் லாநூலாற் குளிர்சங்கட
டவுந்தோடங் குழைந்துபோமே. 144

போமேபுண் ணாக்குவேர் புலிதுடக்கி
வேரிதனைப் போற்றி வாங்கி
மாமேவில் லிற்கிரந்திவேல்சுத்தி
யாயதன்மேல் வைத்தபோதே
தாமேகி யம்மான்பச் சரிசிவேர்
சுத்திரண்டுந் தானொன்றாய்க்காச்சுத்
தோமெனவே குளிசங்கட் டிடப்பலிசெய்
யாண்பிள்ளைக் கொருபெண்கோழி 145

பெண்பிள்ளைக் கொருசாவல் பலியிட்டுக்
குளிசமிடப் பில்லித் தொட்ட
நண்புடனே மென்றினிதாய்த் தங்கள்சர
பேந்திரனார் கவிலாயுணு
லுண்மையிது கண்டவரே யுத்தமர்கள்
குத்திரத்தையுடனே தீர்க்குஞ்
திண்மையரென் றேயெவருஞ் சேர்த்திடுவா
ராம்பரிசு செப்பினோமே. 146

(இ-ள்) (a) முத்திருக்கஞ் செவிவேர்
சிறுபூளை வேர்
சீதவுரிவேர் (அவுரி வேர்)

இவைகளை அதிகாலையில் சந்திரனுக்குப் பொங்கலிட்டுத் தேங்காய் உடைத்த பின்பு, அவ்வேர்களை வெட்டி வந்து கன்னியாப் பெண் (சிறுமி) நூற்ற நூல்கொண்டு வந்து குளிசங்கட்டவும். தோஷங்கள் தீரும்.

(இ-ள்) (b) புலிதுடக்கி வேர் (இண்டு வேர்)
பிண்ணாக்குக் கீரை வேர்

இவ்விரண்டையும் முதலில் முறுக்கிக் கொள்ளவும். பின்பு, வில்லிகிரந்திவேர் (விஷ்ணுக்ராந்திவேர்) எடுத்து அதன்மேல் அம்மன் பச்சரிசி வேரைச் சுற்றிவிட்டு முதலில் முறுக்கி வைத்திருக்கும் வேரையும் இதனுடன் சுற்றவும். இதை "ஓம்" என்று சொல்லிக் குளிசமாக்கி ஆண்பிள்ளைக்கு ஒரு பெட்டைக்கோழியும் பெண்பிள்ளைக்குச் சேவலையும் பலிகொடுத்துத் தோடம் பட்ட குழந்தையைத் தரிசிக்கச் செய்யவும். தோடம் தீரும்.

### 103. திட்டிதோஷ பிராணிக்கு மருந்து

அச்சவகந்திக் கிராணியின்மஞ் சனத்தியிலை
யிரண்டுபிடி யரிந்துகொண்டே
யசமதா கங்கூடச்சேர்த் தொருபாண்
டத்தனலிட் டதைவறுத்து
நிசமாக வொருபடிதண் ணீர்விட்ட
துரிநீராய் நிற்கக்காய்ச்சி
வசம்போமந் திரிகடுகம் வண்காயம்
வெண்காரம் வறுத்திடித்தே. 147

இடித்துமிந்தக் கழாயத்தி னிடிதூளிட்
டேகுழம்பா மெனக்காய்ச்சி
யடுத்தந்தி சந்தியுமே மூன்றுநா
ளுணத்தோட மகலுமப்போ
தெடுத்தகழிச் சல்பொரும் லிரைச்சல்சீ
ரணமிதெலா மிராதுநன்றா
மடுத்துவந்தோ ரைக்காக்கு மண்ணல்சர
பேந்திரனா ரருள்செய்தாரே. 148

(இ-ள்) அச்வகந்தி (அமுக்கிராக்கிழங்கு)
மஞ்சனத்தி இலை (நுனா இலை) 2 பிடி
ஓமம்

இவற்றை ஒரு சட்டியிலிட்டு வறுத்து இதனுடன் 1 படி ஜலம் விட்டு 1/2 படியாக வற்றக்காய்ச்சி

வசம்பு
சுக்கு
திப்பிலி
வெங்காரம் (பொரித்தது)
ஓமம்
மிளகு
பொரித்த பெருங்காயம்

இவற்றை வகைக்கு 1/2 பலம் எடுத்து வறுத்துச்சூரணம் செய்து மேற்படி கஷாயத்திலிட்டுக் குழம்பாகக் காய்ச்சி

இதைக் காலையிலும் மாலையிலும் 3 நாள் கொடுக்கத் தோஷங்கள் தீரும். கழிச்சல், பொருமல், இரைச்சல் அஜீரணம் முதலியவைகளும் தீரும்.

**104. குளிதோஷத்திற்கு மருந்து**

வேலிப்பருத்தி யிலைகுப்பை
மேனியிலையுமே தண்ணீரால்
அங்கதனைப் பிசைந்தடைவாயங்
கைதனின் மங்கையரெடுத்து
கோலமடந்தை தலைதனினுஞ்
சொரியப்போமே குளிதோடம் 149

(இ-ள்) வேலிப்பருத்தியிலை குப்பைமேனியிலை

இவ்விரண்டையும் தண்ணீர்விட்டு நன்றாக அரைத்துப் பிசைந்து குழந்தையின் தலையிலும், அதன் தாயாரின் தலையிலும் சொரியக் குளிதோடம் தீரும்.

## 105. குளிதோடத்திற்கு மருந்து

வடக்கேபோஞ் சடைக்கஞ்சா வலுவேரைத்
தான்சுக்கிர வாரத்தேகுக்
குடத்தினையே பலிகொடுத்துக் கொள்வேரைக்
கோதையர்க்குக் குளிசமாய்க்கட்
டிடத்தினிலுங் குளிதோட மிராதெனவே
சரபேந்திர ரெடுத்துச்சொன்ன
வடக்கமுறை யறிந்தவரை நடத்தநலத்
தோரெனவே யறியலாமே. 150

(இ-ள்) வடக்கே போகும் சடைக் கஞ்சாவின் பருத்த வேரைச் சுக்கிரவாரத்தில் (வெள்ளிக்கிழமை) ஒரு கோழியைப் பலிகொடுத்துப் பின்பு பிடுங்கி அதை ஸ்திரீக்கும் குழந்தைக்கும் இடுப்பில் குளிசமாகக் கட்டக் குளிதோடம் தீரும்.

## 106. (a) பட்சி தோடத்திற்கு மருந்து

**விடத்தேரிலையும் படர்விழலின்
மிகுந்ததளிரு மேகறுக்கிக்
கொடுக்கவாங்கித் தலையுச்சி
குளிரப்பிழிந்தக் கோதினைப்பெண்
மடிக்குள்கட்டப் பொட்டணமாய்ப்
பறவைதோட மாறிவிடு
யிடைத்தட்டினிற் கட்டவுமினிதென்
றிசைத்தார்சரபேந் திரணாரே. 151**

**(இ-ள்) விடத்தேரி இலையும்
விழல் புல்லின் தளிரையும்**

**ஒரு சட்டியிலிட்டு நன்றாகக் கறுக்கித் தலை, உச்சி முதலிய இடங்களில் அதனுடைய சாற்றைப் பிழிந்து, பிழிந்த சக்கையைப் பெண்ணின் மடியில் கட்டினாலும் அல்லது குழந்தையின் இடையில் கட்டினாலும் பறவை தோஷம் மாறும்.**

## 106 (b) பட்சி தோடத்திற்கு மருந்து

கடுகுமிளகு கரிசாரங்
கண்ணிகீழ்காய் நெல்லியும்புள்
ளடியாவின்பால் வார்த்தரைத்தெண்
ணெயினிலிட்டாங் கருத்திடவே
மடும்மிதினிலாம் பாலகனுக்குப்
பட்சிதோடம் பறக்குமென்க
கடலின் கட்டிற் கழித்தெழுங்கா
விரிநாடாளுமன் கட்டுரையே. 152

(இ-ள்) கடுகு மிளகு
கரிசாரங்கண்ணி கீழாநெல்லி
சிறுபுள்ளாடி

இவற்றைப் பசுவின் பாலிலரைத்து நல்லெண்ணெயில் குழப்பிக் கொடுக்கப் பட்சி தோஷம் தீரும்.

## 107. பிள்ளை தேரை நோய்க்கு மருந்து நெய்

சிறுக்கீரை சவரிக்கொத் தோரிதழ்த்தா
மரைகோவை சிறுநெரிஞ்சி
கரிக்காகுங் கொடிப்பசளை யவுரிதூது
வளைவிட்டுணு கிரந்திசீந்தில்
முறைபொன்னால் காணிநிலக் குமிழ்முதிர்ந்த
செருப்படிமொய் முசுமுசுக்கை
தறைகாட்டு மல்லிகைமா தளைநெய்தல்
செங்கழுநீர் நரிப்பயிற்றை 153

நறுக்கெனுமுட் செம்முள்ளி பொடுதலைவல்
லாரைதா மரெதன்னாளமு
முறைக்குமுரு விலியிருபா னான்கினையுஞ்
சமூலமதா யுடனேகொண்டு

நறுக்கியதைத் தன்சாறாய் நற்பசுவின்
பாலிலிட்டு நன்றாகக்காய்ந்து
வரக்குழம்பாம் வரவறிந்து முன்னாழி
பசுவினெய்யும் வார்த்துத்தானே. 154

வரக்கொள்தே ரையுமந்து சீத்திநா
ணான்கையும் வருவித்தைந்து
வீக்கொல்லும் வெளவாலைந்து நிணத்துநண்டு
பதினைந்தோ டிவ்வாறைந்திற்
சேகரமா கியநிணத்தை வாங்கிமுன்பச்
சிலைசாரத் திட்டுக்காய்ச்சிப்
பாகுபத மசய்வரச்சே நெய்யிலிட்டுக்
காய்ச்சுபின்பு பசுமோரிட்டே 155

இட்டமுட னேதெளிக்கக் குபீரென்று
பொங்குமிதிற் கியல்பதாக
வெட்டிவேர் சந்தனமிவ் வகைக்கிக்கா
சடை நறுக்கி மீட்டவேதா
னொட்டிவா சனைகிளம்பு மொருபலஞ்சர்க்
கரைபோடத் தெளியும்பின்பு
மட்டமுருங் கையினிலையை யஞ்சுகூ
டப்போட்டு வடித்துக்கொண்டே. 156

கொண்டுதின மிரண்டுகா செடைகொடுக்க
வுந்தேரைக் கொடுநோய்தீரும்
உண்டியின் மிகவாசை யுண்டாந்தீ
பணமுண்டக முடல்பருக்கும்
மண்டலாதி பன்சரப மகிபதிதா
னுரைத்தவிந்த மகிமை நூலை
யெண்டிசையுங் கொண்டாடுஞ் சோழவள
நாட்டறிஞ ரினிதென்பாரே. 157

| | |
|---|---|
| (இ-ள்) சிறுக்கீரை | ஓரிதழ்தாமரை |
| சவரி (குறட்டை) | கோவை |
| கொடிப்பசளை | சிறுநெரிஞ்சில் |
| அவுரி இலை | பொன்னாங்காணி |
| தூது வேளை | நிலக்குமிழ் இலை |
| விஷ்ணு கிராந்தி | (செருப்படி சிறியது) |
| சீந்தில் கொடி | முசுமுசுக்கை |
| மாதுளை இலை | காட்டுமல்லிகை |
| நெய்தல் | உருவிலி (உருவலி) |
| செங்கழுநீர்க்கிழங்கு | நரிப்பயறுக்கொடி |
| முட்செம்முள்ளி | பொடுதலை |
| வல்லாரை இலை | தாமரைநாளம் (தண்டு) |

இந்த 24 சரக்குகளையும் சமூலமாக எடுத்துக் கல்லுரலிலிட்டு நன்றாக இடித்துச் சாறுபிழிந்து அந்தச்சாற்றிற்குச் சரியாகப் பசுவின் பால் கூட்டி அடுப்பின் மேல் வைத்துக் குழம்பாகக் காய்ச்சவும். பின்பு,

| | |
|---|---|
| தேரை | - 5 |
| வௌவால் | - 5 (ஈத்தின்னி வௌவால்) |
| நண்டு | - 15 |
| சீத்தியோணான் | - 5 (சினையுள்ளது) |

இவைகளின் கொழுப்பை எடுத்து முன்சொன்ன பச்சிலைக் குழம்போடு இட்டுக்காய்ச்சவும். இது பாகுபதம் வரும்போது 3 படி பசுவின் நெய்யைச் சேர்க்கவும். அப்பால் பசுமோரை அதில் தெளித்தால் குபீரென்று பொங்கும். அப்போது

| | |
|---|---|
| வெட்டிவேர் | சந்தனம் |
| சீரகம் | ஏலரிசி |

இவை வகைக்கு 1 காசிடை நறுக்கி (பால் விட்டு அரைத்துக் குழப்பி) எரிக்கவும். நன்றாக வாசனை கிளம்பும் போது 1 பலம் சர்க்கரையை அந்நெய்யிலிடத் தெளியும். பின்பு முருங்கை இலை

5 அல்லது 6 இலை கசக்கிப் போட்டுவடித்துக் கொள்ளவும். இதில் தினம் 2 காசிடை நெய் கொடுத்துவரத் தேரை தோஷம் தீர்த்து ஆகாராதிகளில் ஆசை, பசி முதலியவைகள் உண்டாகி உடல் பருக்கும்.

### 108. பிள்ளைகள் தேரைத் தோடத்திற்கு மருந்து

தேரையிரண்டு பொறிநண் டுசேர்ப்ப
திரண்டீத்தின் னும்வெளவா
லிரன்மூன்று நாக்கப்பூச் சியதொன்
றினிமி சிறுக்கீரை
வெறுவசம்பு வெண்காயம்வெண்
சாறணைவேர் கருஞ்சீரகம்
மீரப்பொன் னாங்காணி யின்வேரிதெ
லைஞ்சேர்த்தெண் ணெயிலெரித்தே 158

சேர்த்துள்ளுக்குங் கொடுத்துடம்பிற்றி
மிர்ந்துமுச்சிசீ சிகையிட்டும்
பார்க்கும்போதே யுடம்புலர்தல்
பசியாத்தாகம் பண்பாகா
தார்த்துவயிறு கழிதலிலை
யகலுமாரோக் கியமாமென்
றார்க்குமுனிய சரபேந்திரன்
பாலருளிச் செய்தனரே. 159

| | | |
|---|---|---|
| (இ-ள்) | தேரை | 2 |
| | பொரிநண்டு | 2 |
| | ஈத்தின்னி வெளவால் | 1 |
| | நாக்குப்பூச்சி | 1 |
| | சிறுகீரை | 1 வராகனெடை |
| | வசம்பு | 1 வராகனெடை |

| | |
|---|---|
| வெங்காயம் | 1 வராகனெடை |
| வெண்சாறணைவேர் | 1 வராகனெடை |
| பொன்னாங்காணிவேர் | 1 வராகனெடை |
| கருஞ்சீரகம் | 1 வராகனெடை |

இவைகளை நல்லெண்ணெயிலிட்டுப் பக்குவமாக எரித்து உள்ளுக்குக் கொடுத்தும், உடம்பிலும் பூசி, தலையுச்சி மயிர்க்கால் முதலிய இடங்களிலும் தேய்க்கவும்.

வயிறு கழிதல் தீரும். ஆரோக்கியமுண்டாகும்.

இதற்குத்தாயின் பத்தியம்:

சேர்க்கை, அகாலச்சாப்பாடு இவைகள் ஆகாது.

### 109. பக்ஷி தோஷத்தினாற் பச்சென்று கழித்தால் மருந்து

பக்கித்தோ டத்தினாற் பச்சென்று
கழியுமந்த பாலகர்க்கு
வொக்கும்வகை பிராய்துடரி களாவரப்
பூவாங்கொழுந்து மொன்றாய்ச் சேர்த்து
மிக்காவின் பாலாதல் வெள்ளாட்டுப்
பாலாதல் விட்டரைத்து
மக்கணமே கரைத்தருந்தச் சேயினுடனே
வயிறுவிட லகலுந்தானே. 160

(இ-ள்) பக்ஷி தோஷத்தினால் பச்சையாகக் கழியும் குழந்தைக்குப் பிராய்க்கொழுந்து, தொடரி (இண்டு)க் கொழுந்து, களாக்கொழுந்து வரப்பூலாக் கொழுந்து இந்த மருந்துகளைச் சமமாக எடுத்துக்கொண்டு வந்து பசுவின் பாலிலோ அல்லது வெள்ளாட்டுப் பாலிலோ நன்றாக அரைத்து அப்பாலிலேயே கரைத்துச் சாப்பிட வயிற்றுப் போக்கு உடனே நிற்கும்.

## 110. குருவித் தோடங்களுக்கு

ஆதிவாரத்தாதல் வெள்ளிவாரத்
தாதல்சிறு புள்ளடிக்கு மருணன்றோன்றும்
போதினிலே காப்புக்கட் டியுமேயந்திப்
பொழுதினிலே பிடுங்கிவந்து புதல்வர்மார்பி
லாதரவாய்க் கட்டவுந்தா யார்க்கவ்வேரை
யழகுகுளி சமதாக வணிந்துமிண்டைக்
கோதில்வே ரையுங்குளிச மாக்கட்டிற்
குருவித்தோ டங்களெல்லாம் குலைந்துபோமே.

(இ-ள்) ஞாயிற்றுக்கிழமையிலோ அல்லது வெள்ளிக்கிழமையிலோ சூரியோதய காலத்தில் சிறுபுள்ளடி வேருக்குக் காப்புக்கட்டிச் சாயங்காலத்தில் பிடுங்கிவந்து குழந்தை மார்பில் கட்டினாலும், தாயாருக்குக் குளிசமாகக் கட்டினாலும், அல்லது இண்ட வேரைக் குளிசமாக அணிந்தாலும் குருவித் தோடங்கள் தீரும்.

## 111. குருவித்தோடங்களுக்கு

தண்ணீர்கு டித்துவாய் மெல்லுமெந்தத்
தோடங்க டவிர்ந்திடவே
பண்ணுபுங் கவேர்கு ளிசமாடிக்
கட்டம் பரிந்துமவ்வேர்
வண்ணவுடம் பிற்றுவளை யிட்டாவாரை
வரப்பூலாங் கொழுந்துந்தான்
வெண்ணெய னலிலிட்டு ணவசம்பு
மிடுதூது வளைவெண்காயம் 162

காயஞ்சிறு புள்ளடிசின் னியிலையும்
வசம்புங் கைகொண்டு
சாயங்கா லத்தினின றுக்கித்த
னதுமடிக்கோர் சலாவிரித்து

சேயையத னிற்கிடத்தி யதன்தேக
மெங்குந்து வளையிட்டு
வாயிறனி லம்மருந்து சிந்தாமன்
னாற்சந்தி வழிவிட்டே. 163

வரவுமிருபச் சிலையுள்ளி
வசம்பும்வளம தாய்நறுக்கிப்
பிழிவிற்பிழிந்துச் சியிற்றேய்த்தும்
பருகநாலு காசளவு
விரைவிற்கட்டி கையிற்பொட்
டணமுங் கட்டிவிடவே
சுரமார் நெல்லிக் கனிபோலக்
காணுமிதுகை கண்டதுவே. 164

(இ-ள்) தண்ணீர் குடிக்கும், வாய் மெல்லும். எவ்வித தோஷங்களுக்கும்,

(a) புங்க வேரைக் குளிசமாகக் கட்டத்தீரும்.

(b) உள்ளுக்கு மருந்து:

| | |
|---|---|
| ஆவாரைக்ககொழுந்து | வரப்பூலாக்கொழுந்து |
| வசம்பு | தூதுவளை |
| உள்ளி | |

இவற்றைப் பசு நெய்யில் எரித்துக் கொடுக்கவும்.

| | |
|---|---|
| (c) சிறுபுள்ளடி | சின்னி இலை |
| உள்ளி | வசம்பு |

இவைகளை வெண்ணெயுடன் குழப்பி அடுப்பின் மேலேற்றி நெய்யாகக் காய்ச்சிக்கொண்டு துவளையிடவும்.

(d) மடியில் புடவையை விரித்துப் போட்டுப் பிள்ளையை மடியில் கிடத்தி உடம்பெல்லாம் ஷ நெய்யைக் கொண்டு

---

*இங்கு கொடுத்திருக்கும் உரை 91 நெ. சுவடியைத் தழுவி.யது. செய்யுளில் புங்கம் வேரைத் துவளையிடும்படிக்கும், ஆவாரை, வரப்பூலாவை நெய் காய்ச்சிக்கொடுக்கும்படிக்கும் சொல்லப்பட்டிருக்கிறது. வசம்பு, தூதுவளை, உள்ளியுடன் காயமும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

துவளையிட்டு மருந்தைக் கீழே சிந்தாமல் கூட்டிப் புடவையுடனே பிடித்துக்கொண்டுபோய் நாற்சந்தியில் (நான்கு வீதிகள் சந்திக்குமிடம்) உதறிவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் வரவும்.

(e) மேற்சொன்ன இரு பச்சிலைகளுடன் உள்ளியும் வசம்புங் கூட்டி நறுக்கிச் சாறு பிழிந்து உச்சியிலும் தேய்த்து உள்ளுக்கும் நாலுகாசளவுக்குச்சாறு புகட்டவும். கையில் பொட்டணமாகக்கட்டவும். கைகண்டது. குருவித்தோஷங்கள் தீரும்.

### 112. குருவித்தோடத்திற்கு மருந்து

வரச்சுண்டி யம்மான்பச் சரிசிவேரை
வசம்புள்ளி யுடனறுக்கி வாய்பேசாமல்
தருக்கியுண்ணக் குருவிதோ டங்களெல்லாஞ்
சாராதென் றேசரப சதுரர்சொன்ன
திருத்தியதாம் வாகடநூ லுரைக்கவல்லோர்
திவாகரசூ ளாமணிகள் செய்யுட்கோவை
வருக்கவிலக் கண்மைந்துங் கற்றுணர்ந்த
வரகவிக ளெனவுலகோர் மதிப்பர்தாமே. 165

(இ-ள்) வாய் பேசாமல் அம்மான் பச்சரிசிவேரும், வரட்சுண்டி வேருங்கூட்டி, உள்ளி வசம்பும் கூடச்சேர்த்து நறுக்கிக் கொடுக்க குருவித் தோடங்கள் தீரும்.

## 13. குழந்தைகள் கக்குவானுக்கு மருந்துகள்

### 113. குழந்தைகள் கக்குவானுக்கு

குட்டிவிளா களிபாக்கு கூறுநெய் கொட்
டான்பழமுங் கொடுவெந்நீரில்
அட்டுணச்சேம் முப்பிறைகண் டெழுங்கக்கு
வானேழுநா ளினிற்போமென்றுங்

கட்டளைசெய் திடுசரப காவலர
வர்கடங்குட கீழ்கடறென்கன்னி
யிட்டவட வேங்கடமா லெல்லையப்பா
லுமிசைபெற் றிருக்குந்தானே.

(இ-ள்.) குட்டி விளா களிப்பாக்கு
நெய்க்கொட்டான்பழம் (பூவந்தி)

இவற்றை (சமமெடுத்து) வெந்நீரில் அரைத்துக் கொடுக்கவும். மூன்று பிறைகள் வரை வருத்தும் கக்குவான் 7 நாளில் தீரும்

**114. கக்குவானுக்கு மருந்து**

உரியடா தோடைச்சா றுடனேதான்
தூதூவிளம் பழச்சாறுந்தான்
உரிப்பசுவின் நெய்யினிலீத் தின்னும் வெளவா
லொருபது கற்கடசிங்கி
திரிகடுகு திரிபலையிந் துப்புசிறு
தேக்கிதெல்லாஞ் சேரக்கொண்டே
யொருவகைக்கோர் காசினெடை கண்டங்கத்
திரிவேரோ டுறவேகாய்ச்சி. 167

காய்ச்சிவடித் துக்கொடுக்கக் கக்குவா
னிருமலெல்லாங் கடுகத்தீரும்
பேச்சாயுண்ணு மூமத்தங் காய்விரையைப்
போக்கியுப்புப் பெய்தரைத்திட்
டேச்சுதலின் றிச்சேலை மண்செய்திட்
டேபுடமிட் டெடுத்திட்டுப்புக்
காய்ச்சக்கடுக் காய்பொடிகா சிடைவகைக்குக்
கலந்துணப்போங் கக்குவானே. 168

(இ-ள்) ஆடாதோடைச்சாறு உரி (1/2 படி)
தூதுவிளம்பழச்சாறு உரி (1/2 படி)

| | |
|---|---|
| பசுவின் நெய் | உரி (1/2 படி) |
| ஈத்தின்னி வெளவால் | 10 |
| கற்கடசிங்கி | சுக்கு |
| மிளகு | திப்பிலி |
| கடுக்காய் | நெல்லிக்காய் |
| தான்றிக்காய் | இந்துப்பு |
| சிறுதேக்கு | |

*இவை வகைக்கு ஒரு காசெடை

கண்டங்கத்திரி வேரும் கூடப்போட்டு இடித்து மேற்சொன்ன சாறுகளில் ஏதேனும் ஒன்றுவிட்டு அரைத்து நெய்யுடன் கலந்து எல்லாவற்றையும் அடுப்பின் மீதேற்றிப் பக்குவமாக வடித்துத் தினமும் (2 வேளை) கொடுக்கக் கக்குவான் இருமல் தீரும்.

(2) ஊமத்தங்காயைக் குடைந்து உள்ளிருக்கும் விரைகளை நீக்கி இதில் உப்பைத் திணித்துச் சேலைமண் செய்து புடம் இட்டு எடுத்து,

கடுக்காய்த்தூள் காசெடையும், மேற்சொன்ன ஊமத்தை உப்பு ஒரு காசெடையும் கொடுக்கக் கக்குவான் தீரும். சோதனைக்குக் கைகண்டது.

### 115. கக்குவானுக்கு மருந்து

கொன்றையா வாரம்பட்டை தூதுவேளை
கொடிகள்வேரிக் கொள்ளும்வெளவா
லொன்றுளுவ ரம்பூவுள்ள நாக்கம்பாம்
பொன்றிந்த வகைகளோரைந்து
மன்றுநல் லெண்ணெய்தன்னி லிட்டெரித்து
மாற்றிநக்க வுங்கக்குவானு
மின்றகல்வோ மென்றெண்ணி முப்பிறைகண்
டிட்டதுபோ துமென்றழுமே. 169

*காசெடை - வராகனெடை

(இ-ள்) கொன்றைப்பட்டை ஆவாரம்பட்டை
தூதுவேளைவேர் ஈத்தின்னி வெளவால்

நாக்கப்பாம்பு (மண்புழு) இவைகளை எடுத்து நல்ல எண்ணெயிலிட்டு பக்குவமாக எரித்து (அதை ஒரு காசெடை வீதம்) கொடுக்கவும். "மூன்று பிறைகள் கண்டது போதும் இன்றே அகல்வோம்" என்பது போலக் கக்குவான் தீரும்.

## 14. குழந்தைகள் கணச்சூட்டுக்கு மருந்துகள்

### 116. கணத்தெண்ணெய்

கடுக்காய்தான்பதினைந்துங் காசிரண்டு
கார்போக வரிசிகாசொன்
றெடுத்திடுசண் பகப்பூசா திக்காயும்
வகையொன்றுக் கேயைங்காசு
கடுகரோ கணிதான்காற் பணங்கருஞ்சீ
ரகமிலவங் கப்பூவுக்கும்
மிடுவகைக் கிருகாசு மேலங்கா
கொன்றுவசம் பிருகாற்காசே. 170

காசுநான் குள்ளியது காசரையாம்
நெல்லிமுள்ளி காசுமூன்றே
பேசும்வலம் புரிக்காய்க்குப் பிறகுநற்சீ
ரகத்திற்கும் பேசீர்காசு
மேசில்வகை பதிமூன்று மெடுத்துநறுக்
கிப்பொடிசெய் திதனையெல்லா
மாசில்கல சத்திலிட்டா மணக்கெண்ணெய்
முச்சேர்நால் வார்த்திட்டேதானே 171

இட்டுநல்ல பட்டையெ னிலேமலநாற்
றங்களிது வேயெழும்புங்
குட்டிவேலாம் பட்டைகுறு கநறுக்கி
யுமூறக் கூடப்போட்டுங்

கட்டளையாய் நாள்நால தஞ்சினிலே
வெய்யிலினைக் காணவைத்தே
திட்டமுட னேயெடுத்துக் கொடுத்திடென்று
சரபேந்திரர் செப்பினாரே. 172

| | | |
|---|---|---|
| (இ-ள்) | கடுக்காய்த்தோல் | 17 காசெடை |
| | கார்போகரிசி | 1 காசெடை |
| | *சண்பகப்பூ | 5 காசெடை |
| | ஜாதிக்காய் | 5 காசெடை |
| | கடுகுரோகிணி | 1/4 பண எடை |
| | கருஞ்சீரகம் | 2 காசெடை |
| | கிராம்பு | 2 காசெடை |
| | ஏலக்காய் | 1 காசெடை |
| | வசம்பு | 1/2 காசெடை |
| | வெள்ளைப்பூண்டு | 4 காசெடை |
| | நெல்லிமுள்ளி | 1/2 காசெடை |
| | வலம்புரிக்காய் | 3 காசெடை |
| | சீரகம் | 2 காசெடை |

இந்தப் பதின்மூன்று சரக்குகளையும் எடுத்து நசுக்கிக் கல்லுரலிலிட்டு இடித்துப் பொடிசெய்து, யாவற்றையும் ஒரு கலசத்திலிட்டு 3 அல்லது 4 சேர் விளக்கெண்ணெய் விட்டு மூடி வைக்கவும். பிறகு பீனாறிப்பட்டை,. குட்டி வேலம் பட்டை இவ்விரண்டையும் சிறு சிறு துண்டுகளாக நறுக்கி மேல்சொன்ன எண்ணெயில் போட்டு 4 அல்லது 5 நாளைக்கொருதரம் வெய்யிலில் சூரியபுடம் வைத்து, இறுத்துத் தினம் ஒரு காசிடை வீதம் கணச்சூட்டிற்குக் கொடுக்கவும்.

* 91 நெ சுவடியில் 2 காசெடை என்று காணப்படுகிறது.

## 117. கணத்தெண்ணெய்

பத்தெலுமிச் சம்பழச்சாற் றிரண்டுசேர்
விளக்கெண்ணெய் பல்லாகைக்குச்
சுத்தமுடன் கற்றாழ மடலஞ்சின்
சோறெடுத்தச் சோற்றிலொன்றே
முத்துக்கடுக் காய்பொடியிட் டுப்பிசறி
வைக்கில்தின முறியுந்தண்ணீர்
அத்தையுங்கூ டவும்விடவெந் தயங்காசு
மிரண்டுவசம் பரைக்காசாமே. 173

ஆமிரவெங் காயங்கா சொன்றுவெள்
ளுள்ளியது வுங்காசொன்
றேமணச்செண் பவித்துவுக் கொருகாசு
கோட்டத்துக் கிரண்டுகாசு
தாமதியா ததிமதுரந் தனக்கிருகா
சதிவிடையந் தனக்கீர்காக
காமர்கொள் ளுஞ்சாதிப் பத்திரிகா
சொன்றொருகாசு கடுக்காய்தானே. 174

கடிதுடன்தான் றிக்காயோர் காசிலவங்
கப்பட்டை காசொன்றாகுங்
கொடுசிறுநா கப்பூவுக் கோர்காசிப்
பதின்மூன்றுங் குணமாய்க் கொண்டே
பொடிசெய்திட் டுமெழுகு பதமாக
வேயெரித்தப் போதுதானே
வடிகொண்டு மேன்பொடிசெய் சாதிக்கா
யுங்காற்ப ணமாய்வாங்கே. 175

ஏலமில வங்கங்குங் குமப்பூகோ
ரோசனையென் றியம்பாநின்
நாலுவகைக் கும்வகைக்கு நல்கரைக்காற்
பணஞ்சரக்கை நன்றாய்த்தூள்செய்

தாலதனை மென்பொடியிட் டக்கணமே
கணைநோய தாலுலர்ந்த
பாலகர்குக் கருள்சகல சூடுகள்போங்
கைகண்டார்ப் பத்தியமின்றே. 176

பத்தியுடன் கொளுமாதர் கருங்கிரந்திப்
பிணிதீரும் பாலருண்டாந்
தந்தைகளைந் தாமாதந் தானேழு
மாதமொன்ப தாமாசத்தில்
வைத்துணவுங் கரப்பான்பண் டத்துடனே
வாயுபதார்த் தங்களாகா
தித்திரஞ்செய் தார்சவுக்கி யமென்றார்கை
கண்டசர பேந்திரர்தாமே. 177

(இ-ள்) பத்து எலுமிச்சம்பழங்களை அறுத்துப்பிழிந்து அவைகளின் சாற்றை எடுத்து வைத்துக்கொள்ளவும். பின்பு 5 கற்றாழை மடலைக் கொண்டுவந்து மேல் தோலை நீக்கி உள்ளிருக்கும் சோற்றைத் தனியாக எடுத்துக் கடுக்காய்பொடி தூவிப் பிசறி வைக்கவும். அப்போது அதனின்று சாறு வரும். அந்தச்சாறு முழுவதையும் முன் எலுமிச்சம் பழச்சாற்றோடுக் கூட்டிக்கொள்ளவும். ஆமணக்கெண்ணெய் 2 சேர் சேர்த்து

| | |
|---|---|
| வெந்தயம் | 2 காசு எடை |
| வெள்ளை வெங்காயம் (பூண்டு) | 1 காசு எடை |
| வெங்காயம் | 1 காசு எடை |
| கடுக்காய் | 3 காசு எடை |
| வசம்பு | 1/2 காசு எடை |
| சண்பகவித்து | 1 காசு எடை |
| கோஷ்டம் | 2 காசு எடை |
| அதிமதுரம் | 2 காசு எடை |
| அதிவிடையம் | 2 காசு எடை |
| சாதிபத்திரி | 1 காசு எடை |
| தான்றிக்காய் | 1 காசு எடை |
| லவங்கப்பட்டை | 1 காசு எடை |
| சிறுநாகப்பூ | 1 காசு எடை |

இப்பதின்மூன்று சரக்கையும் பொடி செய்து போட்டு மெழுகு பதமாக எரித்து வடித்துக்கொண்டு

| | |
|---|---|
| சாதிக்காய் | 1/4 பண எடை |
| ஏலக்காய் | 1/8 பண எடை |
| கிராம்பு | 1/8 பண எடை |
| குங்குமப்பூ | 1/8 பண எடை |
| கோரோசனை | 1/8 பண எடை |

இந்த 5 சரக்குகளையும் பொடி செய்து எண்ணெயிலிட்டுக் குலுக்கி வைக்கவும். கணச்சூட்டினால் மெலிந்த பிள்ளைகளுக்கு இருக்கும் சகல சூடுகளும் தீரும். இச்சாபத்தியம்

ஸ்திரீகள் சாப்பிடக் கருங்கிரந்தி நீங்கும். பிள்ளையுண்டாகி இருக்கிறவர்களுக்கும், 5ஆம் மாதம், 7ஆம் மாதம், 9ஆம் மாதத்தில் கொடுக்கவும், கரப்பான் பதார்த்தங்களும், வாயு பதார்த்தங்களும் நீக்கிச் சௌக்கியமாக இருக்கவும். கைகண்டது.

குறிப்பு: கரப்பான் பதார்த்தங்களாவன: சோளம், கம்பு, வரகு, கார் அரிசி, வாழைக்காய், பாகல்காய், கெளுத்திமீன், கத்தரிக்காய் முதலியன.

## 118. கணத்தெண்ணெய்

அறுபதாங் கொட்டையெண்ணெய் யறுநாழி
கற்றாழை மடல்பத்தச்சாற்
றுறவிரண்டு கடுக்காயைப் பொடித்திட்டூ
றியநீரை யுடன்கொண்டெண்ணெய்
நிறையாக விட்டெலுமிச் சம்பழச்சாற்
றினைமுச்சேர் நிறையாய்விட்டுக்
குறையாமற் சாதிக்கா யொன்றுடன்கால்
பணங்கொள்வாய் குங்குமப்பூ 178

பூவிலங் கம்பணங்கால் புதுலவங்கப்
பட்டைக்குப் போடீர்காசு
கோவுளகோ ரோசனையைக் கொண்டரைக்காற்
பணங்கோட்டங் கொள்வோர்துட்டே
தாவுள்ளசா தியினற்பத் திக்குக்காற்
பணமாந்த ரும்வசம்புக்
கேவொருகா சதிமதுரத் திடுவரைக்காற்
பணமுள்ளிக் கிரண்டுகாசே. 179

காசிரண்டு சிறுநாகப் பூவிரண்டு
காசுசெண்ப கப்பூத்தானும்
பேசிலதி விடையமரைக் காற்பணந்தான்
றிக்காயும் பெசீர்காசிட்
டாசையுட னேவாங்கி யதைப்பொடித்திட்
டீரவெங்காய த்தைத்தானுங்
காசிரண்டுக் கேவாங்கித் துவைத்தந்தச்
சாற்றினையுங் கலந்துதானே. 180

கலந்துள்ளி யிரண்டுகா செடைநறுக்கிப்
போட்டுப்பின் காய்ச்சிமெள்ள
விலங்கியநன் மெழுகுபத மாயிறக்கி
வடிகோளவு மிருபோதுந்தான்
நலங்கிளர வேபுசிக்கில் வாயுபதார்த்
தந்தவிர்த்து நற்புளிப்புப்
பலகார மாய்ப்புசிக்க லாகுமென
நோயாளற் கருள்செய்வீரே. 181

செய்யுமுட்ட ணமனைத்துந் தீர்க்குங்கை
காலெரிவு தீர்க்குந்தீராப்
பெய்யுமேகப் பிணியும்பெருக் குமுடலிளைத்தி
டச்சேய்பி ணியுந்தீர்க்குங்
கையினாம லகமென்னக் கண்டுகந்து
கற்றவர்கள் களிக்கும்வண்ணம்
வையகத்தின் மகிழ்ந்துரைக்கும் மகராசா
சரபேந்திரர் வசனந்தானே

(இ-ள்) அறுபதாங்கொட்டை (ஆமணக்கு விதையின்)

| | |
|---|---|
| எண்ணெய் | 6 நாழி |
| கற்றாழை மடல் பத்தின் சோற்றைத் தனியாக எடுத்துக் கடுக்காய்த்தூள் பிசறியபின் அதினின்று வரும் சாறு | 6 நாழி |
| எலுமிச்சம்பழச்சாறு | 3 சேர் |
| சாதிக்காய் | 1 பலம் |
| குங்குமப்பூ | 1/4 பலம் |
| கிராம்பு | 1/4 பண எடை |
| லவங்கப்பட்டை | 2 காசு எடை |
| கோரோசனை | 1/8 பண எடை |
| கோஷ்டம் | 1 துட்டெடை |
| சாதிபத்திரி | 1/4 பண எடை |
| வசம்பு | 1 காசு எடை |
| அதிமதுரம் | 1/8 பண எடை |
| வெள்ளைப்பூண்டு | 2 காசு எடை |
| சிறுநாகப்பூ | 2 காசு எடை |
| சண்பகப்பூ | 2 காசு எடை |
| அதிவிடையம் | 1/8 பண எடை |
| தான்றிக்காய்த்தோல் | 2 காசு எடை |

இவைகளைக் கல்லுரலிலிட்டு நன்றாகப் பொடி செய்து வைத்துக்கொண்டு, ஈர வெங்காயம் 2 காசிடை எடுத்து அதை நசுக்கி அதன் சாற்றையும் கலந்து வெள்ளைப்பூண்டு இரு காசெடையும் நறுக்கிப்போட்டு மேல் சொன்ன எண்ணெய், சாறு, பொடி எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து அடுப்பின் மேலேற்றி மெழுகு பதமாக எரித்து இறக்கவும்.

இதைத் தினந்தோறும் இருபோது உட்கொள்ளவும்.

**பத்தியம்**: வாயு பதார்த்தங்களை நீக்கி, உப்பும், புளிப்பும் கூட்டவும்.

**தீரும் வியாதிகள்:**

உஷ்ணம் தீரும். கைகால் எரிவு தீரும். மேக ரோகங்கள் நீங்கி உடல் இளைத்த குழந்தை பெருக்கும். இன்னும் பல வியாதிகள் தீரும்.

### 119. கணச்சூட்டிற்கு முலைப்பாலெண்ணெய்

இண்டிலைச்சா றுடன்முலைப்பா லீரவெங்கா
யச்சாறு மவைகலந்து
[illegible]யா மணக்கெண்ணெய் கூட்டிப்பக்
குவந்தானே கொள்ளக்காய்ச்சி
யுண்டிடச்செய் கணந்தீரு மென்றுசர
பேந்திரணா ருண்மையாக
வெண்டிசையு மறியும்வண்ண மியம்பினா
ரிம்முறையி னியல்பினாலே. 183

(இ-ள்) இண்டுஇலைச்சாறு முலைப்பால்
வெங்காயச்சாறு ஆமணக்கெண்ணெய்

இவைகளைச் சமமெடுத்து ஒன்றுகூட்டி அடுப்பின் மீதேற்றிப் பக்குவமாக வடித்துக் குழந்தைக்கு கொடுத்து வரக் கணச்சூடு தீரும்.

### 120. முலைப்பாலெண்ணெய் (வேறு)

ஆமெருகங் கிழங்குடனே சிறுமுகந்திப்
பிலிதேவ தாரம்யாவும்
தாமதமில் லாமலொரு சரக்கினுக்கு
முக்கழஞ்சு தாகக்கூட்டிச்
சேமமுட னேயரைத்து வடித்துமிடச்
சீதசுரந் தீருமென்றே
மாமகிபர் சரபேந்திரர் வசனித்தார்
நோயற்று வாழத்தானே. 184

(இ-ள்) மெருகங்கிழங்கு சிறுமுகம் (இம்பூராவேர்)
திப்பிலி தேவதாரம்

இவைகளை வகைக்கு 3 கழஞ்சு வீதம் எடுத்துத் தண்ணீர் விட்டு அரைத்து முலைப்பாலும், ஆமணக்கெண்ணெயும் சேர்த்து (வகைக்கு ஒரு சேர்) அடுப்பின் மீதேற்றிப் பக்குவமாய் வடித்துச் சாப்பிடவும். சீத சுரம் தீரும்.

## 121. பிள்ளைகளுக்குக் கனம், அக்கரக்காய்ச்சல் குளிர் இவைகளுக்கு மருந்து

திருமணைந்து பலங்கள்பருத் திப்பருப்புப்
பலமைந்து சீரகந்தான்
இருபலஞ்சந் தனமுமிரு பலநன்னாரி
யின்வேர்நா யுருவியின்வேர்
கிரந்திநா யகங்கீழ்க்காய் நெல்லிசமூல
முங்கிறையங் கொள்பலந்தான்
ஒருமூன்று பலங்கடுகு ரோகிணிகோ
ரோசனையு மோர்பலமே. 185

**குறிப்பு:** அடுத்த ஏடு சுவடியில் காணப்படாததால் அடியில் கண்ட உரை 91 நெ. சுவடியிலிருந்து கொடுக்கப்பட்டிருக்கிறது.

அக்கரக்காய்ச்சல் - வாய்ப்புண்ணுடன் கூடிய ஜ்வரம்

| | | |
|---|---|---|
| (இ-ள்) | திருமண் (நாமக்கல்) | 5 பலம் |
| | பருத்திப்பருப்பு | 5 பலம் |
| | சீரகம் | 2 பலம் |
| | சந்தனம் | 2 பலம் |
| | நன்னாரிவேர் | 3 பலம் |
| | நாயுருவி வேர் | 3 பலம் |
| | கிரந்திநாயகம் (சிலந்திநாயகம்) | 3 பலம் |
| | கீழாநெல்லி சமூலம் | 3 பலம் |

| | |
|---|---|
| கோரோசனை | 1 பலம் |
| ஆமையோடு | 1 பலம் |
| கடுகுரோகிணி | 2 பலம் |

இவைகளைக் கற்பூரவல்லிச்சாறு விட்டரைத்துக் குன்றிமணி அளவு உருட்டி நிழலில் உலர்த்திக்கொண்டு கற்பூர வல்லிச்சாற்றில் கொடுத்திட

| | |
|---|---|
| மாந்தம் | கணம் |
| அக்காரக்காய்ச்சல் | |

இவைகளெல்லாம் தீரும்.

### 122. பூச்சிக்கு மருந்து, கணத்திற்கு மருந்து

நன்னாரி வேர் வெளிச்சைப் பிசின்வகைக்கோர்
வராகனிடை நன்றாய்க்கொண்டே
மின்னாவின் வெண்ணெயெ லுமிச்சங்கா
யளவு கொண்டு வேறேவைத்து
டுண்ணோயி ரண்டுகடுக் காயிட்ட
ரித்திடெருக் கின்பழுப்பை
யன்னாளாதொட் டேழுந்நாள் நசியஞ்செய்
திடப்பூச்சி யகன்றுபோமே. 186

(இ-ள்) (a) நன்னாரி வேர் 1வராகனெடை
வெளிச்சைப்பிசின் (முருங்கை
அல்லது நறுவிலி)1 வராகனெடை
பசுவெண்ணெய் எலுமிச்சங்காயளவு
கடுக்காய் 2 (எண்ணிக்கையில்)

இவற்றை ஒன்று கலந்து அடுப்பின் மீதேற்றி எரித்துக் கொடுக்கவும். கணச்சூடு தீரும்.

(b) எருக்கின் பழுப்புச்சாற்றை நசியம் பண்ணப் பூச்சிகள் விழும். இவ்வாறு 3 நாள் செய்யவும்.

## 123. ஊதுகணத்திற்கு மருந்து

கழற் கொடியி னிலையோர்பிடி கசக்கிவாய்
பேசாமற் கையிற்கொண்டு
விளக்கெண்ணெ யினிற்போட்டு மீரவெங்கா
யமரிந்து மேலேபோட்டுக்
கிழக்குதைய மானபின்பு சூரியபுட
மாகவைத்துக் கிளறித்தானே
யுழக்கினிலீர் துட்டிடையிட் டுகைகொடுப்
பாயுப்புப் புளிப்பொண்ணோதே. 187

வேலிப்ப ருத்திக்கொழுந் தோர்பிடிவெள்
வெங்காயம் வசம்புஓமம்
மேலுக்கடுக் காயிதினில் லெண்ணெய்மித
மாய்வார்த்து மேயெரித்திட்
டாளக்க ரண்டிதனி லெண்ணெயளித்
துக்குழப்பிக் கொடுக்கவுமே
தூலப்பொ ருமல்வாடு மெனச்சொன்னார்
சரபேந்திர துரையே. 188

(இ-ள்) கழற்சிக்கொடி இலை ஒரு பிடியெடுத்துக் கசக்கி வாய் பேசாமல் கொண்டுவந்து விளக்கெண்ணெய் 1 உழக்கில் போடவும். பின்பு வெங்காயத்தைச் சிறிது சிறிதாக அரிந்து போட்டு காலை வெயிலில் சூரியபுடமாக வைக்கவும். நன்றாக கிளறிக்கொடுத்து இதில் தினசரி இரு துட்டெடை வீதம் எடுத்துச் சாப்பிடவும்.

**பத்தியம்**: உப்பு, புளிப்பு ஆகாது.

(2) வேலிப்பருத்திக்கொழுந்து ஒரு பிடி
வெள்ளைப்பூண்டு (சுமார் இரண்டு பல்லு)
வசம்பு (சுமார் 1 வராகனெடை)
ஓமம் (சுமார் 1 வராகனெடை)
கடுக்காய் (சுமார் 1 வராகனெடை)

இவைகளுக்குத் தக்கபடி நல்லெண்ணெய் (1 சேர்) சேர்த்து அடுப்பின்மேல் வைத்துப் பக்குவமாக எரித்து இறக்கிக்கொள்ளவும்.

கடுகுடன் ஒரு கரண்டி வீதம் தினம் கொடுத்துவரவும். இவ்விரண்டு முறைகளாலும் வயிற்றுப் பொருமல் தீரும்.

### 124. இரத்த கணத்திற்கு மருந்து

தகரைபொன்னாங் காணிநரிப் பயிற்றைவட்டக்
கிலுகிலுப்பை தானின்னாலு
வகையும்வேர் வல்லாரை ஈரவெங்கா
யத்துடனிவ் வகைகளாலும்
யிகழாம லேயிடித்துப் பானையில்போட
வுங்கல்க மிலாமிச்சம்வேர்
பகருஞ்சா திக்காய்சா திப்பத்திரி
பேரீச்சம் பழமுமாமே. 189

ஆங்கொத்த மல்லிசீர கம்கோட்ட
மதிமதுர மக்கிராக்காரம்
தீங்கற்கண் டேலமுமுந் திரிகையினற்
பழத்துடனே சிறுநாகப்பூ
வாங்குபெரு நாகப்பூ குரோசாணி
யோமமிந்த வகைவகைக்கே
யீங்கொருநால் வராகனெடை யிடித்துமுன்செய்
மருந்தினிலே எடுத்துப்போடே. 190

எடுத்துப்போட் டதுதனிலே விளக்கெண்ணெய்
நாலுபடி யெடுத்துவிட்டுத்
திடத்துடன்சூ ரியபுடமாய் வைத்திதனைக்
கொடுக்கவுமே தீருநோய்தான்

கடுத்தரத்தக் கணமாமக் கணமந்தச்
சுரமும்வரற் கணமுந்தீரும்
யிடுக்கணாஞ் சருவகண முந்தீரு
முப்புப்புளி யீந்திடாதே. 191

(இ-ள்) தகரை வேர் பொன்னாங்காணிவேர்
நரிப்பயறு வேர் வட்டக்கிலுகிலுப்பைவேர்
வல்லாரை வெங்காயம்

இந்த ஆறு சரக்குகளையும் சமஎடை (4 விராகனெடை) எடுத்து இடித்து ஒரு பானையில் போடவும்.

| | |
|---|---|
| விலாமிச்சம்வேர் | சாதிக்காய் |
| சாதிப்பத்திரி | பேரீச்சம்பழம் |
| கொத்தமல்லிவிதை | சீரகம் |
| சிறுநாகப்பூ | பெருநாகப்பூ |
| கோஷ்டம் | அதிமதுரம் |
| அக்கிராகாரம் | கற்கண்டு |
| ஏலக்காய் | திராக்ஷைப்பழம் |
| குராசானி யோமம் | |

இச்சரக்குகளை வகைக்கு 4 வராகனெடை எடுத்து நன்றாக இடித்து, முன் பானையிலே சித்தமாக வைக்கப் பட்டிருக்கும் சரக்குகளோடு இதையும் சேர்த்துக் கொள்ளவும். இதனுடன் விளக்கெண்ணெய் 4 படி விட்டு எல்லாவற்றையும் குழப்பிச் சூரியபுடமாக வைக்கவும். இந்தத் தைலத்தைத் தினம் உள்ளுக்குக் கொடுத்துவர இரத்தக் கணம், ஆமக்கணம், அஸ்திசுரம், வறட்கணம் முதலிய பலவித கணரோகங்களும் தீரும்.

**பத்தியம்**: உப்பு, புளி நீக்கிவிடவும்.

## 125. கணத்திற்கும், எரிகணத்திற்கும் குணமும் மருந்தும்

பசவாய்க்கொள்ளு மெதிரெடுக்கும்
பாயிற்கிடந்து முலையோடே
யிசையமோதிக் கொள்ளும்பெருமூச்
செறியுமுகங்கீ ழாய்க்கிடக்கும்
விசையாயமுமிப் பிள்ளைகட்கு
வேண்டுமருந்தே லங்கோட்டம்
பசையாமாசிப் பச்சையிலை
லாமிச்சுவேர்செண் பகப்பூவும் 192

பகரும்வகைக்கோர் காசிடையே
பகுத்துச்சாதிப் பத்திரியில்
வகையோடேதா னதிமதுரம்
வராகனெடையொன் றேயாகும்
முகருங்கோரோ சனைதானு
முக்காசிடையோ டித்தனையும்
தொகையாய்க்கொண்டு வேடன்வேர்த்
துண்டுநறுக்கிச் சாறுகொண்டே. 193

கொண்டிந்தச் சாறுவார்த் தரைத்திதனை
கடலையெனக் கூறக்கையா
லுண்டைபண்ணி முலைப்பாலி லூட்டிடக்க
ணமும்வயிற் றுக்கடுப்பும்
விண்டேகும் பெரியவர்க்குச் சுரமிவையெல்
லாந்தீரும் விந்தைதான்கை
கண்டதெனச் சரபேந்திரர் காசினியுள்
ளோர்க்குரைத்தார் கருணையாலே. 194

**எரிகணத்தின் குணம்:**

(இ-ள்) குழந்தை அடிக்கடி கைகால்களைப் பிசைதல் வாந்தியெடுத்தல், தாயாரின் மார்பின்மேல் அடிக்கடி மோதிக்கொள்ளுதல், பெருமூச்சு விடுதல், முகத்தைக் கீழ் நோக்கி

வைத்துக்கொள்ளுதல் ரொம்பவும் வீறிட்டு அழுதல் இவைகள் எரிகணத்தின் குணங்களாகும்.

இதற்கு மருந்து

| | |
|---|---|
| ஏலக்காய் | 1 காசெடை |
| கோஷ்டம் | 1 காசெடை |
| மாசிப்பச்சை | 1 காசெடை |
| இலாமிச்சைவேர் | 1 காசெடை |
| சண்பகப்பூ | 1 காசெடை |
| சாதிப்பத்திரி | 1 வராகனெடை |
| அதிமதுரம் | 1 வராகனெடை |
| கோரோசனை | 3 காசெடை |

இந்தச் சரக்குகளனைத்தையும் சூரணித்து, நிலவேம்பு வேரை இடித்து அச்சாற்றினால், நன்றாகக் கல்வத்திலிட்டு அரைத்துக் கடலைப்பிரமாணம் உருண்டை செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும். இதை முலைப்பாலில் அரைத்துக்கொடுக்க அந்த க்ஷணத்திலேயே வயிற்றுக் கடுப்பு, கணச்சூடு, இவைகள் தீரும். பெரியவர்களுக்குக் கொடுத்தால் சுரம் நீங்கும்.

### 126. ஆமக்கணத்திற்கு ஈரவெங்காய எண்ணெய்

ஈரவெங்கா யமிளகு கடுகுரோ
கிணிகருஞ்சீ ரகமிதோடே
சீரகமுங் கடுக்காயும் பொடிசெய்து
மிளகுகாய் திருத்துகாம்பை
யோரிருகா சிடைபொடித்து மொருசிமிழிட்
டேவைத்து முறைக்குமிந்த
யீரவெங்கா யச்சாற்றை விளக்கெண்ணெ
யினில்விட்டு மிதமாய்வைத்தே. 195

இதமாய்மூக் கரட்டைவேர் வெள்ளைச்சா
றணைவேரு மிடித்தரைத்திட்
டிதில்வெள்ளைப் பூண்டுமிடித் தேபோட்டுக்
காய்ச்சிவடித் தெடுத்துக்கொண்டு
அதையும்வடிக் கட்டிக்கொண் டாதித்த
னுதையத்தோ ரளவதாகப்
பதறாம லுள்ளுக்குக் கொடுத்திடவும்
வயிறு நன்றாய்ப் பேதியாமே. 196

பேதியான தின்பிறகு கஞ்சிகாய்ச்
சிக்கொடுப்பாய் பேதியாகா
தோதியகற் குடலாகி லுயரிசதுரக்
கள்ளியிலோர் துண்டம்வெட்டிச்
சாதுரிய மாயதனைச் சன்னபின்ன
மாய் நறுக்கித் தானேயெண்ணெய்
மீதிலிட்டுக் காய்ச்சிநல்கப் பேதியாம்வி
யாதியெல்லாம் விட்டுப்போமே. 197

(இ-ள்) வெங்காயம் — மிளகு
கடுகுரோகிணி — கருஞ்சீரகம்
சீரகம் — கடுக்காய்
*மிளகுக்காயின் காம்பு

இவைகளை வகைக்கு இரு காசெடை எடுத்துச் சூரணம்செய்து இதையும், ஈரவெங்காயச் சாற்றையும் (1 படி) விளக்கெண்ணெயில் (1 படி) விட்டுக் குழப்பி வைக்கவும்

மூக்கரட்டை வேர் — வெள்ளைச் சாரணை வேர்
வெள்ளைப்பூண்டு

இவைகளை இடித்து அரைத்து ஷை எண்ணெயில் குழப்பி எல்லாவற்றையும் அடுப்பின்மேல் வைத்துப் பதமாகக் காய்ச்சி வடித்து இறக்கவும்.

---

*மிளகுக்காய் திருத்து காம்பை - மிளகுக் கதிரிலுள்ள மிளகுகளை நீக்கியபின் அவைகளின் காம்பை உலர்த்தி வைத்துக்கொண்டு உபயோகிக்கவும்.

இதை உதயகாலத்தில் ஒரே அளவாக உள்ளுக்குக் கொடுத்திட வும், நன்றாகப் பேதியானபின் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும்.

கல் குடலுள்ள பேர்களுக்குச் சதுரக்கள்ளித் தண்டை நறுக்கி அரைத்து அந்த எண்ணெயைவிட்டுப் பதமாக எரித்துக்கொடுக்க, நன்றாகப்பேதியாகி வியாதிகள் தீரும்.

## 127. முக்கு கணத்திற்கு மருந்து

கோழியா விரங்கொழுந்தோரத் பிடிபறித்து
வசம்புள்ளி கூடக்கூட்டி
யாழுங்கல் வத்திடையிட் டதைநறுக்கித்
துவளையுடம் பதனிலிட்டுச்
சாழிகைக் காசொன்றள வுதானுள்
ளேபுளிதான் கைப்பாகா
தேழுநா ளினிலிந்த முக்குகண
மகலிமென வியம்பலாமே. 198

| | | |
|---|---|---|
| (இ-ள்) | கோழியாவாரங் கொழுந்து | 1 பிடி |
| | வசம்பு | (சிறிதளவு) |
| | வெள்ளைப்பூண்டு | (சிறிதளவு) |

இவைகளைக் கல்வத்திலிட்டு நசுக்கி நன்றாக அரைத்து அதைக் குழந்தையின் உடம்பின்மேல் துவளையாக இடவும். இதில் ஒரு காசெடை உள்ளுக்கும் கொடுத்திடவும்.

**இதற்குப்பத்தியம்:**

புளி, கைப்புச் சுவையுள்ள பண்டங்களைத் தள்ளவும். ஏழு நாட்களுள் முக்கு கணம் தீரும்.

## 128. மூக்கு கணத்திற்கு மருந்து

முருங்கைகழற் கொடிவரப் பூலாவுடன்சா
றணைக்கொழுந்து மூக்கரட்டை
தருங்கொழுந்து மதிகாலத் தனிற் பறித்து
வசம்புடனே தட்டிக்கொண்டு
யிருந்திடுநல் லெண்ணெயிலே யிட்டுமிள
கும்பொடித்திட் டிதையொன்றாக்கி
வருங்கதிர்முன் னாகவைத்து நாலுகா
சளவு கொள்ளிம் மருந்தைத்தானே 199

மருந்துடனே கடுகிணையுங் கூடவரைத்
துக்கொள்வாய் வசம்போடுள்ளி
யரிந்துபீர்க் கிலையுடனே நறுக்கிமேனி
யிற்றுவளையா யிட்டிருதல்
மருந்தினையோர் காசளவு தானுள்ள
புகட்டவுமென் றாரிவ்வையத்
திருந்தரசா ளுஞ்சரபேந் திரரென்ன
யிவ்வுலகோ ரியம்புவாரே. 200

(இ-ள்) முருங்கைக் கொழுந்து சுழற்கொடிக் கொழுந்து
வரப்பூலா கொழுந்து வெள்ளைச்சாறணைக்
மூக்கரட்டைக்கொழுந்து (கொழுந்து

இவைகளைச் சூரியோதய காலத்தில் பறித்துவந்து அம்மியிலிட்டு அரைத்து அதனுடன்

மிளகு வசம்பு

இவ்விரண்டையும் பொடிசெய்து கூட்டி எல்லாவற்றையும் நல்லெண்ணெயில் ஒன்றாகக் கலந்து, சூரியபுடமாக வைத்து நாலு காசளவு இம்மருந்தைச் சாப்பிடவும். இதன் கடுகுடன் பீர்க்கிலை, உள்ளி, வசம்பு இவைகளையிட்டு நறுக்கி உடம்புக்குத் துவளை இடவும். ஒரு காசளவு உள்ளுக்கும் கொடுக்கவும்.

### 129. கணத்தெண்ணெய் பண்ண மருந்து

கோடகசா லைவிடத்தே ரிலைசிறுபுள்
ளடிவசம்பு குதிரைவாலி
தோடின்பூ ராபழம்பா சியினுடன்வெள்
ளுள்ளியிவைந் தினைநறுக்கிச்
சூடிநல்லெண்ணெயிலெரிக்கத் தூங்குகணத்
திற்குவிளக் கெண்ணெய்தன்னிற்
போடிதெல்லா மிட்டெரித்துப் புகட்டிரண்டு
காசளவு புகட்டத்தானே. 201

அற்பமானா லிந்தப்பச் சிலையைந்தி
னைநறுக்கிய தைக்கைகொண்டே
யுற்பணமாய்ச் சாறுபுகட் டவுங்கழியுங்
கணத்துக்கென் றுரைத்தாரெங்கள்
விற்பன்னனாஞ் சரபேந்திர ரென்னிந்த
முறையிதனை விவரமாக
நற்பரிசா லிம்மருந்தை நசல்தீர
வைத்தியர்கள் நல்கினாரே. 202

(இ-ள்) கோடகசாலை விடத்தேரி இலை
சிறுபுள்ளடி வசம்பு
குதிரைவாலி (முதியார் கூந்தல்)
இம்பூரா பழம்பாசி
வெள்ளுள்ளி

இவைகள் எல்லாவற்றையும் நறுக்கி நல்லெண்ணெயில் குழப்பி அ டுப்பின் மேலேற்றிப்பதமாக எரித்து இறக்கவும். இதைக் *கணத்திற்குக் கொடுக்கவும். தூங்கு கணத்திற்கு ஆமணக்கெண்ணெயில் எரித்து இரு காசெடை வீதம் புகட்டவும். அற்பமானால் இந்தப்பச்சிலை ஐந்தையும் (கோடகசாலை, விடத்தேரி, சிறுபுள்ளடி, குதிரைவாலி, இம்புறா) நசுக்கிச்சாறு புகட்டவும். கழியும் கணம் தீரும்.

*91 நெ. சுவடியில் கழியும் கணத்திற்குக் கொடுக்கவும் எனக் கூறப்பட்டிருக்கிறது.

## 130. கணத்திற்கு மருந்து

கற்றாழை மடல்வட்டத் துத்திவேர்
கடுகுரோ கிணிகடுக்காய்
நற்சீரகங் கருஞ்சீரகத் துடன்வெந்த
யமுஞ்சார டைவேர்தானும்
பற்பலநாட் பழம்புளியீ ரவெங்காய
முங்கூட்டிப் பரிந்தரைத்து
வற்கவிளக் கெண்ணெயினி னுற்பனமா
கப்பிழிந்து வடித்துக்கொண்டே. 203

வடித்தெடுத்து வார்க்கவுங்கை கண்டதிந்த
மருந்துதின்றால் வன்மையாகப்
பிடித்திட வேண் டும்பத்தியம் பேதிலொன்றா
காதெனவே பேசுவாரென்
றடுத்தவருக் கருள்புரியு மண்ணல்சர
பேந்திரனா ரருளிச் செய்தே
கொடுத்தவிந்த முறையிதனைக் குவலயத்தோ
ரனைவருங்கொண் டாடுவாரே 204

(இ-ள்) கற்றாழைமடல் வட்டத்துத்திவேர்
கடுகரோகிணி கடுக்காய்
நற்சீரகம் கருஞ்சீரகம்
வெந்தயம் சாறடைவேர்
வெகுநாட்பட்ட (பழம்) புளி
ஈரவெங்காயம்

இவைகளைத் தண்ணீர்விட்டு நன்றாக அரைத்து ஆமணக்கெண்ணெயில் பிழிந்து, குழப்பி அடுப்பின் மேலேற்றிப் பக்குவமாக எரித்து இறக்கவும்.

இதைத் தினம் சாப்பிட்டுவரக் கணத்திற்குக்கைகண்டது. இதற்குக் கடும் பத்தியம் இருத்தல் வேண்டும்.

## 131. கணத்திற்கு எண்ணெய்

திப்பிலிகத் தூரிமஞ்சள் செண்பகப்பூ
கிராம்புகருஞ் சீரகஞ்சுக்
கப்பாம்புக் கட்டங்கோட் டம்மேலம்
பொன்முசுட்டை யவுரிவேரும்
கொப்பினிலே றிப்படருஞ் சிற்றவரை
தூதுவளை கொடிவேலிவேர்
வெப்பில்விடத் தேரைவேர் நன்னாரி
வேர்வசம்பு வெள்ளைப்பூண்டே. 205

பூண்டுடனே கடலையினில் முளைத்தபூண்
டேதேனும் போட்டுக்கூட்டித்
தோண்டியினல் லெண்ணெயிலா குதல்பசுவின்
னெய்யாதல் சுகமாய்ப்பண்ணி
மீண்ட தனை யெடுத்துநக் கவுந்தீருங்
கணமென்னும் வியாதியென்றே
யாண்டகையாஞ் சரபேந்திர ரவனீயுளோர்க்
கன்புடனே யருள் செய்தாரே. 206

(இ-ள்) திப்பிலி, கஸ்தூரிமஞ்சள், சண்பகப்பூ, கிராம்பு, கருஞ்சீரகம், சுக்கு, பாம்புக்கஷ்டம்,கோஷ்டம், ஏலக்காய், பொன்முசுட்டை வேர், அவுரிவேர், கொம்புகளில் படரும் சிற்றவரை, தூதுவேளை, கொடிவேலிவேர், விடத்தேரிவேர், நன்னாரிவேர், வசம்பு, வெள்ளைப்பூண்டு, சுடுகாட்டில் முளைத்துள்ள ஏதேனும் ஒரு பூண்டு, இச்சரக்குகளையெல்லாம் சமபாகம் எடுத்துத் தண்ணீர் விட்டரைத்து, நல்லெண்ணெயிலோ அல்லது பசுவின் நெய்யிலோ குழப்பிப் பக்குவமாக எரித்து இறக்கி வைத்துக்கொள்ளவும்.

இதைத் தினந்தோறும் சாப்பிட்டுவரக் கணச்சூடு தீரும்.

**குறிப்பு:** "பாம்புக் கஷ்டம்" என்பதற்குப் பொருள் விளங்கவில்லை.

### 132. கணத்திற்கு எண்ணெய்

தளச்சட்டி தனினெருமை தலக்கொம்பைச்
சீவிமெல்லி தாகப் போட்டுப்
பிளக்கும்விற கினையடுப்பிட் டெரித்திடவும்
பிடிக்குமந்தப் பொரியைப்பேணிக்
களிப்பக்குவந் தனிற்றிருகு கள்ளிமேற்பொ
ருக்கினைமுக் காசிடையே
வளப்பமுடன் பொடித்ததனின் விளக்கெண்ணெ
யொருபடியே வார்த்துக்கிண்டே. 207

கிண்டியிரு நாள்வெயிலில் கிடக்கவைத்து
மூன்றுநாள் கிளறெடுத்துக்
கொண்டொருதுட் டிடையளவே கொடுத்திடவே
கணமெட்டுங் குணமாமென்றே
திண்டிறலார் சரபேந்திரர் செப்பினரிம்
முறையிதனைத் தெளிவுள்ளோர்கள்
கண்டுநிதி கிடைத்ததெனக் களிக்கின்றார்
கணந்தீர்தல் கைகண்டாரே. 208

(இ-ள்) எருமை மாட்டின் கொம்பைச் சிறுசிறு துண்டுகளாகச்சீவி ஒரு சட்டியில்போட்டு அடுப்பின்மேல் வைத்து எரிக்கவும். அது பொரிந்து களிப்பக்குவமாக ஆகும். அப்பொழுது திருகுகள்ளியின் மேலுள்ள பொருக்கு 3 காசிடை கூடப்போட்டு, ஒரு படி விளக்கெண்ணெய் சேர்த்து ஒன்றாகக் கிண்டவும். பின்பு, இதை இரண்டு நாட்கள் சூரியபுடமாக் வைத்து மூனாறாவதுநாள் கிளறி வைத்துக்கொண்டு ஒரு துட்டெடை வீதம் கொடுத்துவர 8 வகைக் கணமும் தீரும்.

### 133. கணத்தெண்ணெய்

பேய்க்கொம்மட் டிக்காய்மூன் றெடுத்துமே
லிருக்கிறதோற் புரணிவாங்கிச்
சீக்கிரம தாயறுத்துள் ளேயிருக்கும்
விரைதீர்த்துச் சிறுகத்தானே

பாக்குவெட்டி யானறுக்கி வெங்காய
மேற்றோலாப் பரிகரித்து
மேர்க்கநன்றா யரைத்துவிளாங் காயளவு
விழுதுகொம்மட் டிக்காயுள்ளே. 209

இக்காயி னிற்சதையும் விளக்கெண்ணெ
யோர்படியு மிதிலேயிந்தப்
பக்குவமா மருந்திரண்டுஞ் சேர்த்தடுப்பி
லேயெரித்துப் பருவமாய்க்காய்ச்
சிக்கோரோ சனையரைக்கா சிடையொருகா
சிடையேலத் தினைப்பொடித்தே
அக்கணமே போட்டிறக்கிப் பிக்கணந்தீர்
சிறுகரண்டி யளவுட்கொண்டே. 210

(இ-ள்) பருமனான பேய்க்கும்மட்டிக்காய் 3 எடுத்து மேலே இருக்கும் தோலைச் சீவிவிட்டு, அவைகளை அறுத்து உள்ளிருக்கும் விதைகளையும் நீக்கிவிடவும். பின்பு அதைப் பாக்குவெட்டியாற் சிறுக நறுக்கி வைத்துக்கொள்ளவும். இதேபோல் வெங்காயத்தின் மேல் தோலையுரித்துவிட்டு அம்மியிலிட்டு அரைத்த விழுது ஒரு விளாங்காயளவு எடுத்துக்கொண்டு, மேலே சொன்ன கும்மட்டிக்காய்க்குள்ளே வைத்துவிடவும். இவை யாவற்றையும் விளக்கெண்ணெய் (ஆமணக்கெண்ணெய்) 1 படியில் குழப்பி அடுப்பின்மேல் வைத்துப் பக்குவமாக காய்ச்சி இறக்கவும். அதனுடன்,

| | |
|---|---|
| கோரோசனை | 1/2 காசெடையும் |
| ஏலக்காய் | 1 காசெடையும் |

பொடி செய்து எண்ணெயில் போட்டுக் குழப்பி வடிகட்டிக்கொள்ளவும். இதில் ஒரு சிறு கரண்டி வீதம் உட்கொள்ளக் கொடுக்க எல்லாவித கணங்களும் தீரும்.

## 134. கணத்திற்கு மருந்து

சீரகம்வெந் தயஞ்சாதிக் காயிலவங்
கப்பட்டை செண்பகப்பூ
யீரவெங்கா யங்கொட்டந் திப்பிலிதிப்
பிலிமூல மேலங்கிராம்பு
பேருளசெங் கழுநீருங் கருஞ்சீர
கமும்வெளிச்சைப் பிசின்கணப்பூண்
சேருளசா திப்பத்திரி யித்தனையு
மெண்ணெயிலே யியல்பாயிட்டே. 211

இட்டிதெல்லாம் வைத்தொன்றி லெடுத்துச்சூ
ரியபுடமிட் டெசுத்துக்கொண்டே
மெட்டுடனே கணமென்னப் பட்டதற்குக்
கொடுத்திடவும் வெந்நீர்சோறுந்
திட்டமிடு தின்னவுமென் றட்டதிசை
கொண்டாடுஞ் செழுநீர்பொன்னி
யிட்டவளஞ் சுரக்குஞ்சோ ணாட்டிறைவர்
சரபேந்திர ரியம்பினாரே. 212

| | | |
|---|---|---|
| (இ-ள்) | சீரகம் | வெந்தயம் |
| | சாதிக்காய் | இலவங்கப்பட்டை |
| | செண்பகப்பூ | ஈரவெங்காயம் |
| | கோஷ்டம் | திப்பிலி |
| | திப்பிலிமூலம் | ஏலக்காய் |
| | கிராம்பு | செங்கழுநீர்க்கிழங்கு |
| | கருஞ்சீரகம் | வெளிச்சைப்பிசின் |
| | கணப்பூண்டு | சாதிப்பத்திரி |

இவைகளைச் சமனாக எடுத்துச் சிறிது தண்ணீர் விட்டு அரைத்து நல்லெண்ணெயில் குழப்பி, சூரிய புடமாக வைக்கவும். இதில் ஒரு சிறு கரண்டி வீதம் எடுத்துக் கணச்சூட்டிற்குப் புகட்டவும்.

**பத்தியம்:** அன்றைய தினம் வெந்நீர் சாதம் சாப்பிடவும்.

## 135. கணத்திற்கு நெய்

ஈரவெங்கா யம்பசுவின் நெய்நற்சீ
ரகமூன்று மியல்பாய்க்கொண்டே
வேருடனே சிற்றுஅம்மான் பச்சரிசி
விதமொன்று மேசமூலம்
வார்முள்கரு வேலங்கொழுந் தோர்பிடியி
துவிரண்டும் வாய்பேசாமல்
ஏருடன்கொண் டேமுன்மருந் திம்மருந்தும்
வெந்ததனை யேபிடித்தே. 213

பிடித்துப்பார்த் தாலம்மொருகு மொருகேன்றா
லப்பத்திற் பிடித்திறக்கி
யெடுத்துக்கொண் டேயிரண்டு துட்டளவு
தினசரியெ டுத்துநல்கு
கடுகெனயிப் படிமாத மூன்றுதிரங்
கொடுசகல கணமுந்தீரும்
விடுபுளியுப் பின்னயென்று வேந்கனார்
சரபேந்திரர் விளம்பினாரே. 214

| | | |
|---|---|---|
| (இ-ள்) | ஈர வெங்காயம் | நற்சீரகம் |
| | சிறு அம்மான்பச்சரிசி சமூலம் | 1பிடி |
| | முட்கருவேலங்கொழுந்து | 1 பிடி |

இவைகள் எல்லாவற்றையும் சமனாக எடுத்துப் பசு நெய்யில் போட்டு அடுப்பின்மேல் வைத்துக் காய்ச்சவும். அதன் அடியிலிருக்கும் கடுகு "மொரு மொரு" என ஆகும். பதம் கண்டு அதை இறக்கவும். பிறகு நெய்யை வடிகட்டித் தினம் 2 துட்டளவு வீதம் மாதத்திற்கு 3 முறை கொடுக்கவும்.

**பத்தியம்**; உப்பு, புளி நீக்கவும்.

## 136. சுழிகணமும் வயிறு கழிச்சலுமெடுத்த பொருமலுக்கு

வசம்புள்ளி வெதுப்படக்கி கோழியாவ
ரைபேரா மட்டிநொச்சி
யிசைந்தவா றையும் நறுக்கி முறித்திறுத்து
மிலவங்கத் தூள்மேலிட்டு
நிசங்கமுட னேகொடுக்கக் கணங்கழிச்சு
னிற்கும்வயி றேபொருமி
லசமதா கங்கருக்கிக் கிராம்பாறு
பூபச்சை யாகப்போட்டே. 215

போட்டிதெலாற் கழாயம்வைத் திறுத்துலவங்
கப்பூவைப் பொறுக்கரைத்து
மீட்டுமிதி லிட்டூட்டி மேல்வசம்பி
லுப்பரைத்து மேலிட்டேதீக்
காய்ச்சுசற்றே வெதுப்பியுப்பைக் கையாற்றட்
டியேநறுக்கிக் கனல்மேற்சட்டி
போட்டதனைக் கருவறுத் துக்கருக்கா
யிட்டுதவு பொருமல்போமே. 216

(இ-ள்) வசம்பு வெள்ளைப்பூண்டு
கோழியாவாரை பேராமுட்டி
நொச்சி வெதுப்படக்கி

இந்த ஆறு பச்சிலைகளையும் நன்றாக இடித்துச் சாறெடுத்து அதை முறித்துக் கிராம்பின் தூளுடனே சாப்பிடக் கொடுத்தால் கணக்கழிச்சல் நிற்கும்.

அப்போது வயிறு பொருமல் கண்டால், ஓமத்தைச் சட்டியிலிட்டுக் கருக்கி அதனுடன் கிராம்பு 6 (எண்ணிக்கையில்) பச்சையாகப் போட்டுக் கஷாயம் வைத்து, நன்றாக வற்றியபின் கிராம்புகளை எடுத்துச் சிறிது கஷாயம் விட்டு நன்றாக அரைத்து மீதியுள்ள கஷாயத்துடன் குழப்பிக் கொள்ளவும். இக்கஷாயத்தைப் பருகக் கொடுக்கவும்.

வசம்பின்மேல் உப்பைக் கரைத்துத் தடவி அடுப்பிலிட்டு வெதுப்பவும். பின்பு உப்பை நீக்கிவிட்டு அடுப்பில் ஒரு சட்டியை வைத்து அதில் ஷை வசம்பை இட்டுக் கருகும்படி வறுத்து ஜலம் சேர்த்துக் கருக்குக் கஷாயம் போட்டுத் சாட்பிடப் பொருமல் தீரும்.

### 137. கணம் எனப்பட்டதிற்கெல்லாம் எண்ணெய்

மருதுகோ வளவெள்*வே லோகருவேலோ
வரசுடனமாம் பட்டைசெப்பு
நெருஞ்சியினற் கொழுந்து துடரிக்கொழுந்து
மாதுளத்தி னிற்கொழுந்து
வரப்பூலா நீர்ப்பூலா விடத்தேரை
கருவேல மரக்கொழுந்து
கருஞ்சீர கங்கம்பிப் பிசின்வசம்பே
லரிசியுநா சுரமுமாமே. 217

நாகரிகச் செண்பகப்பூ சதகுப்பைநற்
சீரகம்ல வங்கப் பட்டை
பாகனைய வதிமதுரஞ் சரிகூட்டி
வைத்திந்தப் பலசரக்கோ
டெகொழுந்து பட்டையுட னிம்மூன்று
வகையினையு மேநல்லெண்ணெய்
சேகரமா யெரத்திறக்கும் போதுநெய்யு
நாலுதுள்ளி தெரித்தேபின்னும். 218

கின்னுமுருங் கையினிலையு மிரண்டுமணங்
கொளக்காட்டிப் பிரியமாகத்
தின்னுகண மென்பதெல்லாந் தீருங்கா
சளவுள்ளே செலுத்திமேலு

---

91 நெ. சுவடியில் கருவேல் வெள்வேல் இரண்டும் சேர்க்கப் பட்டிருக்கின்றன.

முன்னிதமா முடம்பிடவு மொருவருந்தீர்க்
காதண மோடுங்கைகண்
டின்னமுறை தனைச்சரபேந் திரமன்னர்
மனமிரங்கி யியம்பினாரே. 219

(இ-ள்) மருதம்பட்டை
கூவிளம்பட்டை (வில்வப்பட்டை)
வேலம்பட்டை (கருவேல் அல்லது வெள்வேல்)
அரசம்பட்டை
மாம்பட்டை
செப்புநெரிஞ்சில் கொழுந்து
துடரிக்கொழுந்து (இண்டங்கொழுந்து)
மாதுளங்கொழுந்து
வரப்பூலாக்கொழுந்து
நீர்ப்பூலாக்கொழுந்து
விடத்தேரைக்கொழுந்து
கருவேலங்கொழுந்து
கருஞ்சீரகம்
கம்பிப்பிசின் வசம்பு
ஏலரிசி சுக்கு
செண்பகப்பூ சதகுப்பை
நற்சீரகம் லவங்கப்பட்டை
அதிமதுரம்

இந்தக் கடைச்சரக்குகள், கொழுந்து பட்டை இவைகளைச் சமமாக எடுத்துக் கல்கமாகச் செய்து,

நல்லெண்ணெய் ஒரு நாழியில் குழப்பி, அடுப்பின்மேல் வைத்துப் பக்குவமாக எரித்து இறக்கவும். இறக்கும்போது நாலு துளி நெய்யைத் தெறித்து, முருங்கை இலையில் இரண்டையும் வாசனைக்குக் கூட்டிக்கொள்ளவும். இதில் ஒருகாசளவு உள்ளுக்குக் கொடுத்து மேலுக்கும் பூச ஒருவருந் தீர்க்காத கணச்சூடு தீரும். கைகண்டது.

## 138. சுழிகணத்திற்கு எண்ணெய்

முன்னியிலை யொருகுத்து விளக்கெண்ணெய்
யிட்டெரித்து முறைமையாகத்
தின்னெனவோர் துட்டெண்ணெய் கொடுத்திடவுஞ்
சுழிகணந்தான் றீர்ந்துபோகு
மின்னங்கோ ரோசனைகொம் புப்பாகற்
சாறுகிராம் பிழைத்தேசுக்கும்
நன்னயமா சுக்கூட்டி நல்கிடின்மும்
முறையிளினோய் நடந்துபோமே. 220

(இ-ள்) முன்னை இலை ஒரு குத்தளவெடுத்து விளக்கெண்ணெயில் போட்டுப் பக்குவமாகக் காய்ச்சி இறக்கவும்.

இதில் ஒரு துட்டளவு எண்ணெய் எடுத்துக் கொடுக்கச் சுழி கணம் தீரும்.

2. கோரோசனை, கிராம்பு, இழைத்த சுக்கு இவைகளைக் கொம்புப் பாகலிலைச்சாறு விட்டு நன்றாக அரைத்துத் தினம் மூன்று முறை கொடுக்கச் சுழிகணம் தீரும்.

## 139. சுழிகணத்திற்கு மருந்து

குப்பைமேனிச் சாறணையுத் தாமணியை
வதக்கிக்கைக் கொடுபிழிந்தே
திப்பிலியோ டிலவங்கங் கத்தூரி
மஞ்சள்கருஞ் சீரகங்கம்
ரிப்பிசினும் வருத்துமேன் பொலிதூவிக்
கொடுத்திடவும் பிள்ளைகட்கே
யெப்படியுஞ் சுழிகணந்தான் றீருமெனச்
சரபேந்திர ரியம்பினாரே. 221

(இ-ள்) குப்பைமேனி இலை சாறணை இலை
உத்தாமணி இலை

இவைகளை வதக்கிச் சாறு பிழிந்துகொண்டு, இதனுடன்

திப்பிலி கிராம்பு
கஸ்தூரிமஞ்சள் கருஞ்சீரகம்
கமரிப்பிசின்

இவைகளைப் பொன் வறுவலாக வறுத்துச் சூரணித்து வஸ்திரகாயம் செய்து, மேலே சொல்லிய பச்சிலைகளின் சாறோடு, சுழிகணத்திற்குக் கொடுக்க, அந்நோய் தீரும்.

### 140. முலைப்பாலெண்ணெய் "கணத்திற்கு"

கருஞ்சீர கங்கடுக்காய் சீரகங்கஸ்
தூரிமஞ்சள் கலந்தின்னான்கு
மருந்தினைநெய் யினிலாதல் தேனினிலா
தல்வகையாய் வறுத்துப்போட்டு
இருந்தசீ யக்காய்கொஞ் சம்போட்டுப்
பருத்திப்பிஞ் சிரண்டுகூட்டி
யெரிந்தவெந் நீரினிலாதல் முலைப்பா
லிலேயாத லிட்டரைத்தே. 222

இட்டரைத்திட் டதின்பிறகே யெண்ணெயைக்காய்ச்
சியுமோருசே ரென்னத்தானே
வெட்டுப்பூ லாங்கொழுந்து மேலுசிலங்
கொழுந்துடமா னிக்கொழுந்தும்
பொட்டெனவே கடுக்காய்நீர் பூண்டுள்ளி
யுஞ்சேர்த்துப் பொங்ககா காய்ச்சி
யுட்கொளநல் கீர்வெங்காய த்துடன்கஞ்
சியும்பத்திய முதவுவாயே. 223

(இ-ள்) கருஞ்சீரகம் கடுக்காய்
சீரகம் கஸ்தூரிமஞ்சள்

இந்த நான்கு சரக்குகளையும் நெய்யிலோ அல்லது தேனிலோ பொன் வறுவலாக வறுத்து

சீயக்காய் கொஞ்சம்
பருத்திப்பிஞ்சு இரண்டு

இவ்விரண்டையும், வெந்நீரிலோ அல்லது முலைப்பாலிலோ அரைத்து ஆமணக்கு எண்ணெய் சேர்த்துக் காய்ச்சி கொடுக்கவும்.

(b) வெட்டுப்பூலாக்கொழுந்து (வரட்பூலா)
உசிலங்கொழுந்து ஓடமாணிக் கொழுந்து
கடுக்காய் வெள்ளைப்பூண்டு

இவைகளை ஒன்றிரண்டாக இடித்துக் கஷாயம் வைத்துப் பருகவும்.

**இதற்குப் பத்தியம்:**

வெங்காயமும், கஞ்சியும் சாப்பிடவும்.

**குறிப்பு**: ஓடமானிக் கொழுந்து என்பது இன்னதென்று விளங்கவில்லை. ஓடுக்கன் என்பது "ரப்பர் கொடி" என்று வழங்கப்படும். ஒரு கொடி: வேலிகளில் பயிராகும் மணியைப்போன்ற புஷ்பமுடையதாக இருக்கும்.

**ஓடம்** - செங்கருங்காலி என்று மலையகராதியில் காணப்படுகிறது.

### 141. பிள்ளைகளுக்குக் கணத்தெண்ணெய்

மாசிக்காய் சீரகமோ டதிம துரம்
வகைக்கோர்பல மாங்கிராம்போர்
காசிடைகோ ழியினவரை வேர்பலம்பத்
தீரவெங்கா யமுமோர்சேரு
மீசுரமாய்ச் சிறுகவரிந் தொன்றரைச்சேர்
விளக்கெண்ணெய் மீதினிட்டே
வாசமுறப் பொன்னிறமாய் வரவேக
விட்டுவேர் வகையெடுத்தே 224

எடுத்திதனைப் பஞ்செனப்பிச் சிப்போடவுங்
கண்டகொண் டிடுமருந்தை
யிடித்துப்போ டவுமிந்தப் பதத்தின்ம
றுகலசத்தி லெடுத்துவார்த்துங்
கொடுத்துக்கொள் ளவுமெந்தக் கணத்திற்குங்
குணமிரத்தக் கணமேயாதி
படுத்துகணப் பதினெட்டும் பறக்குமெனச்
சரபேந்திரர் பகர்ந்திட்டாரே. 225

| | | |
|---|---|---|
| (இ-ள்) | மாசிக்காய் | 1 பலம் |
| | சீரகம் | 1 பலம் |
| | அதிமதுரம் | 1 பலம் |
| | கிராம்பு | 1 காசெடை |
| | கோழியாவாரை வேர் | 10 பலம் |
| | ஈரவெங்காயம் | 1 சேர் |

இம்மருந்துச் சரக்குகளைச் சிறுசிறு துண்டுகளாக்கி, ஆமணக்கெண்ணெய் 1½ சேர் விட்டுப் பொன்னிறமாக வதக்கிப் பின்பு வேர் வகைகளை எடுத்துப் பஞ்சுபோல் இடித்து எல்லாவற்றையும் ஒன்றுசேர்த்து அடுப்பின்மேல் வைத்துப் பக்குவமாகக் காய்ச்சி வடிக்கவும். இவ்வெண்ணெயைத் தினந்தோறும் பருகிவர இரத்தக்கணம் முதல் 18 வித கணமும் தீரும்.

### 142. கணத்துக்கு மருந்து

மணித்தக்கா ளியும்வேலிப் பருத்திச்சாறில்
வகையுடன்குப் பைமேனி வகையின்சாறும்
உணர்ச்சியுடன் றன்னிலொக்க லோரிருநாழி
யுங்கொண்டோர்பசு வினெய்யுர்யா
மணக்கெண்ணெயுழக்கு
மிணக்கமுள்ள நல்லெண்ணெ யுழக்கிதெல்லாங்கூட்டி
யெரித்துநல்கக் கணப்பிணிபோ மென்பதனை
யெண்ணிக்
குணக்குரிசில் சரபேந்திரர் கூறுமுறைதன்னைக்
குவலயத்தின் மானிடர்கள்கொண் டாடுவாரே.

(இ-ள்) மணித்தக்காளிச்சாறு வேலிப்பருத்திச்சாறு
குப்பைமேனிச்சாறு

இம்மூன்று வகைச்சாறும் சேர்த்து 2 நாழி (2 படி)

| | |
|---|---|
| பசுவின்நெய் | 1/2 படி |
| ஆமணக்கெண்ணெய் | 1 உழக்கு (1/4 படி) |
| நல்லெண்ணெய் | 1 உழக்கு |

இந்த வகைச்சாறுகள் கூட்டிய எண்ணெயை அடுப்பின் மேலேற்றிப் பக்குவமாக எரித்து வடிக்கவும்.

இதைத் தினந்தோறும் சாப்பிட்டு வரக் கணச்சூடு தீரும்.

### 143. பொருமு கணத்திற்கு

சாணக்கி யுள்ளியொரு தலைப்பூண்டு
வசம்பொன்று தான்வதக்கி
தாணாக்கியே நறுக்கிபிழிந் தோர்சங்கு
புகட்டிடவுந் தானந்தன்னிற்
கோணாம லேதடவிக் கொண்டுநேர்
மூன்றுகொ டுவதக்கா
தூணாகத் தட்டிநாள்மூன் றாறுபொ
முதுகொடுத்து தவுவாயே. 227

| | |
|---|---|
| (இ-ள்) சாணக்கி | (ஒரு பிடி) |
| வெள்ளைப்பூண்டு | ஒன்று |
| வசம்பு | ஒன்று |

இவைகளை வதக்கி இடித்துச் சாறு பிழிந்து அதில் ஒரு சங்கு உள்ளுக்குப் புகட்டி குழந்தை உடம்பின் மேலேயும் தடவவும். இதனை மூன்று நாளைக்குத் தினம் இரு வேளை வீதம் ஆறு பொழுது கொடுக்கவும். பொருமுகணம் தீரும்.

## 144. மாந்த கணத்திற்கு மருந்து

பேய்ச்சுரைவே ராறுபலங் கழுவிச்சற்றே
பெருந்தணலி லேவெதுப்பிப் பிடித்திடித்துத்
தாய்ச்சாறு பிழிந்துகொண்டச் சாறுழக்கிட்
டான்மிளகும் பொடித்திட்ட தனிற்கூட்டிக்
காய்ச்சுகுழம் பாகுபதத் தினிலிறக்கிக்
கரத்திலொரு காசிடைமட் டாயெடுத்துத்
தோய்த்ததயி ருடன்கலந்து கொடுக்கமாந்தத்
துடநோய்கள் கணநோய்கள் துலைந்துபோமே.

(இ-ள்) பேய்ச்சுரைவேர் (ஈரமுள்ளது) 6 பலம் எடுத்து அதை நன்றாகக் கழுவி அனலில் வெதுப்பி, இடித்துப் பிழிந்த சாறு ஒரு உழக்குடனே, மிளகுப் பொடியிட்டு அடுப்பின் மேல் வைத்துக் குழம்பாகக் காய்ச்சவும். இதில் ஒரு காசெடையளவு எடுத்து நன்றாகத் தோய்ந்த தயிருடன் கலந்துகொடுக்க மாந்த நோய்களும் கண நோய்களும் தீரும்.

## 145. வரள்கண, வரள்மாந்தத்தின் குணமும், மருந்தும்

நெஞ்சுவத்தி வாயுணரு முடம்புகாயும்
நீண்டகண்பீ ளையுஞ்சாரு நேரந்தோறும்
மிஞ்சிடுந்தண் ணீர்த்தாகங் குரளுங்கம்மு
மேயழமாட் டாதிதற்கு வெள்வெங்காயம்
முஞ்சாணா கம்வசம்பு முதிர்துழாயின்
முத்திலையுங் கூட்டியுள்ளுக் குங்கொடுத்தே
யஞ்சுவிர லாற்றுவளிட் டிடவப்போதே
யனல்மாந்தம் வரள்கணமு மகன்றுபோமே. 229

**குறிகுணம்;**

(இ-ள்.) குழந்தையின் நெ ஞ்சு வற்றும் வாய் உலரும், சுரதாபங்காணும்! அடிக்கடி கண்களில் பீளைகட்டும்: நா வறட்சியுண்டாகும், குரல் கம்மும் குழந்தை அழமுடியாத நிலைமையிலிருக்கும்

**இதற்கு மருந்து:**

வெள்வெங்காயம் சோணாகம்
பெருவாகைப்பட்டை
வசம்பு துளசி இலை

இவற்றை இடித்துப் பிழிந்து குழந்தைகளுக்குப் புகட்டி மேலும் துவளையிட அனல் மாந்தமும், வரள் கணமும் தீரும்.

**146, சுழி கணத்திற்கு**

வெள்ளிண்டு கொண்டுவந்து நறுக்கிமுலைப்
பால்விட்டு மேபிழிந்து
மெள்ளவிளக் கெண்ணெய்சரி விட்டுள்ளி
வசம்பீர வெங்காயத்தை
யெள்ளளவா கவுநறுக்கி யிட்டெரித்துள்
ளுக்குத்தட விடுமேலெங்கும்
பிள்ளைகணந் தீருமென் றுசரபேந்
திரனாரும் பேசினாரே. 230

(இ-ள்) வெள்ளிண்டு கொண்டு வந்து நன்றாக நறுக்கி முலைப்பால்விட்டு இடித்துப் பிழிந்து எடுத்த சாற்றிற்குச் சரிநிறை விளக்கெண்ணெய் விட்டு

வெள்ளைப்பூண்டு வசம்பு
வெங்காயம்

இம்மூன்று சரக்குகளையும் எள் பிரமாணமுள்ள சிறுசிறு துண்டுகளாக அரிந்து சாறுகூட்டிய எண்ணெயில் குழப்பி

அடுப்பின்மேல் வைத்துப் பக்குவமாக எரித்து வடிகட்டி உள்ளுக்குக் கொடுத்து மேலேயும் தடவவும்.

குழந்தைகளின் கணம் தீரும்.

## 15. பிள்ளைகளின் சில்லரை வியாதிகளுக்கு மருந்துகள்

### 147. பிள்ளைகளின் வயிறு பொருமலுக்கு மருந்து

இலையேழுத்தா மணியிலே
யெட்டிப்பறிவாய் பேசாமல்
விலையிட்டுங்கொண் டேயெருமை
வெண்ணெயினிலே வேகவைத்து
நலமாய்க்கொடுக்க வும்பொருமு
நசல்போமிந்த நன்முறையை
யுலவாதுண்டு கைகண்டோ
ருத்தாமணியுத் தமமெனவே 231

•

உத்தாமணியி னிலைநொச்சி
யுகாயின்கொழுந்தோர் மூன்றினையும்
வைத்துநறுக்கி வெள்ளுள்ளி
வராகனெடையே வைத்துக்கொண்
டொத்தவிளக்கெண் ணெயைவிட்டுப்
பதத்தில்வடித்திட் டோர்நால்நாள்
நத்திக்கொடுக்கப் பொருமலெனு
நசல்போமினிநா டாதெனவே. 232

(இ-ள்) (1) பூச்சி அரிக்காத உத்தாமணி இலை ஏழு (எண்ணிக்கையிலி) வாய் பேசாமல் பறித்து எருமை வெண்ணெயில் இலைகளை வேகவைத்து உள்ளுக்குக் கொடுக்கவும். இதனால் பொருமல் வியாதி தீரும்.

(2) உத்தாமணி இலை நொச்சி இலை
உகாய்க்கொழுந்து

இம்மூன்று இலைகளையும் வகைக்கு ஒரு குத்தளவெடுத்துச் சிறியதாக நறுக்கி, வெள்ளைப்பூண்டு ஒரு வராகனெடை எடுத்து வதக்கிக்கொண்டு, எல்லாவற்றையும் சேர்த்து விளக்கெண்ணெய் விட்டுப் பதத்தில் வடித்து 4 நாள் குழந்தைக்குப் புகட்டப் பொருமல் எனும் வியாதி தீரும்.

## 148. பிள்ளைகள் விரைவாதத்திற்கு மருந்து

கழற்கொடிசேம் பிலைச்சாறு வகைக்கிருநா
ழியும்கொட்டைக் கரந்தைச்சாறு
முழக்குநாலு டன்முடக்கொத் தான்சாறு
மொருநாழி யுடன்பாவட்டைக்
குழைச்சாறு மிருநாழி விளக்கெண்ணெய்
சேரிரண்டு கொள்கிழாயம்
பழக்கமுறை யேகொட்டைக் கரந்தைவேர்
பலம்பத்துப் பார்த்திதோடே. 233

பார்க்குள்வே லிப்பருத்தி வேருமிரு
வதுபலமும் பதக்குத்தண்ணீர்
ஏர்க்கவிட்டஞ் சொன்றாக வேகாய்ச்சி
யெண்ணெயிலே யெடுத்துவிட்டு
மார்க்கவேபொ டித்திடுசுக் கரைப்பலங்காற்
படிபாலி லரைத்தக்கூடச்
சேர்க்கக்காய்ச் சியுமெழுகு பதத்திறக்கு
... ... ... .. 234

| | | |
|---|---|---|
| (இ-ள்) | கழற்சி இலைச்சாறு | 2 நாழி |
| | சேம்பிலைச்சாறு | 2 நாழி |
| | கொட்டைக்கரந்தைச்சாறு | 4 உழக்கு |
| | முடக்கொற்றான் சாறு | 1 நாழி |

| | |
|---|---|
| பாவட்டைக்கொழுந்துச்சாறு | 2 நாழி |
| விளக்கெண்ணெய் | 2 சேர் |
| கொள்ளுக்கஷாயம் | 2 சேர் |

இவைகளை ஒன்று சேர்த்து, இதனுடன்

| | |
|---|---|
| கொட்டைக்கரந்தை வேர் | 10 பலம் |
| வேலிப்பருத்திவேர் | 10 பலம் |

இவ்விரண்டையுமிடித்து, 2 மரக்கால் ஜலம் விட்டு அடுப்பின் மீதேற்றி 1\5 ஆகக்காய்ச்சி இந்தக் கஷாயத்தை இறுத்து முன் சாறு கூட்டிய எண்ணெயில் விட்டு, சுக்கு ஒரு பலத்தைக் கால் படிப் பசுவின் பால் விட்டு நன்றாக அரைத்து, கல்கமாகச் செய்து எண்ணெயில் குழப்பி மெழுகு பதமாக வடித்து உபயோகித்துவர விரைவாதம் தீரும்.

### 149. பிள்ளைகளுக்கு அம்மைக்காயம், கணம் வைசூரி, தோன்றினால் மருந்து

நன்னாரி வெள்ளருகு சிற்றவரை
நிலப்பனைசா ரணைநல்வேரும்
சொன்னவகைக் கோர்பாக்க ளவரைத்து
நாழிநெய்க்குச் சொல்வாறூட்டி
அன்னவாவின் பாலீராழாக் கிட்டந்நெயிற்
கருஞ்சீர கந்தன்னோடே
பின்னரதி விடையந்திப் பிலிபூதக்
கரப்பானும் பிரித்தெடுத்தே 235

எடுத்தோர் வகைக்கோர் கழஞ்சிட் டரைத்ததனைக்
கரைத்து நெய்சேய் தேயுட்கொள்ளக்
கொடுத்திடுகா சிடையும்நக்கிக் கொண்டிடெனக்
குருசில்சர பேந்திரர்தம்மை

யடுத்தவருக் கருள்புரிய மம்முறையே
மெய்முறையென் றவையினுள்ளோர்
படித்ததனைப் பார்த்தெவர்க்கும் பண்டிதங்கை
கண்டதெனபா பகர்ந்திட்டாரே. 236

(இ-ள்) நன்னாரி வேர் வெள்ளருகுவேர்
சிற்றவரைவேர் நிலப்பனைக்கிழங்கு
சாரணைவேர்

இவைகளை வகைக்கு ஒரு பாக்களவெடுத்து, அரைத்து ஒரு படி நெய்யுடன் குழப்பிப், பசுவின் பால் இரண்டு ஆழாக்குக்கும் கூட விட்டுக்

கருஞ்சீரகம் அதிவிடையம்
திப்பிலி பூதகரப்பான்பட்டை

இவைகளை வகைக்கு ஒரு கழஞ்சு எடுத்து அரைத்து நெய்யுடன் குழப்பி அடுப்பின் மேலேற்றிப் பக்குவமாக வடிக்கவும்.

வேளைக்கு ஒரு காசெடை வீதம் சாப்பிட்டால் மேலே கண்ட நோய்கள் தீரும்.

### 150. பிள்ளைகளின் தண்ணீர்த் தாகத்துக்கு

துடரிவரப் பூலாவால் துவான்கொழுந்தஞ்
சொலுநாரத் தையிலையுந்தொகுத்துக்கொண்டே
யிடுபுற்று மண்ணுடனே குளவிக்கூடிட்
டிருந்தமணப்ச் சோலைவிளா விலையுங்கூட்டி
யடைவுடையொன் பதுமருந்திட் டிடுகஷாயத்
தனற்செங்கற் சுட்டிடுவப் போதேயத்தை
எடுவிந்தக ஷாயமாத்தி ரர்க்குநல்க
வேதண்ணீர்தாகந்தா னெடுத்திடாதே. 237

(இ-ள்) துடரிக்கொழுந்தே (இண்டு)
துவான்கொழுந்து (பொன்முசுட்டைக்கொழுந்து)
ஆலங்கொழுந்து
வரப்பூலாக்கொழுந்து
நாரத்தை இலை
புற்றுமண்
குளவிக்கூண்டுமண்
பச்சை இலை (பச்சிலை)
விளா இலை

இச்சரக்குகளையெல்லாம் சேர்த்துக் கஷாயம் செய்து ஒரு புதுச்செங்கல்லைச் சுட்டுக்கஷாயத்தில் நனைத்து எடுத்துவிட்டு, அக்கஷாயத்தைக் குழந்தைகளுக்குக் கொடுக்கத் தீராத தாகம் நிற்கும்.

## 151. எங்கும் வெடி சிரங்காய்ப் போகாமலிருக்கிறதற்கு உள்மருந்து

அனிச்சம்வே ரொருசேரை யரைத்தெலுமிச்
சம்பழத்தி னளவெடுத்தே
புனிற்றெருமை மோரிலிட்டுக் கலக்கியந்தி
சந்தியிரு போதுந்தானே
மனைக்குளெட்டு நாளளவுங் குடித்திடுபத்
தியம்பிடிக்கில் வாகாமென்றில்
கனைத்துலகு மார்க்கவந்த தவச்சரபேந்
திரர்கைகண் டருள்செய்தாரே. 238

(இ-ள்) அனிச்சைவேர் 1 சேர் வெட்டிக்கொண்டு வந்து அம்மியிலிட்டு அரைத்து அதில் ஒரு சிறு எலுமிச்சங்காயளவு எடுத்து, எருமை மோருடன் கலக்கி அந்தி சந்தி குடிக்கவும். 8 நாள் சாப்பிட்டுப் பத்தியமாயிருக்கவும். கைகண்டது.

**அனிச்சை - நாகமல்லிகை**

## 152. சிறுபிள்ளைகளுக்குப் பேதி எண்ணெய்

சத்திச்சா றடைவேருந் தாமணிசா
றடைசங்க தாரிவேரும்
வைத்தசிறு வழுதலைவேர் தூதுவளை
தலைச்சுருள் வள்ளிவேரும்
இத்துடனே திருவப்பட் டையும்வேரும்
குட்டிலெ னும்வேருள்ளி
பத்துடனப் பைக்கிழங்கு கண்டமுவசம்
பெள்ளெண்ணெய் பருவேப்பெண்ணெய். 239

எண்ணெயொக்கக் கொண்டுயெரித் திடவயிறு
கழியுநோயி ராதுதீரும்
உண்ணுகடும் பத்நியமொன் றாகாது
வாகாக வுண்ணச்செய்யென்
றண்ணல்சர பேந்திரனார ருண்முறையா
வளகைவயித்தி யர்களானோ
ரெண்ணியனு சருத்தவருக் கெந்நோயுந்
தீர்ப்போமென் றிருந்திட்டாரே. 240

| | |
|---|---|
| (இ-ள்) சத்திச்சாறணைவேர் | உத்தாமணிவேர் |
| மூக்கறட்டைவேர் | சங்கதாரிவேர் |
| சிறுவழுதலைவேர் | தூதுவேளைவேர் |
| தலைச்சுருள்வள்ளிவேர் | (பெருமருந்துவேர்) |
| திருவப்பட்டை | திருவப்பட்டைவேர் |
| குட்டிவிளாவேர் | வெள்ளுள்ளி |
| அப்பைக்கிழங்குத்துண்டம் | |
| வசம்பு | |

இவற்றைச் சமனெடை எடுத்து நன்றாக இடித்து வேப்பெண்ணெயும் நல்லெண்ணெயும் ஒன்றுகூட்டி யாவற்றையும் ஒன்றாகக் குழப்பி, அடுப்பில் வைத்துப் பக்குவமாக எரித்துக் குழந்தைக்குப் புகட்ட வயிறு கழிந்து பற்பல நோய்களும் தீரும். பத்தியமாக இருக்கவும்.

குறிப்பு:

சரக்குகள் 1/2 பலம் என்றால்
வேப்பெண்ணெய் 21/2 சேர்
நல்லெண்ணெய் 21/2 சேர்

எடுத்துக்காய்ச்சவும்.

### 153. பிள்ளைகளுக்கு வயிறு கழியமருந்து

காட்டுமல் லிகையிலையு மீரவெங்கா
யத்துடனே கருஞ்சீரகமுங்
கூட்டிநறுக் கிப்பிழிந்து விளக்கெண்ணெய்
தனிற்கூட்டிக் கொடுக்கவேதான்
னீட்டமுள கல்மிழங்க ளொலாமகல
வயிறுகழிந் திடுமென்றேசோ
ணாட்டரசர் சரபேந்திரர் நவிற்றுமுறை
யெவர்க்குமதி சயநன்காமே. 241

(இ-ள்.) காட்டுமல்லிகை இலை வெங்காயம்
கருஞ்சீரகம்

இவற்றைச் சமமெடுத்து ஒன்று கூட்டி இடித்துச் சாறு பிழிந்து விளக்கெண்ணெயில் கலந்து கொடுக்க நன்றாக வயிறு கழியும். கல்மிஷங்களும் தீரும்.

### 154. உரம் விழுந்த பிள்ளைகளுக்கு

உரம் விழுந்த பிள்ளைகளுக் குடனிருகா
துங்கரங்கொண் டுருவும்போது
விரவிவீறென் றிடுமிவ்வி டமறிந்து
மஞ்சள்விளக் கெண்ணெய்மந்தித்

திருக்கையினிற் றடவிக்கொண் டேகழுத்தி
லிரைத்தங்கட் டினவிடத்தி
லெரிசெய்வெந் நீராத்தெறித் திட்டேமூன்று
நாளிவ்வா ரிடநன்காமே. 242

(இ-ள்) உரம் விழுந்த குழந்தைகளின் இரு காதுகளையும் உருவும்போதும் அது வீரிட்டு அழும். எந்த இடத்தில் தொட்டால் அழுகிறதோ அந்த இடத்தைக்கண்டு அங்கு மஞ்சளையும் விளக்கெண்ணெயையும் ஒன்றாகக் கூட்டிக் கையில் தடவிக்கொண்டு உருவவும். இம்மாதிரியே கழுத்தில் இரத்தம் கட்டின இடத்திலும் உருவி விடவும். வெந்நீரையும் தெளிக்கவும். இவ்வாறு 3 நாள் செய்யவும். உரம் எடுபட்டுப்போம்.

### 155. சிறுபிள்ளைகளுக்கெண்ணெய்

உள்ளிகோழி யின்முட்டை வசம்பினையுத்
தாமனிபீர்க குணும்நல்வேளை
ஒள்ளியநாய் வேளையவ ரைக்கோழிய
வரைச்சாறு டன்கோவைச்சா
றுள்ளியெடுத் தேயரைத்தவ் வளவுக்கவ்
வளவெண்ணெ யதனா ற்காய்ச்சிப்
பிள்ளைகட்குக் கொடுக்கவுங்கை கண்டதெனச்
சரபேந்திரர் பேசினாரே. 243

(இ-ள்) வெள்ளைப்பூண்டு வசம்பு
கோழிமுட்டை (வெள்ளைக்கரு)
உத்தாமணி இலை பீர்க்கிலை
நல்லவேளை இலை நாய்வேளை இலை
கோழியவரைச்சாறு கோவைச்சாறு

இவைகளைச் சமஅளவாக எடுத்துக் கல்வத்திலட்டு நன்றாக அரைத்து எண்ணெயில் குழப்பிப் பதமாகக் காய்ச்சி வடிகட்டவும். இதனைப் புகட்டவும். பற்பல வியாதிகளும் தீரும். கைகண்டது (எண்ணெய் ஆமணக்கெண்ணெய்)

## 156. குழந்தைப் பிள்ளைகளுக்கு நெய்

கழற்கொடியி னிலைக்கொழுந்துத் தாமணிசா
றனைமணித்தக் காளிநொச்சிற்
குழைக்கொழுந்தா டாதொடை நுணாவினிலை
பொடுதலைக்காய் கொண்டிதெல்லாங்
கழற்கொடிக்கா யினளவே யரைத்தெடுத்தே
லஞ்சாதிக் காய்கிராம்பு
மிழைத்ததிரி பலைகருஞ்சீ ரகம்சீர
கம்வசம்போ டிவையுங்கொண்டே. 244

கொண்டுதிரி கடுகமுடன் வகைக்கொருகா
சிடையிடித்துக் கொணர்ந்துதூளைப்
பண்டிதமா யோர்நாழி பசுவின்வெண்
ணெயிற்கலந்து பாங்காய்த்தானே
யண்டையிருந் ததைக்கிருத பக்குவமா
கக்காய்ச்சி யதைவடித்தே
உண்டிடப்பிள் ளைகட்குதவி லுடன்மாந்த
மென்பதெல்லாம் மோடுந்தானே. 245

(இ-ள்) வேலிப்பருத்தி (உத்தாமணிக்) கொழுந்து
மணித்தக்காளிக் கொழுந்து
கழல்கொடி இலைக்கொழுந்து
சாறணைக்கொழுந்து
நொச்சில் கொழுந்து
ஆடாதொடை இலை
நுணாஇலை
பொடுதலைக்காய்

இவைகளை வகைக்கு ஒரு கழற்சிக்காயளவு எடுத்து நன்றாக அரைத்து

| | |
|---|---|
| ஏலம் | சாதிக்காய் |
| கிராம்பு | கடுக்காய்ததோல் |
| நெல்லிக்காய்த்தோல் | தான்றிக்காய் |

| | |
|---|---|
| கருஞ்சீரகம் | சீரகம் |
| வசம்பு | சுக்கு |
| திப்பிலி | மிளகு |

இவைகளை வகைக்கு ஒருகாசெடை எடுத்துப் பொடி செய்து பசு வெண்ணெய் 1 நாழிகையில் கலந்துஅடுப்பின் மேல் வைத்துப் பக்குவமாக காய்ச்சி நெய்யை வடிக்கவும்.

இதனை உள்ளுககுக் கொடுக்க மாந்த வகைகள் அனைத்தும் தீரும்.

## 16. பிள்ளைகளின் ஆமத்திற்கு மருந்துகள்

### 157. குழந்தைகளின் ஆமவலிக்கெண்ணெய்

சாரணைபா வட்டையுமுத் தாமணியும்
மூவகைவேர் சலத்தாமையோ
டோரொன்றுக் கோர்கழஞ்சுமு...........சிற்
றாமணக்கெண் ணெயும்பொடித்திட்
டேருள்ளி வசம்புவகைக் கோர்கழஞ்சிட்
டேயிடித்திட் டியல்பாய்க்காய்ச்சி
பிராயம்பலா பலமும்புரிந் தொருகாசிடை
யரையும்புகட் டின்னங்கேளே. 246

இன்னுங்கே ணொச்சிவேலிப் பருத்திசா
றணைபேயே னுந்தும்மட்டி
சென்னிறத்த கனிவீழி பொடுதலையி
னிலைச்சாறுந் தினிசொன்றுக்கு
யுன்னியுழக் கிறுத்துச்சிற் றாமணக்கெண்
ணெயைநாழி யூற்றிக்காய்ச்சி
அன்னபிள்ளை பெலமறிந்தோர் காசிடையொன்
றரைக்காசு மளிக்கலாமே. 247

அழைத்தடுத்துப் புகட்டவுமே யாம்வலிப்ப
டங்கும்வலி யடுத்துவந்த
பொழுதெடுத்துப் புகட்டவுங்கை கண்டதென்னோய்
போமெனவே புலவர்மெச்சுஞ்
செழியன்சொன்புகழுஞ்செம் பியனாட்
டங்கலுமே செவ்விளதாளு
மழகர்சர பேந்திரனார் அருளியதென்
றாலெவர்க்கு மன்புண்டாமே. 248

(இ-ள்) சாறணை வேர் பாவட்டை வேர்
உத்தாமணி வேர் ஆமையோடு

இந்த வகைக்கு ஒவ்வொரு கழஞ்சு எடுத்துச் சிற்றாமணக்கெண்ணெயில் (1/2 படி குழப்பி)

உள்ளி வசம்பு

இவ்விரண்டும் வகைக்கு ஒரு கழஞ்சு கூட்டிப் பக்குவமாக அடுப்பின் மேலிட்டுக் காய்ச்சி வடித்துக் குழந்தைகளின் பலமறிந்து ஒருகாசிடையோ அல்லது 1/2 காசிடையோ கொடுக்கவும்.

2 நொச்சிச்சாறு வேலிப்பருத்திச்சாறு
சாறணைச்சாறு பேய்க்குமட்டிக்காய்ச்சாறு
வீழிச்சாறு பொடுதலைச்சாறு

இவைகள் வகைக்கு ஒரு உழக்கு

சிற்றாமணக்கெண்ணெய் 1 படி விட்டுக் காய்ச்சிப் பக்குவமாக எரித்து வடிக்கவும். இதில் ஒருகாசிடையோ, அல்லது 11/2 காசிடையோ, குழந்தையின் பலத்திற்குத் தக்கபடி வலி வரும்போது உள்ளுக்குப் புகட்டவும். உடனே நிற்கும். கைகண்டது.

## 158. ஆமத்துக்கு

விடத்தேரை பிண்ணாக்கி விளாசிறுபுள்
ளடிநீர்பூ லாவும்வேறாய்
வடுத்திடுகீழ் காய்நெல்லி வரற்பூலா
வும்புளிக்க வைத்தகாடி
யெடுத்துடன்வார்த் தரைத்துள்ளுக் கும்புகட்டித்
துவளையுமிட் டேசங்காலு
மடுத்தநாட்பு கட்டவுமே யாமவலிப்
பகலுமென் வறிமினீரே. 249

(இ-ள்) விடத்தேரிவேர் பிண்ணாக்கிவேர்
விளாவேர் சிறுபுள்ளடிவேர்
நீர்ப்பூலாவேர் கீழாநெல்லிவேர்
வரட்பூலாவேர்

இவைகளைச் சமமெடுத்து நன்றாகப் புளித்த காடி விட்டு அரைத்து அதைக் குழந்தைகட்குப் புகட்டி மேலும் துவளையிடவும். இதை, மறுநாளும் ஒரு சங்கு கொடுக்கவும். ஆம வலிப்புத் தீரும்.

## 159. ஆமத்துக்கு அஞ்சனம்

கடுக்காய்நெல் லியின்முள்ளி மடற்றுத்தம்
பளிங்குக்கல் கடைச்சரக்கை
யெடுத்துத்தன் னினமொக்க வேயெலிமிச்
சம்பழச்சா றிட்டரைத்தே
அடுத்துண்டை செய்துநிழ லாலுலர்த்திக்
காடியினா குதனீராதல்
விடுத்தஞ்ச னமிடவும் வேணுமெனச்
சரபேந்திரர் விளம்பினாரே. 250

(இ-ள்) கடுக்காய்த்தோல் நெல்லிமுள்ளி
மடல்துத்தமு பளிங்குக்கல்

இக்கடைச்சரக்குகளை எல்லாம் எலுமிச்சம்பழச் சாற்றினால் நன்றாக அரைத்து, மாத்திரை செய்து நிழலில் உலர்த்திக் காடியிலோ அல்லது தண்ணீரிலோ இழைத்து ஒரு பயறளவு ஒரு கோலில் எடுத்துக் கண்களில் அஞ்சனமாக இடவும். ஆமதோஷம் தீரும்.

## 160. ஆமத்துக்கும் எடுப்புத் தோஷத்திற்கும்

காஞ்சோறிமுக் காவேளை முத்தக்கா
சுடனேபங் கம்பாளைவேர்
ஆய்ந்தெடுத்து வகைவகைகட் கடுத்தடிமுப்
பலத்துடன்முக் குறுணியானீர்
தோஞ்சுறநா லொன்றதாகக் காய்ச்சிப்பிசை
பிழியிதினிற் றொகுநெய்நாழி
காஞ்சவுப்புக் கூட்டுழக்கு கற்கஞ்சுக்
கதிவிடையங் கருஞ்சீராமே. 251

கருஞ்சீர கம்மிளகு திப்பிலியு
நற்சீர கத்தோ டோமம்
யிருந்தவத்திப் பூவுடன்கூ விளஞ்சடையுத்
தின்புதுவர் சிகையுமொன்றுக்
கருங்கழஞ்சொன் றுறவரைத்துக் கரைபதத்தில்
வடித்துநக்க வாந்தைத்தோடம்
பொருந்திவயிற் றினிலுள்ள தோடமுமா
மத்துடனே போகுந்தானே 252

| | | |
|---|---|---|
| (இ-ள்) | காஞ்சோறி | 3 பலம் |
| | முக்காவேளை | 3 பலம் |
| | கோரைக்கிழங்கு | 3 பலம் |
| | ஆடுதீண்டாப்பாளை வேர் 3 பலம் | |

இவைகளை இடித்து 3 மரக்கால் பசு மூத்திரம் விட்டு அடுப்பின் மேலேற்றி நாலில் ஒன்றாகக் காய்ச்சிப் பிசைந்து பிழிந்து வடிகட்டிக்கொண்டு அதனுடன்,

| | |
|---|---|
| பசுநெய் | 1 படி |
| பொரித்த உப்பு | ஒரு உழக்கு |
| சுக்கு | அதிவிடயம் |
| கருஞ்சீரகம் | மிளகு |
| திப்பிலி | சீரகம் |
| ஓமம் | அகத்திப்பூ |
| வில்வப்பழச்சதை | பிஞ்சுக்கடுக்காய் |

இவைகளை வகைக்கு ஒரு கழஞ்சு வீதம் எடுத்துத் தண்ணீர் விட்டு நன்றாக அரைத்து, நெய்யோடு குழப்பிஅடுப்பின் மேலேற்றிப் பக்குவமாக எரித்துப் பதத்தில் இறக்கிச் சாப்பிட்டுவர

ஆந்தைத்தோடம்
வயிற்றிலுள்ள ஆமதோஷம்

இவைகள் தீரும்.

## 17. பிள்ளைகள் மாந்தத்திற்கும் அதன் உபத்திரவங்களுக்கும் மருந்துகள்

### 161. மாந்தம் பொருமல் கழிச்சலுக்கு மருந்து

உத்தாமணியோ டுள்ளிவெதுப் படக்கிகோழி
யவரைவசம் புடன்சாணாக்கி
யித்தினையு மோமத்தி னிற்கூட்டிக்
கருக்கிட்டு மேபுகட்ட
வத்தினமே மிகுதாக மனல்கண்டா
னுணாவிலைவெந் தயம்வசம்பும்
புத்தவெண்கா யமுங்கூட்டுங் கருக்குணப்பே
திகள்மாந்தம் பொருமல்போமே. 253

(இ-ள்) உத்தாமணிவேர் வெள்ளைப்பூண்டு
வெதுப்படக்கி கோழியாவாரை
வசம்பு சாணக்கிக்கீரை
ஓமம்

இவை எல்லாவற்றையும் ஒரு சட்டியிலிட்டு நன்றாகக் கறுக்கித் தண்ணீர் விட்டுக் கஷாயமாக இறக்கி அன்றைய தினமே புகட்டவும். தாகமும் ஜுரமும் கண்டால்

b) நுணா இலை வெந்தயம்
வசம்பு வெள்ளைப்பூண்டு

இந்நான்கையும் கறுக்கிக் கஷாயம் செய்து சாப்பிடப் பேதிகள், மாந்தம், பொருமல் முதலானவைகள் தீரும்.

**162. மாந்தத்திற்குப் பிள்ளைப்பிணி தீர மருந்து**

பிள்ளையுடற் பிணிமாந்தந் தவிர்ந்திடவே
பெரியோர்கள் பேணிச்சொன்ன
உள்ளிவசம் புயர்பனைவே ருடன்வேலிப்
பருத்தியிலை யுகந்துதேடி
வெள்ளாட்டின் புழுக்கையுமிட் டேகாடி
விட்டரைத்து மேல்வயிற்றின்
வள்ளிதாய்ப் பூசவுமே வயிறுகழிந்
திடும்பொருமல் வாடிப்போமே. 254

போமிந்த மருந்தினையே கொதிக்கவைத்து
வயிற்றினிலே பூசப்பூசத்
தாமதியா துடனேதான் றவிர்ந்துவிடும்
பிணிமாந்தஞ் சவுக்கியமுண்டாஞ்
சேமமிது வென்றுலகோர் தெளியுமெனச்
சரபேந்திரர் செப்பநூலே
பாமரர்க ளறியார்கள் பாவாணர்
நயந்திவைபா ராட்டுவாரே. 255

(இ-ள்) உள்ளி வசம்பு
பனைவேர் உத்தாமணி இலை
வெள்ளாட்டுப்புழுக்கை

இவற்றைக் காடிவிட்டு நன்றாக அரைத்து மேல் வயிற்றில் பூச வயிறு கழிந்து பொருமல் தீரும்.

இதையே கொதிக்கவைத்து வயிற்றில் பூச, மலங்கழியாது. மாந்தம் நீங்கும். சுகமுண்டாகும்.

### 163. சிறு பிள்ளைகள் மாந்த ஜ்வரத்திற்கு மருந்து

மாந்தசுரம் பிள்ளைகட்கு வந்தால்வில்
வத்துடன்பா வட்டைவேரும்
போந்தபூ னைக்காலி முடக்கொத்தான்
சிறுபுள்ளடிப் புதியவேரும்
காந்திடா மற்சுட்ட வசம்புடனா
மையினோடுங் கறுகச்சுட்டே
யேந்திநா ழியினீகிட் டுரியாகக்
காய்ச்சுபுகட் டினனோய்போமே. 256

(இ-ள்) வில்வவேர் பாவட்டைவேர்
பூனைக்காலிவேர் முடக்கொற்றான்வேர்
சிறுபுள்ளடிவேர் காந்தாமல்சுட்டவசம்பு

ஆமையோடு (நன்றாக கறுக்கியது) இவற்றை நன்றாக இடித்து 1 படி ஜலம் விட்டு 1/2 படியாகக் காய்ச்சி வடிகட்டிப் புகட்டவும். ஜுரம் (மாந்தம்) தீரும்.

### 164. மாந்தத்திற்கு மருந்து

நல்லெண்ணெய் நீர்முள்ளி நறுஞ்சாறு
முருங்கையிலை நல்லசாறு
மெல்லவே சமனாக விடுகலந்து
கொடுமாந்தம் விட்டுவிட்டே

யல்லலினிச் செய்யோமென் றகலுமிதைச்
சரபேந்திர ராயுனூற்கண்
டில்லறத்தோர்க் கினிதாய்மற் றேனையோர்க்
குமியல்பா யியம்பினாரே. 257

(இ-ள்) முருங்கையிலைச்சாறு நீர்முள்ளிச்சாறு

இவ்விரண்டையும் நல்லெண்ணெயுடன் குழப்பிக்கொடுக்க மாந்தம் "இனி குழந்தைக்குக் கஷ்டம்கொடுக்க மாட்டோம்" எனச் சொல்வதுபோல் தீரும்.

**165. மாந்தத்திற்கெண்ணெய்**

வேலிப்பருத்தி முடக்கொத்தான்
வேர்சாறடைநாய் வேளைவேர்
சாலப்பாணா வேருமணித்
தக்காளிவேருந் தானோர்வகைக்
கேலுந்தோல்பாக் களவரைத்து
மிதில்வெண்காய மிரண்டுதைய
காலைகடுக ரோகிணியுங்
கருஞ்சீரகமுங் கலந்துரைத்தே 258

உரியாமணக்கெண் ணெயிலிதனை
யூற்றிக்கொதிக்க வைத்துதைய
வரையிற்பரிதி வருதல்கண்டு
மைந்தர்க்கொருநாற் காசெடையே
விரைவாய்த்தண்ணீர் தொடாதெண்ணெய்
விட்டுக்கொடுக்க வேமூன்று
திரமேவயிறு விடுமாமஞ்
சிக்காதொருமுத் தினத்திலே. 259

| | |
|---|---|
| (இ-ள்) வேலிப்பருத்திவேர் | முடக்கொத்தான்வேர் |
| சாறடைவேர் | நாய்வேளைவேர் |
| *பாணாவேர் | மணித்தக்காளிவேர் |

இவற்றின் தோல் வகைக்கு ஒரு பாக்களவு அரைத்து இதனுடன் பூண்டு 2 பல்லும், கடுகு ரோகிணியும், கருஞ்சீரகமும் (சிறிதளவு) அரைத்துக் கரைத்து, ஆமணக்கெண்ணெய் உரி (1/2 படி)யில் குழப்பிக்கொதிக்க வைத்து

சூரியோதய காலத்திலே, சூரியன் புறப்பட்டபின் தாயார் தண்ணீர் தொடாமல் இருந்து, குழந்தைக்கு 4 காசளவு எண்ணெயைக் கொடுக்கவும். 3 தடவை வயிறு கழியும். ஆமமும் போகும்.

இவ்வாறு மூன்றுநாள் கொடுக்க மாந்தம் தீரும்.

### 166. மாந்தத்திற்குக் கஷாயமும் உருண்டையும்

ஓமம்கருஞ்சீ ரகம்வேலிப்
பருத்தியிலையு மொருகுத்து
வேமச்சட்டி தனிலிட்டு
வேலிப்பருத்தி யிலைக்கருக
ஓமம்வெடிக்க விட்டுழக்கு
முதகமூற்றி யுறைக்குநீலச்
சேமத்துளசி சிக்கினான்
பட்டையுடனே சிறுகுறிஞ்சா. 260

குறைவில்லாத பெருகிழங்கு
கூடக்கொண்டு புலிதுடக்கி
நறியவேரு மிவையிதெலா
நறுக்கியிடிந்ன் றாய்க்காய்ச்சி

*பாணாவேர் என்பதற்குக் காட்டாமணக்கு வேர் என்று பொருள்

சிறுகவரும்போ தேயிறக்கி
சிறுவர்க்கொருபோதிருபோதுந்
திறமாம் பெரிய மனிதர்களுந்
தினப்போமாந்தந் தீநோயே. 261

(இ-ள்) ஓமம் ஒரு பிடி
கருஞ்சீரகம் ஒரு பிடி

உத்தாமணி இலை ஒரு குத்து. இவைகளைச் சட்டியில் போட்டு இலை கருகும் வரை ஓமத்தை வெடிக்க விட்டு உழக்கு நீர் விட்டு

கருந்துளசிவேர் சிக்குணாம்பட்டை
சிறுகுறிஞ்சான்வேர் பெருங்கிழங்கு
புலிதுடக்கிவேர் (இண்டு)

இவைகள்கூடப்போட்டுச் சிறுகக் காய்ச்சிக் கொடுக்கவும். சிறுவர்களுக்கு ஒரு வேளை அல்லது 2 வேளை கொடுக்கவும். பெரிய மனிதர்களுக்குச் சாயங்காலம் புதியதாகக் கஷாயம் போடவும்.

### 167. (a) மாந்தத்திற்கு உருண்டையும் எண்ணெயும்

திரிகடுகந் திரிபலைதான் வகையொன்றுக்குச்
சீர்செய்பல மரைசுத்தி செய்தவாளப்
பருப்புப்பல மொன்றிவைகள் மிளகளவதாகப்
பண்ணுமுண்டை கொளச்செய்வாய்பறக்குமாந்த
வர்க்கமெனச் சரபேந்திரன் மகிழ்வாற்சொன்ன
வாகடநூ லுணர்ந்தவாரே வைத்தியரெல்லாம்
விருப்பமுட னேமெச்சு மேன்மையுள்ள
மேதாவி யோரெனவே விளம்பலாமே. 262

(இ-ள்) சுக்கு திப்பிலி
மிளகு கடுக்காய்
நெல்லிக்காய் தான்றிக்காய்

இவைகள் வகையொன்றுக்கு 1/2 பலம்

சுத்திசெய்த வாளப்பருப்ப - ஒரு பலம்

இவைகளைத் தண்ணீர்விட்டு நன்றாக அரைத்து மிளகுப் பிரமாணம் மாத்திரைகளாகச்செய்யவும். இதை உட்கொள்ள மாந்தங்கள் தீரும். குழந்தைக்கும் நன்கு பேதியாகும்.

### 167 (b) மாந்தத்திற்கு எண்ணெய்

தகரைப்பழம் பாசிகணப் பூண்டுமுசு
முசுக்கைவேர் சாதிக்காயும்
பகர்சாதிப் பத்திரியும் குட்டிவிளா
விடத்தேரிவேர் பட்டைதன்னோ
டிகபோக விலவங்க மிவைநறுக்கிப்
போட்டுவிளக் கெண்ணெயிட்டே
பகற்சூரிய புடம்வைத்தோர் கரண்டிநல்கு
உப்புப்புளி பார்த்திடாதே. 263

(இ-ள்) தகரைவேர் பழம்பாசிவேர்
கணப்பூண்டுவேர் முசுமுசுக்கைவேர்
சாதிக்காய் சாதிப்பத்திரி
குட்டிவிளா விடத்தேரிவேர்
கிராம்பு

இவைகளைச் சமமெடுத்து நறுக்கிப்போட்டு விளக்கெண்ணெய் (ஆமணக்கு) விட்டுச் சூரியபுடந் வைத்து ஒரு கரண்டியளவு உள்ளுக்குக் கொடுக்கவும்.

**பத்தியம்**: உப்பு, புளி நீக்கவும்.

91 நெ. சுவடியில் இண்டங்கொழுந்தும் காணப்படுகிறது.

**168. மாந்தக்கஷாயம்**

கீழாநெல் லியினீர்க்கும் வெந்தயமா
துளம்பிஞ்சுங் கிளர்த்திமூன்றுந்
தாழாமல்கழாயம் வைத்து மைந்துவேளை
கள்கொடுக்கத் தவிருமாந்த
மீழாதென் றேயுகந்து மேதினியாள்
சரபேந்திரர் விதித்துச்சொன்ன
வாழ்வாமிவ் வாகடநூல் வந்தவரை
மந்திரியாய் மதிக்கலாமே. 264

வேம்புடனே முருங்கைநுணா கழற்கொடிசார்
வேப்பிலையின் மேன்மையீர்க்கு
மாம்படிநற் கழாயம்வைத்துக் கொடுத்திடமாந்
தங்களெல்லா மகலுமென்று
சாம்பசிவார்ச் சனைசெய்யுஞ் சரபேந்திர
மகராசர் தமிழாற்செய்வித்
தாம்பரிசு கொடுத்தளித்தி மாயுணூ
லம்புவியோர்க் கறிவித்தாரே. 265

(இ-ள்) (a) கீழாநெல்லிஈர்க்கு வெந்தயம்
மாதுளம்பிஞ்சு (பூவோடு கூடியது)

இம்மூன்றையும் சமமெடுத்து இடித்துக் கஷாயம் வைத்து 5 வேளை கொடுக்க மாந்தம் தீரும்.

(b) வேப்பின் ஈர்க்கு முருங்கைஈர்க்கு
நுணாஈர்க்கு கழற்சிக்கொடி
கருவேப்பிலை ஈர்க்கு

இவைகளை நசுக்கிக் கஷாயம் வைத்துக் கொடுக்க எவ்வித மாந்தரோகமும் தீரும்.

**குறிப்பு:** கிளர்த்தி - பூந்தாது

## 169. மாந்தத்திற்கு மருந்து

சங்குதூது விளைவேர்பெ ருமருந்து
சத்திச்சா ரணைக்கிழங்கு
செங்கதா ரிப்பட்டை புளிநறளை
சிற்றவரை சிறுகுறட்டை
குங்கிலிய மனுத்தக்கா ளியினிலைவெள்
வேற்பட்டைகொன்றைப்பட்டை
வெங்கொடுவே லியின்வேரும் அவிபூதக்
கரப்பான்பட்டை மிதுமரத்தை 266

அப்பைக்கிழங்கு கரியசீரகமுஞ்
கம்பிப் பிசி னதுவும்
வெப்பில்லாநல் லெண்ணெயுரிவிளக்
கெண்ணெயுமொரு ழக்காவின்
துப்புமிதெல்லாங்கூட்டித்தொகுத்து
வடித்துச் சொல்லுமிருகா
சொப்பாயிடையுட் கொடுத்துடம்பிற்றட
விப்புளியுப்பொழித் திடலாம். 267

ஆமணக்கெண்ணெ யரையுடனொருசே
ராகுகார் போகநல்லரிசி
யோமம்வெட்பாலை யரிசிநீரடிமுத்
தூரையரைக் காற்பலமுள்ளி
யாமொருபலமும் வசம்பரைப்பலமு
மகுமேநஞ்சறப் பாய்ந்தான்
வேமனற்பிரண்டை வேர்பலமொன்று
வெண்கா யமேசிவந்தனவே. 268

சிவந்தன காயமெடுத் தெண்ணெய் வடித்துத்
தின்னவு மின்னஞ்செய் மருந்து
முவந்திட மெழுகித் தீயினை மூட்டி
யுட்டண மாகிலூ மத்தைக்

கவர்ந்துத்தாம ணியாவரைமூ வகையுங்
கசக்கி யேபிழிந்திடக் கன்னறு
நிவர்ந்தெழு நுரையை முதுகினில்வயிற்றி
னெடித்திட நிலாதுமாந் தமுமே. 269

(இ-ள்) (1)

சங்கு தூதுவளைவேர்
பெருமருந்து சத்திச்சாறணைக்கிழங்கு
செங்கதாரிப்பட்டை புளிநரளைக்கிழங்கு
சிற்றவரைவேர் சிறுகுரட்டை
குங்கிலிய மணித்தக்காளி இலை
வெள் வேலம்பட்டை கொன்றைப்பட்டை
வெள்ளைக்கொடிவேலிவேர்
பூதகரப்பான்பட்டை சிற்றரத்தை
அப்பைக்கிழங்கு (கோவை)
கருஞ்சீரகம் கம்பிப்பிசின்

இவைகளை வகைக்கு (2 வராகனெடை) எடுத்துப் பசுவின் பால்விட்டு நன்றாக அரைத்து, இதனுடன்

நல்லெண்ணெய் 1/2 படி
விளக்கெண்ணெய் 1 உழக்கு (1/4 படி)
பசுவின் நெய் 1/2 படி

இவை யாவற்றையும் ஒன்று கூட்டி அடுப்பின் மேலேற்றிப் பதத்தில் எரித்து வடித்து, வேளை ஒன்றுக்கு இரண்டு காசெடை வீதம் உள்ளுக்குக் கொடுத்து உடம்பின் மேலும் தடவி வரவும். குணமாகும்.

**பத்தியம்**: உப்பு, புளி நீக்கவும்.

(2) ஆமணக்கெண்ணெய் 11/2 சேர்
கார்போகரிசி ஓமம்
வெட்டபாலையரிசி நீரடிமுத்து

இவை வகைக்கு 1/8 பலம்

| | |
|---|---|
| பூண்டு | 1 பலம் |
| வசம்பு | 1/2 பலம் |

நஞ்சறப் பாய்ந்தான் (கொடிப்பாலை) வேர், பிரண்டை வேர் வகைக்கு 1 பலம்

இவற்றைச் சிறுக அரிந்து கல்லுரலிலிட்டிடித்து விளக்கெண்ணெயில் போட்டு அடுப்பின் மீதேற்றிப் பூண்டு சிவக்குமளவும் கொதிக்கவைத்து, எண்ணெயும் சிவந் பின்பு எண்ணெயை வடித்துக்கொண்டு தினந்தோறும் கடுகுடன் (தைலக் கசண்டுடன்) கொடுக்கவும். மாந்தம் நீங்கும்.

(3) அடுப்பை மெழுகித் தீமூட்டி அதில் ஊமத்தை இலை, உத்தாமணிச் சமூலம், ஆவரைச் சமூலம் இம்மூன்றையும் ஒரு சட்டியிலிட்டு வாட்டிக்கசக்கிப்பிழிந்து அதிலுண்டாகும் நுரையை மாந்தமுள்ள குழந்தையின் முதுகிலும், வயிற்றின் அடியிலும் பூசிவிட மாந்தம் தீரும்.

### 170. மாந்த எண்ணெய்

வகையதாங் குதிரை வாலிதான் சமூலம்
வருசிறு புள்ளடி சமூலம்
மிகவு நல்வேளை சமூலமாம் விடத்தேர்
வேர்பட்டை வெள்வேலம் பட்டை
புகல்புன் முருங்கை யைமையோ டிதெலாம்
பொடிப்பொடி யாகவேநறுக்கி
தகபெறச் சமமாய் விளக்கெண்ணெய் நாழி
தன்னிலுற விட்டனற் காய்ச்சே. 271

காய்ச்சியே வடித்து மாந்தம்வந் திடுசேய்
களுக்கெலாஞ் சற்றனற் காட்டிப்
பீச்சுபெண் முலைப்பா னிற்கலந் தூட்டப்
பெயர்ந்திடும் பெரும்பிணி மாந்தம்

ஆச்சிர மத்தோர் நால்வரும் மகிழவண்
ணல்சர பேந்திர ருணூல்
வாச்சது நமக்கென் றுகந்திடும் நல்லோர்
வைத்தியர் மதிக்க வாழ்பவரே. 271(a)

(இ-ள்)

முதியார் கூந்தல் சமூலம் சிறுபுள்ளடி சமுலம்
நல்வேளை சமூலம் விடத்தேரிவேர்ப்பட்டை
வெள்வேலம்பட்டை நல்லமுருங்கைப்பட்டை
ஆமையோடு

இவைகள் எல்லாவற்றையும் சமமாக எடுத்துப் பொடிப் பொடியாக நறுக்கி, விளக்கெண்ணெய் ஒரு நாழியில் போட்டு அடுப்பின் மேலேற்றிக் காய்ச்சவும். சிவந்த பக்குவத்திலிதனையிறக்கவும். மாந்தமுள்ள குழந்தைகளுக்குச் சிறிது எண்ணெயை எடுத்து வெதுப்பிக்கொண்டு அதனுடன் சிறிது முலைப்பால் விட்டுக் குறுக்கிப் புகட்ட மாந்தம் தீரும்.

### 171. மாந்தத்திற்கு மாத்திரை

வேங்கைப் புலித்தோல் செருப்புத்தோல்
மிக்கவசம்போ டிவை மூன்றுந்
தாங்குஞ் சட்டி தனிற்படறபஞ்
சமனாய்ச்செய்து தாமனிச்சா
றாங்கு காய வைத்தொப்ப
மாகவரிசித் திப்பிலியுந்
தீங்கில் சமமா யிவையெல்லாந்
தெரிவை முலைப்பால் சேர்த்தரைத்தே. 272

சே(ர்)ந்த குன்றிப் பிரமாண
முண்டை செய்து தினச்செய்யின்
மாந்தந் தனக்கே யனுபான
மறிந்து செய்வீர் வைத்யரென்

றேந்தல் சரபேந் திகனுரைத்தா
லிதனை யியல்பா யெண்ணுகின்ற
மாந்தர் தங்கள் பிள்ளைகட்கு
மாந்த நோய்கள் வாராதே. 273

(இ-ள்) வேங்கைப் புலித்தோல் செருப்புத்தோல்
வசம்பு

இவைகளைச் சமனாக எடுத்துச் சட்டியிலிட்டுக்கருக வறுத்துப் பற்பம் செய்துகொண்டு, உத்தாமணிச்சாறு கூட்டிப் பாவணை செய்யவும். பின்பு இதனைக் காயவைத்து இந்தப் பற்பத்திற்குச் சமன்அரிசித் திப்பிலி கூட இட்டு,இவ்விரண்டையும் முலைப்பால் விட்டு நன்றாக அரைத்துக் குன்றிமணிப் பிரமாணம் மாத்திரை செய்து வைத்துக்கொள்ளவும்.

இதை மாந்தத்திற்குத் தகுந்த அனுபானத்திலிடவும். குணம தரும்.

**குறிப்பு**: உத்தாமணி,வேளேவேர்,நொச்சித்துளிர், பொடுதலையிலை, முருங்கையீர்க்கு, நுணாஈர்க்கு இவைகளின் கஷாயம் மாந்த நோய்களுக்கு அனுபானங்களாம்.

### 172. மாந்த வலிப்புக்கு மருந்து

வடக்கயிறு கோழியிற் குடனேநல்ல
மாட்டுக்கொம் புந்தலையின் மயிரீதெல்லா
மிடித்துவா சனத்திலுடம் பெங்கும்பூசி
யிப்புகைகாட் டுமாந்த வலிப்புமேகும்
அடுத்தவருக் கருள்புரியுஞ் சரபபூப
னறிந்துசொன்ன விம்முறையையறியவல்லோர்
படித்தவரின் மிக்கவராய்ப் பரிசுள்ளோராய்ப்
படிமிசையில் வாழ்வரெனப் பகரலாமே. 274

(இ-ள்) வடக்கயிறு கோயிறகு
சீவியமாட்டுக்கொம்பு தலைமயிர்

இவற்றைச் சிறுசிறு அளவாகக் கத்தரித்து இடித்து அனலிலிட்டு வலிப்புள்ள குழந்தையின் உடம்பிலும் ஆசனத்திலும் அதன் புகையைக் காட்ட வலிப்புத் தீரும்.

### 173. மாந்தத்திற்கு மருந்து

அகத்திப் பழுப்புப் பூண்டு வசம்
பதனை நறுக்கிப் பிழிந்துள்ளுக்
குகப்பாய் வார்த்து முச்சியி லிட்
டுடனே மேலுக் கும்பூசிற்
றிகைப்புத் தீருந் திப்பிலியைக்
சேர்த்து முன்கை யினிற்சேரிவ்
வகைசாத் திரத்தை மகிழ்ந்துகற்றோர்
மாந்த நோயை மாற்றுவாரே. 275

(இ-ள்) அகத்திப்பழுப்பு வெள்ளைப்பூண்டு
வசம்பு

இவைகளை வெதுப்பி நறுக்கிச் சாறு பிழிந்துகொண்டு அதனை உள்ளுக்குங் கொடுத்து உச்சிக்கும், உடம்பிற்கும் பூசினால் மாந்தத்திகைப்புத் தீரும்.

ஷை மருந்தோடு திப்பிலியையும் சேர்த்துக் கொடுக்கலாம்.

### 174. பிள்ளைகள் மாந்தக் குளிகைக்கு மருந்து வகை

வசம்புகார் போகரிசி சிற்றரத்தை
வாய்விளங்க முள்ளிகம்பிப்
பிசினிலவங் கமிளகு நாகரந்திப்
பிலிகருஞ்சீ ரகம்பேசி

லுசித்திப்பிலி மூலங்கடுகு ரோகிணியோ
தியவகைவ கைப்பலங்கால்
பசையதாகிய வுத்தாமணி நொச்சில்
பாவட்டை பகர்வெண்சாறடையே. 276

அடைவாயிருக்குஞ் செருப்படி
யுமானபொடுத லைப்புதலுந்
தடையில்லாம லேநறுக்குஞ்
சாறிட்டரைத்துச் சரக்கெல்லாந்
திடமாய்ச் சேரக் கொண்டதனைத்
தேற்றாவிரைபோ லேதிரட்டி
யுடுநல்லிளவெந் நீர்முலைப்பா
லிட்டுண்டிடப்போ மிந்நோயே. 277

| | |
|---|---|
| (இ-ள்) வசம்பு | கார்போகவரிசி |
| சிற்றரத்தை | வாயுவிடங்கம் |
| உள்ளி | கம்பிப்பசின் |
| கிராம்பு | மிளகு |
| சுக்கு | திப்பிலி |
| கருஞ்சீரகம் | திப்பிலிமூலம் |
| கடுகுரோகிணி | (கண்டத்திப்பிலி) |

இவைகள் வகையொன்றுக்கு 1/4 பலம் எடுத்துச் சூரணித்து

| | |
|---|---|
| உத்தாமணி | கருநொச்சில் |
| பாவட்டைவேர் | வெள்ளைச்சாறணை |
| செருப்படி | பொடுதலை |

இவைகள் ஒவ்வொன்றின் சாற்றினால் தனித்தனியே மேற்கூறிய கடைச்சரக்குகளைக் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்துத் தேத்தான்கொட்டைப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக

உருட்டி வைத்துக்கொண்டு இளவெந்நீரிலாவது அல்லது முலைப்பாலிலாவது இழைத்துக் கொடுக்கவும். மாந்தம் தீரும்.

### 175. மாந்தத்திற்கு பேய்மருட்டி எண்ணெய்

பீர்க்குசா ணாக்கிவெதுப் படக்கியுத்தா
மணிபொடுத லைபேய்மருட்டி
தீர்க்கவகத் தீப்பழுப்போ டிதன்பட்டை
திருத்துழாய் தெளிநல்லெண்ணெய்
கார்த்தமணிற் றக்காளி வகையொன்றுக்
காழாக்குக் கலந்தசாறும்
சீர்த்தபசு மஞ்சற்சா றாழாக்கா
மணக்கெண்ணெய் சேர்தான்காலே. 278

ஆமோமம் பலங்காலோ டுள்ளிவசம்
பதுவுடனே யாமையோடும்
வேமனலிட் டிவைகூட்டிக் காய்ச்சிவடித்
தோர்கடத்தில் விட்டுவைத்துத்
தாமதமிலா தோர்துட்டிடை நெய்யில்
வெண்காரத் தனைப்பொரித்திட்
டேமணக்கும் இங்குபண வெடையுரைத்துக்
கொடுத்திடன்னா ளினிற்கழிந்தே. 279

இனிமறுநாட் கழிச்சலுடன் பொருமலுறக்
கம்மசதி யெல்லாந்தீருங்
கணமாந்த நோய்களுக்குப் பேய்மருட்டித்
தைலங்கை கண்டதென்ன
மனுநீதி யுடன்சோழ வளநாடா
ளுஞ்சரப மகிபர்வார்த்தை
தனமெனவே மனதுதனிற் றரிப்பவரை
மந்திரியாய்ச் சாற்றலாமே. 280

| | |
|---|---|
| (இ-ள்) பீர்க்கு | சாணாக்கி |
| வெதுப்படக்கி | உத்தாமணி |
| பொடுதலை | பேய்மருட்டி |
| அகத்திப்பழுப்பு | அகத்திப்பட்டை |
| துளசி | மணித்தக்காளி |

இவைகளின் சாறு வகையொன்றுக்கு ஒரு ஆழாக்கு

| | |
|---|---|
| பசுமஞ்சள் சாறு | ஒரு ஆழாக்கு |
| சுத்தமான எள்ளெண்ணெய் | ஒரு ஆழாக்கு |
| ஆமணக்கெண்ணெய் | 1/4 சேர் |
| ஓமம் | 1/2 பலம் |
| வெள்ளைப்பூண்டு | 1/2 பலம் |
| வசம்பு | 1/2 பலம் |
| ஆமையோடு | 1/2 பலம் |

இவைகளைச் சட்டியிலிட்டு நன்றாக வறுத்து சூரணித்து

மேல்சொன்ன சாறுகூட்டிய எண்ணெயுடன் சேர்த்துக் குழப்பி அடுப்பின் மேலேற்றிப் பதத்தில் வடித்து இறக்கிக் கொண்டு ஒரு பானையில் பத்திரப்படுத்தவும். பின்பு ஒரு துட்டெடை நெய்யில் வெங்காரத்தைப் பொரித்து அதனுடன் பெருங்காயம் ஒரு பணவெடையும் சேர்த்து உரைத்து முன்சொன்ன எண்ணெயையும் கொடுக்கவும். அன்றைய தினம் நன்றாக மலங்கழிந்து வயிற்றுப் பொருமல்,அசதி எல்லாம் தீருவதுடன் மாந்தத்திற்கும் கைகண்டது.

## 176. மாந்தத்திற்கு

கள்ளிநாக நாகிவேர்
ரயமுஞ்சீர கங்கடுக்காய்
யுள்ளிவசம்பு நாய்வேளை
யுத்தாமணிவேர் பிளிநரளை

வெள்ளைவெண்சா றடைகொன்றை
விளக்கெண்ணெயிலே கொதிக்கவிட்டு
மெள்ளவிறக்கிக் கொடுமாந்தம்
விடுங்காணிதுகை கண்டதுவே. 281

(இ-ள்) கள்ளி
சீரகம்
வெள்ளைப்பூண்டு
நாய்வேளை
புளிநரளைக்கிழங்கு
கொன்றைவேர்
நாக நாகிக் கிழங்கு
கடுக்காய்
வசம்பு
உத்தாமணி வேர்
வெள்ளைச் சாறடைக் கிழங்கு

இவைகளைச் சமமெடுத்துத் தூள்செய்து விளக்கெண்ணெயில் கொதிக்க வைத்துப் பதத்தில் இறக்கிக்கொண்டு சாப்பிட மாந்தம் தீரும்.

### 177. மாந்தத்திற்கு

மதுக்கரை வேர்ப்பட்டை யெலுமிச்சம்
பழச்சாறு வார்த்தரைத்தே
யதற்கேற் வறுத்தூற்றும் விளக்கெண்ணெ
யதினெரித்திட் டதைவேண்டும்போ
திதத்துடன்சற் றனற்சுடவைத் திடுபுகட்டு
கடுகுபுகைத் திடவலிப்புக்
கதைத்தான்சட் டியிலழலிட் டேகடுகிட்
டேகிளறி யதிற்றண்ணீரை. 282

தண்ணீரைத் தெளித்ததன் பிள்ளையைச்சே
லையின்மூடித் தான்வைப்பாயென்
றண்ணல்சர பேந்திரனார் ஆயுண்நூ
லின்முறைக ளாய்ந்துசொன்ன
துண்மையென வேயுகந்த வுத்தமர்க
ளைத்தெரிசித் தோர்க்குமாந்தம்
நண்ணியிடா தெனப்பரிவா னாலுவரு
ணத்தோரும் நவிற்றுவாரே. 283

(இ-ள்) மதுக்காரை வேர்ப்பட்டையை எலுமிச்சம் பழச்சாறு விட்டு அரைத்து ஊற்றின விளக்கெண்ணெய் 2 சேர் விட்டுப் பக்குவமாக எரித்து வேண்டும்போது அனலில் வெதுப்பிப் புகட்டவும்.

ஒரு சட்டியை அனல்மேல் வைத்து அதில் ஷ மருந்தின் கடுகைப் போட்டுப் புகைத்துப், பின்பு அதில் தண்ணீர் விட்டுக் குழந்தையை ஒரு சேலையினால்மூடி அதன் ஆவியைப் பிடிக்கச் செய்யவும். இப்படிச் செய்தால் மாந்தம் தீரும்.

### 178. பிள்ளைகள் மாந்தத்திற்கு

ஏழுமிளகு மஞ்சணாறி யப்பட்டை
யுருமிளகி னிடைவசம்புந்
தாழ்விலொரு மிளகளவே மஞ்சலுங்கா
சிடையோமந் தானிட்டுயாவுஞ்
*சாளிகைபோற் பொட்டணஞ்சல் லாவிட்டுத்
தானுழக்குத் தண்ணீர்விட்டு
மாழியினற் சங்குநீர்நிற் கப்பொட்ட
ணமதெடுத்த ரைத்துத்தானே. 284

தானிறக்கிச் சங்கினீர்த னிறகலக்கிப்
புகட்டவுமே தனையர்மாந்தம்
போனவிடந் தெரியாமற் போமென்றும்
வாகடநூல் புகன்றதெல்லா
மான்பானாஞ் சரபமகி பதிசெந்த
மிழ்தனில்வ குத்துச்செய்வித்
தூனமற நோயகல் வுலகினுள்ளோ
ருளமகிழ வுரைசெய்தாரே. 285

(இ-ள்) மஞ்சனாறிப்பட்டை (நுணாப்பட்டை) 7 மிளகு நிறை
வசம்பு ஒரு மிளகு நிறை

---

* சாளிகை - பணப்பை, அல்லது ஜாடி

மஞ்சள் ஒரு மிளகு நிறை
ஓமம் காசிடை ஒன்று

இவற்றை ஒரு சேலையில் மூட்டையைப்போலப் பொட்டணம் கட்டி ஒரு சட்டியில் உழக்குத் தண்ணீர் விட்டு அதில் அம்மூட்டையையிட்டு, அடுப்பின் மேலேற்றி ஒரு சங்களவாகும் வரை வற்றக்காய்ச்சிப் பின்னர், மூட்டையை அவிழ்த்து எல்லாச் சரக்குகளையும் ஒன்றாக அரைத்து, அந்த ஒரு சங்குத் தண்ணீருடன் கலந்து மாந்தமுள்ள குழந்தைக்குக் கொடுக்கவும். மாந்தம் தீரும்.

### 179. மாந்தத்திற்கு உருண்டை

கடுகுரோ கிணியிலுப்பைக் கமழ்பூநேர்
வாளசுத்தி கண்டிரண்டு
மிடுசமங்கொண் டேபாக லிலைச்சாற்றி
லேயரைத்து மேபருத்தி
யுடவிரையின் பிரமான முருண்டைசெய்து
நிழலுலர்த்தி யோருருண்டை
யொடுமிரண்டு மிளகினையு மூட்டியரைத்
திளவெந்நீ ருண்ணப்பண்ணே. 286

பனைவேரும் வசம்பினையும் பழங்காடி
வார்த்தரைத்துப் பாங்கதாகத்
தனயர்வயிற் றினிற்றடவத் தான்வயிறு
விடும்வாடுந் தானிதைத்தான்
அலைதனிற் கொதிக்கவைத்துப் பூசினால்
வயிறுவிட லகலுமென்று
மனுநீதி தவறாத சரபேந்திரர்
மகராசர் வசனித்தாரே. 287

(இ-ள்) கடுகுரோகிணி இலுப்பைப்பூ
நேர்வாளம் (சுத்திசெய்தது)

இவைகளைச் சமமாக எடுத்துப் பாகல் இலைச்சாற்றினால் நன்றாக அரைத்துப் பருத்தி விதையளவு உருண்டை செய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு ஒரு மாத்திரையை 2 மிளகுடனே அரைத்து இளவெந்நீரில் கொடுக்க 2 அல்லது 3 தடவை மலம் கழிந்து மாந்தம் தீரும்.

(b) பனைமரத்தின் வேரையும் வசம்பையும் காடி வார்த்து அரைத்து. வயிற்றில் பூச வயிறு கழிந்து வாடும். இதையே கொதிக்க வைத்துப் பூசினால் வயிறு கழிதல் நிற்கும்.

### 180. மாந்தியஞ் சகலத்திற்கும் லேகியம் (கறுக்கு)

ஆவாரை கொழுஞ்சிமஞ்ச ணத்தியுவாய்
முருங்கையுத்தாமணியாறுத்த
பூவிலையும் வகைக்கோர்பிடி போட்டுச்சட்
டியிற்கருகும் போதினாலு
பூவராக ணிடைவசம்பொ ருதுட்டு
மிளகோமப் பொடியோர் துட்டும்
மூவகைகூ டப்போட்டுச் சிவந்தபதத்
திருபடிநீர் முழுவுழக்காய். 288

உழக்கொன்றை தாய்க்காய்ச்சி யோர்மூன்று
சங்கிறுத்து முடனேநல்கப்
பழக்கமாயி ருந்திடுமெப் படிக்கொத்த
*மாந்தமுமப் பாலே தீரும்
வழக்கமிது வெனச்சரப மகிபதிதா
னுரைத்தருள்வா கடநூல்வந்தே
பழக்கமதா யிருப்பவர்போற் பூவுலகி
லார்வைத்யர் புகலுங்காலே. 289

* மாந்தம் என்னும் தமிழ்ச்சொல் "மாந்தியம்" என்னும் வடமொழியின் சிதைவு

| | |
|---|---|
| (இ-ள்) ஆவாரம்பூ | ஆவாரை இலை |
| கொளுஞ்சிப்பூ | கொளுஞ்சி இலை |
| நுணாப்பூ | நுணாஇலை |
| உவாய்ப்பூ | உவாய்இலை |
| முருங்கைப்பூ | முருங்கை இலை |
| உத்தாமணிப்பூ | உத்தாமணி இலை |

இவைகளை வகைக்கு ஒரு பிடி போட்டுச் சட்டியிலிட்டு நன்றாக கறுக வறுத்து

| | |
|---|---|
| வசம்பு | 1 வராகனெடை |
| மிளகு | 1 துட்டெடை |
| ஓமத்தூள் | 1 துட்டெடை |

இம்மூன்று சரக்குகளையும் திரும்பவும் அதிலிட்டுச் சிவந்தபின்பு, தண்ணீர் 2 படி விட்டு உழக்காகக் காய்ச்சவும்.

இதில் 3 சங்கு இறுத்துக் குழந்தைக்குக் கொடுக்க வழக்கமாக இருக்கும். எப்படிப்பட்ட மாந்தமும் அன்றே தீரும். கைகண்டது.

### 181. பிள்ளைகள் மாந்தத்திற்கு எண்ணெய்

கோமயச்சா றுழக்காவி நெய்யுழக்குப்
பாலுழக்குக் குலைமுதிர்ந்த
வாமணக்கெண் ணெயுமுழக்கு வாடுதீண்
டாப்பாளை யதினற்சாறுந்
தாழாக்குச் சாணிச்சாறு றுழக்குதேங்
காய்ப்பாலுந் தானுழக்கிட்
டேமுடக்கொத் தான்சாறுமீருழக்கிட்
டீரரரைச்சொட் டிடுகள்ளிப்பால் 290

இடுபுரசம் விரையைந்து பொடிசெய்திட்
டேகலந்திட் டெரித்திறக்கா
தடுப்பினிலே தராவிமெழு கதுபதமா
யிறுத்தோர்வ ருடந்தாஞ் சேய்க்குக்
கொடுத்தொருகா செடையராக்கா செடைகொடுப்பா
யாறுதிங்கள் கொண்டபிள்ளைக்
கடுத்துமிந்தப் பாலகற் கதியமாகில்
வெண்ணெய எித்திட்டாற்றே. 291

| | | |
|---|---|---|
| (இ-ள்) | பசுமாட்டு மூத்திரம் | 1 உழக்கு |
| | பசுவின் நெய் | 1 உழக்கு |
| | பசுவின் பால் | 1 உழக்கு |
| | ஊற்றிய ஆமணக்கெண்ணெய் | 1 உழக்கு |
| | ஆடுதீண்டாப்பாளைச் சாறு | 1 உழக்கு |
| | சாணிச்சாறு | 1 உழக்கு |
| | தேங்காய்ப்பால் | 1 உழக்கு |
| | முடக்கொத்தான் சாறு | 1 உழக்கு |
| | கள்ளிப்பால் | (1 சொட்டு) |

இவையெல்லாவற்றையும் ஒரு சட்டியில் ஒன்று கலந்து அதனுடன் 5 புரசம் விதையை பொடிசெய்து கூடப் போட்டுக் காய்ச்சி மெழுகுப் பதத்தில் வடித்துக்கொண்டு ஒரு வயதுள்ள குழந்தைக்கு ஒரு காசிடை கொடுக்கவும். 6 மாதக் குழந்தைக்கு 1/2 காசாடை கொடுக்கவும்.

அதிகமாக மலம் கழிந்தால் வெண்ணெய் கொடுக்கவும்.

### 182. கோரோசனாதி குளிகை

**(மாந்தம், கணம், காமாலை, அழற்காமாலைக்கு)**

கிரந்திநா யகவேர் நன்னாரிவேர்
நாயுருவி கீழ்க்காய் நெல்லி
யிருந்தவேர் வகையொன்றுக் கேவரா
கனிடைமூன் றேகலங்கொம்

புரைந்தசந் தனமுருத்தி ராக்கஞ்சீ
ரகமும்வகை யோரொண்ணுக்கே
யிரண்டுவரா கனிடைகடு குரோசணைகோ
ரோசனையொன் றேவராகன். 292

வராகனிடை யொன்றதாமே யோடோர்வ
ராகனிடை வைப்பரைந்து
வராகனிடை செம்பருத்திக் கொட்டைதிரு
மண்ணும்வரா கனிடையைந்து
தராதரமாய்க் கல்வத்தி லிட்டுநறுக்
கிப்பொடிய தாக்கிக்கொண்டே
யிராவுபகன் மூன்றேநாள் கற்பூர
வள்ளிச்சா றிட்டரைத்தே. 293

அரைத்துமிள களவுண்டை யாய்ச்செய்து
நிழலிலுலர்த்தி யதைவைத்துக்கொண்
டிருக்கவனு பானங்கற் பூரவள்ளி
யிலைமுலைப்பா லெரித்தவெந்நீர்
வருக்கவல்லா ரைகுடிநீ ரிதிலோருண்டை
வைத்திடக்கா மாலைமாந்தந்
தரிக்காதக் காமத்தி சுரமழற்கா
மாலைகணந் தவிருந்தானே. 294

(இ-ள்) கிரந்திநாயக வேர் நன்னாரி வேர்
நாயுருவி வேர் கீழாநெல்லிவேர்

இவைகள்வகையொன்றுக்கு 3 வராகனெடை

மான்கொம்பு இழைத்த சந்தனம்
ருத்திராக்ஷம் சீரகம்

இவை வகைக்கு 2 வராகனெடை

கடுகரோகிணி கோரோசனை

இவை வகைக்கு 1 வராகனெடை

சுத்திசெய்த (சுட்ட) ஆமையோடு 1 வராகனெடை
செம்பருத்திக்கொட்டை 5 வராகனெடை
நாமக்கல் (திருமண்) 5 வராகனெடை.

இவைகளை ஒன்று சேர்த்துத் தூள் செய்து கல்வத்திலிட்டுக் கற்பூரவல்லிச் சாற்றினால் இரவும் பகலும் 3 நாள் விடாமல் அரைத்து மிளகளவு உருண்டைகளாகச் செய்து நிழலில் உலர்த்தி எடுத்துக்கொள்ளவும்.

இதற்கு அனுபானம்:

கற்பூரவல்லிச்சாறு,முலைப்பால், வெந்நீர், வல்லாரைக் குடிநீர் இவைகள் ஏதேனும் ஒன்றில் ஒரு மாத்திரை வீதம் இழைத்துக்கொடுத்தால் காமாலை, மாந்தம், காமசுரம், அழற்காமாலை இவைகள் தீரும்.

### 183. சிறுபிள்ளைகள் மாந்த கணத்துக்கும் இதிலெடுத்த சுரத்திற்கும்

வெள்ளெலிண்டங் கொழுந்துபழம் பாசிசம
மாய்நறுக்கி விரைந்துகொண்டே
யுள்ளிவசம் பினைக்கூட்டி யொன்றாகச்
சேர்த்ததனை யுகந்தலம்பும்
எள்ளெண்ணெய தனிற்கலந்து மிரவிபுட
மாய்வைத்து மிறுத்துச்சங்கிற்
பிள்ளைகட்குப் புகட்டவுமே பேதிமாந்
தம்பினிதான் பிரிந்துபோமே. 295

குருவிச்சி கருவேலவே ரிலைவிடத்தே
ரிலைத்தகரை குழையும்வேரும்
நரிப்பயற்றி னிலைவேரும் நறுக்கிநைய்ய
வசம்புள்ளி நன்றாய்க்கூட்டி
யெரிக்கும்விளக் கெண்ணெய்கலந் திட்டுச்சூ
ரியபுடம்வைத் தெடுத்துள்ளுக்குந்
தரித்திடவிட் டுச்சியுடம் பிலுந்தடவக்
கணசுரமுந் தாம்நில்லாதே. 296

(இ-ள்) விளாங்கொழுந்து இண்டங்கொழுந்து
பழம்பாசி

இம்மூன்றையும் சமமாக எடுத்து நறுக்கி இதனுடன்

வெள்ளைப்பூண்டு வசம்பு

இவ்விரண்டையும் சேர்த்து நன்றாக அரைத்து நல்லெண்ணெயுடன் கலந்து, சூரியபுடம் வைத்து இறுத்து ஒரு சங்கு வீதம் குழந்தைக்குப் புகட்டவும்.

பேதி ஏற்பட்டு மாந்தம் இவை தீரும்.

(b) குருவிச்சிப் பூண்டின் வேரும், இலையும்
கருவேலம் வேரும், இலையும்
விடத்தேரி வேரும், இலையும்
தகரை வேரும், இலையும்
நரிப்பயிற்றின் வேரும், இலையும்

இவைகளை நன்றாக நறுக்கி இடித்து வசம்பு வெள்ளைப் பூண்டு இவைகளோடு சேர்த்து அரைத்து விளக்கெண்ணெயில் கலந்து சூரியபுடம் வைத்து, உள்ளுக்குக் கொடுத்துத் தலையுச்சியிலும் தடவிவரக் கணச்சுரம் தீரும்.

**184. மாந்த கணத்துக்கு**

அதிமதுரங் கற்கடகசிங் கிகம்பிப்,
பிசின்கிராம்பு அசமதாகஞ்
சதகுப்பை திரிகடுகந் திரிபலைமா
தளைலவங்கச் சாதிபத்திரி
யதிவிடையம் பெருமரப்பட் டைவிளங்கந்
திப்பிலிமூ லங்கற்பூரம்
இதநற்சீ ரகங்கத்தூ ரியின்மஞ்சள்
சந்தனஞ்சா திக்காயேலம் 297

ஏலங்கோ ரோசனையொன் றிரண்டுபங்கு
மற்றதெல்லா மோமந்தான்
மாலணியுந் துளசியைக்கீழ் மேலும்வைத்து
வேறேபொட் டணமாய்வைத்தே
நாலுபடி தண்ணீரிட் டேவேக
வைத்துக்கால் நாழி நீராய்ச்
சாலதனிற் கண்டந்தத் தண்ணீர்வார்த்
தரைத்துண்டை தரமாய்ப்பண்ணே. 298

பண்ணியமந்த விலையுமரைத் துண்டைசெய்தெல்
லாங்கலந்து பண்ணுமுண்டை
யுண்ணவெந்நீ ரிற்கொடுக்கப் பெருவாரிக்
காய்ச்சலுந்தா னுடனேதீரும்
நண்ணுபயித் தியவாத சுரஞ்சேத்தும
சுரமிந்த நசல்கிரந்திப்
புண்ணாறுந் தூதுவளை துளசி கஞ்சாங்
கோரையெனு மாதலுங்கண்டே. 299

கண்டங்கத் திரியிதெல்லாங் கடுகச்செய்
புட்டவியலா லந்தச்சாற்றில்
லுண்டையிரண்டு தவிசெய்த லுயர்பிள்ளைக
குண்டையைவெந் நீரிலூட்டல்
மீண்டியினால் வயிறுவிடு மதற்குமா
தளையிலையை வைத்துவேகச்
சுண்டியநீ ரிற்கொடுக்கப் போம்பாற்சோற்
றியினுமிது துய்த்தனன்றே. 300

நன்றுண்டை தேற்றாங்கொட் டையினளவு
பண்ணியதை நன்னாடன்னிற்
தின்றிடத்தான் பத்தியங்கத் திரிப்பிஞ்சு
முருங்கையினற் சின்னப்பிஞ்சுந்
துன்றியதூ துவளைவற்றல் துவரையின்வெம்
பருப்பிதெலாந் துய்க்கலாகு
மென்றுசர பேந்திரனா ரின்றிதுகை
கண்டதென வியம்பினாரே. 301

| | |
|---|---|
| (இ-ள்) அதிமதுரம் | கற்கடசிரிங்கி |
| கம்பிப்பிசின் | ஓமம் |
| சதகுப்பை | சுக்கு |
| திப்பிலி | மிளகு |
| கடுக்காய் | நெல்லிக்காய்த்தோல் |
| தான்றிக்காய்த்தோல் | மாதுளை ஓடு |
| லவங்கப்பத்திரி | ஜாதிப்பத்திரி |
| அதிவிடையம் | பெருமரப்பட்டை |
| வாயுவிடங்கம் | கண்டத்திப்பிலி |
| பச்சைக்கற்பூரம் | ஜீரகம் |
| கஸ்தூரிமஞ்சள் | சந்தனத்தூள் |
| ஜாதிக்காய் | |

இவைகள் வகைக்கு 1 தோலா

| | |
|---|---|
| ஏலக்காய் | 2 தோலா |
| கோரோசனை | 2 தோலா |

பச்சைக்கற்பூரம், கோரோசனை இவ்விரண்டையும் தவிர்த்து மற்றச் சரக்குகளை ஒன்றிரண்டாக இடித்துக் கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் துளசியை நன்றாகப் பரப்பி நடுவில் இந்தச் சரக்குகளைப் போட்டு, மேலும் துளசியைப் போட்டு 4 படி தண்ணீர் விட்டு அடுப்பின்மேல் வைத்து, 1/4 படியாகும்வரை சுண்டக்காய்ச்சவும். இக்கஷாயத்தினால் ஷை சரக்குகளை நன்றாக மசியும்படிக் கல்வத்திலிட்டு அரைத்து, வெந்த துளசியையும் கூடச் சேர்த்துப் பச்சைக்கற்பூரம், கோரோசனை இவ்விரண்டையும் வைத்து நன்றாக அரைக்கவும். பின்பு இதை மாத்திரையாக உருட்டி வைத்துக்கொள்ளவும்.

இதில் உருண்டை எடுத்து, வெந்நீரில் சாப்பிடப் பெருவாரியான சுரம், உடனே தீரும். வாத, பித்த, சிலேஷ்ம சுரங்களும் தீரும். கிரந்தி நீங்கும். புண்களும் ஆறிவிடும்.

(b) தூதுவளை துளசி
கஞ்சாங்கோரை மாதுளை
கண்டங்கத்திரி

இவைகளைப் புட்டவியலாக அவித்து இதன் சாறுடன் 2 மாத்திரை இழைத்துக் குழந்தைக்குக் கொடுத்து வெந்நீரும் கொடுத்தால் பேதியாகும்.

(c) மாதுளை இலையை வேக வைத்துச் சுண்டிய நீரில் கொடுத்து வந்தால் கழிதல் நிற்கும். மேலும் பாச்சோற்றுப் பூண்டின் சாற்றிலும் இம்மாத்திரையை இழைத்துத் தேற்றாங்கொட்டைப் பிரமாணம் மாத்திரை பண்ணிநல்ல நாளில் சாப்பிடக குணம் தீரும்.

**பத்தியம்;**

கத்தரிப் பிஞ்சு, முருங்கைப் பிஞ்சு, தூதுவளை வற்றல் துவரம் பருப்பு இவைகளைச் சாப்பிடவேண்டும்

### 185. கணமாந்தக் குடைச்சலுக்கு

இருபதுதூ துவளையிலை யிருபதுதேற்
றாவிரையோ டிதனையெல்லா
மொருவிளாங்காய் மாதிரியா யீரவெங்கா
யத்துடனே யொன்றாய்வைத்துப்
பருவமுட னேநையும் படிதட்டி
யேகடுக்காய் பத்திரண்டு
பொறுமையுட னேதட்டி யுடன்விளக்கெண்
ணெயிற்றானே யூறப்போட்டே. 302

ஊறப்போட் டேசூரிய புடமதிட்டோர்
நாளினைப்போ லுண்மையாகி
யேறதோர்துட் டிடையேயெடுத் திறுத்துக்கொ
டுத்திடவு மிதற்குப்பத்தியங்

கூறகத்தி துவரையுமே கூட்டவுமென்
றார்சரபர் கொண்டறான்கை
மாறதுவேண் டாதருளும் வண்ணமே
யெண்ணிமன மகிழ்ந்துதானே. 303

(இ-ள்) தூதுவேளை இலை 20
தேற்றான் வித்து 20

வெள்ளைப்பூண்டு அரைத்தவிழுது விளாங்காய்ப் பிரமாணம், கடுக்காய் 20 இன் தூள், எல்லாவற்றையும் நன்றாக அரைத்து, விளக்கெண்ணெயில் ஊறப்போட்டுச் சூரியபுடம் வைக்கவும். 2, 3 நாட்கள் சென்றவுடன் இதில் ஒரு துட்டெடை யெடுத்து இறுத்துக் கொள்ளவும். கணமாந்தக் குடைச்சல் தீரும்.

அகத்தி, துவரை இவைகளைக் கூட்டவும்.

## 186. கணத்துக்கும், மாந்தத்திற்கும் எண்ணெய்

சாதிக்கா யதிமதுரஞ் செண்பகப்பூ
வசம்பரத்தை தான்றியுள்ளி
சோதித்திப் பிலிகடுக்கா யிலவங்கங்க
ருஞ்சீராந் தூட்செய்தெண்ணெய்
[illegible] லப்பொடியு மிட்டுடன் சிற்
றாமுட்டி வேர்கணப்பூண்
டோதப்பைக் கிழங்கம்மான் பச்சரிசி
யோரிதழ்தா மரையோரைந்தும் 304

நைந்துடனே நரிப்பயற்றங் கொடிசிறுபுள்
ளடிமுடக்கொற் றான்வில்வத்தின்
செந்தளிருந் துடரிவிடத் தேரையிலை
பழம்பாசி சிறந்தகாட்டில்
வந்தெழுமல் லிகையிலையுங் குட்டிவிளா
வரப்பூலா மலநாறுந்தூர்
கந்தக்குட்டி யின்வேலாம் பட்டையெல்லாஞ்
சேர்த்திடித்தூள் கலந்தெண்ணெய்க்கே. 305

இட்டவெண்ணெய் துட்டினிடை யேயெடுத்து
வெய்யிலில்வைத் தேகொடுக்க
உட்டணமா கியகணத்துக் கொக்குமெனச்
சரபேந்திர ருலகத்தோருக்
கிட்டமுட னேயுரைத்துக் கட்டளைசெய்
திடுநூலை யினிதுகற்போர்
அட்டதிசை கொண்டாட இட்டமுட
னேவாழ்வ ரறிவுள்ளோரே. 306

| | | |
|---|---|---|
| (இ-ள்) | சாதிக்காய் | அதிமதுரம் |
| | சண்பகப்பூ | வசம்பு |
| | சிற்றரத்தை | தான்றிக்காய் |
| | வெள்ளைப்பூண்டு | வாலுளுவை |
| | திப்பிலி | கடுக்காய் |
| | கிராம்பு | கருஞ்சீரகம் |

இச்சரக்குகள் எல்லாவற்றையும் சமமாக எடுத்துக் கல்லுரலிலிட்டு நன்றாக இடித்துத்தூள் செய்து (ஆமணக்கு) எண்ணெயில் குழப்பி.

| | |
|---|---|
| ஏலக்காய்த்தூள் | சிற்றாமுட்டிவேர் |
| கணப்பூண்டு | அப்பக்கோவைக்கிழங்கு |
| அம்மான்பச்சரிசிவேர் | ஓரிதழ்த்தாமரை |
| நரிப்பயற்றங்கொடி | சிறுபுள்ளடி |
| முடக்கொற்றான் இலை | வில்வத்துளிர் |
| துடரிக்கொழுந்து(இண்டு) | விடத்தேரி இலை |
| பழம்பாசி இலை | காட்டுமல்லிகை இலை |
| குட்டிவளாவேர் | வரட்பூலாக்கொழுந்து |
| குட்டிவேலம்பட்டை | (துர்நாற்றமுள்ளது) |

இவைகளையும் சமமெடுத்து ஒன்றாகக் கூட்டி முன் எண்ணெயில் இடித்துப் போட்டுச் சூரியபுடத்தில் வைத்துக் கொடுக்கவும். வேளைக்கு ஒரு துட்டெடை வீதம் சாப்பிடவும். இதனால் கணச்சூடு தீரும்.

**குறிப்பு**: சரக்குகள் வகைக்கு 1 வராகனெடையானால் ஆமணக்கெண்ணெய் 3 சேர் எடுத்துக் கொள்க.

**187. மாந்த கணத்துக்கும் போர்மாந்தத்திற்கும்**

வட்டத்திருப்பி யிலையஞ்சு வசம்புவராக
னிடையொன்று மகலுமேற்புராணி
திட்டமுட னேசீவிச் சேர்த்தொருகா
சிடையுள்ளி சேரச்சேர்த்தே
யிட்டமுட னேநறுக்கி யிரண்டுசேர்
விளக்கெண்ணெ யிற்பிசைந்து
சுட்டவெயி லிட்டருள்வெங் காயமகத்
திக்கீரை துய்க்கலாமே. 307

(இ-ள்) வட்டத்திருப்பி இலை 5 வராகனெடை
மேல்புறணி நீக்கிய வசம்பு 1வராகனெடை
மேல்தோல் உரித்த வெள்ளைப்பூண்டு1காசிடை

இவைகளை நன்றாக அரைத்து, ஆமணக்கெண்ணெய் 2 சேரில் நன்றாகக் குழப்பிச் சூரிய புடமாக வைக்கவும். வெங்காயம், அகத்திக்கீரை, இவைகளை ஆகாரத்திற் கூட்டவும். மேற்சொன்ன நோய் தீரும்.

**188. மாந்த சன்னிக்கு**

உத்தாமணி பேய்மிரட்டி யிலையுணுநல்
வேளைக ழற்சியிலை யுடனெருக்கின்
முத்துமிலைப் பழுப்புதழு தாழைமுடக்
கொத்தானு முறுக்கி நன்றாய்ச்
சத்தயினைப் பிழிந்தெடுத்துடச் சக்கையிதனைத்
தள்ளியுள்ளி வசம்பைச் சாற்றில்
வைத்தரைத்துக் கலந்துபுளி மரப்புராணி
யைச்சுட்டு மாற்றிப்போடே. 308

போட்டபின்பு சாற்றையிட்டுப் பூமியிலே
துணிசுற்றிக் கிளறிப்போட்டு
மீட்டுமந்தத் துணிபிழிந்து விட்டுள்ளுக்
குங்கொடுத்துமீந்த சாற்றைக்

கூட்டிமெள்ளத் துவளையிட்டுக் கொள்ளவும்போ
மாந்தசன்னிக் கொடுநோயென்று
நாட்டமுடன் கைகண்டு நவின்றமுறை
நாடினர்கொண் டாடினாரே. 309

(இ-ள்) உத்தாமணி இலை பேய்மருட்டு இலை
சாப்பிடக்கூடிய நல்வேளை இலை
கழற்சி இலை எருக்கம் பழுப்பு
தழுதாழை முடக்கொற்றான்

இவைகளைச் சமமெடுத்து, நன்கு அலம்பிக் கல்லுரலிலிட்டு இடித்துச் சாறு பிழிந்து கொள்ளவும்.

வெள்ளைப்பூண்டு, வசம்பு இவ்விரண்டையும், இச்சாறுகொண்டு நன்றாக அரைத்துக் குழப்பிப் புளியம் புராணி சுட்ட சாம்பலை ஒரு முட்டாகப் போட்டு, அதில் அச்சாற்றை ஊற்றி, ஒரு கம்பியில் துணியைச் சுற்றிக் கிண்டிக்கொடுத்துப் பிறகு துணியைப் பிழிந்து, அதினின்று வரும் சாற்றை உள்ளுக்குக் கொடுக்கவும். மீதியுள்ள சாற்றைக் குழந்தையின் மேலே துவளையிட மாந்த ஜன்னி தீரும். கைகண்டது.

### 189. போர் மாந்தத்திற்கு

போர் மாந்த மெனும்பிணிதான் போராடிற்
பனைவடக்கே போகும்வேரைப்
பாராமாந்தி ரிகமுடனே பறித்திடித்துள்
ளியும்வசம்பும் பாங்காய்க்கூட்டி
சீர்மாந்தப் பிள்ளைவயிற் றினிற்றடவப்
பொருமலுடன் றீருமித்தை
யோர்மாந்தப் புத்தியைவிட் டுடன்றடவின்
மலசலம்விட் டுபாதிபோமே. 310

(இ-ள்) பனைமரத்தின் வடக்கே போகிற வேரை வெட்டிவந்து உள்ளியும் வசம்புங் கூடப்போட்டுத் தண்ணீர் சிறிதுவிட்டு நன்றாக அரைத்துக் குழந்தை வயிற்றில் பூசப் பொருமல் நிற்கும். கொதிக்கவைத்துப் பூசவும். மலசலம் விட்டுக் குணமுண்டாகும்.

**குறிப்பு**; 179-வது மருந்தில் (b) யைப் பார்த்துக் கொள்க.

### 190. உப்பு மாந்தத்திற்கு உருண்டை

இழைத்திழைத்து வாந்தியுஞ்செய் தேபிராந்தி
யுஞ்செய்துப் பிசமாமாந்தக்
கழிச்சலுக்குண் டையைச்செய்யக் கழஞ்சுரண்டு
சுத்திசெய்வா ளப்பருப்புந்
தழைச்சலவங்கப்பட்டை யதிமதுரத்
துடன்கோட்டஞ் சண்பகப்பூ
பழச்சாற்றி லரைக்கவின்னால் வகைக்கும்வரா
கனிடையொன்று பகருங்காலே. 311

பகருமிந்த வகையிலுண்டை பண்ணியுப்பு
மாந்தம் வந்த பாலகற்கு
நகையிலகு முலைப்பாலி னல்கிடவு
மனுபான நலமறிந்துந்
தகுமிதெனச் சரீரபெலந் தானுணர்த்துங்
கொடுமாந்தந் தானேதீரும்
பகலவன்முன் மின்மினிபோற் புகையைவெல்லுஞ்
சரபேந்திரர் பகர்ந்ததாமே. 312

(இ-ள்) அழுந்தி அழுந்தி உண்டாகும் வாந்தியுடன் மயக்கமும் ஏற்பட்டு, உப்பிசத்துடன் இருக்கும் மாந்தத்திற்கு மருந்தாவது:-

| | |
|---|---|
| சுத்திசெய்த நேர்வாளப் பருப்பு 2 கழஞ்சு | |
| லவங்கப்பட்டை | அதிமதுரம் |
| கோஷ்டம் | சண்பகப்பூ |

இந்த நாலும் வகைக்கு ஒரு வராகனெடை எடுத்து எல்லாவற்றையும் கல்வத்திலிட்டு, எலுமிச்சம் பழச்சாற்றினால் நன்றாக அரைத்து, மிளகளவு உருண்டைகளாகச் செய்து வைத்துக்கொள்ளவும். உப்பு மாந்தம் வந்த குழந்தைகளுக்கு முலைப்பாலிலோ அல்லது சரியான அனுபானத்திலோ குழந்தையின் சரீர பலன் அறிந்து மாத்திரையைக் கொடுக்க, மாந்தம் தீரும்.

### 191. போர் மாந்தத்திற்கு மருந்து

கள்ளிப்பா லொருதுளிநாய் வேளைவசம்
புடனேநா கரந்தைவேளை
வெள்ளுள்ளி யும்வேலிப் பருத்தியின்வே
ராறினையு மிகவரைத்து
எள்ளெண்ணெய் தனிலேவெந் திறக்கியோர்கா
சிடைமுலைப்பா லிதனிலிட்டுக்
கொள்ளச்செய் யவுந்தீரா தெனிற்சுக்கெண்
ணெயைவடித்துக் கொடுக்கப்போமே. 313

| | | |
|---|---|---|
| (இ-ள்) | கள்ளிப்பால் | ஒரு துளி |
| | நாய்வேளை வேர் | வேலிப்பருத்திவேர் |
| | வசம்பு | சுக்கு |
| | தைவேளை | வெள்ளைப்பூண்டு |

ஆக இந்த 6 மருந்துச் சரக்குகளையும் சமமெடுத்து அரைத்து, ஒரு ஆழாக்கு நல்லெண்ணெயில் குழப்பி, அடுப்பில் வைத்து எரித்து ஒரு காசிடைமுலைப்பால் விட்டுக் கொடுக்க மாந்தம் தீரும்.

தீராவிட்டால் சுக்கு எண்ணெய் வடித்துக் கொடுக்கவும்.

### 192. போர் மாந்தத்திற்கு

கைக்கொண்டு பதினாறு கடுக்காயின்
பொடியோடிட்டுக் கையிற்பிசைந்து
மக்கணமே முறியுமாந்தத் தண்ணீரையி
றுத்துக்கொண் டம்மருந்திற்

சிக்கியசா றுடனேபச் சிலைச்சாற்றி
னுதித்தீரஞ் சேர்வெங்காயத்
துக்குள்சா றுரிகோட்ட மதிமதுரம்
வகைக்கொருசேர் தொகுத்தொப்பாக 314

ஒப்பாஞ்செங் கழுநீரு மொருகாசி
னிடையிருகா சேர்ப்பாஞ்செண்ப
கப்பூவுங் கருஞ்சீராம் பலமரைமுந்
தினசாறு கலந்தரைத்தே
சிப்படியே முந்தினசாற் றிற்கலந்தும்
விளக்கெண்ணெ யிருசேரிட்டு
மொப்புரவாய் கூடவிட்டுக் காய்ச்சிமெழு
கதுபதமா யுற்றவாறே. 315

உற்றவா றேயிறக்கி வைத்தோர்கரண்
டியினுறவிட் டுகந்துகாய்ச்சி
மற்றொருபுத் திரர்க்குநல்க மாந்தகணம்
வறட்கணநீர்க் கணம்பேராமல்
குற்றிரும லிலையனைத்துங் குணமாகுஞ்
சரபேந்திரர் கூறும்வார்த்தே
கற்றவருக் கேதெரியுங் கைகண்ட
திதுவெனவே கருதுவீரே. 316

(இ-ள்) 16 கடுக்காயை நன்றாகத்தூள்செய்து ஜலம் விட்டு ஒரு இரவு முழுவதும் ஊறவைத்து பின்பு, அதைக் கையினால் நன்றாகப் பிசைந்து தண்ணீரை இறுத்துக் கொண்ட சீத கஷாயம் (1/2 படி)

| | |
|---|---|
| பச்சிலைச்சாறு | 1 உரி (1/2 படி) |
| ஈரவெங்காயச்சாறு | 1 உரி (1/2 படி) |

இவைகளோடு

| | |
|---|---|
| கோஷ்டம் | 1 சேர் |
| அதிமதுரம் | 1 சேர் |

| | |
|---|---|
| செங்கழுநீர்க்கிழங்கு | 1 காசெடை |
| செண்பகப்பூ. | 1/2 சேர் |
| கருஞ்சீரகம் | 1/2 பலம். |

இவைகளையும் முந்தின சாறுவிட்டு நன்றாக அரைத்து எல்லாவற்றையும் 2 சேர் விளக்கெண்ணெயிலிட்டு அடுப்பின் மேலேற்றி, மெழுகு பதமாகக் காய்ச்சி வடிக்கவும். இதில் தினந்தோறும் ஒரு கரண்டியெடுத்து வெதுப்பி மாந்தம், கணம், வறட்கணம், நீர்க்கணம், பேராமை, குற்றிருமல் இவைகள் உள்ள குழந்தைக்குக் கொடுத்தால் இவை அனைத்தும் தீரும்.

## 193. மாந்த சன்னிக்கு

மாந்தசன்னி தனக்குஉத்தா மணிமுருங்கை
யாவாரை மஞ்சணத்திப்
பூந்துளிரோ டுவாய்கொஞ்சி பொடுதலையுங்
கறுவறும் போதுதானே
காந்திடா தேநாலு காசினெடை
வசம்புமிள கதுதானோர்துட்
டேசிவந்த தேனும்பத்தே. 317

படியிரண்டு தண்ணீர்விட் டுழக்காய்க்காய்ச்
சியதைப்பால் வெண்சங்கிட்
டடைவுடனை புகட்டவுமாந் தங்கள்சுழி
மாந்தசன்னி யனைத்துந்தீர்ந்து
விடுமெனவே சரபமகி பாலருரைத்
திடுமிந்த மெய்மைநூலைத்
திடமுடனே கற்றுணர வல்லவர்முன்
செய்ததவச் செயலுள்ளோரே. 318

(இ-ள்) உத்தாமணிக்கொழுந்து
முருங்கைக்கொழுந்து ஆவாரைக்கொழுந்து
நுணாக்கொழுந்து உவாய்க்கொழுந்து
கொஞ்சிக்கொழுந்து பொடுதலைக்கொழுந்து

இவைகளைச் சட்டியிலிட்டுக் கறுக்கித் தேனுடன்

| | |
|---|---|
| வசம்பு | 4 காசெடை |
| மிளகு | ஒரு துட்டெடை |
| ஓமம் | ஒரு துட்டெடை |

இவற்றை முன் சட்டியிலிட்டுக் கறுகுவதற்குமுன் இரண்டுபடி தண்ணீர்விட்டு உழக்காகக் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும். ஆறியபின் 10 துட்டெடைத் தேன்விட்டு ஒரு வெண்மையான சங்கினால் இதைக் குழந்தைக்குப் புகட்டச் சுழிமாந்தம். சன்னிமாந்தம் இவை தீரும்.

## 194. கணத்திற்கும் மாந்தத்திற்கும் மருந்து

உழக்குவெங்கா யத்துடனே நிலக்குமிழின்
பட்டையிலை யோரிரண்டு
விளக்கிடுமா மணக்கினெய்யும் விட்டுமுக்காற்
படிதூது விளைமுள்ளிவேர்
அழைப்பிவித்த சிறுக்காரை கண்டங்கத்
திரிகோழி யாவாரைவேருந்
தழைத்திடுமுத் தமதாளித் தண்வேர்பொன்
னாங்கண்ணி தன்வேரெல்லாம் 319

தன்னிலேத னித்தனியே தான்மூன்று
வராகனிடை தானேவைத்து
முன்னமிட்ட வெண்ணெய்ப டிமுக்காற்
காலைதனின் மூட்டடுப்பிட்

டின்னவெண்ணெய் கொதிக்கையிலே யீரவெங்கா
யமுமுழக்கு மெடுத்துப்போட்டுப்
பின்னிண்டங் கொழுந்திடுமுப் பிடிசதுரக்
கள்ளிப்பால் பிழியோர் காசிடையே. 320

காசில்கடுக் காயைந்து பொடித்திடுதேற்
றான்விரையைக் கடுகச்சீவிப்
பேசுபத்து மமைவேர்சா ரணைவெள்ளைக்
கர்க்கணத்தின் பெருவேர் மூன்றிட்
டாசைவசம் பொருமூன்றோ டுள்ளிமுன்சொல்
மருந்துபத்து மடைவாய்க்கூட்டிக்
கூசாம லேவடித்திட் டேமெழுகு
பத்திலிறக்கிக் கொண்டுவைத்தே. 321

கொண்டொருக்கொ ருகாச ளவுகொடுத்தி
டப்பதினெண் கொடிகாய்ச்சல்
விண்டிடுமாந் தமகலுங் கணந்தீரும்
விடும்வயிறு மெனவேசோழ
மண்டலமெண் டிசையளவுங் கண்டுபட
ருங்கீர்த்தி மகிமையுள்ள
திண்டிறலார் சரபேந்திர தீரணரு
ளாலிதெலாஞ் செப்பினாரே 322

(இ-ள்) வெங்காயம் (சிறுக அரிந்தது) 1 உழக்கு
நிலக்குமிழம்பட்டை, இலை 1 உழக்கு
சுத்தமான ஆமணக்கெண்ணெய்3/4 படி
தூதுவேளை வேர் முள்ளிவேர்
சிறுகாரைவேர் கண்டங்கத்திரிவேர்
கோழியாவாரைவேர் உத்தமதாளிவேர்
பொன்னாங்கண்ணி வேர்

இவைகள் வகைக்கு 3 வராகனெடை எடுத்து, நன்றாக அரைத்து எண்ணெய் 3/4 படியில் குழப்பி அடுப்பின் மீதேற்றி

எண்ணெய் நன்றாகக் கொதிக்கும்போது ஷ ஈரவெங்காயம் ஒரு உழக்கையும் போட்டு, இண்டங்கொழுந்து 3 பிடியும் சதுரக்கள்ளிப்பால் ஒரு காசிடையும் கூட்டவும்.

பிறகு 5 கடுக்காயைத்தூள் செய்தும், தேற்றாங்கொட்டை பத்து விதையைத் தோல் சீவிக்கொண்டும் சாறடை வேர் ஐந்தும்,வெள்ளைக் காக்கணம் வேர் மூன்றும், வசம்பும் வெள்ளைப்பூண்டின் திரிமூன்றும் முன் சொன்ன 10 மருந்தும் இடித்துக் கூடப்போட்டு மெழுகு பதத்தில் இறக்கிக்கொண்டு ஒரு நாளைக்குக் காசளவு சாப்பிடவும்.

18 வகையான சுரவகைகளும், மாந்தமும், கணமும் தீரும். நன்றாக மலம் கழியும்.

### 195. சிறுபிள்ளைகள் மாந்த ஜ்வரத்திற்கு மருந்து

மாந்தசுரம் பிள்ளைகட்கு வந்தால்வில்
வத்துடன்பா வட்டை வேரும்
போந்தபூனைக் காச்சிமுடக் கொத்தான்சி
றுபுள்ளடிப் புதியவேரும்
காந்திடா மற்சுட்ட வசம்புடனோ
மையினோடுங் கடுகச்சுட்டே
யேந்திநா ழியினீரிட் டுரியாகக்
காய்ச்சுபுகட் டினோய்போமே. 323

(இ-ள்) வில்வவேர் பாவட்டைவேர்
முடக்கொற்றான்வேர் சிறுபுள்ளடிவேர்
காந்தாமல் சுட்டவசம்பு
ஆமையோடு (நன்றாக கறுக்கியது)

இவற்றைச் சமயெடையெடுத்து நன்றாக இடித்து ஒரு படி ஜலம் விட்டு 1/2 படியாகக் காய்ச்சிப் புகட்டவும். மாந்த ஜ்வரம் தீரும்.

## 196. மாந்த காசத்திற்கு

அஞ்சிலைநொச் சியினிலைகை யாந்தகரை
யெலுமிச்சை யிலையுமாய்ந்து
மஞ்சள்வெயில் வரும்வரைக்கும் வைத்துலர்த்தி
யேபற்ப மாக்கச்சுக்கு
கொஞ்சமிள கிந்துப்பு வெங்காரம்
பூநாகங் கோழிக்காரம்
மிஞ்சுதுரு சியினுடனே வெச்சோடுகொண்
டேதுருசு விதம்பொரித்தே. 324

பொரித்திடித்துக் கூட்டிவைத்துக் கொடுக்கவு
மாந்தக்காசம் போகுமென்றே
யுரித்துளதஞ் சையினுடனே யுபையகா
விரித்தீர மொருங்கேயாளுஞ்
துரைச்சரப பூபதிதான் சொன்முறைநன்
முறையென்னச் சொல்லிபாலர்க்
கரிட்டமாந் தக்காச மகற்றுமரண்
மனைவயித்திய ரருளுள்ளோரே. 325

(இ-ள்) அஞ்சிலை நொச்சியிலை கையாந்தகரை
எலுமிச்சை இலை

இவைகளை நன்றாக ஆய்ந்து மஞ்சள் வெயில் வரும் வரைக்கும் வைத்து உலர்த்திக்கொண்டு. இவைகளைச் சட்டியிலிட்டுப் பற்பமாக்கி,

| | |
|---|---|
| சுக்கு | மிளகு |
| இந்துப்பு | வெங்காரம் |
| பூநாகம் (மண்புழு) | கோழிக்காரம் |
| துரிசு | |

ஒரு ஓட்டில் துரிசைப் பொரித்துக் கொள்வதுபோல் மற்றச் சரக்குகள் யாவற்றையும் பொரித்துக்கொண்டு மேல் சொன்ன பற்பத்தையும் சேர்த்து இடித்துக் கூட்டிக்கொண்டு சாப்பிட மாந்த காசம் தீரும்.

### 197. மாந்தக் கழிச்சலுக்கு

மாந்தப்பட் டையினுடனே பாவட்டைவேர்ப்
பட்டையரைப் பாக்குவாங்கிக்
காந்தாம லாண்வசம்பு பணவிடைகட்
டுள்ளியுடன் கலந்திதெல்லாம்
பாந்தமாய்க ழாயம்வைத்துப் பாலகற்குப்
புகட்டிரைச்சல் பண்பதாகு
மாந்தக்கழிச் சல்பொருமல் மாறும்நில்லாக்
கழிச்சலுக்கு மருந்துகேளே. 326

மருந்துதேங் காயளவாய்க் கொஞ்சியிலை
யைக்கறுக்கு வைத்திறுத்துப்
பரிந்தெடுத்துக் கொடுக்கவுங்கை கண்டதுநில்
லாக்கழிச்சலு பண்பாமென்றே
யருந்தவத்தா லவதரித்திங் கரசாளுஞ்
சரபேந்திர ரருளிச்செய்திங்
கிருந்தமுறை மருந்துவகை யின்னமுங்கேண்
மின்னெனவே யியம்பினாரே. 327

| | | |
|---|---|---|
| (இ-ள்) | மாந்தப்பட்டை (மாந்தப்புல்) | 1 வராகனெடை |
| | பாவட்டை வேர் | 1 வராகனெடை |
| | அரைப்பாக்கு (பாதிப்பாக்கு) | 1வராகனெடை |
| | ஆண்வசம்பு சுட்ட கரி | 1 பணவெடை |
| | வெள்ளுள்ளி | |

இவைகளை எடுத்துச் சுமாராக இடித்துத் தண்ணீர் விட்டுக் கஷாயம் வைத்துக் கொடுக்கக் குழந்தைகளுக்கு உண்டாகும் மாந்தக்கழிச்சல், பொருமல் இவை மாறும்.

(b) நில்லாத கழிச்சலுக்கு:

கொஞ்சியிலையை ஒரு தேங்காயளவு எடுத்துக் கறுக்கிக் கஷாயம் வைத்துக் கொடுக்கவும். நில்லாத கழிச்சல் நிற்கும். கைகண்டது.

### 198. மாந்தக் கழிச்சலுக்கு

வெங்காயந் திப்பிலிவாய் விளங்கமோ
மம்மிளகு வேலாமையோ
டுங்கழற்கொ டிப்பருப்பு மொருநிறையாய்
பொடுதலைச்சா றுறவரைத்துத்
துங்கக்கல் வத்தெடுத்துச் சூரைக்கா
யளவுண்டை தோன்றச்செய்து
விங்கிதவுண் டையைக்காச்ச லிருமலுண்டாய்க்
கழியிற்புத் திரர்க்குநல்கே. 328

நல்குகண்டங் கத்திரியி னற்கழாயத்
தினிலேந லிந்தோக்காளம்
புல்கியுட னேவயிறு பொருமலுக்குத்
தாமணியின் புதுக்கஷாயத்
தில்விடவும் வயிறுகழிந் திட்டிடிலோ
மக்கறுக்கிட் டிடவுமென்றே
வல்லமையாற் சரபேந்திரக் கைகண்ட
வாறிதெல்லாம் வசனித்தாரே. 329

(இ-ள்) வெங்காயம் திப்பிலி
வாய்விடங்கம் ஓமம்
மிளகு ஆமையோடு(கறுக்கியது)
கழற்சிக்கொடிப்பருப்பு

இவைகளை ஒரே நிறையாக எடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடுதலைச் சாற்றினால், நன்றாக அரைத்துச் சூரைக்காயளவு மாத்திரை செய்து, இருமல், காய்ச்சல், கழிச்சல் உள்ள குழந்தைக்குக் கண்டங்கத்திரிக் கஷாயத்தில் ஒரு உருண்டை கொடுக்கவும்.

வெள்ளை, ஓக்காளம், வயிறு பொருமல் இவைகள் இருந்தால், உத்தாமணிக் கஷாயத்தில் கொடுக்கவும்.

வயிற்றுக் கழிச்சலுக்கு ஓமக் கறுக்குக் கஷாயத்தில் இடவும். கைகண்டது.

## 199. மாந்தக்கழுச்சலுக்கு மாசிக்காய் கட்டுவாதி

காட்டாத்திப் பூமாசிக் காய்சீர
கத்துடன்கற் கடகசிங்கி
யீட்டிலவம் பிசின் சோம்பு மிவையெல்லா
மிளவறுப்பா யிடவறுத்துக்
கூட்டுகல்வத் திலரைத்தே சாதிக்காய்
புளியங்கொட் டைத்தோலும்
போட்டுமாது ளையோடும் போஸ்துக்காய்
அதிவிடயம் புகல்வகைக்கே. 330

வகைக்கொருகா சிடையிலவங் கப்பட்டை
யோர்பலமிவ் வகையிதெல்லாங்
குகைக்கல்வத் தினிறுக்கிக் கொண்டுகறுக்
காகவைத்துக் கொணர்ந்துயாவும்
மிகப்பொடித்திட் டிக்கறுக்கை விட்டரைத்து
மெலிமிச்சில் விழும்பழச்சா
றுப்படன்விட் டரைத்ததனை யுண்டைபண்ணிக்
கொள்மாந்த முளைநோய்போமே 331

உளைந்துவயி றிடல்வயிறு கடும்பிரத்தக்
கடுப்புடனுட் டஞ்சலமும்
விளைந்திடுமாந் தக்கழிச்சல் மூலமதி
சாரமெலா மேசமூலந்
தளர்ந்திவையெல் லாந்தவிருந் தரமிதுகை
கண்டதெனச் சரபபூபன்
உளந்தெளிந்திவ் வுலகத்தோர்க் குபாதி.ற
வேயிதலா முறைசெய்தாரே. 332

(இ-ள்) காட்டாத்திப்பூ மாசிக்காய்
சீரகம் கற்கடசிங்கி
இலவம்பிசின் சோம்பு

இவைகள் எல்லாவற்றையும் சமஎடை (ஒருகாசெடை) எடுத்து இளவறுப்பாக வறுத்துக்கொண்டு கல்வத்திலிட்டுச் சாதிக்காய், புளியங்கொட்டைத்தோல், மாதுளை ஓடு,

போஸ்துகாய், அதிவிடயம் இவைகள் வகைக்கு ஒரு காசெடை கூட்டி, லவங்கப்பட்டை ஒரு பலமும் சேர்த்துக் கறுக்குக் கஷாயம் செய்து காட்டாத்திப்பூ முதல் சோம்பு வரை உள்ள மருந்துகளை ஷை கறுக்கு விட்டு நன்றாக அரைத்து, மறுபடியும் எலுமிச்சம்பழச்சாறு விட்டு நன்றாக அரைத்து மாத்திரை செய்து வைத்துக்கொள்ளவும்.

**இதன் குணம்;**

வயிறு வலித்தல், வயிற்றுக் கடுப்பு, இரத்தக்கடுப்பு, மூலச்சூடு, மாந்தக் கழிச்சல், அதிசாரம், மூலம், இவைகள் .யாவுந் தீரும்.

## 200. மாந்தக் கழிச்சலுக்கு

வேளைவேரொன் றுடன்வெந்த யம்பலமொன்
றன்வசம்பு வெள்ளைப்பூண்டொன்
றாளுஞ்சட் டியிற்கறுக்குங் கஷாயத்தைச்
சங்கினிறுத் தன்பினாலே
நாளொருமூன் றுங்கொடுக்க நலந்திடும்மாந்
தக்கழிச்ச னலியாதேகுஞ்
சூளிதுகை கண்டதெனத் துரைச்சரபேந்
திரமகிபர் சொன்னதாமே.

| | | |
|---|---|---|
| (இ-ள்) | வேளை வேர் | 1 பலம் |
| | வெந்தாயம் | 1 பலம் |
| | வசம்பு | 1 பலம் |
| | வெள்ளைப்பூண்டு | 1 பலம் |

இவைகளைத் தினம் பழகும் சட்டியிலிட்டு வறுத்துத் தண்ணீர் விட்டுக் கறுக்குக் கஷாயம் செய்து சங்கினால் ஒரு நாளைக்கு 3 வேளை கொடுக்க மாந்தக் கழிச்சல் தீரும்.

### 201. மாந்த வயிற்றுவலிக்கு மருந்து

இன்னமொரு வகையுள்ளித் தயிலங்கா
செடை நாலு மிதின்வேப்பெண்ணெய்
தன்னையிரு காசெடையிட் டேகூட்டிக்
கொடுக்கவுமே தனையர்கட்கே
யின்னல்செய்யும் வயிற்றுவலி யிக்கணந்தீர்ந்
திடுமெனவே யெழிலார்தஞ்சை
நன்னகரா ளுஞ்சரப நரபதிதா
னுரைத்தமுறை நலமதாமே. 334

| | | |
|---|---|---|
| (இ-ள்) | உள்ளித்தைலம் | 4 காசெடை |
| | வேப்பெண்ணெய் | 2 காசெடை |

இதை ஒன்று கூட்டிக் குழந்தைகள் வயிற்றுவலிக்குக் கொடுக்க, அந்த க்ஷணமே வலி தீரும்.

### 202. பிள்ளைகள் கணமாந்தத்திற்கு மருந்து

தகரைமருக் காரைசங்க தாரிவன்னி
கோடகசா லையுமாணாவும்
புகல்கொழுஞ்சி குட்டிவே லம்பட்டை
நரிப்பயற்றை பொன்னாங்கண்ணி
வகைகணப்பூண் டோரிதழ்த்தா மரைபழம்பா
சியினுடனே வட்டத்துத்தி
தகுஞ்சிறுபுள் ளடிபேரா முட்டிசிற்றா
முட்டிபொடு தலைப்பூண்டாமே. 335

பூண்டுநெக்குஞ் சூரைசவு ரிக்கொத்தி
னுடனேமுன் புகன்மருந்தின்
வேண்டுமிலை யுருவியிட்டும் வேர்பட்டை
யினைநறுக்கி மிகப்பொடித்துந்

தோண்டிக்கா டியிற்பிசைந்து சுருக்குடனா
ழிக்காடி தோன்றக்கொண்டே
யாண்டுகற்றா ழஞ்சோறோர் குத்தெடுத்துக்
கைக்கொண்டு மதனைத்தானே. 336

கொண்டுதுவ ளிட்டிடவும் வெள்ளுள்ளி
வசம்பரைத்துங் குப்பைமேனி
மண்டியசாற் றினிலரைத்துக் கொதிப்பித்து
மணிமுடிதொட் டடிவரைக்குங்
கண்டுடம்பெ லாந்தடவி நின்றுதவ
ளிடவலிப்புக் கன்மாந்தங்கள்
விண்டிடுமென் றேசரப வித்தகனா
முத்தமனார் விளம்பினாரே. 337

| | |
|---|---|
| (இ-ள்.) தகரை | மறுக்காரை |
| சங்கதாரி | வன்னி |
| கோடகசாலை | பாணாவேர் (காட்டாமணக்குவேர்) |
| கொளுஞ்சி | குட்டிவேலம்பட்டை |
| நரிப்பயிறு | பொன்னாங்காணி |
| கணப்பூண்டு | ஓரிதழ்த்தாமரை |
| பழம்பாசி | வட்டத்துத்தி |
| சிறுபுள்ளடி | சிற்றாமுட்டி |
| பேராமுட்டி | பொடுதலை |
| வெள்ளைப்பூண்டு | சூரையிலை |
| சவுரிஇலை (குறட்டை) | கொத்தான் |

இப்பச்சிலைகளின் இலை, வேர், பட்டை இம்மூன்றையும் நன்றாகச் சிறுசிறு துண்டுகளாக்கி இடித்து ஒரு தோண்டிக் காடியில் பிசைந்து அடுப்பின் மேலேற்றி ஒரு நாழி (படி)யாகக் காய்ச்சியபின்பு, சோற்றுக் கற்றாழையின் சோறு (ஜீரகத்தில் பிசரி வைத்து நீர் போன பின்பு) ஒரு குத்தளவெடுத்து மேல் சொல்லிய காடியில் தோய்த்துத் துவளையிடவும்.

(b) வெள்ளைப்பூண்டு வசம்பு
குப்பைமேனி

இம்மூன்றையும் குப்பைமேனிச் சாறுவிட்டு அரைத்துக் கொதிக்கவைத்துத் தலையுச்சி முதல் பாதம்வரை உடம்பில் தேய்த்துத் துவளையாக இடவும்.

வலிப்பு, கல்மாந்தம் முதலியவை தீரும்

## 18. பிள்ளைகளுக்கு அடிப்புறப்பட்டால் அதற்கு மருந்துகள்

### 203. பிள்ளைகளுக்கு அடிப்புறப்பட்ட கழிச்சலுக்கு

புளியாரை சமூலமுட னிலந்தையிலை
பழமாதல் புதியசுக்கும்
இளந்தயிர்ச மன்கூட்டி யிட்டரைத்து
மடிப்புறப்பட் டிடுமிடத்தில்
வளம்பெறவே நிரம்பவிட்டு மாட்டுத்தோல்
கட்டிவைக்க வாங்குமுள்ளே
இளம்பின்ளை கட்கியல்பா மென்றுசர
பேந்திரனா ரிசைத்திட்டாரே. 338

(இ-ள்) புளியாரைச்சமூலம் இலந்தையிலை
இலந்தைப்பழம் சுக்கு

இவைகளைச் சமமெடுத்துத் தயிர் சேர்த்தரைத்துக் குதம் வெளிவந்திருக்கும் இடத்தில் வைத்து, மாட்டுத்தோல் போட்டு நழுவாமல் கட்டிவைக்கக் குதம் உள்ளுக்குள் போய்விடும். சிறிய குழந்தைகளுக்கு அடிப்புறப்படுதல் இயல்பானது.

### 204. பிள்ளைகளுக்கு அடிப்புறப்பட்டால் மருந்து

முத்தினதேங் காய்திருகி முதிர்மஞ்ச
ஞுனிவிடத்தே நிலையிம்மூன்றும்
வைத்துரலி னிற்பொடித்து வறுத்துச்சூ
ரணித்தொருகை வருசிறங்கை
யித்தையொரு புன்னைக்கா யின்னளவு
தின்னிடவே யேழுநாளில்
சொத்தமடிப் புறப்பட்ட துள்வாங்கு
மெனச்சரப துரைசொன்னாரே.

(இ-ள்) முத்தின தேங்காயின் திருகல்
பசுமஞ்சள் விடத்தேரி இலை

இம்மூன்றையும் உரலிலிட்டு இடித்துப் பொன்வறுவலாக அதை வறுத்து ஒரு புன்னைக்காயளவு வீதம் ஒரு வாரம் சாப்பிட அடிப்புறப்பட்டது உள்ளுக்கு வாங்கும்.

## 19. குழந்தைகள் கழிச்சலுக்கு மருந்துகள்

### 205. அதிசாரக் கழிச்சலுக்கு மருந்து

அதிவிடயந் திப்பிலிவெட் பாலையரி
சியுமுலைப் பாலரைத்தே
யிதைமுலைப்பா லிற்புகட்ட விதம்புளியா
ரையினுடனே யிளவாழைப்பூ
விதமாகப் புகட்டிட்டுப் பிழிந்துதேன்
கலந்தோர்சங் கேபுகட்ட
சதியான சலக்கழிச்சல் தவிருமெனச்
சரபேந்திரர் சாற்றினாரே 340

(இ-ள்) (9) அதிவிடயம், திப்பிலி, வெட்பாலையரிசி இம்மூன்றையும் முலைப்பால் விட்டு அரைத்துப் புகட்ட அதிசார பேதி நிற்கும்.

(2) புளியாரையும், இள வாழைப்பூவையும் நறுக்கிப் புட்டவியலாக ஆவியின்மேல் வைத்து அவித்து, அதைப் பிழிந்து அதன் சாறுடன் தேன் சிறிது கலந்து ஒரு சங்கு புகட்ட எப்பேர்ப்பட்ட ஜலக்கழிச்சலும் தீரும்.

### 206. அதிசாரமும் வாந்தியும் தீரக்குடிநீர்

கடுகுரோகி ணியைமுலைப்பா லிலரைத்தே
புகட்டிக்க டுகை மேலிட்
டிடுசுரம்விட் டிடுமென்று எங்கள்சர
பேந்திரனா ரிதமதாகப்
படிமிசையில் வாழ்பவர்க்கிப் பிடியுரைத்து
மேலின்னம் பரிவினாலே
குடிநீரு மருந்தினையுங் குறித்திசைத்தா
ரிம்மருந்தின் குணங்கண்டே. 341

(இ-ள்) 1. கடுகு ரோகிணியை முலைப்பால்விட்டு அரைத்துச் சாப்பிடச் சுரம் விடும்.

2. இதையே குடிநீராகவும் கொடுக்கலாம்.

### 207. பிள்ளைகள் கழிச்சலுக்கு மருந்து

கருஞ்சீரகம் வசம்புந்தூ துவளையினி
லைகொழுந்துங் கவின்முலைப்பால்
சொரிந்தரைத்து மூன்றுநாள் துடர்ந்துபுகட்
டவுங்கழிச்சல் சுருக்காய் நிற்கு
மருந்தவத்தா லவதரித்த சரபேந்திர
மகாராசா ரருளிச்செய்
மருந்திதுகாண் மானிடரே! யென்றுசபை
வயித்தியர் வசனிப்பாரே. 342

(இ-ள்) கருஞ்சீரகம் வசம்பு

தூதுவேளை இலை கொழுந்து

இவற்றைக் கல்வத்திலிட்டி முலைப்பால் விட்டு நன்றாக அரைத்து 3 நாள் விடாமல் குழந்தைக்குப் புகட்டக் கழிச்சல் அதிசீக்கிரத்தில் நிற்கும்.

## 208. கொதுக்குக் கொதுக்கென்று கழிகிறதற்கு மருந்து

விடத்தேரை வரப்பூலாங் கொழுந்துபாற்
சோற்றியிலை விதமொன்றுக்குப்
பிடித்தோர்பிடி யெடுத்துநெய்யைப் பெய்திதனைப்
பொன்னிறம்போற் பெறவைத்து
மடுத்தோமஞ் சுக்கினையு மந்தத்தண்
ணீரிலரைத் ததைக்கரண்டி
யெடுத்ததிலிட் டெரித்துநல்லெண்ணெயைக்கலந்தூட்
டிடத்தீரு மிந்நோய்தானே. 343

(இ-ள்) விட்டேரைக்கொழுந்து

வரப்பூலாக்கொழுந்து பச்சோற்றி இலை

இவைகளை வகையொன்றுக்கு ஒரு பிடி எடுத்து, நெய் விட்டு வதக்கி (பொன்னிறமாகும்வரை) ஓமம், சுக்கு இவ்விரண்டையும் தண்ணீரில் அரைத்து அதையும் சேர்த்துக் கிண்டி, நல்லெண்ணெயும் கூடச்சேர்த்துப் பதமாக எரித்துக் குழந்தைக்குக் கொடுத்துவரக் கொதுக்குக் கொதுக்கென்று கழிதல் தீரும்.

## 209. சிறுபிள்ளைகளுக்கும், பெரியவர்களுக்குங் இரத்தம் விழுகிறதற்கு மருந்து

பசுவின்பால் வெள்ளாட்டுப் பாலாத
லிரண்டுழக்குப் பாலோர்பாத்திரத்
திசைவாக வேகொதியிட் டெழுந்தவுட
னேபாலி லேயோர்பாதி
பசையான வரசம்பட் டையையிடித்துச்
சாறுவடி யிட்டுப்பாலில்
நிசமாக வேயிட்டுக் கிளறியதைச்
சுடக்குடிக் குநேர்மூன்றே. 344

மூன்றுதிறங் குடிக்கவுமே திருங்கை
கண்டதென முதலாம்வள்ளல்
தோன்றினனா மெனுஞ்சரபேந் திரரிந்த
முறையதெலாந் தொகையதாக
யீன்றருள்தாய் தந்தையென யிவ்வுலகோர்க்
கிதஞ்செய்வா னெண்ணிச் சொன்ன
தென்றமிடுக் கண்டவிர்த்த தென்றுதமிழ்ப்
பாவலர்க ளியம்பினாரே. 345

(இ-ள்) பசுவின் பால் 2 உழக்கு
வெள்ளாட்டுப்பால் 2 உழக்கு

இந்த இருவகைப் பாலையும் கலந்து அடுப்பின் மேலேற்றி நன்றாகக் கொதிக்கும்போது அரசம்பட்டையை இடித்துப் பிழிந்த சாறு 2 உழக்கு சேர்த்துக் கிளறி அதைச் சுடச்சுடக் குடிக்கவும். இவ்வாறு 3 வேளைகள் உட்கொள்ள வயிற்றுக்கடுப்பு, இரத்தம் விழுதல் முதலியவை தீரும்.

## 210. குழந்தைகளின் வயிற்றுக் கழிச்சல் நிற்க மருந்தெண்ணெய்

தளச்சட்டி தனிலெலுமிச் சம்பழத்தை
யொன்றறுத்தச் சாற்றையூற்றி
விளக்கெண்ணெய் சேரொன்று விட்டதின்மா
தளையிலந்தை மிக்கநாவற்
றளிர்ச்சன்ன லவங்கபாபட் டையிலவங்
கப்பத்திரி தன்னோடேலம்
வெளிப்படு செண்பகமொட் டும்வெந்த
யமோர்மூற வேயரைத்தே. 346

அரைத்தந்த வெண்ணெயிலேயீரவெங்கா
யத்தைமெல்லி யதாயரிந்திட்
டுரித்தாகப் பக்குவமாய்க் காய்ச்சிவடிக்
கட்டிக்கொண் டோயாப்பேதி
யிரைத்துவயி றிடுங்குழந்தைக் கிந்தவெண்ணெய்
கொடுக்கிலுட னேகழிச்சல்
யிரைச்சலுமக் கணமேகு மென்றுசர
பேந்திரனா ரியம்பினாரே. 347

(இ-ள்) ஒரு வாயகன்ற சட்டியில் ஒரு எலுமிச்சம்பழத்தின் சாற்றைவிட்டு அதனுடனே விளக்கெண்ணெய் 1சேர் சேர்த்து

| | |
|---|---|
| மாதுளைத்தளிர் | இலந்தங்கொழுந்து |
| நாகக்கொழுந்து | சிறுலவங்கப்பட்டை |
| லவங்கப்பத்திரி | ஏலக்காய் |
| செண்பகமொட்டு | வெந்தயம் |

இவைகளை வகைக்கு 1பலமெடுத்துத் தண்ணீரிலூறவைத்து, நன்றாக அரைத்து எண்ணெயுடன் குழப்பி வெங்காயத்தை மெல்லியதாக நறுக்கிப்போட்டு எல்லாவற்றையும் அடுப்பின் மேலேற்றிப் பக்குவமாக எரித்து வடித்து வைத்துக்கொள்ளவும்.

ஓயாப்பேதி, இரைச்சலுடன் கூடிய பேதி இவைகளுக்குஇந்த எண்ணெயைக் கொடுக்கக் கழிச்சலும், இரைச்சலும் அந்த க்ஷணமே நிற்கும்.

## 211. வயிறுகழிச்சல், பொருமல், இரத்தக்கழிச்சலுக்கு மருந்து

*கருவேப்பந் தண்டுநா கரம்வசம்பு
நற்சீரகத்தினோடும்
வருநெல்லி முள்ளியிவை வகைக்கொரு
காசெடையுமரை மரக்கானீரிட்
டுரியாகக்காய்ச்சிவெந்த மருந்துமரைத்
துக்கரைத்து முண்ணப்பேதி
பிரையாம லேயருமரு மிதற்கேற்ற
கருக்கினையு மிசையக்கேளே. 348

இசையரசம் பட்டைகருக் கிட்டுக்கம்
சிக்கட்டி யினித்தூள்செய்தே
யசராமல் மென்பொடியிட் டருந்திடவே
சுரமிரத்த மாங்கடுப்பும்
விசைவிசையாய் வரும்பேதி விடுமிதுகை
கண்டதென விகிதமாக
வசனித்தார் சரபேந்திர மகராச
ரிம்மருந்தின் வகையைத்தாமே. 349

(இ-ள்) கருவேப்பநிதண்டு சுக்கு
வசம்பு நற்சீரகம்
நெல்லிவற்றல்

இவைகளை வகைக்கு ஒருகாசெடை யெடுத்து ஒன்றிரண்டாக இடித்து 1/2 மரக்கால் ஜலம் விட்டு 1/2 படியாகக் சுண்டக்காய்ச்சி ஷ மருந்துகளையும் அரைத்து எல்லாவற்றையும் ஒன்று சேர்த்துச் சாப்பிடப் பேதி நிற்கும்.

* கருவேம்பு - வேப்பமரத்தில் கருமை நிறமுள்ள ஒரு ஜாதி

**இதற்குத் தகுந்த கறுக்கு:**

அரசம்பட்டைக் கருக்குக் கஷாயம் செய்து அதனுடன் காசுக்கட்டித் தூள் சேர்த்துச்சாப்பிடச் சுரம், இரத்தக் கடுப்பு அடிக்கடி வரும் பேதி இவைகள் தீரும்.

## 212. பிள்ளை வயிறு கழியக்கட்ட மருந்து

நிலப்பனைவேர் தூதளங்காய் நிறையரைத்து
முலைப்பாலி னேர்ந்துகொண்டே
யிலக்கணமாய்க் கலந்துபுகட் டிடவயிறு
கழியுமிதை யிப்படிக்கே
கலக்கியமோ ரிற்கொடுக்கக் கழிச்சனிற்கு
முதிர ரத்திக் கணுவின் பட்டை
பலக்கொருபாக் களவெருமைப் பழமோரிற்
கரையெண்ணெய் பாதிக்காசே. 350

பாதிக்கா சளவெண்ணெய் பரிந்துகுத்திக்
கொடுமூன்று பகலம்மட்டும்
பேதிக்கா தடைபடுமிப் பிள்ளைவயி
றின்னமொன்று பேசக்கேளே
ஆதிக்கமு டன்குப்பை மேனிவே
ரொருகாசி னளவதாகப்
பேதைப்பா லினிற்கொடுக்க வயிறுமடை
படுமென்னப் பேசலாமே. 351

(இ-ள்) நிலப்பனை வேரை (கிழங்கை) ஒரு தூதுவளங்காய் நிறை அரைத்து முலைப்பாலில் கலந்து, குழந்தைக்குப் புகட்ட வயிறு கழியும்.

2. இதையே மோரில் கலந்து கொடுக்கக் கழிச்சல் நிற்கும்.

3. முற்றிய அகத்திக் கணுவிலுள்ள பட்டை ஒரு பாக்களவெடுத்து, பழைய புளித்த எருமை மோரில் கரைத்து

அதனுடன் எள்ளெண்ணெய் 1/2 காசெடை விட்டு 3 நாள் பகலில் கொடுத்துவரப் பேதியாகாமல் மலத்தைக் கட்டிவிடும்.

4. குப்பைமேனி வேர் ஒரு காசளவெடுத்துத் தாய்ப்பாலில் அரைத்துக் கொடுக்கக் கழிச்சல் நிற்கும்.

## 213. சிறுபிள்ளைகளக்கும் பெரியவர்களுக்கும் கடுத்திரத்தம் விழுகின்றதற்கு மருந்து

எலுமிச்சம் பழம்வட்ட மிடவறுத்திட்
டிதினபின்மாம் பிசினேயாதல்
திலந்திலமா கச்சிறுக நறுக்கிநெருப்
பினிற்கொதிக்கச் செய்தெடுத்தே
பலமார வைத்திந்தப் படிமூன்று
திறங் கொதிக்கப் பண்ணிக்கொண்டே
சிலவிட்டிம் மருந்திதனைத் தனச்சிறுவர்க்
கும்பிழிந்து செலுத்துவாயே. 352

செலுத்தின்ன முறையொன்று செப்பக் கேண்மின்
சீராவின் பால்வெள்ளாட் டின்பாலாதல்
இலக்கணமா யுரிப்பாலை யிடுகொதியிட்டதனை
விரண்டுபங் கிட்டொருபங் கிலேயரசம்பட்டை
துலக்கமுறவேயிடித்து வடித்திடுசா றினிற்பால்
சொரிந்துசுடச் சுடக்குடிக்கச் சொல்மூன்று
அலுக்காம லேகுடிக்கத் தீருங்கை கண்ட (திரமாய்
தரசர்சர பேந்திரனா ரருண்முறை யிதாமே. 353

(இ-ள்) ஒரு எலுமிச்சம் பழத்தை வட்டமாக அறுத்துக்கொண்டு நல்ல அபினோ அல்லது மாம்பிசினோ ஒரு பருத்தி விதையளவு எடுத்துக்கொள்ளவும். பின்பு, ஷை பழத்தின் மூடியைத் தணலின் மேல் வைத்து சிறிது சிறிதாகக் கிள்ளிப் பழத்தின்மேல் போட்டுவர அது பொங்கும். கொதித்தபின், அதை

கீழிறக்கி ஆறவைத்து, அந்த எலுமிச்சம் பழத்தின் சாற்றைப் பிழிந்து உள்ளுக்குப் புகட்டவும்.

2. 1/2 படி பசுவின் பாலையோ அல்லது வெள்ளாட்டுப் பாலையோ அடுப்பின் மேல் ஏற்றி 2 தடவை கொதிக்க வைத்து, அதை இரண்டு பங்குகளாகச்செய்து ஒருபங்கில் அரசம்பட்டையை இடித்த சாற்றைவிட்டு, மேலும் அந்த மீதியுள்ள பாலைச் சேர்த்துச் சுடச்சுட மூன்று தடவைகளில் குடிக்க வயிற்றுக் கடுப்புத் தீரும்.

### 214. சிறுபிள்ளைகள் கிராணிக்கழிச்சலுக்கு மருந்து

பிளியங்கொட்டைத் தோல்காசுக்
கட்டியிலவம் பிசினோமம்
விளையுஞ்சாதிக் கயோடதி
விடயமாங்கொட் டையின்விரையு
முளபொன்முசுட்டை வேரிதெல்லா
மாகக்கூட்டி யுடனெருமைக்
குளிர்மோரினை விட்டரைத்த
தனைக்குன் றிடையே குளிகைபண்ணி. 354

குளிகைதனைவென் நீரிலிட்டுக்
கொடுக்கக்கிராணி கொளுங்கழிச்சல்
களையாங்காய்ச்ச னிற்குமிது
கைகண்டதெனக் காவிரிசூழ்
வளநாடாளுஞ் சரபேந்திரர்
வண்ணையதனான் வாய்மலர்ந்து
முளமேமகிழச் சொன்னதிவை
யுலகோர்க்கிதமா முண்மையிதே. 355

(இ-ள்) புளியங்கொட்டையின் மேல்தோல்
காசுக்கட்டி
இலவம்பிசின்
ஓமம்

சாதிக்காய்
அதிவிடயம்
மாங்கொட்டைப்பருப்பு
பொன்முசுட்டை வேர்

இவைகளைச் சமமாக எடுத்து உரலிலிட்டு இடித்துப் புளித்த எருமை மோர் விட்டுச் சரக்குகளைக் கல்வத்திலிட்டு நன்றாக அ அரைத்துக் குன்றிமணியளவு மாத்திரையாக உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும். இதில் ஒருகுளிகையை வெந்நீரில் இழைத்துக் கொடுக்க

கிராணி, கழிச்சல், காய்ச்சல் இவை நிற்கும். கை கண்டது.

### 215. வெள்ளெடுப்புக் கழிச்சலுக்கு

நாவல்பொடு தலைகீழ்காய் நெல்லியின்நற்
கொழுந்தை வெள்ளை நற்சாரன்னி
லாவலுட னேயரைத்து மூன்றுபொழு
தளித்திடவு மதற்குப்பத்திய
மீவதையுண் டுபுளியிச் சியாதே
யிந்நோயி றங்கிமட்டெடன்
றாவதறி யுஞ்சரபேந் திரருரைத்த
வாறிதெலா மழகதாமே. 356

(இ-ள்) நாகக்கொழுந்து
பொடுதலைக்கொழுந்து
கீழாநெல்லிக்கொழுந்து

இவைகளை வெள்ளைநிறப் பசுவின் பாலிலரைத்து 3 பொழுது சாப்பிடக் கழிச்சலுக்குக் கொடுக்கவும்.

கொடுத்ததைச் சாப்பிட்டு நோய் நீங்கும்வரை புளி.யைத் தள்ளவும்.

## 216. பிள்ளைகளுக்கு வயிறு கழிந்தால் மருந்து

மாவடுவை யுலர்த்திவைத்துப் பொடிசெய்து
மற்றதனைத் தயிரின்மத்தித்
தேவடிப்ப மாய்க்கொடுக்கப் பிள்ளைகட்கு
வயிறுகழிந் திடாதென்றைதான்
மாவளமா கியசோழ வளநாட்டை
முழுதாளும் மகிமையுள்ள
கோவளகைப் பதிக்கரசர் சரபேந்திர
மகராசர் கூறினாரே. 357

(இ-ள்) மாவடுவை நறுக்கி வெய்யிலில் நன்றாகக் காயவைத்துச் சூரணித்துக் கொள்ளவும். இதைத் தயிரில் அரைத்துக் கலக்கிக் கொடுக்கக் குழந்தைகளின் வயிறு கழிச்சல் நிற்கும்.

## 217. பிள்ளைகளின் வயிற்று கடுப்புக்கு எண்ணெயும் கழிச்சலுக்குக் கருக்குக் குடிநீரும்.

பருத்திவிரை யொருநாழி காடியிலூ
றப்போட்டுப் பார்மற்றாநாள்
நறுக்கியதைப் பிழிந்துசா றுழக்குடனே
பொடுதலைச்சா ரமுநன்றாகக்
கரத்தினில்வைத் துக்கசக்கி யிதிற்பாதி
கலந்திதனிற் பாதிகழு வுமெண்ணெய்
விருப்பமுட னேகாய்ச்சிக் கொடுத்திடவே
கடுப்புளதும் விட்டுப்போமே. 358

வேப்புப்பொடு தலைத்தண்டு பழம்பாசித்
தண்டோமம் விட்டுணுக்ராந்தி
காப்புளநா கரமுருங்கை சீரகஞ்சற்
றேகருக்கிக் கண்முன்னாழி

நீர்பெருக்கி மூவுழக்காய் நிற்கக்காய்ச்
சியுமதனை நேரமூன்று
தாப்பிரிய மாய்க்கொடுக்கக்கழிச்சனிற்குஞ்
சரபேந்திரர் சாற்றினாரே. 359

(இ-ள்) பருத்தி விதை 1 நாழி

எடுத்துக்காடியில் ஒரு நாள் ஊறவைத்து மறுநாள் அதை இடித்திப் பிழிந்த ரசம் ஒரு ஆழாக்கில், பொடுதலையைக் கையினால் கசக்கிப் பிழிந்த ரசம் 1/2ஆழாக்கும் கூட விட்டுச் சுத்தமாகக் கழுவி ஆட்டிய எள்ளெண்ணெய் 1/2 ஆழாக்கும் கூட விட்டு, எல்லாவற்றையும் அடுப்பின்மேல் வைத்துப் பக்குவமாக எரித்து வடிகட்டவும்.

இத்தைலத்தில் சிறிதளவு சாப்பிட வயிற்றுக்கடுப்பு நிற்கும்.

| | |
|---|---|
| 2. பொடுதலைத்தண்டு | பழம்பாசித்தண்டு |
| ஓமம் | விட்டுணுக்கிராந்தி |
| சுக்கு | முருங்கை |
| சீரகம் | |

இவைகளை ஒரு புதுச்சட்டியிலிட்டுக் கருக்கி 3 நாழி (3¾ சேர்) ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி மூன்று உழக்காகுமட்டும் காய்ச்சிஅதை 3 வேளை பருகக் கொடுத்துவரக் கழிச்சல் நிற்கும்.

### 218. குழந்தைகள் வயிறு கழிச்சலுக்குக் கஷாயம்

வெந்தயத்தை யேவறுத்துக் கஷாயம் வைத்துக்
கொடுத்திடவும் இளைத்துமென்மேல்
வந்தவயிற் றுக்கழிச்சல் மாறிவிடு
மென்று சரபேந்திர வள்ளல்
விந்தைவிந்தை யாயுரைத்த மெய்முறையி
னிம்முறையு மிகநன்னென்றே
சிந்தையினி லெண்ணியிது சித்தர் முறை
யெனநல்லோர் செப்புவாரே. 360

(இ-ள்) வெந்தயத்தை (1 பலம்) சட்டியிலிட்டுப் பொன் வறுவலாக வறுத்து ( 2சேர்) தண்ணீர் விட்டுக் கஷாயம் செய்து கொடுக்கக் கழிச்சல் நிற்கும்.

## 219. பிள்ளைகள் வெள்ளுடைப்புக் கழிச்சலுக்கு மருந்து

ஆதண்டை யிலைகாய்பூ வதைஎலுமிச்
சம்பழச்சா றதனிலாதல்
மேதியின்னற் றயிராதல் விட்டடைசுண்
டைக்காய்போல் விடுத்தவுண்டை
பேதியாகா துகொடுபிள் ளைகட்கும்
பெரியவர்க்கும் பிரியமாய்நல்க
ஆதரவா மென்றுசர பேந்திரனார்
ருண்முறையே யடைவதாமே. 361

(இ-ள்) ஆதண்டையின் இலை, காய், பூ இவைகளை எலுமிச்சம் பழச்சாற்றிலோ அல்லது எருமைத் தயிரிலோ அரைத்துச் சுண்டைக்காயளவு பேதியாகும் குழந்தைக்குக் கொடுக்க மலம் அடைபடும். இம்மருந்தைப் பெரியவர்களும் சாப்பிடலாம்.

## 220. வாந்தியோடு கூடி. கழிச்சலுக்கு மருந்து

வசம்புள்ளி மிளகாமை யோடுசற்றே
வறுத்துமரை மரக்கானீரிட்
டேயசரா மலேயுழக்க தாய்க்காய்ச்சிக்
கொடுத்திடவா யாலெடுத்து
விசைவிசையா கக்கழிதல் விடுமெனவே
சரபேந்திரர் விபரந்தேடி
வசனபூ ருவமாக வசனித்தா
ரிம்மருந்தின் வகையைத்தானே. 362

(இ-ள்) வசம்பு வெள்ளைப்பூண்டு
மிளகு சுட்ட ஆமையோடு

இவைகளைச் சமமெடுத்து (வகைக்கு 3/4 பலம்) வறுத்து 1/2 மரக்கால்தண்ணீர் விட்டு ஒரு உழக்காகும்வரை வற்றக் காய்ச்சிக் கொடுத்திட வாந்தியோடு கூடிய பேதி தீரும்.1

### 221. பிள்ளை வயிறு கழிச்சலுக்கு மருந்து

மாம்பட்டை வகிர்ந்தரைத்தோர் வரிவளைச்சங்
கிற்பாலின் மத்தித்தேதான்
ஆம்பருவத் தோடிரண்டு போதுகொடுக்
கவும்வயிறங் கடைப்பதாகும்
தீம்புகள்தீர்ந் திடுமிதுவை கண்டதெனச்
சரபேந்திர தீரர்செப்பும்
நாம்பகல்வ தென்னிந்த நன்முறையின்
பெருமைநல்லோர் நவிற்றுவாரே. 363

(இ-ள்) மாம்பட்டையை அரைத்து ஒரு சங்களவுப் பசுவின் பாலில் கலந்து இரண்டு பொழுது கொடுக்க வயிற்றுக் கழிச்சல் அடைபடும். கைகண்டது.

### 222. குழந்தைகள் கிராணிகளுக்கெண்ணெய்

இடித்திடுசுக் கீரைந்து பலத்தினிலெட்
டுப்படிநீ ரிட்டுக்காய்ச்சோர்
படியளவாம் பொழுதந்தப் பாகத்திற்
படியெண்ணெய் பரிந்திட்டிந்துப்
பொடுசெவ்வியங் கொடுவேலி வகைக்கொருமுக்
கழஞ்சைரைத்திட் டுடன்வடித்தே
கொடுகழஞ்சு மேல்மூச்சு கொடுங்கிராணி
வீக்கமெல்லாங் குணமாந்தானே. 364

குணமாமுக் காவேளை கண்டிவில்வ
நன்னாரி கொடுவேலிவேர்
அணுகாம லேகிக்காஞ் சோரிசிறு
வழுதலைவட் டத்திருப்பி
யேனும்வேரெட் டுடனோதியா லிலவங்கப்
பட்டையா யிற்பட்டையும்
பணத்திப்பெரு மரமுள்ளி லவுகுட
சப்பாலைப் பட்டையாமே. 365

ஆவாரைப் பஞ்சகமா தளைதென்னம்
பாளையடப் பங்கொழுந்துங்
காவட்டம் புல்முத்தக் காசுகரு
வாழைப்பூ கருவேப்பந்தண்
டாவலுடன் கொண்டுபுளி யாரைசமூ
லமுமிதெலா மாய்ந்தெடுத்திட்
டேவகைக்கோர் பலமிடித்திட் டிற்றூணி
யெருமைமோ ரிட்டெரித்தே. 366

தூணிலிட்டு நானாழி யாய்க்காய்ச்சி
வடித்துக்கா சுக்கட்டியும்
வேணுமதி விடைமுடன் வெட்பாலை
யரிசியில வின்பிசின்றான்
சாணுங்காட் டாத்திப்பூ கருஞ்சீர
கஞ்சாதிக் காய்கல்நாரும்
ஆணமிள கோமங்கி ராம்பாங்கோட்டம்
பால்கோட்ட மாயிற்பட்டை. 367

பட்டைகுட சப்பாலைப் பட்டைதிரி
பலைவிளவிற் படும்பிசின்றான்
வெட்டுபெரு மரப்பட்டை பெருங்குரும்பை
நன்னாரி வேர்நற்சீராம்
விட்டநறு விளிம்பிசின்றிப் பிலிமூல
மிம்மருந்து விதமொன்றுக்
கிட்டமுட னிருகழஞ்சி னிடைபொடிசெய்
தேமுன்பண் ணினகருக்கில் 368

கருத்துடனல் லெண்ணெயுழக் காவினெய்யு
முழக்கிதனை கலந்துகாய்ச்சி
வரக்குழம்பாம் பதத்தில்வைத்த பொடியினைமே
லிட்டதனை வாகாய்க்கிண்டித்
திருத்தமுடன் கொடுத்துவர விரைச்சல்கிரா
ணியுமிரண்டுந் தீருமென்றே
யுரைத்தனர் தஞ்சையில்வா ழுத்தமனார்
சரபேந்திர ருலகத்தோர்க்கே. 369

(இ-ள்) சுக்குத்தூள் 10 பலத்துடன்

8 படி ஜலம் விட்டு ஒரு படியாக வற்றக் காய்ச்சிக் கொண்டு

| | | |
|---|---|---|
| நல்லெண்ணெய் | படி | 1 |
| செவ்வியம் | கொடிவேலி வேர் | |

இவையிரண்டும் தனித்தனியே முக்கழஞ்சு எடுத்துச் சுக்குக் கஷாயம் விட்டு, கல்கமாக அரைத்துக் கஷாயம் கலந்த எண்ணெயில் குழப்பி, அடுப்பின்மேல் வைத்துப் பக்குவமாக வடித்து இறக்கி, இதில் ஒரு கழஞ்சு வீதம் கொடுத்துவர,

| | |
|---|---|
| மேல்மூச்சு | கொடுங்கிராணி |
| வீக்கம் | |

முதலியவைகள் குணமாகும்

2.
| | |
|---|---|
| முக்காவேளை | சுக்கு |
| வில்வம் | நன்னாரி வேர் |
| கொடிவேலிவேர் | காஞ்சோறி |
| சிறுவழுதலை | வட்டத்திருப்பி |

இந்த எட்டு வகை வேர்களுடன்

| | |
|---|---|
| ஒதியம்பட்டை | ஆலம்பட்டை |
| இலவங்கம்பட்டை | ஆயில்பட்டை |
| பெருமரப்பட்டை | முள்ளிலவம்பட்டை |

குடசப்பாலைப்பட்டை மாதுளை ஓடு
ஆவரை பஞ்சாங்கம் (இலை, பூ, காய், பட்டைவேர்)
தென்னம்பாளை
அடப்பங்கொழுந்து (வாதுமைக் கொழுந்து)
காவட்டம்புல்
முத்தக்காசு (கோரைக்கிழங்கு)
கருவாழைப்பூ
கருவேப்பந்தண்டு
புளியாரைச்சமூலம்

இவைகள் அனைத்தையும் வகைக்கு 1 பலம் எடுத்து நன்றாக இடித்து ஒரு தூணி (4 மரக்கால்) எருமை மோர் விட்டு அடுப்பின்மேல் வைத்து 4 நாழியாகும்படி வற்றக் காய்ச்சவும். இதனுடன்

| | |
|---|---|
| காசுக்கட்டி | அதிவிடயம் |
| வெட்பாலை அரிசி | இலவம்பிசின் |
| காட்டாத்திப்பூ | கருஞ்சீரகம் |
| சாதிக்காய் | கல்நார் |
| மிளகு | ஓமம் |
| கிராம்பு | கோஷ்டம் |
| பால்கோஷ்டம் | வெண்கோஷ்டம் |
| ஆயில்பட்டை | குடசாலைப்பட்டை. |
| கடுக்காய் | நெல்லிக்காய்த்தோல் |
| தான்றிக்காய்த்தோல் | விளாம்பிசின் |
| பெருமரப்பட்டை | பெருங்குரும்பை |
| நன்னாரி வேர் | நறுவிளிப்பிசின் |
| நற்சீரகம் | திப்பிலிமூலம் |

இம்மருந்துகள வகையொன்றுக்கு இரண்டு கழஞ்சு வீதம் எடுத்து நன்றாகத் தூள் செய்து வைத்துக்கொள்ளவும்.

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | 1 உழக்கு |
| பசுநெய் | 1 உழக்கு |

இவைகளை கருக்குடன் (மேலே சொன்ன மோர் கஷாயத்துடன்) கலந்துஅடுப்பின் மேலேற்றிக் குழம்பாக வரும் பதத்தில் மேற்சொன்ன பொடியைத்தூவிக் கிண்டி வைத்துக்கொள்ளவும்.

இதனைத் தினந்தோறும் சாப்பிட்டுக்கொண்டுவர இரைச்சல், கிராணி இவ்விரண்டும் தீரும்.

**குறிப்பு;**

தூணி - 4 மரக்கால் அளவு
கழஞ்சு - 40 குன்றிமணி அளவு அல்லது
1 1/4 வராகனெடை

## 223. குழந்தைகளுக்கு வயிறு கழியாமல் நிற்க மருந்து

சீகுப்புல் லினைச்சுட்டுக் கரியாகக்
கழாயமதாய்ச் செய்துநல்கி
லேகுழந்தை களுக்குவயி றிரையாமலே
மலக்கழிச்ச லியல்பாய் நிற்குஞ்
சேகரிமாங் கொட்டையினற் பருப்பினைத்
தூளாக்கிச் சேருசர்க்கரை
வாகுமிதைக் கலந்துகொடுத் திடவயிறு
விடாதெனவே யறியலாமே.

(இ-ள்) 1. சீகுப்புல்லை நெருப்பிலிட்டுக் கருக்கித் தண்ணீர் விட்டுக் கஷாயம் செய்து கொடுக்க வயிறு இரைச்சல், மலக்கழிச்சல் இவை நிற்கும்.

2. மாங்கொட்டையின் பருப்பை இடித்துத் தூளாக்கிச் சர்க்கரை சேர்த்துக் கலந்து, குழந்தைக்குக் கொடுக்க வயிற்றுக் கழிச்சல் நிற்கும்.

# 20. சிறுகுழந்தைகளின் ஜ்வரத்திற்கு மருந்துகள்

## 224. சிறுபிள்ளைகளின் ஜ்வரமும், அதிசாரமும் வாந்தியும் தீரக்குடிநீர்

அஞ்சனக்கல் லதிமதுரங் கூகைநீர்
பேரீச்சு மடைவதாக
வுஞ்சமலு செய்துடன்றேன் சர்க்கரைகூட்
டியுணச்செய் யிலுளவுபாந்தி
மிஞ்சழலை யிளைப்புளதும் விடுஞ்சகல
தாபமும்போ மெனச்சோணாட்டைத்
தஞ்சையிருந் தரசாளுஞ் சரபேந்திர
மகராசர் சாற்றினாரே. 371

சீதேவிச் செங்கழுநீ ரிலைச்சாற்றார்
கடுகுரோகி ணியைச்சீர்நெய்
தாதரவினா லரைத்துக் கழச்சிசுண்டைக்
காயளவ தானவுண்டை
போதரவாய்ச் சுண்டைக்காய் போலுண்டை
முலைப்பாலிற் புகட்டோர்சங்கு
மீதியுடம் பினிற்பூசி மேற்பெலங்கண்
டக்கழற்சி விரை மட்டூட்டே. 372

(இ-ள்) அஞ்சனக்கல் அதிமதுரம்
கூகைநீர் பேரீச்சை

இவைகளைச் சமமாக எடுத்து நன்றாக இடித்துச் சூரணம் செய்து, அதனோடு தேனும், சர்க்கரையும் கூட விட்டுக் குழந்தைகளுக்குக் கொடுக்க உளமாந்தம், அழலை இளைப்பு, சகலவிதமான தாபங்கள் முதலியவை தீரும்.

(2) கடுகரோகிணியைச் சீதேவியார் செங்கழுநீரிலைச் சாறுவிட்டு (நெய்ச்சட்டி) அரைத்துச் சுண்டைக்காயளவாகவும், கழற்சிக்காயளவாகவும் உருண்டைகள் செய்து குழந்தையின்

பலமறிந்து, பலஹீனமாயிருந்தால் சுண்டைக்காய்ப் பிரமாணமுள்ளதைத் தாய்ப்பாலில் அரைத்து ஒரு சங்கு புகட்டி, மேலும் பூசவும். பலமுள்ள குழந்தைகளுக்குக் கழற்சிக்கொட்டைப் பிரமாணமுள்ளதை உள்ளுக்குத் தாய்ப்பாலில் புகட்டவும்.

### 225. வாந்தியுடன் கூடிய ஜ்வரத்திற்கு மருந்து

கலைமான்கொம் பதிவிடையந் திப்பிலியுஞ்
சமங்கூட்டிக் கல்வத்திட்டே
யுளவாமற் பொடிபண்ணி யுள்ளதேனிற்
கொடுக்கவு வாந்தியோடே
நலிசுரமும் விடுமென்று நரபதிபூ
பதிசரப னாமன்சொல்லே
கலையாயு ணூல்தமிழிற் கவிசெய்யக்
கண்டெவருங் களிக்கின்றாரே.

(இ-ள்) சுத்தியான கலைமான் கொம்பு
அதிவிடையம் திப்பிலி

இவைகளைச் சமஎடையாக எடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடிசெய்து, தேனில் கொடுக்க வாந்தியோடு கூடிய ஜ்வரம் தீரும்.

### 226. பிள்ளைகள் காய்ச்சலுக்கும், இருமலுக்கும் இரைப்புக்கும் மருந்து

பூசணிப்பூ வசம்புள்ளி தூதுவளைநீ
லியின்வேரீப் புசிக்கும்வெளவால்
நேசமுற்றுக் கொடுவந்து நெய்வடிக்க
வுங்கெற்பம் நிறைதல்கண்டே

மாசம்பத் தினிற்பிறந்த மகவாயிற்
கரட்டோணா னிரத்தம்வார்க்கிற்
பேசுமெத்தோ டமும்போங்காப் பிளியிலைகுன்
றியிலைசிறு பீளையுள்ளி 374

உள்ளிவசம் புடனேவிள வினிலையிதெலா
மொருநாள்முன் னுறவேகொண்டே
மெல்லவதி காலமேவி டியும்வேளை
யின்வாசற் படிமேற்றாயைப்
பிள்ளையுட னேயிருக்கச் சொல்லிமருந்
தினைநறுக்கப் பிழியமுக்கால்
அள்ளிமருந் தினைத்துவளை யாயிடவு
மூன்றுநாள ன்னாட்டீரும். 375

| | |
|---|---|
| (இ-ள்) பூசினிப்பூ | வசம்பு |
| உள்ளி | தூதுவேளை |
| அவுரிவேர் | ஈத்தின்னி வெளவால் |

இவற்றைக் கொண்டுவந்து வகையொன்றுக்குக் கால் பலம் வீதம் எடுத்துச் சூரணித்து 2 சேர் நெய்யுடன் கலந்து பக்குவம் செய்து வடித்துக் கொடுக்க காய்ச்சல், இருமல், இளைப்பு இவை தீரும்.

பத்தாம் மாதம் பிள்ளை பிறந்த தினத்தன்று கரட்டோணானின் இரத்தம் வாயில் வார்க்கவும். எவ்வித தோஷங்களும் தீரும்.

| | |
|---|---|
| புளி இலை | குன்றியிலை |
| சிறுபீளையிலை | உள்ளி |
| வசம்பு | விளா இலை |

இவைகளை முதல் நாளே கொண்டுவந்து வைத்து, மறு நாளதிகாலையில் (விடியற்காலத்திலே) வாசற்படியிலே பிள்ளையையுந் தாயையுமிருக்கச் செய்து, முன் மருந்துகளை நறுக்கி இடித்து முக்கால் பாகம் பிழிந்து , உடம்பிலே துவளையிடவும். இந்தப்படி 3 நாள் துவளையிடவும். மேற்படி நோய்கள் தீரும்.

## 227. பிள்ளைக் காய்ச்சலுக்கும், இருமலுக்கும் இரைப்புக்கும் மருந்து

அன்னானி லேவிடத்தே ரிலைசிறுபுள்
ளடியிலையு மதைமுன்வைத்தே
பன்னாளிற் காடியினிற் றுவளையிட்டுப்
பார்க்கவுமே பலிக்கும்நன்கென்
றின்னாளிற் காவேரியின் றீரமுழு
தாளுமெங் கள்வேந்தன்
மன்னவனார் சரபேந்திரர் வசனித்தா
ரிம்முறையின் வகையைத்தானே. 376

(இ-ள்) சிறுபுள்ளடி விடத்தேரி இலை

இவ்விரண்டையும் காடிவிட்டு அரைத்துக்குழப்பி முன்போல உடம்பின்மேல் துவளையிட மேற்சொல்லிய வியாதிகள் தீரும்.

## 228. சிறுபிள்ளைகளின் ஜ்வரம், அதிசாரம் வாந்திக்கு

அதிசாரத் தினுக்குமஞ்சள் மரமஞ்தசள்
தூதுவளை யடிவேர்த்தோலும்
அதிமதுரம் வெட்பாலை யரிசியுடனே
சமஞ்செய்த தனைநன்றாய்ந்
திதமான கழாயஞ்செய் திருநேர
முங்கொடுக்க வேநீர்ப்பேதி
மிதமாகு மனுகூல மெனச்சரபேந்
திரமன்னர் விளம்பினாரே.

(இ-ள்) மஞ்சள், மரமஞ்சள், தூதுவேளை வேரின் மேல்தோல், அதிமதுரம், வெட்பாலை அரிசி இவைகளைச் சமமாக எடுத்துச் சூரணித்துக் கஷாயம் செய்து, இரு நேரமும் கொடுக்க நீர்பேதி (தண்ணீராகக் கழிதல்) தீரும்.

## 229. சிறுபிள்ளைகள் ஜ்வரத்திற்குச் சகதேவித் தைலம்

குருவோத்தண் டுடன்சீந்தில் நெய்சட்டிப்
பூண்டுடினைக்கை கொடுபிசைந்தே
உரிசாறிட் டுரிமுலைப்பா லுடன்கடுக
ரோணியதி மதுரத்தோடும்
அரைபடுசந் தனமவையுங் கூட்டியெண்ணெய்
பண்ணிசமசெய் தங்கத்திட்டால்
சுரம்நிற்கும் பிள்ளைகட்கென் றேசரப
சுந்தரவேள் சொன்னார்தாமே. 378

(இ-ள்) வெட்டிவேர்த்தண்டு, சீந்தில்கொடி, நெய்ச்சட்டிப்பூண்டு இம்மூன்றையுங் கொண்டுவந்து இடித்து ½ படி சாறெடுத்து, அதற்குச்சமம் ( ½ படி) முலைப்பால் கூட்டிக் கடுகரோகிணி அதிமதுரம், இழைத்த சந்தனம் இவைகளை வகைக்குக் கால் பலமெடுத்து நன்றாகப் பால் விட்டரைத்து ½ படி நல்லெண்ணெயுடன் குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் வடித்து உடம்பில் பூசிவரக் குழந்தைகளின் ஜ்வரம் தீரும்.

## 230. சிறுபிள்ளைகளின் பித்த ஜ்வரத்திற்கு

கொத்தமல்லி யொருபிடிசுக் கிரண்டுகடுக்
காய்நாலு கொண்டுகூட்டி
யித்தனையுங் குடிநீரிட் டுக்காய்ச்சி
முலைப்பாலி லேகொடுக்கப்
பித்தசுரம் விடுமெனவே வித்தகனார்
சரபேந்திரர் பிரியமில்லாச்
சத்துருவைச் சங்கரிக்குஞ் சத்திரபதி
தன்வாயாற் சாற்றினாரே. 379

| | | |
|---|---|---|
| (இ-ள்) | கொத்தமல்லிவிதை | 1 பிடி |
| | சுக்கு | 2 துண்டு |
| | கடுக்காய் | 3 |

இவற்றை ஒன்றிரண்டாக நசுக்கி 16 மடங்கு தண்ணீர் விட்டு எட்டிலொன்றாகக் காய்ச்சி, வடிகட்டி, முலைப்பால் சிறிது சேர்த்துக்கொடுக்கப் பித்த ஜ்வரம் தீரும்.

### 231. வேறு

கலைக்கொம்போ டுத்திராக்க முலைப்பாலி
லேயரைத்துக் கலந்துநல்க
நலுக்கஞ்செய் பித்தசுரம் நாடாதென்
றேசோழ நாடாளுகின்ற
யிலக்கணமா கியசரபேந் திரருரைத்த
விம்முறையை யுணர்ந்தோர்
நிலத்திற்கற் றவரெவரும் நிச்சயங்கண்
டதிசயிக்க நிகழ்த்தினாரே.

(இ-ள்) மான்கொம்பு ருத்திராக்ஷம்

இவ்விரண்டையும் முலைப்பால்விட்டு இழைத்துக் கலந்து கொடுக்கப் பித்த ஜ்வரம் தீரும்.

### 232. சிறுகுழந்தை பித்த ஜ்வரத்திற்கு மருந்து

சீருளவிட் டுணுகிராந்தி செப்புநெருஞ்
சியினுடனே சிறந்தசாரச்
சாறணைவே ரிம்மூன்றுஞ் சமனாக
விடித்துத்தூ ளாக்குசுக்கும்
ஆருக்கு மாகுங்கொத் தமல்லித்தூ
ளும்வெருக டிப்பிரமாணம்
நேருற்ற நாழியினீ ரிதெல்லாம்
போட்டுழக்கும் நிற்கக்காய்ச்சே 381

காய்ச்சியந்தி சந்தியுமே கொடுக்கவும்வெச்
சென்றவுடன் கடுகிநல்கப்
பேச்சதிக மாம் பித்த சுரம்விடுமென்
றேசரபப் பெருமான்சொன்ன
வாச்சரிய மாகியவிவ் வருமுறையை
யருந்தவந்த ணர்களியாரும்
ஈச்சரச காயமிது வென்றுமன
மகிழ்ந்திடுவ ரென்றுதானே. 382

(இ-ள்) விஷ்ணுக்கிராந்தி செப்புநெருஞ்சில்
சத்திச்சாறணைவேர்

இம்மூன்றையும் சமமெடுத்து இடித்துத் தூளாக்கிச் சுக்கு, கொத்தமல்லி விதைப்பொடி இவ்விரண்டையும் வகைக்கு ஒரு வெருகடிப் பிரமாணம் போட்டு. ஒரு படி ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி, ஒரு உழக்காக வற்றக் காய்ச்சவும். இதைத் தினமொன்றுக்கு இருவேளை, காலையிலும், மாலையிலும் உபயோகிக்கப் பித்த ஜ்வரம் தீரும்.

## 233. சீத ஜ்வரத்திற்கு

சீதசுரத் திற்குமெரு கங்கிழங்கு
சமூலமுந்தான் சேர்த்திடித்தப்
போதுபதக் குக்காடி புகப்போட்டு
நானாழி போலேகாய்ச்சி
யீதிருநா ழியையிறுத்துப் பசுவின்பால்
குருணியீரி ரண்டுநாழிக
ளாதரவாய் மரமஞ்சள் யானைத்திப்
பிலிசிறுதேக் கதுசுக்காமே. 383

ஆமெருகங் கிழங்குசிறு முகமுடன்றிப்
பிரிதேவ தாரம்யாவுந்
தாமதமில் லாமலொரு சரக்கினுக்கு
முக்கழஞ்ச தாகக்கூட்டி

சோமமுட னேயரைத்து மிடச்சீத
சுரந்தீரு மென்றேதானே
மாமகிபர் சரபேந்திரர் வசனித்தார்
நோயற்றும் வாழத்தானே. 384

(இ-ள்) மெருகங்கிழங்கைச் சமூலமாக (சுமார் 10 பலம்) எடுத்து நன்றாக இடித்து 2 மரக்கால் காடி வார்த்து அடுப்பின்மேல் வைத்து 4 படியாகச் சுண்டக்காய்ச்சி *எண்ணெய் இருநாழி வார்த்து,

பசுவின் பால் ஒரு குறுணியும் 4 நாழியும் வார்த்து

| | |
|---|---|
| மரமஞ்சள் | யானைத்திப்பிலி |
| சிறுதேக்கு | சுக்கு |
| மெருகங்கிழங்கு | சிறுமுகம் |
| திப்பிலி | தேவதாரம் |

இவைகளை வகைக்கு 3 கழஞ்சு வீதம் எடுத்துத் தண்ணீர் விட்டு நன்றாக அரைத்து, எண்ணெயுடன் குழப்பி அடுப்பின் மேலேற்றிப் பதமாக எரித்து வடிக்கவும். இத்தைலத்தைத் தேக முழுவதும் துவலையாக இட்டுவரச் சீதசுரம் நீங்கும்.

## 21. குழந்தைகளுக்குப் புஷ்டி தர மருந்துகள்

### 234. வறட்சி, சூடு உள்ள குழந்தைகளுக்கு

சேரொன்ற தாம்பசுவி னெய்க்கோர் குத்து
முசுமுசுக்கை தேற்றாங்கொட்டை
சீரகமும் வகைக்கோருழக் கேயெடுத்து
றப்போட்டுச் சேர்த்தரைத்தே

*இது மூலச்செய்யுளில் காணப்படவில்லை. 91 நெ. சுவடியில் சொல்லப்பட்டிருக்கிறது

1. சிறுமுகம் - திப்பிலி. ஆகவே இச்சரக்கை இருமடங்கு எடுத்துக்கொள்ளவும்.

யேர்வையுட னேநெய்யில் கலந்தடுப்பில்
வைத்திறக்கி விதுகைகண்ட
தோரொருகொட் டைப்பாக்கி னளவுகொடு
உடல்பருக்கும் பாலகருக்கே. 385

| | | |
|---|---|---|
| (இ-ள்) | பசுவின்நெய் | 1 சேர் |
| | முசுமுசுக்கை இலை | 1 குத்தளவு |
| | தோல்சீவின தேற்றாங்கொட்டை | 1உழக்கு |
| | சீரகம் | 1 உழக்கு |

இந்தச் சரக்குகளைத் தண்ணீரில் ஊறப்போட்டு நன்றாக அரைத்துப்பசுவின் நெய்யுடன் குழப்பி அடுப்பின் மேல் வைத்துப் பதமாக இறக்கி ஒரு வேளைக்குக் கொட்டைப்பாக்களவு கொடுக்க (பாலுடன்) குழந்தைகளின் உடல் பருக்கும். தினமிருவேளை சாப்பிடலாம்.

## 235. பிள்ளைகளுக்கு முலைப்பாலெண்ணெய்

மெருகெண்ணெ யெப்படியு முலைப்பாலி
லேபண்ண வேண்டிற்சீந்தி
லுருவிலைச்சா றுரியோடெண் ணெயுழக்குங்
காய்ந்தோங்கி யொருபதமாகச்சே
யொருமூன்று காசிடையாங் கடுகுரோ
கிணிபொடிசெய் துடனேதூவித்
தரைவியிறக் கித்தலையி லுடம்பிலிடப்
பிணிதீருஞ் சவுக்கியமாமே. 386

| | | |
|---|---|---|
| (இ-ள்) | சீந்தில்கொடியின் சாறு | ஒரு உரி |
| | உருவிலிச்சாறு | ஒரு உரி |

ஆமணக்கெண்ணெய் ஒரு உழக்கும் சேர்த்துக்காய்ந்து பதமாக வரும்போது 3 காசிடை கடுகு ரோகிணி பொடி செய்து தூவி நன்றாகக் கலக்கி இறக்கவும்.

இதைத் தலையிலும் உடம்பிலுமிடப் பிணிகள் தீர்ந்து சௌக்கியமுண்டாகும்.

**குறிப்பு;** இந்தத் தைலத்தில் முலைப்பால் சேர்க்க வேண்டும். என்று கூறப்படவில்லை. ஆனால் தைலத்தின் பெயர் "முலைப்பாலெண்ணெய்' என்றிருக்கிறது. காரணம் புலப்படவில்லை. அகராதியில் மெருகெண்ணெய்க்கு (மினுக்கெண்ணெய்) என்று பொருள் காணப்படுகிறது.

## 236. இளைத்தபிள்ளை தேற மருந்து

அதிமதுர மாறுகழஞ் சதினுடன்கோ
ரோசனாநா லாங்கழஞ்சும்
யிதமாக விருநாழி யெள்ளெண்ணெ
யினிலெரித்திட் டேவுடம்பில்
வதனமுட னுச்சிதலை வார்த்துநனைத்
திடவிளைத்தல் மாறுந்தேறும்
பதறாம லிப்படிச்செய் யென்றுசர
பேந்திரனார் பகிர்ந்திட்டாரே.

| | | |
|---|---|---|
| (இ-ள்) | அதிமதுரம் | 6 கழஞ்சு |
| | கோரோசனை | 4 கழஞ்சு |

இவ்விரு சரக்குகளையும் நன்றாகத் தூள்செய்து நல்லெண்ணெய் 2 நாழியில் போட்டெரித்து உடம்பிலும், தலையிலும் தடவி வர இளைத்தபிள்ளை பருக்கும்.

## 237. உலர்ந்த பிள்ளை பருக்க மருந்து

நல்லெண்ணெய் பசுவெண்ணெ யாமணக்கெண்
ணெய்பொடுத லைற்கொழுந்துத்
துல்லியவே லிப்பருத்தி கருவேலி
னிலைபேய்ப்பாற் சோற்றிதீர்த்தம்

புல்லியபொன் னாங்கண்ணி சமூலமிவை
வகைக்கோர்பிடி புதிதாய்க்கொண்டு
நல்லசீர கமிளகு வெளிச்சையினற்
பிசின்பலங்கா னவில்வகைக்கே. 388

வகைமுழுதும் போட்டெரித்துக் கடுகுடன்
வைத்ததுவரா கனெடைவாங்கிப்
புகலந்தி சந்தியுமே புகட்டுலர்ந்த
பிள்ளையுடல் பூரிப்பாமென்
றகமகிழுஞ் சரபேந்திரர் குணமுறையை
நெறியுணர்ந்தோ ராருங்கற்றே
சகமீதி லவரவர்க்குச் சாற்றினார்
பரம்பரையாய்த் தழைக்கத்தானே. 389

| | | |
|---|---|---|
| (இ-ள்) | நல்லெண்ணெய் | பசுவெண்ணெய் |
| | ஆமணக்கெண்ணெய் | பொடுதலைக்கொழுந்து |
| | வேலிப்பருத்தி இலை | கருவேலங்கொழுந்து |
| | பேய்பாற்சோற்றி இலை | பொன்னாங்காணிச் சமூலம் |

இவைகளை வகைக்கோர்படி புதிதாக எடுத்து அம்மியிலிட்டரைத்து, நற்சீரகம், மிளகு, வெளிச்சைப்பிசின் இவைகள் வகைக்கு ¼ பலம் எடுத்துச் சூரணித்து, எல்லாவற்றையும் எண்ணெய் வகையுடன் குழப்பி அடுப்பின் மேலிட்டுப் பக்குவமாக எரித்து, வடிகட்டாமல் கடுகுடனே வைத்து, ஆறியபின் ஒரு வராகனெடை வீதம் காலையிலும் மாலையிலும் சாப்பிட, மெலிந்த குழந்தை பருக்கும்.

**குறிப்பு:** நல்லெண்ணெயும், வெண்ணெயும், ஆமணக்கெண்ணெயும் வகைக்கு 1 சேர் எடுத்துக் கொள்ளலாம்.

## 238. உலர்ந்துபோகிற பிள்ளைகளுக்கு மருந்து

இலந்தைநுணா நாவன்மா துளத்தினிளங்
கொழுந்துவகைக் கிடைகாசொன்றே
கலத்திடித்து வெந்தயத்தைக் காற்படியிற்
பாதிகொண்டு கனல்வெதுப்பி
யிலந்தனிற் சூரணித்தே லமிலவங்
கப்பத்திரி .........................
யிலங்கியசெண் பகவரும்பு சீரகமிவ்
வகைக்கொருகா சிடையுமிட்டே.

இட்டிவையெல் லாந்தண்ணீர் விட்டரைத்து
முன்சொன்ன விளங்கொழுந்தோ
டொட்டிவெந் தயப்பொடியோ டுள்ளமருந்
தனைத்தையுநெய் யுறவேபோட்டுக்
கட்டளையா கக்கலந்து பக்குவமாய்க்
காய்ச்சிவடிக் கட்டிக்கொண்டே
திட்டமுட னேகுழந்தை கட்கோர்பி
ரமாணமாய்ச் செலுத்துவீரே.

| | | |
|---|---|---|
| (இ-ள்) | இலந்தை | நுணா |
| | நாவல் | மாதுளங்கொழுந்து |

இவைகளை வகைக்கு ஒரு காசெடை எடுத்துக்கொள்ளவும்.

வெந்தயம் 1/8 படி எடுத்து, பொன் வறுவலாக வறுத்துச் சூரணம் செய்து இதனுடன்,

| | |
|---|---|
| ஏலக்காய் | இலவங்கப்பத்திரி |
| செண்பகப்பூ | சீரகம் |

இவைகள் வகைக்கு ஒரு காசெடையுமிடித்துப் போட்டு முதல் நான்கு கொழுந்துகளையும் தண்ணீர்விட்டு நன்றாக அரைத்து, மேல்சொன்ன வெந்தயப் பொடியோடு கூடிய

மருந்துகளின் சூரணத்தையும் சேர்த்து. எல்லாவற்றையும் நெய் (1சேரில்) குழப்பி அடுப்பின்மேல் வைத்துப் பக்குவமாக எரித்து, வடித்து நன்றாக வடிகட்டிக்கொண்டு, தினந்தோறும் குழந்தைகளுக்கு ½ காசெடை வீதம் கொடுத்து வரவும்.

### 239. குழந்தைகள் வயிற்றிற்றிமிர்ப் புழு, விழக் காய்ச்சல், கிராணி முதலியவை தீரவும் உடம்பு பருக்கவும் நெய் பண்ணும் விதம்

தேவதாரஞ் சரளதேவ தாரந்திப்பிலி
திப்பிலிமூலஞ் சிற்றேலமேலம்
பூவதரந் தோடுடன்மா துளவேர்பட்டை
புதியபேய்பு டல்மிளகோ டசமதாகம்
காவேறிப்ப டரும்பொன்மு சுட்டைகோட்டங்
கடுகுரோ கிணியிலவங் கத்தின்பத்திரி
யாவதாமத் திப்பி லிவெட்பாலையரிசி
வசம்பதி விடையங்கொடு வேலியாமே. 392

ஆமிலந்தைப் பட்டையில வங்கப்பட்டை யுடனே
யாமஞ்சள் மரமஞ்ச ளானதெலா மாய்ந்தே
யோமமுட னோரேோர்வகைக்கோரொரு காசெடையே
யொன்றாகக் கூட்டியதைக் கன்றாவின் பால்விட்
டேமதுர மாகவரைத் தேயோர்படி நெய்யுமிரண்டு
படிபாலு டன்விட்டோ வடித்துக்கொண்டே
சேமமுடன்பிள்ளை பெலமறிந்தோர்சங் குபுகட்டத்
திமிர்புழுக் காய்ச்சற்கிராணி தீர்நிதிடுமெய்திடமே.

| | | |
|---|---|---|
| (இ-ள்) | தேவதாரம் | சரளதேவதாரம் |
| | திப்பிலி | திப்பிலிமூலம் |
| | சிற்றேலம் | பேரேலம் |
| | பூவோடு கூடிய மாதுளையின் வேர்ப்பட்டை | |
| | பேய்ப்புடல் | மிளகு |

| | |
|---|---|
| ஓமம் | பொன்முசுட்டை வேர் |
| கோஷ்டம் | கடுகரோகிணி |
| இலவங்கப்பத்திரி | யானைத்திப்பிலி |
| வெட்பாலையரிசி | வசம்பு |
| அதிவிடயம் | கொடிவேலிவேர் |
| இலந்தைப்பட்டை | லவங்கப்பட்டை |
| மஞ்சள் | மரமஞ்சள் |
| ஓமம் | |

இவைகளை வகைக்கு ஒரு காசெடை யெடுத்துப்பசும் பால் விட்டு ஊறவைத்துப் பின்பு அவைகளை அம்மியிலிட்டு அரைக்கவும். நன்றாக மசிந்தபின் அந்தக் கல்கத்தை

| | |
|---|---|
| நெய் | 1 படியோடும் |
| பசுவின்பால் | 2 படியோடும் |

சேர்த்துக் குழப்பி அடுப்பின் மேலேற்றிப் பக்குவமாக எரித்து வடிக்கவும். குழந்தையின் பலம் அறிந்து இந்நெய்யில் ஒருசங்கு புகட்டத் திமிர்புழு, காய்ச்சல், கிராணி இவைகள் தீரும்.

**குறிப்பு:**

இம்முறையில்"ஓமம்"இருதடவை சொல்லப்பட்டிருப்பதால், ஒரு இடத்தில் ஓமத்தையும் மற்றொரு இடத்தில் குராசாணி ஓமத்தையும் எடுத்துக்கொள்ளல் வேண்டும்.

## 22. குழந்தைகள் வயிற்றுக் கிருமிகளுக்கு மருந்து

### 240. பிள்ளைகளுக்குக் கீரிப்புழு விழ மருந்து

சீரகம்வெள் ளுள்ளியுமே சேர்த்தரைத்துக்
கொடித்திடுகஞ் சியிற்கொடுக்க
நீரினதி தாகமெழி னெருப்பினெழு
புகைபடாமண் ணினையுமிட்டு

கூரியபச் சைப்பாளை சீவினபாக்
குடனரைத்துக் குறுணித்தண்ணீர்
சீருடன்விட் டிருசேர தாய்க்காய்ச்சி
யேசிறுகச் செலுத்துள்ளுக்கே. 394

செலுத்துமள விற்கீரிப் புழுக்களிழுக்
குடலைந்து செத்துந்தானே
மலத்தோடும் வீழுமெனவே வாகடநூ
லுரைத்தெல்லா மனத்தினெண்ணிக்
கலிக்கடலின் கட்டினின முக்காத
கொழுந்திடுங்கா விரிச்சோணாட்டின்
நலத்தைமுழு தரசாளுஞ் சரபேந்திர
மகிபாலர் சாற்றினாரே. 395

| | | |
|---|---|---|
| (இ-ள்) | சீரகம் | 1 வராகனெடை |
| | வெள்ளைப்பூண்டு | 1 வராகனெடை |

இவை இரண்டையும் கொதிக்கஞ்சியிலரைத்துக் கொடுக்கவும்.

(b) தண்ணீர்த் தாகமேற்பட்டால், புகைபடாத மண், சீவின பாக்கு, பச்சைப்பாளை இம்மூன்றையும் சமமெடுத்து நறுக்கிப்போட்டு, குறுணித்தண்ணீர் விட்டு 2 சேராகக் காய்ச்சிக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுக்கவும். கீரிப் புழுக்களெல்லாம் குடலிலேயே செத்து மலத்துடனே வெளிப்படும்.

## 241. கீரி நோய்க்கு

இலுப்பினிலை நறுக்கிவசம் பினையுமுள்ளி
யினையுமிட்டு ளிறங்கச்செய்து
தலைப்புறத்தி னும்பிழியச் சாரிபோங்
கீரிநோய் தானேயென்று

நிலத்தினின்மன் னுயிர்க்கிதமாய் நிகழ்த்துசர
பேந்திரரிந் நெறியாயுணூல்
யிலக்கணச்செந் தமிழினிலிட் டெடுத்துரைமின்
னெனப்புலவர்க் கியம்பினாரே. 395

(இ-ள்) இலுப்பையிலை, வெள்ளைப்பூண்டும், வசம்பும் கூடச்சேர்த்து இடித்துச் சாறுபிழிந்து, உள்ளுக்குங்கொடுத்து, தலையிலும் பிழிய கீரிப்பூச்சியினாலுண்டான நோய் தீரும்.

### 242. கீரிப்பூச்சி நோய்க்கு

குப்பைமேனி யினிலையுத் தாமணியி
னிலைநீரைக் கொடுபிசைந்தே
கொப்புள்தா யார்தலையுங் குழந்தைதலை
யுஞ்சொரியக் குளிதோடம்போம்
இப்படிப்பிள் ளைப்பிணிக்கு மிம்மருந்தை
வரைத்திடுகீ ரியெனும்நோயு
மெப்படியுந் தீருமெனச் சரபேந்திர
மகராச ரியம்பினாரே.

(இ-ள்) குப்பைமேனி இலை உத்தாமணி இலை

இவ்விரண்டையும் தண்ணீர்விட்டுப் பிசைந்து குழந்தை தலையிலும், தாயார் தலையிலும் பூசக்குளிதோஷம் போகும். குழந்தைக்கு வரும் கீரி நோயும் தீரும்.

**குறிப்பு:** 83-ம் பக்கத்திலுள்ள மருந்து நெ. 104 பார்க்கவும்.

## 243. சிறு பிள்ளைகளின் வயிற்று நாக்குப் பூச்சிக்கு எண்ணெய்

நெஞ்சுவற்றி மார்பசந்து வற்றிவயி
றும்பெருத்து நொந்தப்பிள்ளைக்
கஞ்சாமற் சாறணைவே ளையிலையும்
வகைக்கோர்பிடி யாய்நறுக்கி
மிஞ்சியகள் ளிப்பாலும் விட்டுழக்கா
மணக்கெண்ணெய் விட்டுநாழி
மஞ்சாதி யேகொடுத்து வரும்போது
மிளகுமஞ்சள் வகைக்கோர்காசே. 398

வகைக்கொருகா சிடைபொடித்திட் டேகொதித்து
வரவிறக்கி வைத்தாழாக்கு
நகைப்புடனே கொடுக்கவுமே நன்றாக
வயிறுவிடும் நாக்கப்பூச்சி
யுகுத்திடுங்கீரி ப்புழுவி ன்டன்றிமரிப்
புழுவுவிழு முடன்கைகண்டே
சகத்தினையா ளுமகிப சரபேந்திரரா
சவானையாய்ச் சாற்றினாரே.

(இ-ள்) நெஞ்சுவலி, மார்புசந்து வற்றி, வயிறு பெருத்து வலியுடனிருந்தால்,

சாறணையிலையும் வேளை இலையும் வகைக்கு ஒவ்வோர் பிடி நறுக்கி, 1 ஆழாக்குக் கள்ளிப்பாலும் விட்டு, 1 நாழி ஆமணக்கெண்ணெய் கூட்டிக் கொதித்து வரும்போது

| | |
|---|---|
| மஞ்சள் | 1 காசெடை |
| மிளகு | 1 காசெடை |

பொடிசெய்து போட்டு நன்றாக கொதிகண்டு இறக்கிஒரு ஆழாக்குச் சாப்பிட வயிறு கழியும்.

நாக்குப்பூச்சி, கீரிப்பூச்சி, திமிர்ப்புழு யாவும் தீரும் கைகண்டது.

# 23. குழந்தைகள் கரப்பானுக்கும், கிரந்திக்கும் மருந்துகள்

## 244. கரப்பானுக்கு எண்ணெய்

ஈரவெங்கா யச்சாறோர் படிவிளக்கெண்
　　ணெயும்படியொன் றிரண்டுகூட்டிச்
சீரிதா கியகலசத் தினிலூற்றிச்
　　சின்னியிலை சிவனார்வேம் பு
சாறணைதூ துவளைகரு நொச்சில்மணித்
　　தக்காளி தன்னோடேகற்
பூரவல்லி சிறுக்கீரை சேம்புசெருப்
　　படிபருத்தி பொன்னாங்கண்ணி 400

கண்ணிநீர்முள் ளியுஞ்சங்கங் குப்பிவிரு
　　குசங்கு கண்டங்கத்திரித்
தன்னிலையோ டேயிடித்துச் சாறுபிழிந்
　　தேயந்தச் சாறோர்நாழி
நண்ணுமதி மதுரஞ்சீ ரகங்கருஞ்சீ
　　ரகங்கடுக்காய் நல்லயேலம்
உண்ணுமிள குடன்பறங்கிப் பட்டைசத
　　குப்பைமர மஞ்சள்ஓமம் 401

ஓமந்திப் பிலியிதெலா மொருவகைக்கீர்
　　காசிடையிட் டுரலிற்றூள்செய்
தாமணக்கெண் ணெயிற்போட்டுக் காய்ச்சிவடிக்
　　கட்டியெடுத் ததனைவைத்தே
நேமமுட னேகரப்பான் ரோகிகளுக்
　　கோர்கரண்டி நேரமொன்றுக்
காமின்னோ யில்லாருக் கந்தவெண்ணெய்
　　காசிடையொன் றதிற்கலந்தே. 402

கலந்திரண்டு மேகலந்து கொடுவிரண்டு
　　மூன்றுவிசை கழியும்பத்தியம்
உலர்ந்தபா சிப்பயறு மரிசியுங்காய்ச்
　　சிக்கொடுத்தா லுடன்கரப்பான்

றொலைந்திடுமிவ் வெண்ணெய்வடித் துணும் போது
பரங்கிப்பட்டை சூரணித்தோர்
கலந்தனிலிட் டேயதிலே வடித்துக்கொள்
சரபமன்னர் கருத்திதாமே. 403

| | | |
|---|---|---|
| (இ-ள்) | ஈரவெங்காயச்சாறு | 1 படி |
| | ஆமணக்கெண்ணெய் | 1 படி |
| | சின்னி இலை | சிவனார்வேம்பு |
| | சாறணை | தூதுவளை |
| | கருநொச்சில் | மணித்தக்காளி |
| | கற்பூரவல்லி | சிறுகீரை |
| | சேம்பு | செருப்படி |
| | பருத்தி | பொன்னாங்காணி |
| | நீர்முள்ளி | சங்கங்குப்பி இலை |
| | சங்கன் இலை | வெருகு (வெருகங்கிழங்கு) |
| | கண்டங்கத்திரி இலை | |

இவைகளைக் கல்லுரலிலிட்டு நன்றாக இடித்துப் பிழிந்த சாறு ஒரு நாழி

இவைகளுடன்

கல்வத்திற்கு :

| | |
|---|---|
| அதிமதுரம் | சீரகம் |
| கரஞ்சீரகம் | கடுக்காய் |
| ஏலம் | மிளகு |
| பறங்கிப்பட்டை | சதகுப்பை |
| மரமஞ்சள் | ஓமம் |
| திப்பிலி | |

இவைகள் வகைக்கு இரண்டு காசிடை யெடுத்துப் பறங்கிப்பட்டையைத் தவிர மற்றச் சரக்குகளை உரலிலிட்டு இடித்துத் தூள்செய்து, மேல்சொன்ன சாறு கூட்டிய

ஆமணக்கெண்ணெயிலிட்டுக் காய்ச்சிப் பதத்தில் இறக்கிக்கொண்டு பறங்கிப்பட்டையைச் சூரணித்து ஒரு பாத்திரத்திலிட்டு அதில் எண்ணெயை வார்த்துக்கொள்ளவும். கரப்பான் ரோகிகளுக்கு வேளைக்கு ஒரு கரண்டி வீதமும், நோயில்லாதவர்களுக்கு ஒரு கரண்டி எண்ணெயை ஒரு காசிடை வெண்ணெயிற் கலந்து இரண்டுமாகக் கொடுக்கவும். 2 அல்லது 3 தடவை வயிறு கழியும்.

**பத்தியம்**: பாசிப்பயறும், அரிசியும் சேர்த்துக் கஞ்சி காய்ச்சிக்கொடுக்கவும். கரப்பான் ஒழியும

**குறிப்பு**: 91 நெ சுவடியில் கல்க சரக்குகளில் பூதகரப்பான் பட்டையும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

### 245. கரப்பானுக்கு

கருஞ்சீர கம்பூதக் கரப்பான்பற
பாடகம்வெண் காயம்காயம்
பரிந்தவசம் புடன்கௌரி பாடாணஞ்
சடைச்சிகான்ப டருமொச்சை
சொரிந்துகொளச் செயுஞ்சிறுகாஞ் சோறிமிள
கரணைபொன்மு சுட்டை வேரும்
பெருங்குரும்பை புனலிசத்திச் சாறணைநன்
னாரிவேர்பெ ருமருந்தே. 404

மருந்தினங்கேள் சிறுகுறட்டை கொடுவேலி
வேர்சிற்ற வரைக்கிழங்கும்
இருந்தகுப்பை மேனியின்வேர் இவையனைத்து
மேயரைத்துக் கரைத்துநெய்செய்
அருந்திநக்கி யுண்டிடவு மலதுவிளக்
கெண்ணெயிற்செய் தவ்வாறுண்ணென்
றொருங்குடனற் சரபேந்திர ருரைத்தபடி
யுணக்கரப்பா னுடனேபோமே. 405

| | |
|---|---|
| (இ-ள்) கருஞ்சீரகம் | பூதகரப்பான்பட்டை |
| பற்பாடகம் | வெங்காயம் |
| பெருங்காயம் | வசம்பு |
| கௌரீபாஷாணம் (சுத்தி செய்தது) | |
| சடைச்சி | காட்டுமொச்சை |
| சிறுகாஞ்சோறி | மிளகரணை வேர் |
| பொன்முசுட்டைவேர் | பெருங்குரும்பை |
| புனலித்தண்டு | சத்திச்சாறணை |
| நன்னாரிவேர் | பெருமருந்து |
| சிறுகுறட்டை | கொடிவேலிவேர் |
| சிற்றவரைக்கிழங்கு | குப்பைமேனிவேர் |

இவை யாவற்றையும் வகைக்கு ஒரு தோலா வீதம் எடுத்துத் தண்ணீர்விட்டு நன்றாக அரைத்து, பசுவின் நெய் ஒரு படியுடன் குழப்பி, அடுப்பின் மேலேற்றிப் பக்குவமாக வடிக்கவும் அல்லது விளக்கெண்ணெயில் கலந்து எரித்து இறக்கவும்.

இதைத் தினந்தோறும் 1 காசெடை வீதம் பாலில் கலந்து சாப்பிட்டுவரக் கரப்பான் நோய் தீரும்.

### 246. கரப்பானுக்கு

காட்டுமல்லி கையினிலையை யிரண்டுபிடி
கொண்டுவந்து கலந்திரங்க
மீட்டானெல் லரிசியோடு மிகவிடித்துப்
புடைத்தெடுத்து விரைந்துமெய்வெள்
ளாட்டுப்பா லினிற்களிக்கிண் டந்தவாவி
யாமுகத்தி லாகச்செய்பின்
கூட்டிவெல்லத் துடனுணவுங் கொடியசுரப்
பானுடனே குலைந்துபோமே. 406

(இ-ள்) காட்டுமல்லிகை இலை 2 பிடி கொண்டுவந்து இரங்கமீட்டான் நெல்லரிசியோடு நன்றாகச் சேர்த்து இடித்துப் புடைத்து அரைத்து. வெள்ளாட்டுப்பால் விட்டுக் களிக் கிண்டி. அந்த ஆவியைக் கரப்பான் நோயுள்ள குழந்தையின் முகத்தில் பிடித்தபின் இதை வெல்லத்துடன் கூட்டிச் சாப்பிடச் செய்யவும். பயங்கரமான கரப்பான் ரோகம் தீரும்.

### 247. வாதக் கரப்பானுக்கு

வாதக்கரப் பானகலும் வகைகருஞ்சீ
ரகமேலம் வண்கிராம்பு
பூதகரப் பான் வசம்பு புகலும்வகைக்
கொருபலந்தான் போட்டபின்பு
மீதுவசு வாசுகுகை மேன்னீறு
மமுக்கிராவு மேயொக்கக்கொண்
டேதேனிற் குழைத்துணவு மினஞ்சொல்வோ
மெனச்சரபேந் திரர்சொன்னாரே. 407

| | |
|---|---|
| (இ-ள்) கருஞ்சீரகம் | ஏலக்காய் |
| கிராம்பு | பூதகரப்பான்பட்டை |
| வசம்பு | ஜாதிபத்திரி |
| கூகைநீர் | அமுக்கிராக்கிழங்கு |

இவைகள் வகைக்கு ஒரு பலம் எடுத்து நன்றாக உலர்த்திக் கல்லுரலிலிட்டு இடித்து ஒரு வெருகடி சூரணத்தைத் தேனில் குழைத்துத் தினம் 3 வேளை சாப்பிடவும். வாதக் கரப்பான் தீரும்.

### 248. வாதக் கரப்பானுக்கு

இனப்படிகஞ் சாங்கோரை குழிமிட்டான்
செருப்படிபுங் கினியபட்டை
தனித்தனியே யிடித்திறுத்துச் சாறுவகைக்
கோர்நாழி தானுங்கூட்டி

யினிப்பாலு மொருநாழி யிதிலூற
　　　　வொருநாளிட் டிருகூறாக்கி
நினைத்தொருபங் கினைநெய்யி லேவேக
　　　　வைத்தந்த நெய்யிற்கொள்ளே. 408

கொள்ளளவுமெண் ணெயிலொன்றைக் கொதித்திடவே
　　　　கச்செய்து கொண்டுண்டெண்ணெய்
மெள்ளவுடம் பினிற்பூச விடும்வாதக்
　　　　கரப்பான்மேன் முறையுங்கேண்மின்
உள்ளுகடல் சூழுலகீர் என்றுசர
　　　　பேந்திரனார் சொன்னதுயாவுங்
கள்ளமனக் கதங்காற்று கற்றவருற்
　　　　றவாக்கிதுகை காட்டுவாரே.

(இ-ள்) கஞ்சாங்கோரை
　　　　தண்ணீர்மிட்டான் கிழங்கு (தண்ணீர்விட்டான்)
　　　　செருப்படி
　　　　புங்கம்பட்டை

இவைகளைத் தனித்தனியே இடித்துப் பிழிந்த சாறு வகைக்கு ஒரு படியும் *பசுவின் பால் ஒரு படியும் சேர்த்து ஒரு நாள் ஆன பின் அதை (பால் கலந்த சாற்றை) இரண்டு கூறாகப் பிரித்து ஒரு பங்கை நெய்யில் (1 படி) பக்குவமாகக் காய்ச்சி வடித்து அதை உள்ளுக்குச் சாப்பிடவும்.

அதிலுள்ள இரண்டாவது பங்கை நல்லெண்ணெயுடன் (1 படி) கலந்து அடுப்பின்மேல் வைத்துக் காய்ச்சிப் பக்குவமாக வடித்து உடம்பில் தேய்க்கவும். வாதக்கரப்பான் தீரும்.

*91 நெ. சுவடியில் பசுவின் பால் 4 படி எனக் காணப்படுகிறது.

## 249. வாதக்கரப்பானுக்கு

குருந்துபெரு மரந்துசிறு குறிஞ்சாவேர்
தூதுவிளைக் கொழுத்தவேரும்
முருங்கைபுலி துடக்கிபா லொடிவிசிறு
கத்திரிபொன் முசுட்டைவேரும்
பரிந்துணுமா தொண்டைமிள கறணைசங்கம்
வேர்கருணைப் பெருங்கிழங்கும்
மருந்தெனப்பீ னாறிசெங்கத் தாரியெருக்
கவுரியும்வன மரைநன்னாரி!

நன்றாக வினையனைத்தும் நறுக்கியுள்ளி
வசம்புடனே நல்லெண்ணெய்
குன்றாக விளக்கெண்ணெய் வேப்பெண்ணெய்
யுங்குழப்பிக் கூட்டிமைந்தன்
தன்றலைமார் பசுமட்டுந் தடவிவீக்க
முமிறங்குந் தனையும்வார்க்கத்
துன்றுகரப் பான்வாதந் தொலையுமெனச்
சரபேந்திரர் சொன்னவாறே.

| (இ-ள்) | | |
|---|---|---|
| | குருந்து | பெருமருந்து |
| | சிறுகுறிஞ்சா வேர் | தூதுவைளையின்பருத்த வேர் |
| | முருங்கை | புலிதுடக்கி (இண்டு) |
| | கொடிப்பாளை | சிறுகத்தரி |
| | பொன்முசுட்டை வேர் | ஆதொண்டை |
| | மிளகறணை | சங்கன்வேர் |
| | கருணைக்கிழங்கு | பீநாறிப்பட்டை |
| | செங்கதாரிவேர் | எருக்குவேர் |
| | அவுரிவேர் | நன்னாரிவேர் |
| | வெள்ளைப்பூண்டு | வசம்பு |

இச்சரக்குகளை ஒரே எடையாக (1 தோலா) எடுத்து இவைகளைச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கி, எல்லாவற்றையும் தண்ணீர் விட்டு நன்றாக அரைத்து,

நல்லெண்ணெய் விளக்கெண்ணெய்
வேப்பெண்ணெய்

இம்மூன்றும் சேர்ந்து (5 சேர்)

விட்டுப் பக்குவமாக எரித்து அடுப்பினின்று இறக்கவும். இத்தைலத்தைக் கரப்பானுள்ள குழந்தையின் தலை, மார்பு முதலிய இடங்களில் தடவிவர வாதக்கரப்பான் அறவே ஒழியும்.

### 250. வெடிகரப்பானுக்கு

கருஞ்சூரை நிலவாகை சிவனார்வேம்பு
காட்டுமல்லி கையிலைமிள கறணைவேரும்
கிரந்திநாய கம்கழலின் கொடிவேரெட்டுங்
கிளைந்துகளைந் தெடுத்துவெயிற்கிடத்தி
பரிந்திடித்து வத்திரகா யமுநன்றாகப் வைத்தே
பண்ணியதைக் கொண்டுவெரு கடிப்பிரமாணம்
எரிந்துவரு மிளவென்னீர் தன்னிலேதா
னிருபோதுண பத்தியநா ளீரைந்தாமே. 412

நாளொருபத் தும்மறுபத் தியம்பிடிக்கி
னலமான வுப்புசற்றே நல்கக்கொள்வாய்
மீளவுந்தா னிளங்கீரை முருங்கைக்கீரை
மேற்படிபிஞ் சுங்கூட்டிக் கொள்ளலாகுங்
கொளசெய்புளி யாகாது பத்துநாளுங்
கூட்டாதே கைகண்ட குணங்காணென்ன
வாளேந்து கரசரபப் பூபர்சொன்ன
வாகடநூல் முறைமையீது மகிமையாமே. 413

| | |
|---|---|
| (இ-ள்) * கருஞ்சூரை | நிலவாகை |
| சிவனார்வேம்பு | காட்டுமல்லிகை |
| மிளகறணைவேர் | கிரந்திநாயகம் |
| கழல்கொடிவேர் | |

இச்சரக்குகளின் வேரை வெயிலில் நன்றாக உலர்த்தி, உலர்ந்தபின் கல்லுரலிலிட்டு இடித்து வஸ்திரகாயஞ் செய்து அத்தூளை ஒரு வெருகடிப் பிரமாணமெடுத்து இளஞ் சூடான வெந்நீருடன் தினமொன்றுக்கு இருவேளை வீதம் சாப்பிடவும். 10 நாளைக்கு மேற்படி மருந்தைப் பத்தியமாகச் சாப்பிட்டு மறுபடியும் பத்துநாள் மறுபத்தியம் பிடிக்கவும். முதல் 10 நாளும் இளங்கீரை முருங்கைப்பிஞ்சு இவைகளைக் கூட்டிப் புளியை விலக்கவும். மிக்க நன்மை தரக்கூடியது.

**குறிப்பு:**

செய்யுளில் எட்டுவகை வேர்களையும் எடுத்துக்கொள்க என்று சொன்ன போதிலும் 7 வகை வேர்களை மாத்திரமே சொல்லப்பட்டிருப்பதையும் கவனிக்க.

## 251. பல கிரந்திக்கும், கரப்பானுக்கும் எண்ணெய்

சத்திச்சா றடைக்கிழங்கு சிற்றவரைக்
கிழங்குசங்க தாரிவேரும்
இத்துடன்வே லிப்பருத்தி யின்வேரப்
பைக்கிழங்கு மிவையோரொன்றுக்
கெத்தினையாப் பெலுமிச்சங் காயளவ
தரைத்துள்ளி யிதில்வசம்பும்
வைத்திடுகம் பிப்பிசின்கார் போகரிசி
கருஞ்சீராம் வகையும்வைத்தே.

---

*சூரை - இது காரை இனத்தைச் சேர்ந்தது. காகோலி என்று சமஸ்கிருதத்தில் வழங்குவர்.

வகைக்கடுகு ரோகிணியும் பூதகரப்
பானுடன்முன் வகையும்வைத்தே
புகன்மருந்துக் கோரோருகா செடையரைத்துக்
கரைத்ததனை பொருந்தக்கூட்டி
யிகழவின்மணத் தக்காளி யீரைஞ்சோ
டுடன்சிற்றா மணக்கினெண்ணெய்
பகிர்நாழி விட்டிதெலாம் பதமாகக்
காய்ந்துவரும் பாத்திரத்தே. 415

பார்த்தெடுத்துச் சிலந்திப்பூச் சியுமுழக்குப்
போட்டிதெல்லாம் பதத்திறுத்தே
வார்த்தொருகா சிடையளவு நக்கியுண்ட
பின்பதனை வகையாய்ப்பூசிற்
பூத்தபல கிரந்திபல கரப்பானும்
போமெனவே புலவர்மெச்சுஞ்
சீர்த்தசர பேந்திரனார் செய்முறையென்
றாலெவர்க்குந் திடமுண்டாமே.

(இ-ள்) சத்திச்சாரணைக்கிழங்கு சிற்றவரைக்கிழங்கு
செங்கதாரிவேர் வேலிப்பருத்திவேர்
அப்பக்கோவைக்கிழங்கு

இவைகளை வகைக்கு ஒரு எலுமிச்சங்காயளவு அரைத்து உள்ளிப்பூண்டு, வசம்பு, கம்பிப்பிசின், கார்போக அரிசி, கருஞ்சீரகம், கடுகரோகிணி, பூதகரப்பான்பட்டை, இவைகள் வகைக்கு ஒரு காசெடை எடுத்து,நன்றாக தண்ணீர் விட்டு அரைத்து மணத்தக்காளிக்காய் 10 காசெடையும் கூட்டி, சிற்றாமணக்கெண்ணெய் ஒரு நாழி விட்டு, இவற்றை எல்லாவற்றையும் ஒன்று கூட்டிஅடுப்பின் மேலேற்றிப் பதமாகும்போது சிலந்திப்பூச்சி 1 உழக்குப்போட்டு இறக்கிக்கொண்டு வடிக்கவும். இதில் ஒரு காசெடை உள்ளுக்குச் சாப்பிட்டு, மேலுக்கும் பூசப் பலவித கிரந்தி, கரப்பான் முதலியவை தீரும்.

## 252. கரப்பான் கிரந்திக்கு

இண்டிலைவே லிப்பருத்தி யிலைமுதலியாவு
நறுந்தாளி யின்வேர்வீழி
மண்டிலையு மோரிதழ்த்தா மரைப்பூண்டு
சமூலமிந்த வகைவகைக் கோர்
கொண்டொருகை பிடியிதெலாங் கொண்டுழக்கு
நெய்யுடனெள் நெய்யுமுழக்
கேரண்டமென் னாமணக்கெண் ணெயுழக்கிந்த
மூன்றின்மருந் தானதெல்லாம்

மருந்தினையெல் லாம்நறுக்கிப் போட்டெரித்து
மேற்பதமாய் வருதல்கண்டே
யிருந்தகார் போகரிசி பொன்மெழுகும்
பொடித்தெடுத்தே யிதின்மேற்றூவிப்
பரிந்தார வைத்துள்ளுக் குங்கொடுத்து
மேபூசிற் படர்கரப்பான்
கிரந்திநோய் தீருமெனக் கிளர்சரபேந்
திரமகிபர் கிளர்த்தினாரே.

(பாட பேதம்)

விழுவியிலை யோரிதழ்த்தா மரைவேலிப்
பருத்தியிந்த விதஞ்சமூலம்
குழைவான நறுந்தாளி வேரிண்டி
னிலைவகைக்கோர் பிடியிங்கொண்டே
கழுவியநல் லெண்ணெயுழக் காமணக்கெண்
ணெய்யுமுழக் குக்கறவையாநெய்
யுழக்கிதனி லிருந்தமருந் தினைநறுக்கி
யுடனெடுத்துப் போட்டெரித்தே.

எரித்ததனைப் பதமாக வருங்காற்பொன்
மெழுகுபொடித் திதிற்கார்போக
வரிசியுங்கூட் டிப்பொடித்து மென்பொடியா
கத்தூவி யாறவைத்துளக்
குரிசையுடன் கொடுத்துமே லும்பூ,சிற்
கரப்பான்மே லுளகிரந்தி
தரியாது தீருமெனச் சரபேந்திர
மகராசர் சாற்றினாரே.

| | | |
|---|---|---|
| (இ-ள்) | இண்டு இலை | வேலிப்பருத்தி இலை |
| | நறுதாளியின்வேர் | வீழி இலை |
| | ஓரிதழ்த்தாமரை சமூலம் | |

இவைகள் வகைக்கு ஒரு பிடி எடுத்து நன்றாக நசுக்கி இதனுடன்,

| | |
|---|---|
| பசுவின் நெய் | ஒரு உழக்கு |
| நல்லெண்ணெய் | ஒரு உழக்கு |
| ஆமணக்கெண்ணெய் | ஒரு உழக்கு |

இம்மூன்றையும் கூடவிட்டு அடுப்பிலிட்டுக் காய்ச்சும் போது

| | |
|---|---|
| கார்போகரிசி | பொன்மெழுகு |

இவ்விரண்டையும் பொடிசெய்து (வகைக்கு ½ பலம்) எண்ணெய் வகைகளுடன் குழப்பிப் பதத்தில் வடித்து இறக்கிக்கொள்ளவும்.

ஆறியபின் இதை மேலுக்குத் தடவி, உள்ளுக்கும் கொடுக்கப் படர் கரப்பான், கிரந்தி இவைகள் தீரும்.

குறிப்பு: 'மெழுகைத் தைலத்தில் சேர்க்காமல் தனியாகச் சிறுசிறு துண்டுகளாக்கி ஒரு பாத்திரத்தில் போட்டு அதன்மேல் சூடான தைலத்தை வடித்தால் மெழுகு உருகித் தைலத்துடன் ஒன்று கலந்துவிடும். இவ்வாறாகவும் செய்து கொள்ளலாம்.

## 253. கருங்கிரந்திக்கும் கரப்பானுக்கும் எண்ணெய்

கருங்கிரந்திக் கரப்பானுக்குக் கருநொச்சி
யிலையெண்ணெய் கலந்தரைத்தே
வொருநாரத் தங்காய்போ லொருவிழுதும்
வெள்ளைப்பூண் டுடன்வசம்பும்
கருஞ்சீரகங் கடுக்காய்க லந்தோர்படி
விளக்கெண்ணெய் கலந்தரைத்தே
பரிந்துகரைத் தொருமூன்று பகல்வெயிலிட்
டேநாலாம் பகலெடுத்தே. 421

எடுவெரித்து பதத்தில்வடித் தேயொருகா
சத்தினையுள் ளிறங்கத்தானே
கொடுநோணடைக் கட்டிருமல் கருங்கிரந்திக்
கரப்பானோடு கொடுநோயாவும்
விடுமென்று சரபேந்திர வேந்தர்சொல்லு
முறையிதன்னை விரும்பிக்கொள்வார்
படிமிசையி லடைந்தவர்க்கும் படிப்பிப்பார்
பரம்பரையாய்ப் படருந்தானே. 422

(இ-ள்) கருநொச்சி இலை அரைத்த விழுது
ஒரு நார்த்தங்காயளவு

| | |
|---|---|
| வெள்ளைப்பூண்டு | வசம்பு |
| கருஞ்சீரகம் | கடுக்காய் |

இவைகளையும் வகைக்கு 1 பலம் எடுத்து நன்றாக அரைத்து ஆமணக்மெண்ணெய் ஒருபடியில் கலந்து குழப்பி, மூன்று நாளைக்கு வெயிலில் வைக்கவும். நாலாம் நாள் பகலில் எடுத்து அடுப்பின் மேலேற்றி, எரித்துப் பதத்தில் வடிக்கவும். இந்த எண்ணெயில் காசெடை எடுத்து உள்ளுக்குக் கொடுத்தால் கரப்பான், கிரந்தி இவை தீரும்.

## 254. கரப்பான் கிரந்திக்கு

விழுலிவேரு மிலையுங்கொட் டைப்பாசி
யினிலையும் விரைந்துகொண்டே
பழகியசங் கிலைகையாந் தகரையிலை
செருப்படியும் பாங்காயுள்ளி
புழுவில்வசம் புங்கூட்டி நறுக்கிவிளக்
கெண்ணெயிலே போட்டெரித்து
மெழுகுபத மாயிறக்கி மென்பொடிகுங்
கிலியமிட்டு மேற்றராவி.

விட்டிலதைவைத் திரண்டுகா சிடையிட்டுக்
கொடுத்திடவும் விதமூன்றாக்க
கட்டுரைசெய் கரப்பானதும் விட்டுவிடு
மென்றழகாய் காணுந்தஞ்சைப்
பட்டிணமற் றும்பவனி மத்தகயத்
தவிதாமேற் பவளக்கால்சேர்த்
திட்டிடும்வெண் குடைநிழலுற் றினிதுவருஞ்
சரபேந்திர ரிசைந்தார்தாமே. 424

### (பாட பேதம்)

சங்கிலைகை யாந்தகரை யிலைவிழுவி
வேரிலைகள் சரியதான
பங்குகொட்டைப் பாசிசெருப் படியிலையுஞ்
சமங்கூட்டிப் பருத்தவெள்ளை
வெங்காயம் வசம்பினை யுமேகூட்டி
நறுக்கிவிளக் கெண்ணெய்விட்டே
பொங்கவெரித் தேயிறக்கிக் குங்கிலியப்
பொடிபோட்டப் புறந்துளாவே. 425

துளாவூற வைத்திருகா சிடைகொடுக்க
முக்கரப்பான் றொலைந்துபோகுங்
கிளையாது மேல்வந்து கிட்டாதென்
றேசரபேந் திரர்கிளர்த்தும்
வளமொழியே நமக்கிதமா கியமருந்தென்
றேயழகை மாந்தரக்கண
கிளைஞர்முத லோரெவருங் கிடைத்ததுகை
கண்டதெனக் கிளர்த்துவாரே. 426

| | | |
|---|---|---|
| (இ-ள்) | விழுதிவேர் | விழுதி இலை |
| | கொட்டைப்பாசி இலை | சங்கன் இலை |
| | கையாந்தகரை இலை | செருப்படி. |
| | வெள்ளைப்பூண்டு | வசம்பு |

இவைகளை நன்றாக (வகைக்கு 1 வராகனெடை) நறுக்கி ஆமணக்கெண்ணெய் 1 சேர் விட்டு அடுப்பின்மேல் வைத்தெரித்து மெழுகு பதமாக ஆனபின், இறக்கிச் சூடாறுமுன் குங்கிலியத்தைத் தூள்செய்துபோட்டுக் குழப்பிக் கொண்டு இதில் 2 காசிடை அளவுகொடுக்கவும். இவ்வாறு 3 நாள் கொடுக்கவும். கரப்பான் தீரும். மறுபடியும் கிளைக்காது.

## சரபேந்திரர் கர்ப்பிணி பாலரோக வகைகளிலுள்ள
# மருந்துகளின் அகராதி


| விஷயம் | மருந்து நெம்பர் |
|---|---|
| அதி.ஸாரம் (கர்ப்பிணிக்கு) | 44, 46 |
| அதிசாரக்கழிச்சலுக்கு மருந்து | 205 |
| அதிசாரமும் வாந்தியும் தீரக்குடிநீர் | 206. 224 |
| அடிப்புறப்பட்ட கழிச்சலுக்கு | 203, 204 |
| ஆமத்திற்கு | 157, 158, 159 |
| ஆமவலிக்கெண்ணெய் | 157 |
| ஆமத்திற்கும் எடுப்பு தோஷத்திற்கும் | 160 |
| ஆமகணத்திற்கு ஈரவெங்காய எண்ணெய் | 126 |
| இடுப்பு நோவுக்கு மருந்து | 28 |
| இரத்த கணத்திற்கு மருந்து | 124 |
| இரத்தம் சாய்ந்தால் (பிள்ளை பெற்றதற்கு) | 75 |
| இளைத்த பிள்ளை தேற மருந்து | 236 |
| இறந்த பிள்ளை வெளிப்பட மருந்து வகைகள் | 65 முதல் 70வரை |
| ஈரவெங்காய எண்ணெய் (ஆமத்திற்கு) | 126 |
| உப்பு மாந்தத்திற்கு உருண்டை | 190 |
| உலர்ந்த பிள்ளை பருக்க மருந்து | 237, 238 |
| உரம் விழுந்த பிள்ளைகளுக்கு | 154 |
| உடம்பு பருக்க நெய் | 239 |
| ஊது கணத்திற்கு மருந்து | 123 |
| எங்கும் வெடிசிரங்காய் போகாமலிருக்கிறதற்கு உள் மருந்து | 151 |
| எடுப்பு தோஷ மருந்து | 101, 102 |
| எரி கணத்தின் குணமும் மருந்தும் | 125 |

| விஷயம் | மருந்து நெம்பர் |
|---|---|
| எடுப்பு தோஷத்திற்கும் ஆமத்திற்கும் | 160 |
| கக்குவானுக்கு மருந்துகள் | 113, 114, 115 |
| கணச்சூட்டிற்கு மருந்துகள் | 116முதல்146வரை |
| கணத்திற்கும் மாந்தத்திற்கும் எண்ணெய் | 186, 202 |
| கணத்தெண்ணெய் | 116, 117, 118 |
| | 131, 132, 133 |
| | 127 |
| கணத்தெண்ணெய் பண்ண மருந்து | 129 |
| கணச்சூட்டிற்கு முலைப்பாலெண்ணெய் | 119, 120, 140 |
| கணத்தின் (எரிகணத்தின்) குணமும் மருந்தும் | 125 |
| கணத்திற்கு மருந்து | 130, 134, 142 |
| கணத்திற்கு நெய் | 135 |
| கரப்பானுக்கும் கிரந்திக்கும் மருந்துகள் | 244முதல்254வரை |
| கரப்பானுக்கு எண்ணெய் | 244, 245, 246 |
| கடுப்புடன் இரத்தம் விழுகிறதற்கு மருந்து | 209 |
| கழிச்சலுக்கு மருந்துகள் (குழந்தைகள்) | 205முதல் 223 |
| கருத்தரியா மருந்து | 65 |
| கருக்குக் குடிநீர் கடுப்பிற்கும் (காய்ச்சலுக்கும்) | 217 |
| கருத்தரிக்க | 7 முதல் 27வரை |
| கருங்கிரந்திக்கும் கரப்பானுக்கும் எண்ணெய் | 253 |
| கர்ப்பகர மருந்து | 77, 38 |
| கர்ப்பிணிக்கு விரேசனம் | 45 |
| கர்ப்ப விப்புருதிக்கு | 30, 31 |
| கர்ப்பம் தரித்தபின் ஏற்படும் வியாதிகளுக்கு மருந்துகள் | 28முதல்47வரை |
| கர்ப்பத்தின் மேல் பெரும்பாட்டிற்கு மருந்து | 35 |

| விஷயம் | மருந்து நெம்பர் |
|---|---|
| கர்ப்பிணிக்கு சுரம், வீக்கம் கண்டு மலஜலமடைத்தால் கஷாயம் | 36, 39 |
| கர்ப்பிணி வாந்தியெடுத்தால் ஸ்வரஸம் | 41 |
| கர்ப்பம் உண்டான பிறகு இரத்தமாய்ச் சாய்கிற பேர்க்கும் செத்த பிள்ளை விழவும் மருந்து | 42 |
| கரப்பிணிகளுக்கு ஏற்படும் அதிசாரத்திற்கு | 44, 46 |
| காய்ச்சல் தீரவும் உடம்பு பெருக்கவும் நெய் | 239 |
| காய்ச்சலுக்கும், இருமலுக்கும் இரைப்புக்கும் மருந்து | 226, 227 |
| கிராணிக்கெண்ணெய் (குழந்தைகள்) | 222 |
| கிராணிக் கழிச்சலுக்கு மருந்து | 214 |
| கிராமி, வயிற்றிற்றிமிற்புழு விஷக்காய்ச்சல் தீரவும் உடம்பு பருக்கவும் நெய் | 239 |
| கிரந்திக்கும் கரப்பானுக்கும் எண்ணெய் | 253 |
| கீரிப்புழு விழ மருந்து | 240 |
| கீரி நோய்க்கு | 241, 242 |
| குருவி தோஷத்திற்கு | 111, 112 |
| குழந்தைகளுக்கு மருந்து | 82, 83, 84 |
| குழந்தகளுக்கு உண்டாகும் தோஷங்களுக்கு மருந்துகள் | 98முதல்112வரை |
| குழந்தைகள் தோஷங்களுக்கு மாத்திரை | 99 |
| குழந்தைகள் கக்குவானுக்கு மருந்துகள் | 111முதல்115வரை |
| குழந்தைகள் கணச்சூட்டுக்கு மருந்துகள் | 116முதல்146வரை |
| குழந்தைப் பிள்ளைகளுக்கு நெய் | 156 |
| குழந்தைகள் ஆமவலிக்கெண்ணெய் | 157 |

| விஷயம் | மருந்து நெம்பர் |
|---|---|
| குழந்தைகள் கழிச்சலுக்கு மருந்துகள் | 205முதல்223வரை |
| குழந்தைகள் கழிச்சலுக்கு மருந்து | 207 |
| குழந்தைகள் வயிற்றுக் கழிச்சல் நிற்க மருந்தெண்ணெய் | 210 |
| குழந்தைகள் கிராணிக்கெண்ணெய் | 222 |
| குழந்தைகள் வயிறு கழியாமல் நிற்க மருந்து | 223 |
| குழந்தைகளுக்கு புஷ்டிதர மருந்துகள் | 234முதல் 239வரை |
| குளிதோஷத்திற்கு மருந்துகள் | 98, 104, 105 |
| கொதுக்குக் கொதுக்கென்று கழிகிரதற்கு மருந்து | 208 |
| கோரோசனாதி குளிகை (மாந்த) | 182 |
| சகதேவித்தைலம் | 229 |
| சிறு பிள்ளைகளுக்குப் பேதி எண்ணெய் | 152 |
| சிறு பிள்ளைகளுக் கெண்ணெய் | 155 |
| சிறு பிள்ளைகள் மாந்த ஜ்வரத்திற்கு மருந்து | 163, 195 |
| சிறு பிள்ளைகள் மாந்த கணத்திற்கும் இதிலெடுத்த ஜ்வரத்திற்கும் | 183 |
| சிறு பிள்ளைகளுக்கும் பெரியவர்களுக்கும் கடுத்திரத்தம் விழுகின்றதற்கும் மருந்து | 209, 213 |
| சிறு பிள்ளைகள் கிராணிக்கழிச்சலுக்கு மருந்து | 214 |
| சிறு பிள்ளைகளின் ஜ்வரத்திற்கு மருந்துகள் | 224முதல் 233 வரை |
| சிறு பிள்ளைகளின் ஜ்வரமும், அதிசாரமும் வாந்தியும் தீரக்குடிநீர் | 224, 228 |
| சிறு பிள்ளைகள் பித்த ஜ்வரத்திற்கு | 230, 231, 232 |

| விஷயம் | மருந்து நெம்பர் |
|---|---|
| சீழ் கட்டினால் (வயிற்றில்) மருந்து | 76, 78 |
| சீக்கிரப் பிரஸூதிக்கு மருந்துகள் | 48முதல் 64வரை |
| சீத ஜ்வரத்திற்கு | 233 |
| சுழிகணைத்திற்கு எண்ணெய் | 138, 139, 146 |
| சுழிகணையும் வயிறு கழிச்சலுமெடுத்த பொருமலுக்கு | 136 |
| சுரத்தந்திற்கு மருந்துகள் குழந்தைகள்) | 234முதல்233வரை |
| சுரமும், அதிசாரமும், வாந்தியும் தீரக்குடிநீர் | 224, 228 |
| சூடு, வறட்சியுள்ள குழந்தைகளுக்கு | 234 |
| சூடு தணியவும், கர்ப்பம் உண்டாகவும் | 19, 26 |
| செத்த பிள்ளை விழ | 42, 66, 68, 69, 70 |
| திங்களொன்றுமுதல் 5 திங்கள் வரையிலும் மருந்து முறைகள் | 32 |
| திட்டி. தோஷக்கிராணிக்கு மருந்து | 103 |
| தீட்டாகும்போது உண்டாகும் வலிக்கு மருந்துகள் | 4, 5, 6 |
| தேரை நோய்க்கு மருந்துகள் | 107, 108 |
| தோஷங்களுக்கு (குழந்தை) மருந்துகள் | 98முதல்112வரை |
| தோஷத்தில் மலசலங்கட்டினால் மருந்து | 100 |
| நஞ்சுவிழ மருந்துகள் | 71, 71 |
| நஞ்சொளித்தால் மருந்து | 71 |
| நாலுமாத மாறுபாதவரைக்கும் மருந்து | 33 |
| பட்சி தோஷத்திற்கு மருந்து | 106(a) 106(b) 110 |
| பட்சிதோஷத்தினால் பச்சென்று கழிந்தால் மருந்து | 109 |

| விஷயம் | மருந்து நெம்பர் |
|---|---|
| பித்த ஜ்வரத்திற்கு (பிள்ளைகளின்) | 230, 231, 232 |
| பிரஸூதிக் கழிச்சலுக்கு மருந்து | 42 |
| பிரஸூதிக்கு மருந்துகள் | 48 முதல் 53,58,59 |
| பிள்ளை பெறாமல் வருந்தின் மருந்து | 54, 56 |
| பிள்ளை பெற மாட்டாதவர்க்கு மருந்து | 55, 57, 60, 62, 63 |
| பிள்ளை பிறக்க மருந்து | 61 |
| பிள்ளை வாதியாமற்பீரசூதி மருந்து | 64 |
| பிள்ளை பெற்றபின்னேற்படும் வியாதி களுநக்கு மருந்துகள் | 73முதல் 80வரை |
| பிள்ளை பெற்ற பெண்களுக்கு வயிறு ஊதிக்கழிந்தால் மருந்து | 73 |
| பிள்ளை பெற்றபோது வந்த விஷபாகபாண்டு விக்கல் விடவும், கண்மிழும் விழவும் மருந்து | 74 |
| பிள்ளை பெற்ற பிறகு இரத்தம் சாய்ந்தால் மருந்து | 75 |
| பிள்ளை பெற்றபின் வயிற்றில்சீழ் கட்டினால் மருந்து | 76, 78 |
| பிள்ளை பெற்ற பேர்களுக்குக் கழிச்ச லிரைச்சல், சீழ்கட்டுக்கு மருந்து | 79 |
| பிள்ளையினால் வந்த விக்கல், வாந்தி தீர மருந்து | 80 |
| பிறந்த குழந்தைகளுக்கு மருந்துகள் | 81 முதல் 84வரை |
| பிள்ளை பிறந்ததற்கு மருந்து | 81 |
| பிள்ளைத் தேரை நோய்க்கு மருந்து நெய் | 107, 108 |

| *விஷயம்* | *மருந்து நெம்பர்* |
|---|---|
| பிள்ளைகளுக்குக் கணம், அக்கரக் காய்ச்சல் குளிர் இவைகளுக்கு மருந்து | 121 |
| பிள்ளைகளுக்குக் கணத்தெண்ணெய் | 141 |
| பிள்ளைகளின் சில்லரை வியாதிகளுக்கு மருந்துகள் | 147முதல்156வர |
| பிள்ளைகளின் வயிறு பொருமலுக்கு மருந்து | 147 |
| பிள்ளைகளின் விரை வாதத்திற்கு மருந்து | 148 |
| பிள்ளைகளுக்கு அம்மைக்காயம், கணம் வைசூரி தோன்றினாலதற்கு மருந்து | 149 |
| **பிள்ளைகளின் தண்ணீர் தாகத்திற்கு** | 150 |
| பிள்ளைகளின் ஆமத்திற்கு மருந்துகள் | 157முதல்160வர |
| பிள்ளைகளின் மாந்தத்திற்கும் அதன் உபத்திரவத்திற்கும் மருந்துகள் | 161முதல்202வர |
| பிள்ளைகள் மாந்தத்திற்கு | 178 |
| பிள்ளைகள் மாந்தத்திற்கு எண்ணெய் | 181 |
| பிள்ளைகளுக்கு அடிப்புறப்பட்டாலதற்கு மருந்துகள் | 203, 204 |
| பிள்ளை வயிறு கழியக்கட்ட மருந்து | 212 |
| பிள்ளைகளஉக்கு வயிறு கழிந்தாலதற்கு மருந்து | 216 |
| பிள்ளைகளுக்குக் கடுப்புக்கும் கழிச்சலுக்கும் சுருக்குக் குடிநீர் | 217 |
| பிள்ளை வயிறு கழிச்சலுக்கு மருந்து | 221 |
| புஷ்டிதர (குழந்தைகளுக்கு) மருந்துகள் | 234முதல்239வர |

| விஷயம் | மருந்து நெம்பர் |
|---|---|
| பூச்சிமருந்து, கணத்திற்கு மருந்து | 122 |
| பெரும்பாடு (கர்ப்பத்தின் மேல்) | 35 |
| பெரும்பாட்டுக்கு மருந்து | 5 |
| பெண்கள் கர்ப்பத்திற்கு மருந்து | 38, 77 |
| பேதி எண்ணெய் (பிள்ளைகளுக்கு) | 152 |
| பேய்மருட்டி எண்ணெய் (மாந்தத்திற்கு) | 175 |
| பொருமல் கழிச்சல் (மாந்தம்) இவைகளுக்கு | 161 |
| பொருமுகணத்திற்கு | 143 |
| போர் மாந்தத்திற்கு | 189, 191, 192 |
| போர் மாந்தத்திற்கும், மாந்த கணத்திற்கும் | 187 |
| மஞ்சிஷ்டி நெய் | 19, 26 |
| மலட்டுப்புழு விழ மருந்து | 7, 10, 12, 13, 17 |
| | 24, 25, 27 |
| மலட்டுவலி நீங்கிப் பிள்ளையுண்டாக | 8 |
| மறித்த பிள்ளை விழ மருந்து | 67, 69, 70 |
| மாசிக்காய் கட்டுவாதி | 199 |
| மாந்த கணத்திற்கு மருந்து | 144 |
| மாந்தம், பொருமல், கழிச்சலுக்கு மருந்து | 161 |
| மாந்தத்திற்குப் பிள்ளைப்பிணி தீர மருந்து | 162 |
| மாந்தத்திற்கு மருந்து | 164, 176, 178 |
| மாந்தத்திற்கு எண்ணெய் | 165,170, 181, 186 |
| மாந்த சுரமருந்துகள் | 163, 165 |

| விஷயம் | மருந்து நெம்பர் |
|---|---|
| மாந்தத்திற்குக் கஷாயமும் உருண்டையும் | 166 |
| மாந்தத்திற்கு உருண்டையும் எண்ணெயும் | 167 |
| மாந்த கஷாயம் | 168, 16 |
| மாந்தத்திற்கு மாத்திரை | 171 |
| மாந்தவலிப்புக்கு மருந்து | 172 |
| மாந்த குளிகைக்கு மருந்து வகை | 174 |
| மாந்தத்திற்குப் பேய்மருட்டி எண்ணெய் | 175 |
| மாந்தத்திற்கு உருண்டை | 179 |
| மாந்தம் சகலத்திற்கும் லேகியம் | 180 |
| மாந்த கணத்திற்கும் சுரத்திற்கும் மருந்து | 183 |
| மாந்த கணத்திற்கு | 184 |
| மாந்த கணத்திற்கும் போர் மாந்தத்திற்கும் | 187 |
| மாந்த சன்னிக்கு | 188, 193 |
| மாந்தத்திற்கும் கணத்திற்கும் மருந்து | 194 |
| மாந்த காசத்திற்கு | 196 |
| மாந்தக் கழிச்சலுக்கு | 197, 198, 199,200 |
| மாந்த வயிற்றுவலிக்கு மருந்து | 201 |
| முக்கு கணத்திற்கு மருந்து | 127, 128 |
| முலைப்பால் சுரக்க மருந்துதகள் | 85 முதல் 93வரை |
| முலைப்பால் குடியாத பிள்ளைகள் பாலருந்த மருந்துகள் | 94 முதல் 97வரை |
| முலைப்பாலெண்ணெய் | 119, 120, 140,235 |
| ருதுவாகாமலிருப்பவர்களுக்கு மருந்து வகைகள் | 1, 2, 3, |
| வயிற்றுப் பொருமல் (பிள்ளைகளின்) | 147 |
| வயிற்றுக்கழிச்சல் நிற்க மருந்தெண்ணெய் | 210 |

| விஷயம் | மருந்து நெம்பர் |
|---|---|
| வயிற்றுக்கழிச்சலுக்குக் கஷாயம் | 218 |
| வயிற்றுக்கழிச்சல், பொருமல் இரத்தக்கழிச்சலுக்கு மருந்து | 211 |
| வயிறு கழியக் கட்டமருந்து | 212 |
| வயிறு கழிந்தால் மருந்து | 216, 218 |
| வயிறு கழிச்சலுமெடுத்த பொருமலுக்கு | 138 |
| வயிற்றிற்றிமிர்ப்புழு, விஷக்காய்ச்சல் கிராணி முதலியவை தீரவும் உடம்பு பருக்கவும். நெய் | 239 |
| வயிற்றுக்கிருமிகளுக்கு மருந்துவகைகள் | 240முதல்243வரை |
| வயிற்று நாக்குப் பூச்சிக்கு எண்ணெய் | 243 |
| வரட்சி, சூடு உள்ள குழந்தைகளுக்கு | 234 |
| வரள் கணை, வரள் மாந்தத்தின் குணமும், மருந்தும் | 145 |
| வலிப்பு (மாந்த) | 172 |
| வாந்தியுடன் கூடிய கழிச்சலுக்கு | 220 |
| வாந்தி (கர்ப்ப காலத்தில்) | 41 |
| வாந்தியுடன் கூடிய சுரத்திற்கு | 225 |
| வாதம் (கர்ப்பிணி) | 29 |
| வாதக்கரப்பானுக்கு | 247, 248, 249 |
| விரைவாதம் (பிள்ளைகளின்) | 148 |
| விப்ருதி (கர்ப்ப) | 30, 31 |
| விரேசனம் (கர்ப்பிணி) | 45 |
| வெடி சிரங்கிற்கு | 151 |
| வெடி கரப்பானுக்கு | 250 |
| வெள்ளெடுப்புக் கழிச்சலுக்கு | 215 |